உ

ஓம்.

நமோபகவதே ராமகிருஷ்ணாய:

ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திராமிருதம்.

SRI RAMAKRISHNA ASHRAMA.

(முதல் பாகம்)

இஃது

ஆங்கில பாஷையிலிருந்து

நா. & அ. அவர்களால்

மொழிபெயர்க்கப்பட்டு

சேலம் ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசிரமத்தாரால்

சென்னை

சுந்தரவதனி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

Price As. 14.] **1919.** [விலை அணா 14.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.		திருத்தம்
3	26	ஆர்ச்சகர்	...	அர்ச்சகர்
5	12	நின்றார் ?	...	நின்றார்.
6	8	வறி	...	வ்ரி
8	3	ஈஷன்	...	ஈசன்
17	2	ஏவ்வளவு	...	எவ்வளவு
19	12	மக்ககளுக்காக	...	மக்களுக்காக
19	14	சம்பாதிப்பதன்		சம்பாதிப்பதின்
19	25	பற்றுதலும்;	...	பற்றுதலும்,
19	27	,,	...	,,
20	28	அவ்வரை	...	அவ்வறை.
23	8	கொடுத்து;	...	கொடுத்து
24	2	சாவகாசம்	...	சகவாசம்
24	16	மைதானதித்ல்		மைதானத்தில்
28	9	பற்றிற்று	...	பற்றினின்று
33	3	சொல்லுகிறார்கள்		செல்லுகிறார்கள்
37	9	நரேந்திரன்	...	நரேந்திரனோடும்
48	26	கலைக்கடலை	...	உளுந்து
65	20	நிர்விகற்ப	...	நிர்விகல்ப
74	4	இனகளுக்கெல்லாம்	-	இவைகளுக்கெல்லாம்
81	25	மாதிதிரம்	...	மாத்திரம்
87	19	என்கிறான்	...	என்றான்
93	8	எடுதது்க்கொண்டு		எடுத்துக்கொண்டு

பொருளடக்கம்.

முகவுரை.

இச்சிறு நூல் உலகப்பிரசித்திப்பெற்ற ஸ்ரீமத் ஸ்வாமி விவேகாநந்தருடைய குருநாதனும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் அவதார புருஷருமான பகவான் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸ தேவரால் திருவாய் மலர்ந்தருளிய உபதேசங்கள் அடங்கியது. ஸ்ரீமத் ஸ்வாமி விவேகாநந்தர், கேசவ சந்திர ஸேனர், டாக்டர் ஸர்க்கார், முதலிய பல சிஷ்யர்களுக்கு பரம உத்கிருஷ்டமான வேதாந்த தத்துவங்களை மிக சுலபமான உபமானங்களால் சம்பாஷணை மூலமாய் பகவான் ஸ்ரீராம கிருஷ்ணர் அருள்செய்தது. இது முதலில் வங்காள பாஷையில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பிரிய கிருஹஸ்த சிஷ்யரான மஹேந்திரநாத குப்தரால் நடந்தபடிக்கே எழுதப்பட்டு அவராலேயே பின்னும் ஆங்கிலபாஷையில் மொழிபெயர்க்கப்பட்டு, நமது தமிழ்நாட்டு மக்களின் மேம்பாட்டைக்கருதி இப்போது தமிழ்ப் பாஷையில் பின்னும் மொழிபெயர்க்கப்பட்டது. ஸர்வ ஸமய ஸமரஸ அவதாரரான ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அருளால் திராவிட மக்கள் வேற்றுமைகள் நீங்கி ஒற்றுமை அடைய ஆசீர்வாதம் பெறுவாராக

ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம், ஸேலம்.
25—7—1919.

N.



ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திரம்.

அவர் பிறப்பும் வாழ்நாளும்.

"யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்பவதி பாரத ।
அப்யுத்தானமதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்" ॥ க ॥

"எப்பொழுதெல்லாம் தர்மம் குறைந்து அதர்மம் அதிகரிக்கிறதோ அப்பொழுதெல்லாம் நான் அவதரிக்கிறேன்."

"தர்மஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" ॥ உ ॥

"தர்மத்தை ஸ்தாபிப்பதற்காக யுகத்துக்கு யுகம் நான் பிறக்கிறேன்."

இவ்விதம் பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் அருச்சுனனுக்குச் சொன்ன பிரகாரம் பூலோகத்தில் அவதாரம் செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது. ஐரோப்பிய பயிற்சியானது உலக முழுவதும் வியாபித்து இந்தியாவின் புத்திமான்களையும் விழுங்க ஆரம்பித்துவிட்டது இப்பயிற்சியின் மோகத்தால் மனிதன் கேவலம் தன் புத்தியையே நம்பினான். அதினால் தான் புதிதாகக் கண்டு பிடித்த சில இயற்கை ரகசியங்களே அறியத்தக்கவையென்று நினைத்தான். அவ்விரகசியங்களின் அறிவைக்கொண்டு, தான் தன் சௌகரியத்திற்காக இயற்றிய கருவிகளே அடையவேண்டிய புருஷார்த்தங்களென்று கர்வித்தான். இவ்விரகசியங்களின் அறிவையும் இக்கருவிகளையும் எம்மட்டும் ஒரு தேசத்தார் அடைந்திருக்கின்றனரோ அம்மட்டே அவர்கள் பயிற்சியையும் நாகரீகத்தையும் அடைந்தவர்களென்று உலகத்தில் அபிப்பிராயம் பலமாக ஏற்பட்டுவிட்டது. இந்தியர்களும் அப்படியே நம்ப ஆரம்பித்துவிட்டார்கள். எது செய்யவேண்டி வந்தாலும், எது பேசவேண்டி வந்தாலும் ஐரோப்பிய சாஸ்திரிகள் என்ன சொல்லுகிறார்கள் அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று கேட்பது சகஜமாய்விட்டது. இங்கிலீஷில் எழுதிய வாக்கியங்களுக்கு விசேஷ மரியாதை ஏற்பட்டுவிட்டது.

அப்படியில்லாமல் தம்மதத்தை அநுசரித்து வந்த ஜனங்களும், பேதபுத்தியுடன் அநுசரித்து தம்மதமே உண்மையென்றும், மற்றவையெல்லாம் பொய்யென்றும் வீண்வழக்குப் போட்டுச் சண்டையிட்டார்கள். ஒரு காரியம் செய்யும்பொழுது நீறு எப்படி தரித்துக்கொள்ளவேண்டும் வஸ்திரத்தை எப்படிப் போட்டுக்கொள்ளவேண்டும் என்ற பெரிய விஷயங்களைப் பற்றி அடுக்கடுக்காக வாதபுஸ்தகங்கள் எழுதினார்கள். மகம்மதியர் ஒருபக்கம், கிறிஸ்தவர் ஒரு பக்கம், ஹிந்துக்களில் சைவர் ஒருபக்கம் வைஷ்ணவர் ஒருபக்கம், நின்று சண்டையிட்டுக் கூக்குரலின் சப்தம் நிரம்பியிருந்தது.

இம்மோகத்தின் பலத்தைக் குறைத்து மனிதனுக்கு ஆத்மஞானமே சிரேஷ்டமான புருஷார்த்தமென்று இவ்வுலகத்திற்கு வற்புறுத்திக் காட்டி எல்லாமதங்களும் ஒரே ஈசுவரனையே நாடுகின்றன என்பதை அநுபவத்தினால் அறிந்துசொல்ல ஈசுவர சக்தியின் விசேஷமான அவதாரம் வேண்டிவந்தது. பகவானுடைய திருவிளையாடல்களுக்கு விசேஷமான இருப்பிடமாகிய ஆரியாவர்த்தத்தைவிட்டு வேறு எங்கு அவ்வவதாரம் சம்பவிக்கக்கூடும்? அதிலும் இவ்வையோப்பியப் பயிற்சி விசேஷமாகப் பரவி ஜனங்கள் அதிகமாகத் தங்கள் மதாசாரங்களினின்று திரும்பியிருந்த வங்கதேசமே இவ்வவதாரத்திற்குப் பிறப்பிடமாக ஏற்பட்டது.

ஏன் இந்தியாவில் இவ்வவதாரம் வரவேண்டியது? இந்தியாவில்தான் தொன்றுதொட்டு ரிஷிகளும், யோகிகளும் பக்தர்களும் மலிந்து, மனிதனுடைய மேம்பாடு ஊணிலும், உடையிலும், பேச்சிலும் அல்லவென்று திருஷ்டாந்தமாகக் காண்பித்தார்கள். இங்கேதான் மனிதன் தன் ஞானத்தினாலேயே, அதிலும் கடவுளையறியும் ஞானத்தினாலேயே, சிரேஷ்டனாகிறானென்று கேவலம் அறிவீனர்களும் சம்மதிக்கிறார்கள். இங்கேதான் ஞானத்தை மாத்திரம் கைக்கொண்ட அந்தணர்கள் அரசருக்கும் மேம்பட்டவராக மதிக்கப்பட்டிருந்தார்கள். இங்கேயே அரசரும் ஞானமடைவதற்காக தங்கள் அரசைத் துறந்து காட்

Dharmarajalu Naidu

டையடைந்து மிருந்த சிரமமான அப்பியாசங்களை யெல்லாம் கைக்கொண்டிருக்கிறார்கள். இங்கேதான் அரணியத்திலுள்ள கூரைவேய்ந்த ஆசிரமங்கள் அரண்மனைக்கு மேலாக மதிக்கப் பட்டிருந்தன. ஐரோப்பாவில் ஒவ்வொருவனும் முற்காலத்தில் கொள்ளையடித்து ஜீவித்துவந்த தலைவர்களுடைய வம்சபாரம்பரையைச் சம்பந்தப்பட்டவனாக நாடுதல்போல இங்கே ஒவ்வொருவனும் பூர்வத்தில் மரவுரி தரித்து கந்தமூலங்களைப் புசித்து வந்த ஒரு ரிஷியின் குரு வம்சபாரம்பரையை நாடுகிறார்கள்.

இவ்விதம் குரு பரம்பரை விளங்கிவந்த இத்தேசத்திய வித்வான்கள் தங்கள் மதங்களும் ஆசாரங்களும், தாங்கள் பிரமாணங்களாகக்கொண்ட ஐரோப்பிய மதிப்புக்கு ஒவ்வும்படி சீர் திருத்தங்களைப் பாராட்ட முயன்றார்கள்.

இவ்விதச் சீர்திருத்தங்கள் கருத்தரித்திருக்கும் காலத்தில் 1834-ஆு பிப்பரவரி-மீ 20-உ புதன்கிழமையாகிய சுபதினத்தில் பங்காள மாகாணத்தின் ஹூக்ளி ஜில்லாவில் காமர்புகூர் என்ற கிராமத்தில் ஒரு கௌடப்பிராமண வம்சத்தில் பகவான் ஸ்ரீராம கிருஷ்ணர் அவதரித்தனர்.

அவர் தகப்பனார் பெயர் குடிராம்சத்தர்ஜீ. தாயார் பெயர் சந்திரமணிதேவி. இவ்விருவரும் மஹாபக்தர்கள். ஆசாரசீலர். அதிலும் விருந்தோம்பும் இல்லற தர்மத்தை தாம் எவ்வளவு ஏழையாயிருந்தாலும் கைவிடாதிபற்றிவந்தனர். அவர்கள் பக்தியை யறிந்து அவர்கள் வீட்டை நாடிவரும் சாதுக்களுக்கு தங்களுக்கு வீட்டிலிருந்ததை யளித்துவிட்டு எத்தனையோ நாள் சந்திரமணிதேவி பட்டினியாயிருப்பதுண்டு. குடிராம் சத்தர் ஜியோ மஹா சத்தியசந்தர். தான், முன் செல்வத்துடன் வசித்துவந்த தேராய் என்னும் கிராமத்தின் ஜமீன்தார் தன் பக்கம் பொய்ச்சாக்ஷி சொல்லும்படி செய்த வேண்டுகோளுக்கிணங்காததினால் உபத்திரவம் செய்ய, அக்கிராமத்தைவிட்டு காமர்புகூருக்குக் குவந்தவர்.

இவர் ஒரு காலம் கயைக்குப் போயிருந்தபொழுது விஷ்ணு பகவான் இவர் கனவில் வந்து தான் இவருக்கு குழந்தையாக அவதரிப்பதாய்ச் சொல்லக்கண்டார். அதே காலத்தில் காமார்புகூரில் சந்திரமணிதேவி சிவன் கோவிலுக்குப் போயிருந்தபொழுது தான் வணங்கிக்கொண்டிருந்த விக்ரஹம் உயிர்பெற்று அசையவும், அதிலிருந்து ஜ்யோதிக் கிரணங்கள் புறப்பட்டு கட்டிடம் நிறையவும், அக்கிரணங்களில் ஒன்று தன்மேல்பட்டு உட்புகவும் கண்டு மயங்கி மூர்ச்சிக்க, அருகிலிருந்த தனி என்னும் தோழியாகிய ஏழைக் கொல்லப்பெண் தாங்கிக்கொண்டு உபசரித்து பிரக்ஞை வரச்செய்தாள். இது நடந்த சிலநாளைக்கெல்லாம் இம்மாது சிரோமணிக்கு வயது 45 ஆயிருந்தபோதிலும் கர்ப்பச் சின்னங்கள் காணப்பட்டன.

இவ்விதம் புண்ணிய சகுனங்களோடு பிறந்த குழந்தைக்கு கதாதரன் என்று பெயரிட்டு சரியான வயதில் அக்ஷராப்பியாசமும் செய்தார்கள். கிராமப் பள்ளிக்கூடத்தில் எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டார். ஆனால் கணக்கில் மனம் செல்லவில்லை. பங்காளத்தில் விசேஷமாக உபயோகப்பட்டுவந்த கணித புத்தகங்களுக்காசிரியனை சுவங்கரால் தன் மனம் குழம்பியதே யொழிய வேறு பிரயோசனமில்லையென்று இவர் பிற்காலத்தில் சொல்வதுண்டு. ஆனாலும் சில விஷயங்களில் விசேஷமான பயிற்சியையடைந்திருந்தார். ஜாத்திரைகளிலும் மற்றக் காலங்களிலும் வரும் ஆட்டக்காரர்கள் இராமாயணம், பாகவதம், முதலிய இதிகாச புராணக் கதைகளை நடித்துக்காண்பிப்பதை ஊக்கமாக கவனித்து அவர்கள் பாடும் பாடல்களையெல்லாம் மிகுந்த உருக்கத்துடன் பாடுவார். அவர்களைப்போல் நடிக்கவும் செய்வார். இப்படி ஒருநாள் தான் ராதையாக நடிக்கும்பொழுது பிரேமை மிகுதியால் ஒரு ஜோதியைக்கண்டு மூர்ச்சித்துவிழ, கூடநடித்துவந்த சிறுவர்களெல்லாம் பயந்து ஆட்டத்தை நிறுத்தினார்கள். பிற்காலத்தில் இவரிடம் விசேஷமாகக் காணப்பட்ட சமாதி நிலையின் முதற்சின்னமிதுவென்று அறியாத அவ்வூரார் கதாதரனுக்குக் காக்காய் வலிப்பு வந்துவிட்டதென்று நினைக்கார்கள்.

பள்ளிக்கூடத்திலும் பிள்ளைகளைச் சேர்த்துக்கொண்டு பாடுவதும் நடிப்பதுமுண்டு. இவருக்குப் பாடத்தெரியுமென்றுகேட்ட உபாத்தியாயர் ஒருநாள் பள்ளிக்கூடம் முடிந்ததும் இவரைப் பாடச்சொல்லிக் கேட்டு அவரது இனிய குரலையும், பாடும் உருக்கத்தையும்கண்டு வியந்து, அன்றுமுதல் இவர் பாட்டை பள்ளிக்கூடத்தின் கடைசி வேலையாக வைத்துக்கொண்டு, அவரிடம் மிக அன்பு பாராட்டிவந்தார். அக்காலத்தில் பங்காளத்துப் பள்ளிக்கூடங்களில் கற்பித்துவந்த முதற்பாட புஸ்தகத்தில் பிரகலாதன் கதை முதலியன செய்யுளிலிருந்தன. இவற்றை இவர் வெகு உருக்கத்துடன் பாடுவார். இவர் மிகவும் இனிய குரலுடன் மிகவசீகரமான ரூபமும் வாய்ந்தவரானதால் அவ்வூரிலிருந்த யாவரும் இவரை தங்கள் வீட்டிற்கழைத்துக்கொண்டு போய்ப் பாடச் சொல்வார்கள்.

இவருக்கு ஏழு வயதானதும் இவர் பிதா பரலோகத்தை யடைய, இவர் மூத்த தமையனான ராமகுமாரர் தலையில் குடும்ப பாரம் ஏறிற்று. ஆயினும் கதாதரருடைய ஜனனத்தின் பிறகு குடும்பத்திற்கு யாதொரு குறைவும் இல்லாதிருந்ததினால் குடும்ப பாரம் சிரமமில்லாதிருந்ததோடு, கதாதரர்மேரில் எல்லாருக்கும் விசேஷ பிரியமும் மரியாதையும் இருந்தது. ஒரு வருஷத்திற்கெல்லாம் இவருக்கு உபநயனம் நிச்சயமாய், பிரம்மோபதேசமானதும் குருகுலவாசஞ் செய்து பிக்ஷை யெடுத்தலென்னும் பழைய பிராமணாசாரத்தைக் குறிப்பிக்கும் பிக்ஷையெடுக்கும் வழக்கப்படி, நீ யாரிடம் முதற்பிக்ஷை வாங்குவாயென்று இவரைக் கேட்டபொழுது தன் தாயாரின் தோழியும் கடவுளிடமும் தன்னிடமும் அன்பினளுமான தனி யென்னும் கொல்லமாதைக் குறிப்பிட்டார். சீலமமைந்த பிராமணஸ்திரீயை வரிக்கவேண்டியதாயிருக்க, இதுவரையில் வைதிக சிரேஷ்டர்களாயிருந்த தங்கள் குடும்பத்துச் சிறுவன் ஒரு சூத்திரஸ்திரியை வரிந்ததைப் பார்த்து தமையன்மாரும் மற்றவரும் இவரைக்கடிந்து எண்ணத்தைமாற்ற முயன்றார்கள். இவர் ஒரே பிடிவாதமாய் தனியே தனக்குப்பிக்ஷையிடவேண்டுமென்று சாதித்து, ஒரு அறைக்குள் படுத்துக்கொண்டு ஒருநாள் முழுவதும் சாப்பிடாமலிருந்து அவர்

இளையதமையன் கடைசியாக இவரிஷ்டப்படியே நடக்கட்டுமென்று ஒப்புக்கொண்டார் இவ்விதம் ஜாதி வித்தியாசம் பாராமல் அன்பும் சிநேகமும் நிறைந்தவிடத்திலேயே பிரியம்வைக்கும் இவரது பிற்காலத்தன்மை இளமைப்பருவத்திலேயே விசேஷமாகத்தோன்றிற்று

பாட்டில் இவருக்கிருந்த திறமையோடு, நடிக்கும் திறமையும் விசேஷமாகவிருந்தது. பெண்போல் உடுத்திக்கொண்டு பேசினால் யாவரும் பெண்ணென்றே கொள்வார்கள். பெண் உடையைக் கழித்து சுயரூபத்தைக் காட்டவும் ஆச்சரியமடைவார்கள்.

மேலும் இவ்வயதில் இவர். களிமண்ணினால் அழகாக பிரதிமைகள் செய்வார். அவற்றைச் சந்தையில் விற்று அப்பணத்தைக்கொண்டு தன் சிநேகிதர்களுக்கு விருந்தளிப்பார். இதில் அவருக்கிருந்த திறமையை மெச்சி தொழிலாளிகளும் தங்கள் வேலைகளைக் குறித்து இவர் அபிப்பிராயத்தை நாடுவார்கள்.

எழுதப்படிக்கும் அறிவுக்குமேல் அவர் வித்தை கற்றுக்கொள்ளாதபோதிலும் முன் சொன்னவைகளால் அக்கிராமத்தார் எல்லோருடைய அன்பையும் கவர்ந்தார்.

அவ்வூர் பிரபுக்களின் வீட்டிற்குவரும் வித்வான்களும் இவர் புத்திசாலித்தனத்தைப்பார்த்து வியந்தார்கள். அவ்வூரிலிருந்த எழுதப்படிக்கவறியாத சின்னு (சினிவாஸன்) என்னும் ஒரு ஊளிந்சல்வெட்டுவோன் இவரை ஈசுவர அவதாரமென்று நினைத்து ஊருக்கு வெளியில் இரகசியமாக அழைத்துச்சென்று புஷ்பங்கள் மிட்டாய்கள் முதலியன கொடுத்து கண்ணீர் பெருக வணங்கினான்.

இவர் கிராமப் பள்ளிக்கூடத்தை விட்டதும், வீட்டிலிருந்த ரகுவீரனென்னும் பெயர்பூண்ட ஸ்ரீ ராமமூர்த்தியை தினசரி பூஜிக்கும் கடமை இவருக்கு ஏற்பட்டது. காலையிலெழுந்ததும் பகவந்நாம ஸங்கீர்த்தனத்துடன் மமபுநித்த புஷ்பங்கொய்து

ஸ்நானமும் ஸந்தியாவந்தனமும் செய்து பூஜைக்கு உட்காருவார். புராணம் வாசிக்கும் இடங்களுக்கு ஊக்கத்துடன் சென்று கேட்பதனால், இராமாயணம், மஹாபாரதம், பாகவதம் முதலான புராண இதிகாசங்களின் அறிவையடைந்தார். எழுதப்படிக்கும் சாதாரண அறிவில் இவர் பாண்டித்தியம் அடையவில்லை. இவருக்குப் பதினேழாவது வயதில் கிருத்திபாஸர் என்பவர் செய்த வங்காள ராமாயணத்தின் யுத்தகாண்டத்தை எழுதியிருக்கிறார். இப்பிரதி பேலூர் மடத்தில் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது. அதில் அது எழுதி முடிந்த காலம் 1256-ஹு ஆஷாடம் 19-உ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் சிறுவர்களின் உருண்ட பெரிய எழுத்தில் எழுதப்பட்டு, எழுத்துப் பிழைகள் நிறைந்திருக்கிறது.

இதே வயதில் இவர் குஸ்தி பழகினர். அதினால் கண்டோர் வியக்கும்படி தன் சரீரத்தை எவ்விதமும் வளைத்துத் திருப்பக்கூடும். ஹடயோகிகள் அடைய சிரமப்படும் எண்பது வகையாஸனங்களில் பெரும்பாலனவையும் இவர் எளிதில் கொள்ளக்கூடும்.

பத்தொன்பதாவது வயதில் கல்கத்தாவிற்குச் சென்று, ஜம்புகூரில் தமையனுடன் வசித்தார். தமையனை ராமகுமார் ஜம்புகூரில் ஒரு தர்ம பாடசாலை வைத்திருந்தார். கதாதாரைக் கல்கத்தாவுக்கு அழைப்பித்த காரணம், ஸம்ஸ்கிருதக் கல்வி பயிலுவதற்கும் குடும்ப சம்ரக்ஷணைக்குக் கொஞ்சம் உதவி செய்யவுமே. இவரும் தமையன் சொல்லுக்கிணங்கி சில பிரபுக்களின் வீடுகளில் பூஜைசெய்ய ஒப்புக்கொண்டு ஸம்ஸ்கிருத வியாகரணமும்படிக்க ஆரம்பித்தார். இவர் பூஜைசெய்துவந்த வீட்டிலுள்ளவர்கள், அதுவும் மித்ரா என்பவரின் வீட்டுப்பெண்டுகள், இவரது பக்தியுள்ள பாடல்களைக் கேட்பதில் ஆனந்தமடைந்தவர்களாய் இவரிடம் மிகவும் அன்பு பாராட்டினார்கள்.

ஆனால் இவர் சிலநாளையில் ஸம்ஸ்கிருதப் படிப்பை நிறுத்திவிட்டார். படிக்க ஏற்பட்ட சமயத்தில் இவர் சும்மாயிருப்பதைப் பார்த்த ராம்குமார்; ஏன் படிக்கவில்லையென்று கேட்க "இந்தப்

படிப்பெல்லாம் வயிறு வளர்க்கத்தானே. கூலிக்குச்சுமை எடுப்பவனும் வயிற்றை வளர்த்துக்கொள்கிறான். எனக்கு இவ்விதமான கல்வி வேண்டியதில்லை. எதையறிந்தால் சரீரம், மனஸ், ஆத்மா இம்மூன்றும் திருப்தியடைந்து வேறு தேடமாட்டாதோ அவ்வறிவே எனக்கு வேண்டும்" என்று சொல்ல, தமையன் சிரித்து, சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகிறானென்று, அவர் மனதை மாற்ற முயன்றார். கதாதரர் என்ன சொல்லியும் கேளாதிருக்கவே, வாஞ்சையுள்ள தமையனாதலால் தொந்திரவுபண்ணாமல் இஷ்டம்போலிருக்கட்டுமென்று விட்டுவிட்டார்.

அக்காலத்தில் 1853-ஆ தனவதியும் பக்தியுள்ளவளுமான ராஷ்மணி ராணி கல்கத்தாவிலிருந்து நாலு மைலுக்கப்பாலுள்ள தக்ஷிணேசுவரத்தில் 12-லக்ஷரூபாய் செலவு செய்து ஆலயமொன்று கட்டி அதற்கு கும்பாபிஷேகம் நடத்த யத்தனித்தாள். அவள் தாழ்ந்த செம்படவ ஜாதியானதினால் பிராமணர்களொருவரும் கும்பாபிஷேகத்தை நடத்த ஒப்புக்கொள்ளவில்லை. ராம்குமார் கோவிலையும் அதின் சொத்துக்களையும் தன் குருவாகிய பிராமணன்பேரில் எழுதிவைத்துவிட்டால், யாதொரு அப்பியந்தரமும் இராதென்று சொல்ல, ராணி சந்தோஷமாக அவ்விதமே செய்தாள். இராம்குமாரும் கும்பாபிஷேகத்தை நடத்த ஒப்புக்கொண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமையன்கூட கும்பாபிஷேகத்திற்குச் சென்றார். அங்கு நடந்த சமாராதனையில் இவர் ஒருவரே பட்டினியாயிருந்தார். சூத்திரான்னம் புசிக்கிறதாவென்று மாலையில் காலணாவுக்குப் பொரி வாங்கித் தின்று பசியாற்றினார். ராம்குமார் கோவிலின் பிரதான அர்ச்சகவேலையையும் ஒப்புக்கொள்ளவே, ஸ்ரீ ராமகிருஷ்ணர் தமையனிடம் சூத்திர ஸேவை ஒப்புக்கொண்டதைப்பற்றி விசனித்துப் பேசவும், ராம்குமார் தான் செய்தது பிசகில்லையென்று பிரமாணங்களை எடுத்துக்காட்ட திருப்தியடைந்தார்.

தன் தமையனுடனிருக்கும்பொழுது, ஒருநாள் கங்கைக் கரையிலிருந்து சிறிது களிமண்ணெடுத்து அதினால் விருஷபவாகனரூடராகச் சிவ உருவமொன்றமைக்க, அதை எல்லோரும்

கண்டு வியந்தார்கள். ராஷ்மணி ராணியின் மருமகனான மதுர நாதவிஸ்வாஸனும் ஒருநாள் அப்பிரதிமையைக்கண்டு அதைச் செய்தவர் யாரென்று விசாரித்தான். ஸ்ரீ ராமகிருஷ்ணரென்று தெரிந்ததும் அவரை எவ்விதமாவது கோவில் அர்ச்சகராக்க வேண்டுமென்று சமயம் பார்த்திருந்தான்.

அப்பொழுது அக்கோவிலின் விஷ்ணு விக்ரஹத்தின் கால் அர்ச்சகனுடைய அஜாக்கிரதையினால் கொஞ்சம் உடைந்துபோக ராஷ்மணி ராணி அதற்கென்ன செய்வதென்று கவலையுடன் பண்டிதர்களைக் கேட்டாள். எல்லோரும் அவ்விக்ரஹத்தை எறிந்துவிட்டு, வேறொன்று செய்யவேண்டியதுதானென்று சொன்னார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் கேட்க, 'ராஷ்மணி ராணி தன் புருஷன் கால் ஒடிந்துபோனால் என்ன செய்வாள்? தூர எறிந்துவிட்டு வேறு கல்யாணம் செய்வாளா? அல்லது காலை வைத்தியனால் சௌக்கியம் செய்வாளா?' என்று பதில் சொன்னார். ராஷ்மணி சந்தோஷத்துடன் இவரையே அக்காலைச் செப்பனிடச் சொல்ல, அவர் கால் உடைந்தது தெரியாமல் செப்பனிட்டார். உடனே அவரை அவ்விக்ரஹத்துக்கு அர்ச்சகராகும்படி கேட்டுக்கொண்டாள். அவர் தன் மருமகன் ஹிருதயரும் தன்கூடக் கோவிலில் வசிக்க அனுமதிகொடுத்தால் ஒப்புக்கொள்கிறேனென்றார். அப்படியே அனுமதி கொடுத்து ஹிருதயரை காளியம்மனுக்கு உபபூஜகராகச் செய்தார்கள். சிலநாளைக்கெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணரை அம்மனுக்கு அர்ச்சகராக்கினார்கள்.

இக்காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மனது ஒருவிதமான மாறுதலடைந்துகொண்டு வந்தது. எற்கனவே இவருக்கு அம்மன்பேரில் பக்தி. பாலியத்தில் விளையாட்டாக அம்மனைப் பூஜை பண்ணுவதுண்டு உண்மையாகவே பூஜை செய்ய ஏற்படவே இவர் மனது முற்றும் அதில் அழுந்திற்று. அதிகாலையில் எழுந்து, அருகிலுள்ள விலாசமான நந்தவனத்திலிருந்து திவ்வியமான புஷ்பங்களைப் பொறுக்கிக் கொய்து, தன் கையினு

லேசிய அழகாக மாலை தொடுத்து அம்பிகையை அலங்காரஞ் செய்வார். தாம்பூல நைவேத்தியத்திற்கு பாக்கைச் வாசனை சேர்த்து நன்றாகப் பொடித்து வைப்பார். வெயில் உக்கிரமாக இருந்தால் கையில் விசிறியெடுத்து வீசிக்கொண்டேயிருப்பார். அம்பிகையின் விசேஷ பக்தனான ராம்ப்பிரஸாதசேனரின் பாட்டுகளை பக்கத்தில் நின்று உருக்கமாகப் பாடுவார். ஒவ்வொரு சமயம் பூஜைசெய்ய ஆரம்பித்தாரானால் அதற்கு முடிவேயிராது. அப்படி தீபாராதனைக் காலங்களில் மெய்ம்மறந்து தீபத்தைச் சுற்றிக்கொண்டேயிருப்பார்.

இவற்றையெல்லாம் பார்த்து ராமகுமார் தம்பிக்கு பைத்தியம் பிடித்துவிடுமோவென்று பயந்து, விவாகம் பண்ணிவைக்கத் தீர்மானித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு அப்பொழுது வயது இருபத்தைந்து. ஸ்ரீ சாரதாமணிதேவி என்ற ஒரு ஐந்து வயதுப் பெண்ணை இவருக்குக் கல்யாணம் செய்துவைத்தார்கள். இவரும் கல்யாணமான சில நாளுக்கெல்லாம் திரும்பியும் தக்ஷிணேசுவரத்திற்கு வந்தார்.

இவருக்கு நாளுக்குநாள் ஈசுவரியை அடையவேண்டுமென்ற ஆவல் அதிகரித்தது. 'தாயே நீ இருப்பது நிஜமா? அல்லது கவிகளின் உத்ப்ரேக்ஷையா? உண்மையானால், என் எனக்குப் பிரத்தியக்ஷமாகக்கூடாது? நீ உன் பக்தர்களுக்கு அப்படிப் பிரத்தியக்ஷமாகவில்லையா? நான் என்ன தவறுதல் செய்தேன்?' என்று கதறுவார். இவ்விதம் மனமானது எப்பொழுதும் ஒரே சிந்தையாயிருந்ததினால், இவர் முறைப்படி பூஜைசெய்ய முடியவில்லை. சில சமயங்களில் நைவேத்தியம்செய்ய மறந்துவிடுவார். சில சமயங்களில் தேவிக்காக உள்ள புஷ்பங்களை தன் தலைமேல் போட்டுக்கொள்வார். சில சமயம் தீபாராதனைக்காரம்பித்தவர் தீபத்தைச்சுற்ற மறந்துவிடுவார். இவருடைய இச்செயல்களையெல்லாம் விரோதமாக மதுராநாதவிசுவாஸிடம் கோவில் வேலைக்காரர்கள் போய்ச் சொன்னார்கள். ஆனால், இவருடைய உண்மையை அறிந்த அவன் ஒன்றும் செப்பாதிருந்தான். ஆயி

னும்; இவரை இவ்வித வேலையில் வைத்திருப்பது தர்மமல்ல வென்று ஹிருதயரைப் பூஜை செய்ய ஏற்படுத்திவிட்டு இவரை இஷ்டம்போல் செய்ய விட்டுவிட்டார்கள்.

கோவிலுக்கருகில் பெரிய ஆலமரம் ஒன்றிருக்கின்றது. அது நிற்கின்ற விடம் ஒதுப்புறமாக மனித சஞ்சாரமின்றி காடடர்ந்து கிடந்தது. அவ்விடத்தின் பெயர் பஞ்வடி. ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்விடத்தில் தனியாக இருந்து அம்பிகையைத் தியானம் செய்யலாமென்று அதைச்சுற்றி ஒரு வேலி போட நினைத்து, ஒருநாள் கங்காநதியைப் பார்த்து உட்கார்ந்துகொண்டிருக்கும் பொழுது ஒரு பெரிய சுமடு கங்கையின் அலைகளால் இவர் இருந்த பக்கத்தில் கரையில் தள்ளப்பட்டது. பக்கத்தில் இருந்த ஒரு தோட்டக்காரனைக்கொண்டு அச்சுமையைப் பிரித்துப் பார்க்கச் சொல்ல அதில் சமநீளமான மரத்துண்டுகள், மூங்கிற்கழிகள் கயிற்றுச்சுருள் ஆகிய வேலிக்கு வேண்டிய சாமான்கள் ஒரு கத்தியுள்பட இருக்கப் பார்த்து, ஆச்சரியப்பட்டார். உடனே தான் முன்னமேயே துளசி நட்டுப் பயிர் பண்ணியிருந்த அவ்விடத்தைச் சுற்றி வேலிபோட ஆரம்பித்து, இவரிடம் பக்தியுள்ள ஒரு தோட்டக்காரன் உதவியினால் சீக்கிரம் முடித்தார்.

இவ்விடத்தில் இவர் இராப்பகல் ஓய்வில்லாமல் உட்கார்ந்து கொண்டு லோகமாதாவைத் தியானஞ் செய்துகொண்டுவந்தார். சூரியன் உதிப்பதும் அஸ்தமிப்பதும் அநேக நாள் அவருக்குத் தெரியாது. நாள் முழுவதும் சென்று சாயங்கால பூஜைக்காக ஆலயத்தில் மணிகள் அடிக்கும் சப்தம் இவர் காதுக்கெட்டியதும் 'தாயே இந்த அற்ப ஆயுளில் ஒரு நாள் போய்விட்டதே? நான் இன்னும் உன்னைப் பார்க்கவில்லையே! நான் என்ன தவறுதல் செய்தேன்? அதை நீ தெரிவிக்க வேண்டுவதில்லையா?' என்று பற்பலவிதமாகக் கதறுவார். அவருக்கிருந்த ஆவலினாலும் துக்கத்தினாலும் தலையைத் தரையில் மோதிக்கொள்வார். இரத்தம் பெருகும்படி முகத்தைத் தரையில் தேய்ப்பார். அப்

பொழுது அவருக்கிருந்த மனோநிலையைப் பிற்காலத்தில் விவேகானந்த ஸ்வாமிகளுக்குப் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். 'பிள்ளாய்! ஒரு அறையில் ஒரு பை நிறையப் பொன்னிருக்கிறதென்று வைத்துக்கொள். அடுத்த அறையில் ஒரு திருடன் இருந்தால் அவனுக்குத் தூக்கம் பிடிக்குமா? ஒருநாளும் பிடிக்காது. அந்தப் பணத்தை எப்படிக் கைகொள்ளுவதென்பதைப் பற்றி நினைத்துக்கொண்டேயிருப்பான். அதுபோல இத்தோற்றங்களுக்குப் பின்பாக ஒரு நித்தியவஸ்துவுண்டென்றும், அது இவ்வுலக இன்பங்களையெல்லாம் மங்கும்படி செய்யும் பரமானந்தத்தையுடையதென்றும் அறிந்த ஒருவன் அதையடையும்வரை சும்மாவிருப்பானா? ஒரு நிமிஷமேனும் அதற்காகப் பிரயத்தினஞ்செய்யாமலிருப்பானா? ஒருபொழுதுமில்லை. ஆசையினால் பித்துப்பிடித்திடுவான்.'

இவ்விதம் தெய்வப்பித்து இவரைப்பிடித்தது. இவ்விதப் பைத்தியத்திலிருந்தே இவ்வுலகைச் சீர்திருத்திய சக்திகளெல்லாம் வந்தன. இவ்விதப் பைத்தியத்திலிருந்தே இனிமேலும் சக்திகள் உலகைச் சீர்திருத்தவரப்போகின்றன. அக்காலத்தில் அவருக்குப் படிப்பிப்பார் யாவரும் இல்லை. பக்கத்திலுள்ளவர்களெல்லாம் தனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்பதைமட்டும் படிப்பித்தார்கள். ஆகாரம் நித்திரையென்பது கிடையாது. இவருடைய தமையன் ராம்குமாரும் அப்பொழுது இறந்துபோய்விட்டார். மற்றொரு தமையன் ஊரில் காரியங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். இவருடைய மருமகனான ஹ்ருதயர்கூட இருந்து கஷ்டப்பட்டு சிறிது ஆகாரம் ஊட்டுவார். சிலநாள் அதுவும் சாத்தியமில்லாமல்போய்விடும். வேளையில் நாள் கணக்காய் பிரக்ஞையற்றிருப்பார். ஒருநாள் தன்னுள்ளிருந்த ஆவல் தாங்கமாட்டாமல், தேவி ஆலயத்திற்குள் சென்று, அம்பிகை கையிலிருக்கும் வாளை எடுத்து, அவள் நிஜரூபதரிசனத்தையடையாவிடில் உயிரை மாய்த்துக்கொள்வேனென்று ஓங்கவும், ஜகன்மாதாவான தேவி தன் திவ்விய சுந்தர ரூபத்தைக் காண்பிக்க, 'குழந்தாய், வீணாய்ப்

டாதே. நான் உனக்கு வேண்டும்போதெல்லாம் உன்னிடம் வருகிறேன்' என்று மதுரவசனங்களால் தேற்றினள். அப்பொழுதுதான் அவரது மனதின் குழப்பம் அடங்கிற்று.

இதற்கு முன் ஈசுவரியை சீதாபிராட்டியாகத் தியானத்தில் பார்த்ததாகவும் பிராட்டியார் புன்சிரிப்புடன் இவர் முன் தோன்றி 'உனக்கு என்ன வேணும் கேள்' என்று கேட்க, லோகமாதாவான பிராட்டியின் திருவடிகளில் அன்பொன்றே தனக்கு வேண்டுமென்றுரைக்க, பிராட்டியார் சந்தோஷமடைந்து இவர்க்குள்ளேயே மறைந்ததாகவும், இவர் பின்னுல் சொல்லியிருக்கிறார். பிற்காலத்தில் வியாதியினுல் பீடிக்கப்பட்டு மெலிந்திருந்த தன் சரீரத்தைப் பார்த்து, மிகுந்த கஷ்டங்களை அநுபவித்த சீதாபிராட்டியைத் தான் முதலில் தரிசனஞ்செய்ததினுலேயே தனக்கும் இவ்விதம் நேரிட்டதோ என்றும் சொல்லியிருக்கிறார். இவர் பிரக்ஞையற்றிருக்கும் நேரங்களில் ஏதோ தெய்வங்களைக் காண்பதுபோற் பேசுவதுண்டு. ஜகன்மாதாவே இவருக்குக் குருவாகவிருந்து சகலவிதமான ரகசியங்களையும் காண்பித்துக்கொடுத்தாள். எப்பொழுதும் அம்பிகையினுடைய சரணாரவிந்தங்களிலேயே லயித்த இவருள்ளம் நாள் கணக்காக உலகஸ்மரணைக்கு வராமலிருக்கும். அதினுல் உண்டான ஆகாரக் குறைவினுலும், பக்தியினது தாபத்தினுலுண்டான ஜ்வரத்தினுலும், சரீரம் மிகமெலிந்து, தலை சடைபிடித்து, அவருடைய அழகான முகம் உள்ளிருந்த சின்மயத்தினுல் தேஜஸுடன் பிரகாசித்தபோதிலும் மெலிந்து வாடி பார்க்கப் பரிதாபத்தை உண்டாக்கியது.

அக்காலத்தில் மிகுந்த அழகினளாய் சகல சாஸ்திரவல்லமையுள்ளவளான பிராம்மணி என்னும் ஒரு பிராமண சந்நியாசினி அங்குவந்தனள். அவளிடமிருந்த பரிசுத்தம் கண்டோர் வணங்கும்படி பரிமளம் வீசியது. அவள் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நிலைமையைப்பற்றிக் கேள்விப்பட்டதும், அதின் நிஜத்தைப்பறிந்து உடனே அவரிடம் சென்றுள். அவரைப்பார்த்து 'குழந்தாய்,

உன்னைப்போல் பைத்தியம் பிடித்தவனுடைய பாக்கியமே பாக்கியம். உலகமெல்லாம் பைத்தியம் பிடித்தேயலைகிறது. சிலர் பணத்திற்காகவும் சிலர் சிற்றின்பங்களுக்காகவும், சிலர் கீர்த்திக்காகவும் இன்னும் நூற்றுக்கணக்கான அநித்தியவிஷயங்களுக்கும் பித்துப்பிடித்தலைகிறார்கள். பகவானுக்காகப் பித்துப்பிடித்தலைபவர் எவ்வளவு சொற்பம். அப்படிப் பைத்தியங்கொண்டவன் பாக்கியவானே' என்று சொல்லி, சில மூலிகைகளினால் அவரது தாபத்தைத் தணித்தாள்.

இவருக்கு கொஞ்சங் கொஞ்சமாக பிரக்ஞை உண்டாகவே, தான் ஈசுவரியின் சந்நிதானத்திலிருந்து பிரிந்ததைப்பற்றி வருந்தினார். தான் வேண்டும்பொழுது அச்சமாதிநிலைக்குச் செல்லலாமென்று அப்பிராம்மணி தைரியஞ்சொல்லத்தேறி, அவளிடத்தில் தந்திர முறைகளையும், யோகமுறைகளையும், நம்மதத்தின் அநேக பிரிவுகளின் இரகசியங்களையும், கற்றுக்கொண்டார். அவர் பிற்காலத்தில் அவளை சாக்ஷாத் சரஸ்வதியின் அவதாரம் என்று சொல்வதுண்டு. அம்மாதின் கீழ், அவள் கற்பிக்கும் முறைப்படியெல்லாம் சாதனைசெய்து அநுபவசித்தியடைந்தார். அவருக்கு அக்காலத்தில் அகோரமான பசி உண்டாயிற்று. அந்த அம்மாள், அநேகவிதமான பக்ஷியங்களையெல்லாம் அவர் முன்னிலையில் எப்பொழுதும் ஏராளமாக வைத்திருப்பதிலேயே அவருடைய பசியை ஆற்றினாள். அம்மாது சிரோமணி, சிலவருஷகாலம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பக்கத்திலிருந்து தனக்குத் தெரிந்ததையெல்லாம் அவருக்குக் கற்பித்தானவுடன் அங்கிருந்து போனாள்.

இதன் பிறகு தோதாபுரி என்ற ஒரு அவதூத சந்நியாசி அங்கு வந்தார். இவரை ஸ்ரீ ராமகிருஷ்ணர் நங்தா என்று சொல்வார். அதாவது எல்லாவற்றையும் துறந்தவர். இவர் ஆஜாநுபாஹு; அதிதிடசரீரத்தையுடையவர். ஓரிடத்திலும் மூன்றிரவிற்குமேல் தங்குவதில்லை. வஸ்திரம் என்பது கிடையாது. உலகமெல்லாம் பிக்ஷையென்று தாம் கொண்டிருந்த

மதத்தை அநுசரித்து, வெயில் மழை குளிர் என்பதை சற்றும் பாராட்டாது எப்பொழுதும் வெளியிலேயே தங்குவார். இவ்வளவுக்கும், இவருடைய காலடி பட்டாலே தம் அரண்மனை சுத்தமாகி தாங்களும் கிருதார்த்தர்களாவோமென்று எத்தனையோ பிரபுக்களும் ராஜாக்களும் மதித்தார்கள். இவருக்கு மனதில் 'பங்காளத்தில் ஒரு ஜீவனுக்கு உபகாரம் செய்' என்று ஒரு அசரீரவாக்கு சொல்ல, கங்காஸாகரம் என்ற புண்ணிய ஸ்தலத்தை நோக்கிச் சென்றவர், தற்செயலாக தக்ஷிணேசுவரத்தில் இறங்கினர். அங்கே, ராமகிருஷ்ணரைப் பார்த்ததும் உபதேசத்திற்குரியவரென்றறிந்து நிர்க்குணபிரம்மோபதேசம் செய்கிறேனென்று கேட்டுக்கொண்டார். இதுவரையில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜகன்மாதாவாகிய ஸகுணப் பிரம்மத்தின் உபாசனையையே அநுசரித்தவர். தனக்குப் பிரத்தியக்ஷமான ஜகன்மாதாவைக்கேட்டு அநுமதிவாங்கிக்கொண்டு தோதாபுரி ஸ்வாமிகளிடம் உபதேசம் பெற்றுக்கொண்டார். குரு சொன்னபிரகாரம் தியானம் செய்து மூன்று தினங்களில் நிர்க்குணப் பிரம்மாநுபவமாகிற நிர்விகல்ப ஸமாதியை அடைந்தார். இதனால், தோதாபுரி தான் நாற்பது வருஷம் சிரமப்பட்டு அடைந்ததை இவர் மூன்று நாள்களில் எப்படி அடையக்கூடும். என்று சந்தேகத்துடன் இவரைச் சில கேள்விகள் கேட்க, அதற்குக் கொடுத்த விடைகளினால் சமாதானமடைந்து ஆச்சரியப்பட்டார். அதன்மேல் எங்கும் மூன்று நாளைக்குமேல் தங்காத தோதாபுரி அங்கே அநேக மாதகாலம் வசித்தார். அவர் ராமகிருஷ்ணருக்கு சந்நியாசி ஆசிரமம் கொடுத்தார். அப்பொழுதுதான் அவருக்கு ராமகிருஷ்ணர் என்ற பேர் வந்தது.

ஒருநாள் தோதாபுரி ஹோமம்செய்த அக்கினியில் ஒரு இழிகுலத்தான் சுருட்டுப் பற்றவைக்க ஸ்வாமிகளுக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. அப்பொழுது பக்கத்திலிருந்த ஸ்ரீராமகிருஷ்ணர் அவரைப் பார்த்து 'ஸ்வாமி! சர்வமும் பிரம்மமென்று அறிந்திருக்கிற தாம் கோபங்கொள்ளலாமா.' சுருட்டுப் பற்றவைத்தவனும் சுருட்டும், அக்கினியும், பிரம்மமாயி

ற்றீர்' என தோதாபுரி உடனே கோபம் தணிந்து ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பார்த்து 'அப்பா நீ என் சிஷ்யனல்ல; இனிமேல் எனது நண்பன்' என்றார். பிற்பாடு ஸகுணப்பிரம்மத்தின் உண்மையை அறியாது ஜகன்மாதாவில் நம்பிக்கையற்றிருந்த தோதாபுரிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜகன்மாதாவைப் பிரத்தியக்ஷமாகக் காண்பிவித்துக்கொடுத்து குருவானார்.

பிறகு இவர் ஸ்ரீ ராமச்சந்திரனைப் பார்க்கவேணுமென்று ஆசைகொண்டார் தன்னை ஹநுமானகப் பாவித்துக்கொண்டு ராமச்சந்திரனை நினைத்தருளினர். அப்பொழுது ராமச்சந்திர மூர்த்தியை வழிபட்டு அம்மூர்த்தியைப் பிரத்தியக்ஷத்தில் அநுபவித்த ஒரு மஹான் அவ்விடம் வந்து இவருக்கு அம்மூர்த்தியைக் காண்பிவித்துக்கொடுத்தார். இவ்விதம் நாம் வணங்கும் ஒவ்வொரு மூர்த்தியும் உண்மையென்று அநுபவத்தில் அறிந்துகொண்டார்.

இவருக்குப் பெண்ணாசை பொன்னாசை இவ்விரண்டும் சுபாவத்திலேயே இல்லாதிருந்தும், பொன்னுக்கும் மண்கட்டிக்கும் தோன்றும் வித்தியாசத்தைப் போக்கடித்துக்கொள்ள செய்த சாதனைகள் வியப்பைத்தரும் ஒரு கையில் பொன்னும் மற்றோர் கையில் மண்ணும் எடுத்துக்கொண்டு, 'இது மண், இது பொன், மண்ணினால் பாண்டங்கள் செய்கிறார்கள், வீடு கட்டுகிறார்கள். மண்ணிலிருந்து உணவுக்குரிய தானியம் காய்கறி முதலியவை உண்டாகின்றன. இது பொன் இதினால் வஸ்திரம் முதலியவை வாங்கலாம் என்ன வித்தியாசம்? இரண்டும் மனிதனுக்கு உபயோகமுள்ளவை' என்று இவ்விதம் தியானித்து, இரண்டின் வித்தியாசத்தையும் இழந்து இரண்டையும் கங்கையில் எறிந்து விடுவார்.

அப்படியே ஆத்மாவுக்கு ஆண் பெண் என்ற வித்தியாசமில்லாததால், தான் ஆண் என்ற எண்ணத்தைப் போக்கடிக்க.

இவர் கொஞ்ச நாள் பெண்போல் உடுத்திக்கொண்டு, கடிந்து பெண்கள்கூடவே சகவாசம் செய்துவந்தார். தன்னை ராதையாகப் பாவித்துக்கொண்டு கிருஷ்ணபரமாத்மாவை நினைந்துருகிப்பாடி, கிருஷ்ணனையடைந்தார். இவ்விதம் ஸ்திரீ புருஷ வித்தியாசத்தை ஜயித்தார்.

ஆத்மாவுக்கு ஜாதி பேதமில்லையாதலால், தான் உயர்குலத்தான் என்ற எண்ணம்போக, ஒரு புலையனுடைய குடிசைக்கு அவனும் அவன் பெண்டுகளும் வேலைக்காக வெளியே போயிருக்கும் சமயம் பார்த்துச் சென்று குடிசையைப் பெருக்கி, பாத்திரங்களை விளக்கி வைத்துவந்தார்.

இவ்வித ஸாதனைகளினால் தன் மனதையும் சரீரத்தையும் தன் வழிப்படுத்தினார் அதினால், பணத்தைத் தொட்டாரானால் சரீரம் நிறைத்து ஊசிகுத்துவதுபோல் வலியைத் தரும். எந்த ஸ்திரீகளைக் கண்டாலும் 'தாயே' என்று தரையில் விழுந்து நமஸ்கரிப்பார். சண்டாளர்களைப் பார்த்தால் பகவான் இவ்விதம் விளையாடுகிறார் என்பார்.

இப்பொழுது இவர் மனைவியாகிய ஸ்ரீ சாரதாமணிதேவி இங்கு வந்தாள். அவள் ஐந்து வயதில் கல்யாணமானது முதல் புருஷனைப் பார்த்திராள். அவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்றும், சந்நியாசியாய்ப் போய்விட்டாரென்றும் பலபலவிதமாகக் கேள்வியுற்று, நேராகப்போய்ப் பார்க்கலாமென்று கால் நடையாக வந்தாள். அவளைப் பார்த்ததும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவள் காலில் விழுந்து 'நான் ஸ்திரீகளையெல்லாம் தாயாகப் பாவிக்கக் கற்றுக்கொண்டேன். ஆயினும் நான் உனக்குக் கடமைப்பட்டவன். உன் சித்தப்படி நடக்கத் தயாராகவிருக்கிறேன்' என்றார்.

இதைக் கேட்டதும் அந்த அம்மாள் 'நான் தங்களைக் கடவுளிடமிருந்து திருப்பவரவில்லை. தங்களது மேன்மையான நோக்கத்தையும் பக்தியையும் அறிந்துகொண்டேன். என்னை ஒரு சிஷ்

யையாகப் பாவித்து கடவுளிடம் சேர்ப்பிக்கவேண்டும்' என்றாள். அப்படியே அன்று முதல் பிரதம சிஷ்யையாகவிருந்து அவருக்குத் தொண்டு புரிந்துவந்தாள். பிற்காலம் அவரிடம் வந்த சிஷ்யர்களுக்கெல்லாம் தாய்போலிருந்தாள்.

இவர் ஹிந்து மதத்தின் தெய்வங்களையெல்லாம் அநுபவத்தில் தெரிந்துகொண்டு அப்படியே மற்ற மதங்களையும் பரிசோதித்தறிய விரும்பினார். ஒரு மகமதியகுருவையடைந்து அவர் சொல்லியபடியெல்லாம் அப்பியசித்து, கடவுளையடைந்து, அம்மதமும் உண்மையே என்று தெரிந்துகொண்டார். அப்படியே கிறிஸ்து மதத்தின் உண்மையையும் தெரிந்துகொண்டார்.

இவ்விதம் பலவித வித்தியாசங்களை வெளிப்படையாக உடைய மதங்களெல்லாம் ஒரு கடவுளையே நாடுகின்றனவென்றும், அக்கடவுளே தேசகால வித்தியாசங்களினால் பாதிக்கப்பட்ட அன்பர்களுக்கு அந்தந்த தேசத்திற்குத் தக்க ரூபத்துடன் கிருபை செய்தருளுகிறார் என்றும் அநுபவத்தில் தெரிந்துகொண்ட பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தன் அநுபவ பூர்வமான ஞானத்தை உலகத்துக்குப் புகட்டத் தயாராயிருந்தார். ஆயினும் உலகம் தயாராகவில்லை. அப்பொழுது காளி கோவிலில் சென்று 'தாயே, எனக்குத் தெரிந்ததை யாருக்குச் சொல்வது. உலகத்தவரெல்லாம் பெண் பொன் விஷயங்களிலேயே கருத்தாயிருக்கிறார்களேயொழிய என்னை நாடுகிறார்களில்லையே' என்று கதறுவார். அப்பொழுது ஈசுவரி 'அப்பா, கொஞ்சம் பொறு; நீ அடைந்த ஞானத்தை உலகமெல்லாம் பரவச்செய்யும் சிஷ்யர்கள் வருகிறார்கள்' என்று சமாதானப்படுத்தினாள்.

இவரிடமிருந்த ஞானமும் தூய்மையும் பரிமளம்வீச, மலர்ந்த பங்கஜத்திற்கு வண்டுகள் வருவதுபோல் இவரை நாடி அநேகர் வந்தார்கள். இவருக்கு பக்தியிலும் ஞானத்திலும் சிறந்தவர் யாராயினும் இருப்பதாகக் கேள்விப்பட்டால் அவர்களை நாடித் தாமே செல்வார். அப்படி பிரம்மசமாஜத் தலைவரான கேசவசந்திர சேனருடைய பக்தியையும் வாக்சாதுர்யத்தையும் பற்றிக்

கேள்வியுற்று, அவரைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலுடன், கேசவ சந்திரசேனர் பக்கத்தில் ஒரு தோட்டத்தில் சிஷ்யர்களுடன் விளையாட்டாக வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டு அங்கே சென்றார். பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் புதிதாக யாராவது கியாதிபெற்ற மனிதர்களைப் பார்த்தால் சமாதி யடைவது வழக்கம். அவ்விதமே கேசவசேனரைப்பார்த்ததும் சமாதியை யடைந்து கொஞ்சம் தெளிந்ததும் 'சரிதான் தெரிந்தது. உனக்கு வால் போய்விட்டது' என்றார். ஒரே வஸ்திரத்தை அரையில் கட்டி மேலிலும் போட்டுக்கொண்டிருக்கும் இவர் வேஷத்தைப் பார்த்த கேசவசேனருடைய சிஷ்யர்கள், மேற்சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும் ஏதோ பயித்தியக்காரனென்று சிரித்தார்கள். வைராகிகளிடமெல்லாம் கற்றுக்கொள்ளத் தயாராயிருந்த கேசவசேனர் அவர்களை யமர்த்தி பகவானைப் பார்த்து 'தாங்கள் சொன்னதின் கருத்து புலப்படவில்லை; விளங்கச்சொல்லவேண்டும்' என்றார். அதற்கு பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் 'தவளைக்குஞ்சுகள் வாலிருக்கும் வரையில் ஜலத்திலேதான் இருக்கவேண்டும். கரையில் வந்தால் இறந்துபோம். வால் போய் விட்டதானால் கரையிலும் ஜலத்திலும் இருக்கலாம். அதுபோல் மனிதர்களுக்கு, உண்மையான ஞானமும் பக்தியும் ஜனித்துவிட்டதானால் அவர்கள் சம்சாரத்திலிருப்பதனால் பாதகமில்லை' என்றார். இதைக் கேட்டதும் எல்லோரும் மௌனத்தையும் ஆச்சரியத்தையும் அடைந்தார்கள். அதுமுதல் கேசவசேனர் ராமகிருஷ்ணரை அடிக்கடி தக்ஷிணேசுவர ஆலயத்தில் வந்து கண்டுகொண்டார். பிற்பாடு தான் பதிப்பித்துவந்த பத்திரிகையில் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பற்றியும் அவரது உபதேசங்களைப்பற்றியும் ஒரு வியாசமெழுதினார். இதனால் ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய பேர் இன்னும் பரவிற்று. பிற்காலத்தில் கேசவசேனர் தம் கொள்கைகளை ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசத்திற்குத் தக்கபடி சிறிது மாறுதல் செய்து கடவுளை தாயாராகவழிபட ஆரம்பித்தார். விக்கிரஹாராதனை கூடாதென்ற பிரம்மசமாஜக் கொள்கைக்கு விரோதமாக தக்ஷிணேசுவரத்தில் கோயில்கொண்ட ஜகதீசுவரியை வணங்கினதாகக்கூட சொல்வார்கள்.

பின்பு கேசவசேனருடைய ஸகாக்களாகிய பிரதாப் சந்திர மஜும்தாரும் விஜயகிருஷ்ணகோஸ்வாமியும் வந்தார்கள். ஆரியஸமாஜத் தலைவரான ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதியும் வந்து தரிசித்தார். கடைசியாக விவேகானந்த ஸ்வாமிகளென்று உலகமெங்கும் புகழ்பெற்ற நரேந்திரநாத்தத்தரும் மற்ற சிஷ்யர்களும் வந்தார்கள். இவர்கள் பகவானிடத்தில் சந்நியாசியாசிரமம் பெற்று அவருடைய உபதேசங்களை உலகமெங்கும் பரவச் செய்தார்கள்.

இச்சிஷ்யர்களில் முக்கியமானவர்களின் பெயரை இங்கு சொல்லவேண்டும். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய அந்தியகாலத்திலும் பின்னும் அவர் சந்நியாசி சிஷ்யர்களைக் காப்பாற்றிவந்த ஸுரேந்திரநாத மித்திரர், சகலத்தையும் ஈசுவர ரூபமாகப் பாவித்து, பாம்பு வந்தபொழுதும் 'தாயே! உன் இருப்பிடம் போ' என்று வேண்டிக்கொண்ட நாகமஹாசயர், பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் சிஷ்யக் கூட்டங்களுடன் ஆனந்தமாகக் காலம்போக்கும்படி தன் வீட்டை எப்பொழுதும் திறந்துவைத்திருந்த ஜமீன்தாரான பலராம்போஸ், அதிவிடனாயிருந்து பகவானுடைய கிருபையினால் மஹாபக்தனான கிரீஷ சந்திரகோஷ் என்னும் பெயர் பெற்ற வங்காள நாடகக்கவி, ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திராமிருதத்தை வங்காளத்திலும் இங்கிலீஷிலும் எழுதிய மஹேந்திரநாதகுப்தர். இவர் தன் பவ்வியத்தினாலும், தான் எழுதியவைகளெல்லாம் பகவானது அருளினாலென்ற எண்ணத்தினாலும் தன் பெயரை வெளியிடாது "எம்" என்றமாத்திரம் வெளியிட்டார்.

இன்னும் மேல் சொன்னவர்களைத் தவிர ரக்கல் (ஸ்வாமி ப்ரஹ்மானந்தர்) பாபுறாம் (ஸ்வாமி யோகானந்தர்) ஹநாமானுடைய அம்சமாக பாவிக்கப்பட்ட சசி (ராமகிருஷ்ணானந்தர்) முதலான அநேகர் சந்நியாசியாசிரமம் பெற்று பகவானது கிருபையினால் தாம் பெற்ற அறிவை உலகமுழுவதும் பரவச் செய்தார்கள்.

அவர் இப்படித் தன்னைச் சூழ்ந்துவந்த சிஷ்யர்களுக்கும், தன்னைப் பார்க்கவந்தவர்களுக்கும், சதாகாலமும் கேட்ட கேள்விகளுக்கெல்லாம், விடையளித்து சந்தேகங்களையெல்லாம் போக்கடித்து ஞானத்தைப் புகட்டினர். தக்ஷிணேசுவரம் கோவிலின் முற்றத்தின் வடமேற்கு மூலையில் இருக்கும் அவருடைய அறை எப்பொழுதும் திறந்திருக்கும். யார் வேண்டுமானாலும், எச்சாதியானாயினும், எம்மதத்தினனாயினும், அவரைப் போய்ப் பார்க்கலாம். வந்தவர்களுடனெல்லாம் தன் சரீர சிரமத்தைப் பாராமல் பேசிக்கொண்டிருப்பார். ஒருசமயம் அவருக்கு வயிற்றுக்கடுப்புகண்டு உடம்பு எலும்பும் தோலுமாய் இளைத்துப்போயிருந்தது. ஒரு டாக்டர் அவரைப் பார்க்க வந்தார். பகவான் சிஷ்யர்களுடன் பேசிக்கொண்டும், ஈசுவரனுடைய நாமத்தை மனமுருகிப் பாடிக்கொண்டும் இருந்தார். வைத்தியர் இதைப் பார்த்து, 'இதென்ன, இம்மனிதனுக்குப் பைத்தியமோ? இந்த உடம்பில் இப்படிப் பேசிக்கொண்டிருக்கிறாரே' என்று ஆச்சரியப்பட்டார்.

இவர் உபமானங்களாலும் கதைகளாலும் சாமியோசிதமான உபதேசங்களைச் செய்துவந்தார். இவருடைய உபமானங்களின் அழகைச் சொல்லி முடியாது. 'எந்த விஷயத்தைச் சொன்ன போதிலும் அவர் வாயிலிருந்து விழும் வாக்கியங்கள், வைரம், சிவப்பு, பச்சை, நீலம், கோமேதகம் முதலிய ரத்தினங்களால் செய்யப்பட்ட கலிடாஸ்கோப் என்னும் கோலக்கண்ணாடி எப்படித் திருப்பியபோதிலும் விசித்திரமாயும், நூதனமாயும் கோலங்களைக்காட்டுவதுபோல், இருக்கின்றன' என்று ஐரோப்பிய ஸம்ஸ்கிருத பண்டிதர்களில் சிரேஷ்டரான மாக்ஸ்முல்லர் என்பவர் எழுதியிருக்கிறார்.

இதற்கு சில உதாரணங்களை இங்கெடுத்துக் கூறலாம். ஒருநாள் சிஷ்யர்கள் வாதம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். ஈசுவரன் குணத்தோடு கூடினவரா, நிர்க்குணரா? ரூபத்துடன் கூடியவரா, அரூபியா? ஸ்தூலசரீரத்துடன் அவதாரம் செய்கிறரா?

என்ற கேள்விகளைக்குறித்து பேசிக்கொண்டிருந்தார்கள். காலை சமயம் மரத்தடியில் உட்கார்ந்திருந்தார்கள். எல்லாரும் பேசி ஓய்ந்தார்கள். நரேந்திரன் கக்ஷிஜயித்தாற்போல் தோன்றிற்று. அவனுடைய சப்தம் எல்லாருக்கும் மேல் கேட்டது. பகவான் தூரத்தில் நின்று கேட்டுக்கொண்டிருந்தவர் கொஞ்சம் சமீபம் வந்து பின்வரும் கருத்துள்ள பாடலைப்பாட ஆரம்பித்தார்.

"ஏ மனமே இருட்டறையில் பைத்தியக்காரனைப்போல் நீயும் அந்தப் பரம்பொருளை வீணாய்த் தேடுகிறாய்.

ஆறு சாஸ்திரங்களிலும் சென்று பார்த்தாலும் அகப்படான். அப்படியே தந்திரங்களிலும், வேதங்களிலும். அவனுக்குப் பிரியமான பக்தி யென்னும் தேனைக் கொண்டுபோனால் வருவான்."

அவர்களுடைய வாதத்திற்குப் பதில் கிடைத்துவிட்டது. பக்தியினால் ஈசுவரனை நாடு. அவனையடைந்தால் அவனுடைய குணம் பின்னால் உனக்குத் தெரியும்.

மற்றோர் சமயம், இப்படியே 'சாஸ்திரங்கள் உண்மையா? வேதங்கள் கடவுளிடத்திலிருந்து வந்தனவா? கடவுளின் தன்மையென்ன?' என்ற விஷயங்களைப்பற்றிப் பேசி மெலிந்தார்கள். பகவான் இவ்வாதத்தில் வெறுப்புற்று, எழுந்து தன்னறையின் தாழ்வாரத்திற்கு வந்தார். வந்ததும் அருகில் ஓடும் கங்காநதியைப் பார்த்தார். பார்த்து இருகரைகளையும் சுட்டிக் காட்டினார். இதைப் பார்த்த சிஷ்யர்கள் எல்லாரும் வெளியே வந்து பகவானைச் சூழ்ந்து அவர் சுட்டிக்காட்டின இடத்தைப் பார்த்தார்கள். நதியின் இக்கரையில் சில நாய்கள் கூடி. அக்கரையை நோக்கிக் குலைத்துக்கொண்டிருந்தன. அக்கரையில் சில நாய்கள் கூடியிருந்தன. ஆனால் அவைகள் இக்கரையைப் பார்க்கவில்லை. குலைக்கவும் இல்லை. அங்கே விழுந்துகிடந்த ஒரு பிராணியின் பிரேதத்தை வெகு முயற்சியுடன் தின்றுகொண்டிருந்தன. பகவானையடையாதவர்களை இந்நாய்களைப்போல் குலைப்பார்களென்றும், பகவானையடைந்து அவனுடைய இனிமை

யை அநுபவித்தவர்கள் பேச்சற்றிருப்பார்களென்றும் பகவானை யடைய முயற்சி செய்யவேண்டுமே யொழிய வாதம் பிரயோஜனமில்லையென்றும், இப்பயங்கரமான உபமானத்தால் காண்பித்தார்.

ஒருநாள் ராஷ்மணி ராணியின் மருமகனான மதுரபாபு பகவானுடன் வாதஞ்செய்தார். ஈசுவரனும் பிரகிருதியின் சட்டங்களால் கட்டப்பட்டவராய் 'இருக்கவேண்டுமென்று மதுரபாபு சொல்ல, பகவான் 'அப்படியல்ல, ஈசுவரன் வேண்டுமானால் பிரகிருதியை மாற்றலாம்' என்று சொன்னார். மதுரபாபு சமாதானமாகாமல் ஒரு செம்பருத்திச் செடியில் வெள்ளை புஷ்பம் பூக்கும்படி ஈசுவரனாலும் செய்ய முடியுமா?' என்று கேட்க பகவான் 'செய்ய முடியும்' என்றார். சிறிது நேரத்திற்கெல்லாம் ஏதோ காரியமாக வெளியே சென்ற பகவான், ஒரு வெள்ளைப்பூவும் ஒரு சிவப்புப்பூவும் பூத்திருந்த ஒரு செம்பருத்திக் கொம்பை ஒடித்துக்கொண்டுவந்தார். மதுரபாபு, பகவானை வணங்கி, 'சுவாமி நான் இனி தங்களுடன் ஒரு விஷயத்தையும் பற்றி வாதம் செய்வதில்லை' என்றார்.

விவேகாநந்த ஸ்வாமிகளென்று உலகமெல்லாம் கீர்த்திபெற்ற நரேந்திரநாதர் பாலியத்தில் ஈசுவரன் இருப்பது உண்மையா என்ற சந்தேகத்திலே வருந்தி, மதபோதகர்கள் எவர்களைக் கண்டாலும் 'நீங்கள் இவ்வளவு பிரசங்கமாய்ப் பேசும் கடவுளைப் பார்த்ததுண்டா' என்று கேட்டுவந்தார். ஒருவரும் இவருக்குச் சரியான பதில் சொல்லாததினால், தன் புத்தி ஒருவாறாய் அலைப்பட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்தார். வந்து 'நீர் கடவுளைப் பார்த்ததுண்டா?' என்று கேட்க, பகவான் 'ஆம் நான் பார்த்திருக்கிறேன். நான் உன்னைப் பார்ப்பதைவிட அவரைப் பார்ப்பதே எனக்கு உண்மையாகத் தோன்றுகிறது. உனக்கு வேண்டுமானால் காண்பிக்கிறேன்' என்றார்.

இப்படி அநுபவத்தில் கடவுளை அடைந்தவராதலால் தன் சிஷ்யர்களையும் அநுபவத்தில் ஈசுவரனை அடையவேண்டுமென்று

போதித்து அதற்குள்ள வழிகளையெல்லாம் காண்பித்துக்கொடுத்து சந்தேகங்களையெல்லாம் எப்படியானால் போக்கடிக்க முடியுமோ அந்த ருசுக்களுக்கெல்லாம் உடன்பட்டார்.

பகவான் உடம்பில் தங்கம் வெள்ளி முதலிய லோஹங்கள் பட்டால் உடம்பு வலியெடுத்து விறைத்துப்போகும். என்று பகவானிடமிருந்தே கேள்விப்பட்ட நரேந்திரன் ஒருநாள் இதைப் பரிக்ஷிக்க விரும்பி பகவான் வெளியில் போயிருக்கும்பொழுது, ஒருவரும் அறியாது ஒரு ரூபாயை படுக்கைக்கடியில் வைத்துவிட்டார். பகவான், ஒன்றும் அறியாதுவந்து உட்காரவும், உடம்பு விறைத்து கூச்சலுடன் பிரக்ஞைபற்று விழுந்தார். இதன் காரணம் தெரியாது பக்கத்திலுள்ளவர்கள் திகைக்க, படுக்கையில் பாம்பேதேனும் இருக்குமோவென்று படுக்கையை யுதறவும், ரூபாய் விழுந்தது. ரூபாய் நீங்கவும், பகவான் சரீரம் முன்போலாயிற்று. அப்பொழுது வெளியிலிருந்து வந்த நரேந்திரனைப் பார்த்து பகவான், 'இப்பொழுது உனக்குச் சமாதானமாயிற்றா? நான் சொல்லும் உண்மையையறிய, என்னருசுவேவண்டுமானாலும் பார்த்துக்கொள்' என்றார். அதுமுதல் நரேந்திரர் பகவானைப் பரிக்ஷிப்பதை விட்டார்.

மனம் போனவழியே சரீரம் போகுமென்பதையும் மனத்தின் இச்சைகளையும், துவேஷங்களையும் சரீரத்திற்கும் படிப்பிக்கலாம். என்பதையும் பகவான் இதினால் ருசுப்பித்தார்.

ஒரு சிஷ்யன் ஸ்ரீ சாரதாமணி தேவியார் பகவானது அறைக்குள், ராத்திரி சில சமயங்களில் போவதைப் பார்த்து சந்தேகங்கொண்டான். ஒருநாள் அத்தேவியார் போவதைப் பார்த்து மெதுவாகப் பின்சென்று பார்த்தான். பகவான் அறை கொஞ்சம் திறந்திருந்தது. உள் தீபம் எரிந்துகொண்டிருந்தது. பகவானுடைய குரல் கேட்டது. சிஷ்யன் சந்தடி செய்யாமல் மெதுவாகக் கதவின் பக்கம் சென்று ஒட்டுக்கேட்டான். பகவான் கையில் புஷ்பத்துடன் தேவியாரை ஜகதம்பிகையாகப் பாவித்து ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டிருந்தார். சிஷ்யன் வெட்கத்துடன் அங்கிருந்து நீங்கிப்போய்விட்டான். பகவானைப் பார்

க்க மனம் எழவில்லை. பகவான் சிலநாள் இச்சிஷ்யனைக்காணாம லிருக்கவே, மற்ற சிஷ்யர்களைக்கொண்டு அழைத்துவரச்சொல்லி அவனைப்பார்த்து 'அப்பா நீ சந்தேகப்பட்டதினால் ஒரு பாதக மில்லை. சந்தேகத்தை உன் கண்ணால் பார்த்து தீர்த்துக்கொண் டாயே அதுதான் பாக்கியம் இப்படி ஒவ்வொன்றையும் சந் தேகமறப்பரிசோதிப்பாயானால் உனக்கு முக்தி நிச்சயம்' என்றார்.

தான் ஒவ்வொன்றையும் சந்தேகமறப் பரிக்ஷித்தறிந்ததனால் மற்றவர்களுடைய சந்தேகத்தைப் பற்றி அவர் வருந்தவில்லை இவருக்கு ஜகன்மாதா பிரத்தியக்ஷமான பிறகு, ஒரு சந்தேகம் ஜனித்தது. இதெல்லாம் கேவலம் மனோகல்பிதமாயிருக்குமோ? அல்லது சொப்பனமாயிருக்குமோ?' என்று சந்தேகப்பட்டார். அந்த சந்தேகத்துடன் ஜகன்மாதாவைப் பார்த்து 'நான் உன் னைப் பார்க்கிறேனென்பது வாஸ்தவமானால், ராஷ்மணிராணியின் இருபெண்களும் இன்று மத்தியானம் என் முன்னிலையில் வரவே ண்டும்' என்றார். ஆச்சரியம்! கோஷாக்களாய், சாதாரணமாய் அச்சமயத்தில் எப்பொழுதும் அக்கோவிலுக்கு வராத அப்பெ ண்கள் அன்று அகஸ்மாத்தாய் தக்ஷிணேசுவரம் வந்து, மரத்தடி யில் இருந்த ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பார்த்து விசாரித்துவிட்டுப் போனார்கள். இன்னும் இவர் சந்தேகத்தை மாற்ற அம்பிகையி னது விக்கிரஹத்தின் முன்பிடித்த நூலானது மூச்சுவிட்ட காற்றி னலசைவதுபோல் அசைந்ததாகவும், விக்ரஹம் முன் நகர்ந்து வந்ததாகவும் சொல்லப்பட்டிருக்கிறது மேற்சொன்னவை சிறு பிள்ளைகளுக்காக எழுதும் கதைபோலிருக்கின்றனவென்று சிலர் புன்னகை கொள்ளலாம். ஆனால் இத்துடன், நம் கொள்கை களில் சிறிதும் நம்பிக்கையில்லாத பிரம்மஸமாஜத் தலைவரான பிரதாபசந்திரமஜூம்தாரும், மாக்ஸ்முல்லர் துரையும், மற்றவர் களும் இவரது பெருமையைப்பற்றி எழுதியிருப்பதைப் பார்த் தால், ஆத்மாவின் அபாரசக்தியையும் அச்சக்தியை வெளிக்காட் டும் வழிகளையும்பற்றி வெகுவாய் எடுத்துப்பேசும் நம் சாஸ்திரங் களில் நம்பிக்கையுள்ள நம்போன்றவர்க்கு, மேற்சொன்னவற்றில் அவநம்பிக்கைப் படும்படியான தொன்றுமில்லை. மாக்ஸ்முல்லரு

டைய அபிப்பிராயம் கொஞ்சம் முன்னமே சொன்னோம். அவர் இவரை, 'ஒரு உண்மையான மஹாத்மா' என்று அழைத்து, அப்பெயருள்ள வியாசம் ஒன்று ஒரு பிரபலமான ஆங்கிலபத்திரிகையில் எழுதினார்.

பிரதாப்சந்திரமஜூம்தார் தன் சமாஜப் பத்திரிகையில் 1879-வது அக்டோபரில் இவ்விதமாயெழுதினார்.

'அந்த அற்புத மனிதன் போகுமிடமெங்கும் எப்பொழுதும் அவரிடமிருந்து பரவும் தேஜோமயமான ஆகாசத்தில் என் மனம் இன்னும் மிதந்துகொண்டிருக்கிறது. நான் அவரைப்பார்க்கும் பொழுதெல்லாம் அவரிடமிருந்து என் மனதிற்குள் பாய்கின்ற சொல்லமுடியாத ரஹஸ்யமான ஆனந்தம் என் மனதைவிட்டு இன்னும் அகலவில்லை. எனக்கும் அவருக்கும் பொதுவிலென்னவிருக்கிறது? நானோ ஐரோப்பிய நாகரிகத்தையடைந்தவன். தன்னையே மேலாகப் பாவிப்பவன்; படித்தவனென்று சொல்லப்பட்டவன், எதையும் வாதஞ்செய்பவன். அவரோ ஏழை; படிப்பற்றவர். நாகரிகமற்றவர்; விக்கிரஹங்களை வணங்குபவர்; அநாதையான ஹிந்து. எத்தனையோ ஐரோப்பிய பண்டிதர்களுடைய பிரசங்கங்களையும், சம்பாஷணைகளையும் கேட்டிருக்கிற நான், ஏன் இவருடைய சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு நெடுநேரம் உட்கார்ந்திருக்கவேண்டும்?

கிறிஸ்துவை வியந்து வழிபட்டு, மனோவிசாலமுள்ள கிறிஸ்தவ பாதிரிகளின் குணங்களை வியந்து, அவர்களுக்கு நண்பனும், யுக்தி வாதத்தையேகொண்ட பிரம்மசமாஜத்துக்காக ஊக்கத்துடன் உழைக்கும் நான் ஏன் அவருடைய வார்த்தைகளினால் மயங்கவேண்டும்? நான் மாத்திரமல்ல, என்போன்ற எத்தனையோபேர்கள் அங்ஙனம் செய்கிறார்கள்.

* * * *

அவர் சொல்லுவதெல்லாவற்றையும் குறித்துவைத்தால் ஆச்சரியமான ஞானத்தையுடைய ஒரு புத்தகமாகும்.........அதை

வாசிப்பவர் முன்காலத்திய ரிஷிகளின் அபரோக்ஷ ஞானமானது திரும்பவந்துவிட்டதென்று நினைப்பார்கள்.........

இந்தப் புண்ணியவான் ஹிந்து மதத்தின் ஆழத்திற்கும் இனிமைக்கும், ஒரு அத்தாக்ஷி. இவர் தன்சரீரத்தை முற்றிலும் அடக்கிவிட்டார். அதினால் மாம்சபிண்டமான அச்சரீரம் ஆத்மமயமாய், ஆநந்தமயமாய், நிர்மலமாய் விளங்குகிறது. இவ்வுலகின் பொய்மையையும் ஸாரமின்மையையும் விளக்கிக் காட்டவே சித்திகள் பெற்றார்போலும்.........அவருக்கு இவ்வுலகில் கடவுளைத் தவிர வேறு எண்ணமாவது, வேறு வேலையாவது, வேறு பந்துவாவது, வேறு நண்பனாவது இல்லை.......... அவரது களங்கமற்ற பரிசுத்தமும் சொல்லுக்கடங்காத ஆனந்தமும் சாஸ்திரங்களின் ஆராய்ச்சியன்னியில் சுபமாய் வந்த அளவற்ற ஞானமும் குழந்தைபோன்ற சாந்தமும், எல்லாமனிதரிடத்திலும் அன்பும், சகலத்தையும் தகித்து விழுங்கும் ஈசுவர பக்தியுமே அவருக்கு ஈசுவரன் கொடுத்த பலன்.

மேற்சொல்லியபடி எழுதிய மஜூம்தார் பகவானுடைய சிஷ்யரல்ல. பகவானுடைய கொள்கைகளை சம்மதிக்காதவர். நம்மதக் கொள்கைகள் பலவும் தப்பென்றெண்ணினவர்.

பகவான் நரேந்திரனைப் பார்த்தவுடனே 'அப்பா வா, உனக்காக வெகுநாள் காத்துக்கொண்டிருக்கிறேன்' என்றார். நரேந்திரனைப் பார்த்தால் அவருக்கு மிகவும் பிரியம். அவனை சிவனது அம்சமென்று சொல்லியிருக்கிறார். தன் சிஷ்யர்களில் சிரேஷ்டனாக ஏற்படுத்தினார். நரேந்திரன் தன் வலிமையால் உலகமுழுதையும் அதிரச்செய்வானென்று சொன்னார். அப்படியே நரேந்திரன் பிற்காலத்தில் விவேகாநந்த ஸ்வாமிகளென்ற பெயருடன், அமெரிக்காவிலும், மற்ற மேல்நாடுகளிலும், வேதாந்தத்தின் உண்மைகளை விளங்கச்செய்து நம்நாட்டுக்குப் புகழ்விளைத்தார். நம்நாட்டு ஜனங்களுக்குள்ளும் வேதாந்த தத்துவங்கள் மறுபடியும் தழைத்தோங்கச் செய்தார். நாம் இப்பொழுது எங்கும் விசேஷமாகத் தழைத்து வளரப்பார்க்கும் நம் நாட்டுணர்ச்சிக்

கும் சுதேசாபிமானத்திற்கும் விவேகாநந்த சுவாமிகள் ஒரு முக்கிய காரணம். அப்படிப்பட்ட லோகோபகாரியை முன்னுக்குக் கொண்டுவந்ததே பகவானது அவதாரமகிமையைக் காட்டுகிறது.

கடைசியில், பகவானுக்கு தொண்டையில் புண்தோன்றி பேசவருத்தமாகவே, சிகிச்சைக்காக தக்ஷிணேசுவரத்தைவிட்டு கல்கத்தாவில் சியாம்புகூருக்கு வந்தார். அக்காலத்தில் பேர்பெற்ற டாக்டர் மஹேந்திரலால் ஸர்க்கார் என்பவர் பார்த்துவந்தார். இவ்வைத்தியர் தன் வேலையை எல்லாம்விட்டு தினம் 4,5, மணிநேரம் பகவானுடனே காலம் போக்குவார். பகவானைப் பேசக்கூடாதென்று வற்புறுத்தியும், பகவான் அதைக்கேளாது வந்தவர்களுடன் பேசிக்கொண்டும், ஈசுவர நாமங்களைக் கீர்த்தனம் செய்துகொண்டும் இருந்தார். வியாதி அதிகரித்தது, வைத்தியரும் பிரயோஜனமில்லையென்று சொல்லவே, கொஞ்சம் மாறுதலுக்காக பக்கத்திலிருந்த காஸிப்பூர் என்ற ஊருக்கு பகவானை யழைத்துச் சென்றார்கள். அங்கே ஒரு பங்களாவில் சிலகாலம் சிஷ்யர்களால் மிகுந்த அன்புடன் பாதுகாக்கப்பட்டு 1886-ஹு ஆகஸ்டுமீ மஹாஸமாதியடைந்தார்.

இந்தப் பரமபுருஷனுடைய திவ்விய சரித்திரத்தை எனக்குத் தெரிந்தமட்டிலும், என் புத்திக்கெட்டினவாறு சுருக்கமாகச் சொன்னேன். இவருடைய உபதேசங்களை கொஞ்சம் எழுதி அச்சிட்டிருக்கிறார்கள். அவற்றுள் பெரும்பான்மையும் பின்வரும் சித்திரபாகங்களில் இருக்கின்றன.

ஸ்தாபகாய ச தர்மஸ்ய ஸர்வதர்மஸ்வரூபிணே ।
அவதாரவரிஷ்டாய ராமக்ருஷ்ணாய தே நம: ॥

உ

ஓம் நமோ பகவதே ஸ்ரீ ராமகிருஷ்ணாய:

ஸ்ரீ ராமகிருஷ்ண சரித்திராமிருதம்.

அத்தியாயம் 1.

குரு தரிசனம்.

வஸந்தகாலம் செடி கொடிகளும் மற்ற எல்லா சராசரங்களும் புன்சிரிப்புடன் உல்லாசமாயிருக்குங்காலம், ஆயிரத்தி எண்ணூற்றி எண்பத்திரண்டாவது (1882) வருஷம் பங்குனி மாதம் (March) ஓர்நாள் மாலை சூரிய அஸ்தமன சமயத்தில் 'எம்' M) என்பவர் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரை முதலில் தரிசனஞ்செய்யவந்தார்.

கல்கத்தாவிற்கு வடக்கே தக்ஷிணேஸ்வரம் என்கிற கிராமத்தில் கங்காநதிக்கு கீழ்கரையில் அம்பாள் கோவிலை வெகுநாளாகத்தமது இருப்பிடமாகக்கொண்டு வந்தார்; மஹான் ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸ தேவர்.

அவர், பாவனமானதும் சகல பாவங்களையும் போக்கும் வல்லமை வாய்ந்த புண்ணிய தீர்த்தமாகிய அக்கங்கா நதி ஓடிக்கொண்டிருக்கு முகமாக நோக்கியிருக்கும் தமது ஆசனத்தில் வீற்றிருக்கிறார். அவருடைய சிஷ்யர்களும், மற்ற பக்தர்களும் கீழே தரையின்மீது உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் அம்மஹானுடைய கருணையோடு கூடிய புன்சிரிப்பான முகத்தைப் பார்த்துக் கொண்டும், ஜீவர்களை உத்தாரணம்செய்யும் மகிமை பொருந்திய மஹானுடைய திருநாவிலிருந்து விழும் வாக்கியங்களாகிய அமிருதத்தை பானம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

புன்சிரிப்புடன் கிழக்குமுகமாக வீற்றிருந்து அம்மஹான் பகவானைப்பற்றிப் பேசுகிறார்.

அப்படி பகவானைப்பற்றிப் பேசுபவரான அம்மஹானைப் பார்த்து இவர் சுகதேவரோ என்று 'எம்' ஆச்சரியத்துடன் பேசாமல் சலனமற்று நின்றார் அநேக புண்ணிய ஸ்தலங்களெல்லாம் ஒன்று சேர்ந்து இருக்குமிடத்தில்தான் "நான் இருக்கின்றேனே" என்றெண்ணினார். இன்னும் இராமானந்தர், ஸ்வரூபர், இன்னுமற்ற பக்தர்களோடு சைதன்ய தேவர், புண்ணியஸ்தலமாகிய பூரியில் பகவானுடைய புண்ணிய நாமஸங்கீர்த்தனங்களைப்பாடிக்கொண்டும், அவருடைய அனந்த கல்யாண குணங்களையும் அற்புதமான செய்கைகளையும்பற்றி பேசிக்கொண்டிருக்கப்பட்ட இடமோ இது வென்று 'எம்' ஆச்சரியத்துடன் நின்றார் .

ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸ தேவர் சொல்லுகிறார் "பகவானுடைய நாமத்தை உச்சரிக்கும்பொழுதும், ஸ்மரிக்கும்பொழுதும் உனக்கு மயிர்க்கூச்சலிடவோ, அல்லது உன் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் பெருகும்படியான நிலைமை ஏற்படவோ செய்தால் நீ பகவானுக்கு வேலை (கர்மா) செய்யவேண்டிய காலம் முடிவடைகிறதென்று நான் உறுதியாகச்சொல்லுவேன். உதாரணமாக ப்ராமணனுக்கு காலை சந்தியாவந்தனம். மாத்தியான்னிகம், ஸாயம் ஸந்தியாவந்தன முதலான நித்திய கர்மானுஷ்டானங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முன்சொன்ன நிலைமை ஏற்படும் வரைக்கும் நீ இவைகளைச் செய்துகொண்டே வரவேண்டும். அந்நிலை, ஏற்பட்டுவிட்டால் கர்மாவானது தானாகவே நழுவி விடும் அந்நிலைமை எப்பொழுது ஆத்மாவுக்கு ஏற்படுகின்றதோ அப்பொழுது பக்தன்பகவானுடைய திருநாமமாகிய 'ராம' 'ஹரி' ஏகாக்ஷரமாகிய "ஓம்" என்பதையே மேன்மேலும் உச்சரித்துக் கொண்டே இருக்கிறான். அதுவே அவனுக்கு போதுமானது. வேறெதுவும் அவன் செய்ய வேண்டுவதில்லை.

திரும்பவும் குரு சொல்லுகிறார் "ஸந்தியாவின் முடிவு காயத்ரீ. காயத்ரீ பிரணவாக்ஷரமாகிய 'ஓம்' என்றதில் அடங்கியிருக்கின்றது"

'எம்' என்பவர் தக்ஷிணேஸ்வரம் என்ற கிராமத்திற்கு அருகிலிருக்கும் வராஹநகரில் வசித்துவந்தார். ஸித்து என்ற தன் சிநேகிதர் ஒருவரோடு கோயில் நந்தவனத்திற்கு சாயங்கால வேளையாகையால் உலாவுதற்காக வந்தார் அன்று ஞாயிற்றுக் கிழமையாகையால் அவர்களுக்கு வேலையில்லை.

அவர்கள் அப்படி போகும்வழியில் பி-பானர்ஜீ என்பவருடைய தோட்ட பங்களாவுக்கு போய்விட்டுப்போனார்கள். அப்பொழுது ஸித்து சொன்னார் "கங்காநதிக்கரையில் மிகவும் அழகான ஓர் தோட்டமிருக்கிறது. நாம் அவ்விடம் போவோம் ஓர் மஹா புண்ணிய புருஷர் அவ்விடம் வசித்து வருகிறார். அவரை பரம ஹம்ஸர் என்று சொல்லுவார்கள்" அப்படியே இருவரும் அங்கே போனார்கள். பரமஹம்ஸரது வசனங்களைக் கேட்டதும் 'எம்' ஸ்தம்பித்து நின்றார். இந்த இடம் எவ்வளவு அழகாயிருக்கின்றது! என்ன மஹாபுருஷர்! அவருடைய வாக்கியங்கள் எவ்வளவு இனிமையாகவும் கருணையோடு கூடியதாகவுமிருக்கின்றன! இவ்விடத்தை விட்டுப் போகலாமென்று நினைத்தமாத்திரத்திலேயே ஆத்மா பதை பதைக்கின்றதே! ஆனால் நாம் முதலில் இந்த கோயிலுக்குள்போய் எங்கும் சுற்றிப்பார்ப்போம் பிறகு திரும்பிவந்து இந்த மஹானுடைய பாதகமலத்தின் திருமலரடியை சேவை செய்யலாம்."

அவர்கள் "அவ்வழகான முற்றங்களின் வழியாக ஒவ்வோரிடமாகக் கடந்து முதலில் சிவசன்னிதானத்திற்கு வந்து சிவ தரிசனம் செய்து, பிறகு கிருஷ்ண ஸந்நிதானத்திற்கு வந்து தரிசனம் பண்ணிவிட்டு கடைசியாக அம்மன் சந்நிதானத்திற்கு வந்தார்கள். அப்பொழுது சாயங்காலவேளையாகையால் பூஜா சாலைகளிலிருந்து ஆர்ச்சகர்கள் விக்ரஹங்களுக்கு கற்பூர தீபாராதனை முதலானவைகள் செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது மேள வாத்தியங்கள் அதிகோஷமாக முழங்கிக் கொண்டிருந்தன. கோவில் நந்தவனத்தின் தென் கோடியிலிருந்து வீசும் மிருதுவான இளந்தென்றற்காற்றானது கோயில் வாத்தியக்கா

ர்கள் நாகஸ்வரம் முதலான இன்னும் மற்ற வாத்தியக்கருவிகளால் வாசிக்கும் இனிய கீதங்களை அடித்துக்கொண்டு வந்தது. இந்த ஸங்கீதங்களாகிய அலைகள் கங்காநதியைக் கடந்து எல்லையில்லாத அகண்ட வெளியான ஆகாயத்தில் லயமடைந்துகொண்டிருந்தன. அநேக புஷ்பங்களிலிருந்து நறுமணங்கமழ்ந்த இனிமையான வாஸனையுடன் மந்தமாருதம் வீசிற்று. அப்பொழுதுதான் மெல்லென சந்திரன் உதயமாகவும், உடனே அந்தக் கோயிலும் அதைச்சூழ்ந்த நந்தவனமும் அதிரமணீயமான வெண்ணிலாவாகிய அமிருதப்ரவாகத்தினால் மூழ்கியிருந்தன. அக்காட்சியானது எப்படியிருந்ததென்றால், மனிதனும், அவனைச்சூழ்ந்த ப்ரபஞ்சமும் ஒருவரோடொருவர் மனமகிழ்ந்து சாயங்கால வேளையில் பகவானை ஆராதனைசெய்ய மிகவும் ஆவல்கொண்டதைப்போல தோன்றிற்று.

இத்திவ்விய மங்கள காக்ஷியினால் 'எம்' ஆனந்த பரிதரானார். அப்பொழுது விக்கு சொல்லுகிறார். இக்கோவில் ராணி ருஷ்மணி யென்ற சீமாட்டியினால் கட்டப்பட்டது. இவ்விடத்தில் தேவதாராதனைகள் தினே தினே திரிகாலபூஜையுடன் மிக விமரிசையாக நடைபெற்று வருகின்றன. இன்னும் இவ்விடத்தில் மஹான்களுக்கும், ஏழைகளுக்கும் தினமும் பகவத்பிரசாதமாகிய அன்னமளித்து வரப்படுகின்றது.

இவ்விரண்டு நண்பர்களும் அவ்வழகான முற்றங்களின் வழியாக ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் இருக்கும் அறைக்கு எதிராகச் சென்றுக்கொண்டிருந்தார்கள். அறையின் வாசலில்வந்ததும் 'எம்' இங்கிலீஷ் படித்தவராகையால் அவ்வாசார முறைப்படி அவர்கள் அநுமதியின்றி உள்ளே போவது மரியாதைக்குறைவென்று எண்ணி இருவரும் வாசலில் நின்றார்கள்.

அவ்வறை சாம்பிராணி, ஊதுவர்த்தி முதலியவைகளின் வாசனையால் நிறைபப்பெற்றிருந்தது.

அறையின் வாசற்கதவருகில் வேலைக்காரி "பிருந்தா" நின்றுக்கொண்டிருந்தாள் 'எம்' அவளுடன் பேசுகிறார்.

எம்:—உள்ளே இருக்கிறாரா அந்த புண்ணிய புருஷர்?

பிருந்தா:—ஆம், அவர் இவ்வறைக்குள் இருக்கிறார்.

எம்:—அவர் எவ்வளவு காலமாக இவ்விடத்தில் வசித்துவருகிறார்

பிருந்தா:—அவர் இவ்விடத்தில் வெகுநாளாக வசித்துவருகிறார்

எம்:—அவர் அநேகம் க்ரந்தங்கள் படித்துக்கொண்டிருப்பார் என்று நினைக்கிறேன்.

பிருந்தா:—ஓ இல்லை ஓர் சிறு புத்தகங்கூட அவரிடமில்லை அவருடைய நாவே பரமோத்கிருஷ்டமான ஒவ்வொரு தத்துவங்களையும் நன்றாய் விளக்கிபருளும்.
'எம்' புதிதாக கலாசாலை விட்டவராகையினால், பகவான் படித்தவரல்லவென்றுகேட்டு அதிபாச்சரியத்துடன் திகைத்து நின்றார்?

எம்:—ஸரி அவர் இப்பொழுது அவருடைய சாயங்கால அனுஷ்டானத்திற்காக போவாரா? நாங்கள் உள்ளே வரலாமா? தயவுசெய்து நீ அவரிடம்சென்று,நாங்கள் அவரைப்பார்க்க மிகவும் ஆவலாயிருக்கிறோம் என்று சொல்லுகிறாயா?

பிருந்தா:—ஏன், நீங்கள் உள்ளே போகலாம், குழந்தைகாள் உள்ளே போங்கள், போய் அவரெதிரில் உட்காருங்கள்.

அதற்குமேல் அவர்கள் உள்ளே போனார்கள். அவ்விடம் வேறொருவரும் இல்லை அவர்பட்டிலும் ஓர் சிறுகட்டிலின் மீது உட்கார்ந்திருந்தார். ஊது வர்த்திகள் எரிந்துகொண்டிருந்தன கதவு மூடப்பட்டிருந்தது 'எம்' கைகட்டி வணங்கினார் ஓர் பாய் கீழே தரையின்மீது விரிக்கப்பட்டிருந்தது. குருவின் அனுமதியின்பேரில் 'எம்' சித்து இருவரும் உட்கார்ந்தார்கள்.

குரு அவர்களைப்பற்றி பலவிதமாக விசாரிக்கிறார்:—உன் பெயரென்ன? நீ எவ்விடம் வசிக்கிறாய்? உன் உத்தியோகம் யாது?

நீ எதற்காக வராஹநகர் வந்திருக்கிறாய்" என்று பலவிதமான கேள்விகளை கேட்டார். 'எம்' இவைகளுக்கெல்லாம் பதிலளித்தார்; ஆனால் ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்விதமாக பேசிக்கொண்டிருந்தபோதிலும், அவருடைய மனம் வேறுவிதமாக த்யானத்தில் சென்றுகொண்டிருப்பதாக 'எம்' அறிந்துகொண்டார்.

இதுதான் பிரம்ம சாக்ஷாத்காரமோ! என்று 'எம்' பின்வருமாறு தனக்குள் நினைத்துக்கொள்கிறார்:—ஓர் மனிதன் தன் கையில் தூண்டிற்கோலுடன் ஓர் ஏறிக்கரையில் மீன் பிடிக்க நின்றுகொண்டிருக்கும்பொழுது அத்தூண்டியிருக்கும் ஆகாரத்தை மீன் வந்திழுக்கும்பொழுது மிதக்கும் பாகம் அசைகிறது. அப்பொழுது அதை அதிக ஆவலுடன் பார்க்கிறான். அவன் எல்லா பலத்தையும் மனதையும் அதில் செலுத்தி தூண்டிலை இழுக்கிறான். அவன் அப்பொழுது ஒருவருடனும்பேசுகிறதில்லை ஒரே கருத்தாகவேயிருக்கிறான்.

அதுபோல் அவர் வெளியுலகத்து தொந்தமுள்ள எல்லா இந்திரியங்களையும் இழந்து, ஸமாதி என்னும் நிலைமையை ஒவ்வொரு நாளும் அநேகதரம் அடைகிறார் என்று 'எம்' பின்னால் அறிந்தார்.

'எம்' (ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரைப் பார்த்து):—தாங்கள் இப்பொழுது தங்களுடைய ஸாயங்கால அனுஷ்டானத்திற்காக போகும் ஸமயமென்று நினைக்கிறேன். ஆகையால் நாங்கள் இப்பொழுது தங்களைத் தொந்திரவு செய்யவேண்டாம். இனி வேறு சமயம் வருகிறோம்.

பரமஹம்ஸர்:—இல்லை இல்லை நீ அதற்காக அவசரப்பட வேண்டாம்.

திரும்பவும் அவர் சிறிதுநேரம் மௌனமாயிருந்தார். கடைசியாக அவர் வாய்திறந்து சொப்பனத்தில் பேசும் தொனி போல 'சாயங்கால அனுஷ்டானமா இல்லை, இல்லை அதில்லை, என்றார்.

சிறிது நேரம் சென்றதும் 'எம்' குருவை வணங்கி திரும்பவும் வருகிறேனென்று சொல்லி நமஸ்கரித்து விடைபெற்று சென்றார்.

வராஹநகர் போகிற வழியில் 'எம்' தனக்குள் யோசிக்கலானார்; "இந்தப்புண்ணிய புருஷர் யாராயிருக்கக்கூடும்? திரும்பவும் அவரைப்பார்க்கவேண்டுமென்று இந்த மனம் எவ்வளவு ஆவலாயிருக்கிறது! கல்விப்பயிற்சியில்லாமலே ஓர் மனிதன் இவ்வளவு உயர்ந்த நிலைக்குவருவது ஸாத்யமான காரியமா! அவருக்காக இம்மனம் இவ்வளவு ஆவல்கொள்ளுவதின் காரணமென்ன! அவரிடம் திரும்பவும் வரும்படியாக என்னை இழுக்கிறதே, நான் நாளைக்கு வருகிறேன், அல்லது நாளன்றைக்கு கட்டாயம் வருவேன்"

அத்தியாயம் 2.

குருவும், சிஷ்யனும்.

இரண்டு நாள் சென்றதும், ஓர் நாள் காலை எட்டுமணிக்கு 'எம்' திரும்பவும் வந்தார்

குரு அப்பொழுது க்ஷௌரம் செய்துகொள்வதற்காக நாவிதனுடன் உட்கார்ந்திருந்தார். குளிர் நடுங்கிக்கொண்டிருந்தது அவர் சிகப்பு மஸ்லின் கரைபோட்ட சால்வையொன்று போர்த்திருந்தார், 'எம்' வருவதைப் பார்த்து குரு, "சரி நீ வரலாம், மிகவும் சந்தோஷம்; இவ்விடம் உட்காரு" என்றார்.

அவர்கள், அவருடைய அறைக்குப் போகிற வழியாகிப் தெற்குத் தாழ்வாரத்தில் இருந்தார்கள். சால்வை போர்த்து பாதாகைக்ஷயோடு, க்ஷௌரம் செய்பவனுக்கெதிரில் உட்கார்ந்துகொண்டு 'எம், என்பவரோடு பேசுகிறார். அவர் முகம் எப்பொழுதும்போல புன் சிரிப்பாகவேயிருந்தது பேசும்பொழுதுமட்டிலும் சிறிது திக்கலுடன் பேசுகிறார்.

குரு:—('எம்' ஐப் பார்த்து) உன் வீடு எங்கே?

எம்:—ஸ்வாமி, கல்கத்தாவில்.

குரு:—நீ வராஹநகரில் யாருடன் வசிக்கிறாய்?

எம்:—ஸ்வாமி நான் "ஈஷன் கவிராஜருடைய" வீட்டில் என் சகோதரியுடன் வசிக்கிறேன்.

குரு:—ஓ. ஈஷனுடைய வீட்டிலா? "கேஷப்" இப்பொழுது எப்படியிருக்கிறாரென்று உனக்குத்தெரியுமா? அவர் மிகவும் அசௌக்கியமாயிருப்பதாக நான் கேள்விப்பட்டேன்.

எம்:—ஆம், ஸ்வாமி, நானும் அதேமாதிரிதான் கேள்விப்பட்டேன். ஆனால் அவர் இப்பொழுது சௌக்கியமாயிருப்பாரென்று நம்புகிறேன்.

குரு:—"கேஷப்புக்கு" உடம்பு சௌக்கியமாவதற்காக தேங்காய், சர்க்கரை முதலானவைகள் ஜகன்மாதாவிற்கு நைவேத்தியம் செய்கிறேனென்று நான் பிரார்த்தனை செய்துகொண்டேன். சிலசமயம் இரவில் நான் என் பாதிநித்திரையினின்றும் எழுந்திருந்து ஓ என் தாயே கேஷப் சௌக்கியமாகக் கடவதென்று கட்டளையிடு என்றும் கேஷப் பிழைக்காவிட்டால் என் தாயே நான் கல்கத்தாவிற்குச் சென்றால் யாருடன் பேசுவேனென்றும் கதறுவேன்.

சமீபத்தில் கல்கத்தாவிற்கு வந்திருந்த மிஸ்டர் 'குக்' என்பவரை உனக்குத்தெரியுமா? அவர் நன்றாய் உபந்நியாசம் செய்வாரென்று நான், நினைக்கிறேன். ஓர் நாள் "கேஷப்" என்னை கப்பலில் அழைத்துச்சென்றார். அப்பொழுது அவர் அவ்விடமிருந்தார்.

எம்:—ஆம் ஸ்வாமி நான் அவரைப்பற்றி மிகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர் உபந்நியாஸம் செய்வதைக் கேட்கும்படியாக எனக்கு ஒருபொழுதும் சமயமேற்படவில்லை. அவரைப்பற்றி எனக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது.

குரு:—" ப்ரதாப் " என்பவருடைய சகோதரன் இவ்விடம் வந்து சில நாள் தங்கியிருந்தான். அவன், தான் இவ்விடம் வசிப்பதற்காக வந்ததாக சொன்னான். அவனுக்கு வேலை ஒன்றும் இல்லை; அவன் தன் குழந்தைகளையும், மனைவியையும் அவனுடைய மாமனார் பாதுகாப்பின்கீழ் வைத்துவிட்டுவந்திருந்தான். ஆனால் நாங்கள் இவ்விடத்தில் அவனுடைய மானத்தை விட்டு வந்ததற்காகக் கடிந்துகொண்டோம். அத்தனை குழந்தைகளைக் காப்பாற்றி வளர்க்கவேண்டியிருக்க அதை விட்டு இம்மாதிரியான வழியில் போவது மிகவும் பிசகில்லையா! அன்னியர்களா அவர்களைக் காப்பாற்றவேண்டும்! வேறு யாராகிலும் தன் குடும்பக்கவலையை ஏற்றுக்கொள்ள, அதிலும் தன்பாரத்தை ஏற்றுக்கொள்ளும்படியாகத்தன் மாமனாரைக்கேட்க, அவன் கொஞ்சமும் வெட்கமடையவில்லையே! நான் அவனை அவனுடைய வேலைக்குப் போகும்படியாக சொல்லி பலதரம் கடிந்துகொண்டே அவனுடைய அறிவின்மையை இவ்விதமாக எடுத்துக் காண்பித்ததும், அவன் போய்விட்டான்.

குரு (' எம் ' ஐப்பார்த்து) :— உனக்கு கல்யாணம் ஆயிருக்கிறதா ?

எம் :— ஆம், ஸ்வாமி ஆயிருக்கிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்வார்த்தையைக் கேட்டதும் திடுக்கிட்டார். " அந்தோ அவனுக்கு மனைவியும் இருக்கிறாள். பகவான் அவனுக்கு உதவி செய்யட்டும் " என்றார்.

இதைக்கேட்டதும் ' எம் ' மனங்கலங்கி மதிமயக்கத்துடன் இருந்தார். அவர், தான் ஏதோ பலமான குற்றம்செய்தவரைப் போல தலைகுனிந்துகொண்டு பேச நாவெழாமல் உட்கார்ந்திருந்தார். ' எம் ' அப்பொழுது தனக்குள் நினைத்துக்கொள்ளுகிறார்: " கல்யாணம் செய்துகொள்வது அவ்வளவு கெடுதியா ! "

குரு :—உனக்கு குழந்தைகளிருக்கின்றனவா ?

'எம்' இவ்வார்த்தையைக் கேட்டதும் அவருடைய ஹ்ருதயம் துடிப்பது அவருக்கே நன்றாய் கேட்டது. ஆம், ஸ்வாமி யென்று அவர் மெல்லிய ஸ்வரத்தில் பதிலளித்தார்.

இதைக்கேட்டதும் குரு வருத்தப்பட்டார். அவர் 'எம்' ஐ கடிந்து கொண்டு, 'அந்தோ, குழந்தைகளைக்கூடக் காப்பாற்றவேண்டியவனாயிருக்கிறாய்' என்றார். 'எம்' தன் அஹங்காரத்தில் ஓர் பலமான அறை விழுந்ததுபோல் உணர்ந்தார்.

சிறிது நேரம் சென்ற பிறகு, குரு அன்புடன் நோக்கி கருணையுடன் இனிய தொனியில் சொல்லுகிறார்; "இங்கே பார் என் குழந்தாய், சில மேன்மையான லக்ஷணங்கள் உன்னிடமிருக்கின்றன. அவைகளை, கண்பார்வையிலிருந்தும், நெற்றியிலிருந்தும், நான் அறிகிறேன்."

யோகிகளுடைய கண்கள் ஓர் விசேஷ பார்வையை உடைத்தானவை. அவர்கள் பூர்வ ஜன்மத்தில் ஈசுவர பாவனையில் தங்களுடைய நாட்களைக்கழித்தவர்கள். அக்காரணத்தினால் அவர்கள் இந்த ஜன்மத்தில் இப்பொழுதுதான் யோகாஸனத்தைவிட்டெழுந்தவர்கள்போல காணப்படுகின்றனர்.

குரு:—சரி, இப்பொழுது உன் மனைவியைப்பற்றி (அவள் குணத்தைப்பற்றி) உன் அபிப்பிராயம் என்ன? அவள் பகவானிடம் பக்தி செலுத்தக்கூடிய வித்யா சக்தியுடையவளா? அல்லது, அதற்கு நேர் விரோதமான அவித்யா சக்தியுடையவளா?

எம்:—அவள் மிக நல்லவள்தான், ஆனால் அஞ்ஞானமுடையவள்

குரு (சுருக்கென்று):—அவள் அஞ்ஞானமுடையவள்; நீ ஞானி, நீ ஞான மடைந்துவிட்டதாக நினைக்கிறாய்! அல்லவா?

'எம்' எது உண்மையான ஞானமென்றும், எது அஞ்ஞானமென்றும் அறிந்ததில்லை. எவன் அநேக புஸ்தகங்களைப் படித்

திருக்கிறுனே அவனே ஞானியென்பது அவருடைய எண்ணம். (பின்னால் இந்தத்தப்பபிப்பிராயத்தை நீக்கி, பகவானே அடைவதே உண்மையான ஞானமென்றும், அவரை அடையாமையே அஞ்ஞானமென்றும் 'எம்' அறிந்துகொண்டார்.)

எப்பொழுது, குரு, " நீ ஞானமடைந்துவிட்டதாக நினைக்கிறாய் அல்லவா " என்று, சொன்னாரோ அப்பொழுது 'எம்' உடைய அஹங்காரத்தில இரண்டாவது அறைவிழுந்தது.

குரு :—நீ, பகவானே ரூபமுடையவராக தியானிக்க விரும்புகிறாயா, அல்லது, அரூபியாக தியானிக்க விரும்புகிறாயா ?

இக்கேள்வியானது அவரை மதிமயங்கச்செய்யவும், யோசனையிலாழ்த்தவும் செய்தது. பகவானே அரூபியாகவும், அதே சமயத்தில் ஓர் ரூபியாகவும் நம்புவது சாத்தியமானதா? அல்லது ஒருவன் பகவானே, ரூபியாக நம்பினால், 'அரூபி' யாகவும் நினைப்பதெப்படி ? ஒரே வஸ்துவில் ஒன்றுக்கொன்று பேதமான இரண்டு குணங்களும் சேர்ந்திருப்பது கூடுமா ? பால்போன்ற வெளுப்பான வஸ்துக்கள் அதே சமயத்தில் கறுப்பாயிருக்கவும் கூடுமா ?

இவ்விதமாக சிறிதுநேரம் 'எம்' யோசனைசெய்து பிறகு சொல்லுகிறார் 'ஸ்வாமி நான், பகவானே ரூபியாக தியானிப்பதைவிட 'அரூபி' யாக தியானிப்பதற்கு விரும்புகிறேன்.

குரு :—அது நல்லது, பகவானைப் பிரம்மமாகப் பார்ப்பதில் தீங்கில்லை. அல்லது ஸகுணப் பிரம்மமாகவும் பார்க்கலாம். ஆம் அவரைச்சுத்தப்பிரம்மமாக பார்ப்பது முற்றிலும் சரி. ஆனால் நீ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இவ்வழிமட்டிலும்தான் மெய்யானதென்றும், மற்றவைகளெல்லாம் பொய்யானதென்றும் நீ நினைத்துவிடாதே. பகவானே ரூபியாக தியானிப்பதும் சரிசமானமானதுதான். ஆனால் நீ பகவானே அடைகிறது வரையில், (பகவானைப் பார்க்கிறதுவரையில்)

நீ விசேஷமாக நினைத்து கைக்கொண்ட வழியைக் கைவிடாமல் கடைப்பிடித்துக்கொண்டு வரவேண்டும். அப்பொழுது ஒவ்வொரு வஸ்துவும் தெளிவாக விளங்கும்.

இவ்விதமாக குரு, எடுத்து விளக்கவும், 'எம்' மற்றுமோர் முறை ஸ்தம்பித்து பேசாமலிருந்தார். அவர் ஒன்றுக்கொன்று எதிரிடையான உண்மையான வாக்கியங்கள் பகவானுக்குப்பொருந்தும் என்பதை குருவிடத்திலிருந்து அடிக்கடி கேட்டார். அவருடைய புஸ்தகங்களில், இவ்வளவு வியப்பைத் தரக்கூடிய ஓர்வாக்கியமாகிலும் அவர் ஒருபொழுதும் பார்த்ததில்லை. இப்புத்தக ஞானத்தைத்தவிர வேறு அறிவு அவருக்கில்லை. அவருடைய அஹங்காரத்திற்கு மற்றுமோர் அறை வீழ்ந்தது. ஆனால் அது இன்னமும் முற்றிலும் கீழே வீழ்ந்துடைந்து நசுக்கடையவில்லை. ஆகையினால் அவர் குருவுடன் மென்மேலும் வாதம் செய்கிறார்.

எம்:—ஸ்வாமி, ஒருவன் பகவானை ரூபமுடையவராகக்கருதலாம். ஆனால், பகவான் நிச்சயமாக, பூஜைசெய்துவரும், மண் முதலானவைகளினால் செய்யப்பட்ட விக்கிரஹங்களல்லவே ?

குரு:—நீயேன் அதை மண்ணினால்செய்த விக்கிரஹமென்று சொல்லவேண்டும் ? நிச்சயமாக தேவ விக்கிரஹம்.

'எம்' இதை நம்பவில்லை. அவர் மேலும் சொல்லுகிறார். "ஆனால் ஸ்வாமி, விக்கிரஹாராதனை செய்பவர்களுக்கு, அவர்கள் பூஜித்துவரும் களிமண்ணினால் செய்த விக்கிரஹங்கள் பகவான் அல்லவென்றும், பகவானைக் கருத்தில் வைக்கவேண்டுமேதவிர மண் விக்கிரஹங்களை வைக்கக்கூடாதென்றும் தெளிவாக விளக்கிக்காட்டுவது ஒருவனுடைய கடமையல்லவா ?

ஸ்ரீராமகிருஷ்ணர் (சுருக்கென்று):—உன்போன்ற கல்கத்தா ஜனங்கள் 'பிரசங்கம்' செய்வதும், 'மற்றவர்களுக்கு ஞானோபதேசம்' செய்வதுமான எண்ணங்களும், பேச்சுகளும் மட்டிலுமேயவர்களுக்கு நாளுக்கு நாள் பழக்கமாக ஏற்பட்டு வரு

கின்றன. தயவுசெய்து, நீ எப்படி ஞானம் தேடிக்கொள்ளப் போகிறாய் சொல்லு? மற்றவர்களுக்கு உபதேசம் செய்ய நீயார்? அவசியமானால், உலகங்களைப்படைத்த கடவுள் மனிதர்களுக்கு உபதேசம் செய்வார். எவர், சூரிய சந்திரர்களையும், மனிதர் மிருகங்களையும் சிருஷ்டித்தாரோ, எவர் அவர்களுக்குப் போஷணைக்குவேண்டுமான மற்றப் பொருள்களையும் சிருஷ்டித்தாரோ, எவர் மாதா பிதாவையும், இம்மாதிரியாக மற்ற அநேக வகைகளையும் சிருஷ்டித்தாரோ, அந்தப்பகவான் அவர்களுக்கு வேண்டுமான ஞானத்தைக் கொடுக்கமாட்டாரா? நிச்சயமாக, வேண்டுமென்றால் அவர் கொடுப்பார்.

மனிதர் ஹிருதயமாகிய ஆலயத்தில் பகவான் வசிக்கிறார். நம்முடைய அந்தரங்கமான எண்ணங்களையும் அவர் அறிகிறார். விக்கிரஹாராதனையில் ஏதாகிலும் பிசகிருந்தாலும், எல்லாம் தன்னையடைகிறதென்றும், விக்கிரஹாராதனையும் தன்னைச் சேருகிறதென்றும் ஒத்துக்கொள்ளுவார். உன்னால் அசாத்தியமான சங்கதிகளிலெல்லாம் தலையிட்டுக்கொண்டு, நீ ஏன் உன்னைத் தொந்திரவுபடுத்திக்கொள்ளுகிறாய்? நீ பகவானை வணங்கி அவரை அடையும் வழியை நாடு; பகவானிடம் அன்புபாராட்டு. இதுதான் நீ செய்யவேண்டிய கடமை.

'எம்' உடைய அஹங்காரம் இப்பொழுது முற்றிலும் நசித்தது. அவர் தனக்குள் யோசிக்கலானார். என்ன இம்மஹா புருஷர் சொல்லுவது முற்றும் உண்மையாகத்தானிருக்கிறது. மற்றவர்களுக்குப் போதனைசெய்வதில் எனக்கென்னகாரியம்? நான் பகவானை அறிந்தேனா? நான் பகவானை பஜித்தேனா? இது எப்படியிருக்கிறதென்றால், 'எனக்கு படுக்கப் படுக்கையில்லாமலிருக்கும்பொழுது, என் சிநேகிதன் சங்கரனுக்கு என் படுக்கையில் படுத்துக்கொள்ள நான் உபசாரம் செய்கிறேன்' என்ற பழமொழிபோலிருக்கிறது. பகவானைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது, அப்படியிருக்க மற்றவர்களுக்கு நான் உபதேசம் செய்யப் புகுவது, மிகவும் இழிவானதும், அறிவீனமானதுமே. அதற்காக நான் லஜ்ஜைப்படவேண்டியதுதான். இது, (பகவானை அறி

வது) கணிதமோ, அல்லது சரித்திரமோ இலக்கியமோ எதுவு மல்ல, இது பிரம்ம வித்தை. ஆம் நான் இம்மகாத்மாவின் வாக்கியங்களின் மஹிமையை நன்றாயறிகிறேன்.

இதுதான் ‘ எம் ’ முதலில் குருவுடன் தர்க்கம்செய்ய எத்தனித்தது. நல்லவேளையாய் அதுவே கடைசியாக முடிந்தது.

குரு:—நீ விக்கிரகங்கள் களிமண்ணினால் செய்யப்பட்டவையென்று சொன்னாய், ஸரி, இப்பேர்ப்பட்ட விக்கிரஹங்களைக்கூட ஆராதிக்கும்படியான அவசியம் சில சமயங்களிலேற்படுகின்றது. ஈசுவரனே இவ்வித பலவிதமான ஆராதனை ஏற்படுத்தியிருக்கிறார். ஞானமார்க்கத்தில் அவரவர்களுடைய நிலைமைக்குத் தக்கபடி ஒவ்வொருவருக்கும் பொருந்தும்படி இவைகளை ஏற்படுத்தியிருக்கிறார்.

தாயானவள் தன் குழந்தைகளின் வயற்றிற்கு எவ்விதம் ஒத்துக்கொள்ளுகிறதோ அவ்விதம் ஆகாரம் தயார்செய்கிறாள். ஓர்தாய்க்குஐந்து குழந்தைகளிருப்பதாக வைத்துக்கொள்வோம். அவள் ஓர் மீனை வைத்துக்கொண்டு பல தினுசு சமையல் செய்கிறாள். அவள் தன் ஒவ்வொரு குழந்தைக்கும் எது வயற்றிற்கு ஏற்குமோ அவவிதமாகத் தயார் செய்யமுடியும். ஓர் குழந்தைக்கு, அதன் பலஹீனத்துக்கு தக்கபடி ஜீரண சக்தியைக் கொடுக்கக்கூடிய கொஞ்சம் ரஸம்செய்துவார்க்கிறாள். வேறோர் குழந்தைக்குப் புளிபோட்டு குழம்புசெய்து போடுகிறாள். மற்றோர் குழந்தைக்கு அதை வறுத்துக்கொடுக்கிறாள். இவ்விதமாகவே ஐந்து குழந்தைகளுக்கும் ; அவரவர்கள் வயற்றிற்கு தக்கபடியாக வேண்டியதை சரியாகத் தெரிந்துசெய்கிறாள். இது உனக்குத் தெரியவில்லையா ?

எம்:—ஆம், ஸ்வாமி, நான் இப்பொழுது அறிந்துக்கொண்டேன். பக்தன் ஆரம்பத்தில் பகவானை விக்கிரஹங்கள் மூலமாய் பூஜிக்கவேண்டும். மேல் போகப்போக விக்கிரஹமில்லாமலே அவரை ஆராதிக்கலாம்.

குரு:—ஆம், இன்னும், ஒருவன் எப்பொழுது பகவான் எல்லாவற்றிலுமடங்கியிருக்கிறார் ; விக்ரஹங்களிலும் மற்ற எல்லாவற்றிலும் சுத்த சைதன்யமாக அவதரித்திருக்கிறார் என்று அறிகிறானோ, அப்பொழுது அவனுக்கு விக்ரஹமுள்பட சகலமும் சைதன்யமாய்விடுகிறது. அவனுக்கு விக்ரஹம் ஆத்மாவேதவிர களிமண் அல்ல. பகவான் ஆத்மஸ்வரூபம்.

எம்:—ஸ்வாமி, ஒருவன் பகவானிடம் எவ்விதமாகத் தன் மனதை செலுத்துவது ?

குரு:—அதற்காக பகவானுடைய அனந்த கல்யாண குணங்களையும், அவருடைய பல திருநாமங்களையும் இடைவிடாது உச்சரித்துக்கொண்டே வரவேண்டும். எப்பொழுதும் ஸத்ஸங்கங்களையே நாடவேண்டும். பகவானை அடைவதற்காக இவ்வுலக ஆசையை வெறுத்த திருவடியார்களையே பின்பற்றி அவர்களுக்கிடையே இருக்கவேண்டும். இவ்வுலக வியாபாரக்கவலைகளுக்கும், ஆசைகளுக்குமநடுவில், ஒருவன் தன் மனதை பகவான்பால் செலுத்துவது மிகவும் கடினம்.

அதற்குச் சந்தேகமே இல்லை. ஆகையினால், பகவானை தியானம் செய்வதற்காக அடிக்கடி ஏகாந்தத்தில் இருக்கவேண்டும். ஆத்மஞானமடைவதற்காகவுள்ள முதல்படியாகிய இந்நிலைமையில் ஒருவன் ஏகாந்தமில்லாமல் முடியாது.

செடிகொடி முதலானவைகள் சிறியவைகளாயிருக்கும்பொழுது, அவைகளுடைய ரக்ஷணைக்காக வேலி அவசியமாகவிருக்கிறது. அதில்லாவிடில் ஆடுமாடுகள் அவைகளைத் தின்றுவிடும்.

மனம், தனியிடம், வனம், இம்மூன்றும் தியானத்திற்கு வேண்டியவை. நித்தியாநித்திய வஸ்துவைப்பற்றி விசாரணையும் செய்யவேண்டும். இவ்விதமாக ஓர் மனிதன் நடந்துவந்தால், இந்திரிய சுகம், அதிகாரம், கீர்த்தி, ஐசுவரியம் முதலான இவ்வுலக வஸ்துக்களின் பற்றுதலை உதறித் தள்ளக்கூடும்.

எம் :—ஸ்வாமி, ஓர் கிருஹஸ்தன் இவ்வுலகில் எம்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும்?

குரு :—நீ உன் மனதையெல்லாம் பகவானிடம் செலுத்தி நீ செய்யவேண்டிய உன் கடமையைச்செய். நீ, உன் பெற்றோர், மனைவி மக்களெல்லோருக்கும், அவர்களை உன் சொந்தம்போல் பாவித்து உன் கடமையைச்செய்; ஆனால் நீ அந்தரங்கத்தில் அவர்களை உன் சொந்தமல்லவென்றறி. அல்லது, அவர்களும் பகவானை பஜிப்பவர்களாயிருந்தால் உன் சொந்தமாக பாவிக்கலாம். பகவான் ஒருவரே உனக்கு நிஜமாக சொந்தமானவர். அவரும், அவருடைய பக்தர்களும்.

ஓர் தனவானுடைய வேலைக்காரி தான் செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் சரிவரச் செய்கிறாள், ஆனால் அவளுடைய மனம் எப்பொழுதும் தன் சொந்த வீட்டிலேயே சென்றுகொண்டிருக்கும். அவள் எஜமானனுடைய வீடு அவளுடையதன்று. அவள், தன் எஜமானனுடைய குழந்தைகளை தன் சொந்த குழந்தைகளாக பாவித்து, 'என் ராமா,' 'என் ஹரீ' என்றழைத்து உண்மையாக அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்கிறாள். ஆனால் எப்பொழுதும் அக்குழந்தைகள் தன்னுடையதல்லவென்று அவள் நன்றாயறிவாள்.

ஆமை தன் ஆஹாரத்தைத்தேடிக்கொண்டு ஜலத்தில் சஞ்சரித்துச் செல்கிறது. ஆனால் அதின் மனம் எவ்விடம் இருக்கிறதென்று நீ நினைக்கிறாய்? நிச்சயமாக ஆற்றின்கரையில் தன்முட்டைகளிட்டிருக்கும் இடத்தில்தான் அதேமாதிரியாக நீ இவ்வுலகில் உன் வேலையைச் செய்துக்கொண்டிரு. ஆனால் உன் மனம் எப்பொழுதும் அத்தியந்த சிரத்தையுடன் பகவானுடைய திருவடியிலேயே லயமடைந்திருக்கட்டும்.

பயிற்சியினால் பகவானிடத்தில் ஆழ்ந்த பக்தி உனக்கு உண்டாவதற்குமுன், நீ உலக வ்யவஹாரத்தில் புகுந்தாயானால் நிச்சயமாக நீ அதில் சிக்கிக்கொள்வாய். துக்கம், கஷ்டம், இன்னும்

பலவிதமான சரீர பாதைகளும் உன் மன சமாதானத்தை போக்கடித்துவிடும். நீ எவ்வளவுக்கெவ்வளவு உலக வியவகாரங்களில் பிரவர்த்தித்து அவ்விஷயத்தில் சிரமமெடுக்கிறாயோ, அவ்வளவுக்கவ்வளவு உலக ஆசை அதிகரிக்கும்.

பலாப்பழம் நறுக்கவேண்டுமென்ற விருப்பமிருந்தால், முதலில் உன் கையில் எண்ணையைத் தடவிக்கொள். இல்லாவிட்டால், அதினின்றும் வரும் பிசின் உன் கையில் ஒட்டிக்கொள்ளும். நீ முதலில் பக்தியென்னும், எண்ணையைத்தடவிக்கொண்டு உலக விஷயத்தில் கையிடு.

பக்தியடைவதற்கு ஏகாக்ரம் அத்தியாவசியம். நீ வெண்ணெயெடுக்கவேண்டுமானால், பிரைகுத்தின பாலை ஓர் தனிமையான இடத்தில்வை. நடுவில் அதை அசைத்தால் அது தோயாது. அடுத்தபடியாக நீ அமைதியுடன் உட்கார்ந்து கடையவேண்டும்.

நீ, ஏகாந்தத்தில் உன் மனதை பகவானிடம் செலுத்தினால், த்யாகம், பக்தி இவைகளை அடைகிறாய் அதேமனதை இவ்வுலக விஷயத்தில் செலுத்தினால், அது கீழ்நோக்கி இழிவாகிய, 'காமினீ,' 'காஞ்சனம்,' முதலான உலக விஷயத்திலேயே இழுத்துவிடும்.

இவ்வுலகை, ஜலத்திற்குச் சமானமாகவும், மனதை பாலுக்குச் சமானமாகவும் சொல்லலாம். பால் ஓர் தரம் ஜலத்தோடு கலந்துவிட்டால் திரும்பவும் அதை அதன் முன்னைய சுத்தமான நிலைமைக்கு கொண்டுவர முடியாது. ஆனால் நீ அதை வேறு ஓர் நிலைமையாக மாற்றினால் தான் மறுபடியும் ஜலத்தில் சேர்க்கலாம்; அதாவது, பாலை வெண்ணெயாகச்செய்து பிறகு அதை ஜலத்திலிடு. உன் மனமென்னும் பாலை ஏகாந்தத்திலிருந்து சாதனையினால் பகவத்பக்தியென்னும் வெண்ணெயாகச்செய். வெண்ணெயை ஜலத்திலிட்டால் ஒருபொழுதும் ஜலத்துடன் கலக்காது. அதுமேலே மிதந்துவரும். அதுபோலவே, உன் மனமும் இவ்வுலகில் பற்றற்றிருக்கும். உலகிலிருந்தபோதிலும், உலகப்பற்று

அதனிடமிருக்கமாட்டாது. மெய்ம்மையான ஞானம், அல்லது, பக்தியை ஓர் தரம் அடைந்துவிட்டால், அது உலகின் பற்றற்றிருக்கும்.

இதோடுகூட வஸ்து விவேக விசாரணைசெய்; 'பெண் பொன் இவ்விரண்டும் பொய், பகவான் ஒருவரே மெய்.' பணத்தினால் என்ன உபயோகம்? ஏன், அது நமக்கு, உணவும் உடையும், வசிக்க இடமும் கொடுக்கிறது. இவ்வளவுதான் அதனால் உபயோகம். இதற்குமேல் அது போகிறதில்லை பணத்தின் உதவியினால் நிச்சயமாக நீ பகவானையடைய முடியாது. உயிர்வாழ்க்கையின் பிரயோஜனம், நிச்சயமாக, தனமல்ல. இவ்விதமாக யோசனை செய்வதுதான் விசாரணை இது உனக்கு தெரிந்ததா ?

எம் :—ஆம், ஸ்வாமி. தெரிந்தது நான் இப்பொழுது சமீபத்தில் "ப்ரபோத சந்திரோதயம்" என்ற ஸம்ஸ்கிருத நாடகத்தைப் படித்தேன் அதில் விசாரணையைப்பற்றிப் படித்தேன்.

குரு :—ஆம், விசாரணை. தனம், ஸ்திரீயின் அழகு, இவற்றில் என்னவிருக்கிறது சொல் ? நீ நன்றாய் விசாரணை செய்து பார்த்தாயானால், மிகவும் அழகுடைய ஸ்திரீயின் சரீரமானது இரத்தம், சதை, தோல், நரம்பு, மாமிசம் இவைகளினால் செய்யப்பட்டதென்றும்; அதுவுமல்லாமல், மற்ற மிருகங்களைப் போலவே மலம், மூத்திரம் முதலானவைகளால் நிரப்பப்பட்ட குடல் முதலானவையாலானதென்பதையும் நீ நன்றாய் அறிந்துகொள்வாய். ஓர் மனிதன் பகவானைவிட்டு, இப்பேர்ப்பட்டதுச்சமான அற்ப விஷயானந்தங்களில் தன் மனதையெல்லாம் செலுத்துவது மிக ஆச்சரியம் !

எம் :—ஸ்வாமி, பகவானைப் பார்க்கமுடியுமா ?

குரு :—நிச்சயமாகமுடியும். அதைப்பற்றி சந்தேகமே கிடையாது.

பகவானைப் பார்ப்பதற்கு. பின்னால் வருபவை சில சாதனங்கள். ஏகாந்தத்தில் அடிக்கடி போயிருந்து பகவத்தியானம் செய்தல்; அவருடைய அனந்த கல்யாண குணங்களையும், திருநாமங்களையும் இடைவிடாமல் உச்சரித்துக்கொண்டேயிருத்தல்; விவேகவிசாரணைக்காக பிரயாசைப்படுதல்; ஊக்கத்துடன் அதிதீவிரமாக பகவானை நினைந்துருகி தோத்திரம் செய்து பிரார்த்தித்தல்.

எம் :—ஸ்வாமி, மனம் எவ்விதமான நிலையினால் பகவத் சாக்ஷியை அடைகிறது?

குரு :—நீ பகவானுக்காக உள்ளன்புடன் அதி தீவிரமான பக்தியோடு உருக்கமுடன் கதறினாயானால் நீ பகவானை பார்ப்பாய். ஜனங்கள், மனைவி மக்களுக்காக குடம் குடமாகக் கண்ணீர்விட்டு கதறியழுவார்கள்! இன்னும், அவர்கள் பொருள் சம்பாதிப்பதன் பொருட்டு, தாங்கள் கதறியழும் கண்ணீராகிய நீர்ப்பெருக்கினால் அடித்துக்கொண்டு போகப் படுவதற்குத் தயாராகயிருக்கிறார்கள்! ஆனால் பகவான் பொருட்டு யார் கதறுகிறார்கள்? பகவானை அடைவதற்காக கதறு. ஆனால் வெறும் வெளி வேஷத்திற்காக வேண்டாம். உள்ளன்புடனும், உருக்கமான ஹிருதயத்துடனும், வேண்டும்

சூரியோதயத்திற்கு முன், சிவந்த அருணன் பிரகாசிக்கிறான். அது போலவே, பின்னால்வரும் பகவத் சாக்ஷாத்காரத்திற்கு முன் ஆவலும், மனக்கசிவும் உண்டாகின்றன.

இவ்வுலக விஷயங்களில் ஆசை வைத்திருக்கும் ஓர் மனிதன் அதில் வைத்திருக்கும் பற்றுதலும்; ஓர் தாயானவள் தன் குழந்தையினிடம் வைத்திருக்கும் பற்றுதலும், ஓர்பதிவிருதை தன் கணவனிடம் வைத்திருக்கும் பற்றுதலும்; இம்மூன்றும் சேர்ந்து எவ்வளவு பலமாகயிருக்கிறதோ அவ்வளவு பலமாக நீ பகவானிடம் பற்றுதல் வைத்தாயானால் நீ பகவானைப் பார்க்கமுடியும். பகவானையுடைய முழுமனதையும் ஆத்மாவையும் பகவானிடம்

செலுத்தவேண்டும். அவ்விதம் செய்யும் பிரார்த்தனைகள் ஜகன்மாதாவை அடையும்படிசெய்யவேண்டும்.

பூனைக்குட்டிகளுக்கு தங்கள் தாயினிடம் 'மியா,' 'மியா என்று கத்துகிறதற்குமட்டிலும் தான் தெரியும். மற்றவைகளெல்லாம் தாய்ப்பூனைக்கே தெரியும். ஓர் சமயம் சமையலறையிலும், மற்றோர் சமயம் அவ்வீட்டு எஜமானனுடைய மிருதுவான படுக்கையருகிலும்; இவ்விதமாக தனக்கு இஷ்டமான விடங்களில் தன் குட்டிகளை ஒளித்துவைக்கிறது. ஆம், பூனைக்குட்டிகள், எவ்விதம் தங்கள் தாயினிடம் கத்தவேண்டும் என்பது மட்டிலும் அறியும்.

அத்தியாயம் 3.

கோவிலுக்கு ஒரு மைல் தூரத்திலிருக்கும் வராக நகரில், தன் சகோதரி வீட்டில் எம் இருந்து வந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பார்த்தது முதல், அவரை நினையாமல் 'எம்' அரை நிமிஷமேனும் இருக்கமுடியவில்லை. எப்பொழுதும் குருநாதன் புன்சிரிப்புடன் தன் எதிரிலிருப்பதாகவும், அமிர்தம்போன்ற அவருடைய இனிய வாக்கியங்களை தான் கேட்டுக்கொண்டிருப்பதாகவும் நினைத்துக்கொண்டிருந்தார். ஒருநாள் 'எம்' அடியில் வருமாறு தனக்குள் யோசிக்கலானார். "எவ்விதம் இப்பேதைப் பிராம்மணன் ஆத்ம ஞான ரகசியங்களையறிந்தார்! அவருடைய உபதேசங்களெவ்வளவு தெளிவாக இருக்கின்றன"! 'எம்' உடைய உற்சாகம் ஆச்சரியப்படத்தக்க விதமாய் பொங்க ஆரம்பித்தது. மற்றோர்தரம் அம்மஹானைப் பார்க்க எப்பொழுது சமயம் ஏற்படுமோ என்று 'எம்' இரவும் பகலும் ஏங்கிக்கொண்டிருந்தார். அடுத்த ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம், இரண்டு மூன்றுமணி சுமாருக்கு வராஹ நகரிலிருக்கும் நேபால் பாபுவோடு 'எம்' ஆலயத்திற்கு வந்தார்.

குரு, முன் எந்த அறையில் எந்த ஆசனத்தில் வீற்றிருந்தாரோ அதேவிதமாய் வீற்றிருந்தார். அவ்வறை முழுதும் பக்தர்

களால் நிரம்பப்பெற்றிருந்தது. ஞாயிற்றுக் கிழமையாகையால் அவர்களுக்கு அன்று வேலை கிடையாது. அவர்களில் ஒருவரையேனும் எம் அறியார். எம் கைகூப்பி குருவை வணங்கி ஓர் பக்கத்திலுட்கார்ந்தார். அவ்விடம் இருக்கும் பக்தர்களுடன் குரு புன்சிரிப்புடன் பேசுகிறார். அவ்விதம் அவர் பேசும்பொழுது, அடிக்கடி, பத்தொன்பது வயது வாலிபனான "நரேந்திரன்" (விவேகாநந்தர்) என்பவரைப்பார்த்துப் பேசுகிறார். நரேந்திரன், கலாசாலை மாணுக்கனும், சாதாரண பிரம்ம ஸமாஜத்தின் மெம்பராகவுமிருந்தார். அவருடைய வார்த்தைகள், மிகவும்சௌஜ் மாயிருந்தன. அவர் கண்கள் கறுத்து விசாலமானவைகளாயிருந்தன. அவை சைதன்னியத்தினால் பிரகாசித்து, உள்ளிருக்கும் ஆத்ம மகத்துவத்தையறிவித்தன. அவர், பக்தனுடைய சகல சுப லக்ஷணங்களும் நிறைந்து விளங்கினார்.

பிரம்ம விசாரத்திலிருப்பவர்களைப் பற்றி அவமதிப்பாகப் பேசும் லோகாயதர்களின் நடத்தையைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பதாக 'எம்' அறிந்தார். அப்பேர்ப்பட்டவர்களை என்ன பண்ணுவது என்பது கேள்வி.

குரு :—(சிரித்துக்கொண்டு, நரேந்திரனோடு) உன் அபிப்பிராயமென்ன, நரேந்திரா ? உலகவாழ்க்கையிலிருக்கும் மனிதர்கள், பக்தர்களைப்பற்றி அனேக விதமாகப் பேசுகிறார்கள். ஓர் யானை, தன் வழியாகச் செல்லும்பொழுது பல நாய்களும், இன்னும் இதர மிருகங்களும், யானையின் பின்தொடர்ந்து குலைத்தும், கூச்சலிட்டுக்கொண்டும் ஓடுகின்றன. ஆனால் யானையோ, கொஞ்சமேனும் செவிகொடாமல் தன் வழிநோக்கியே செல்லுகிறது. அப்பா, ஜனங்கள் உன்னைப் பற்றி இகழ்ச்சியாக உன் மறைவில் பேசினால், அவர்களைப் பற்றி நீ என்ன நினைப்பாய் ?

நரேந்திரன் :—நான் அம்மனிதர்களை என் பின்னின்று குலைக்கும் தெரு நாய்களுக்கு சமானமாக நினைப்பேன்.

குரு:—(சிரித்துக்கொண்டு), இல்லை, அப்பா, நீ அவ்வளவுதூரம் போகவேண்டாம். (யாவரும் சிரிப்பு) சேதனசேதனமாகிய எல்லாவற்றிலும் பகவான் வாசம் செய்கிறார் என்றறி. ஆகையினால், மனிதர், மிருகம், பக்ஷி புல், பூண்டு, ஸ்தாவரம் முதலான எல்லாவற்றிலும் நாம் கடவுளைப் பார்த்து வணங்கவேண்டும்.

நாம் மனிதர்களோடு பழகும்பொழுது, துஷ்டர்களை விலக்கி ஸஜ்ஜனர்களோடு பழகவேண்டும் பகவான் புலியினத்திலும், இருப்பது நிஜமே. ஆனால் எவனாவது அந்தக் காரணத்தைக் கொண்டு புலியைத் தழுவவேண்டுமென்றேற்படுகிறதில்லை. புலியும் கடவுளின் ஓர் ரூபம்தானே, நாம் ஏன் அதைக்கண்டு ஓடவேண்டும்? என்று சிலர் சொல்லலாம். ஆனால், அதைக்கண்டு ஓடு என்று சொல்லும் மனிதர்களும் கடவுளின் மற்றோர் ரூபம் தானே; அப்படியிருக்க அவர்கள் வார்த்தையை நாம் ஏன் அலக்ஷியம் செய்யவேண்டும்?

ஓர் வனத்தில், ஓர் மஹான் தன் சிஷ்யர்களோடு இருந்து வந்தார். ஓர் நாள் தன் சிஷ்யர்களைப் பார்த்து "பகவான் ஸர்வவியாபி. அவர் எல்லாவற்றிலுமிருக்கிறார். ஆகையினால், இதை அறிந்து நாம் எந்த வஸ்துவைப் பார்த்தாலும் பகவானைப் பூஜிப்பதுபோலவே வணங்கி பூஜிக்கவேண்டும்' என்றார். இப்படியிருக்கையில், ஓர் தினம் சிஷ்யர்களிலொருவன் ஹோமத்துக்கு ஸமித்துக்கொண்டு வருவதற்காகச் சென்றான் அப்பொழுது. "யானை மதம்பிடித்து ஓடிவருகிறது, வழிவிடு, வழிவிடு" என்னும் சத்தத்தைக்கேட்டான். இதைக் கேட்டதும் சிஷ்யனைத்தவிர மற்றெல்லோரும் ஓடிவிட்டார்கள். சிஷ்யனோ தனக்குள் யோசிக்கிறான்; 'இந்தயானையும், பகவானுடைய ஓர் ரூபம் தானே, இப்படியிருக்க நான் ஏன் ஓடவேண்டும்?' என்று சிந்தித்து நின்றவிடத்திலேயே யானையைப் பகவானென்று தியானம் செய்து நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தான். யானைப்பாகனோ திரும்பவும், 'வழிவிடு, வழிவிடு' என்று சொல்லியும் சிஷ்யன் ஓரடியும் நகரவில்லை. கடைசியாக அம்மதயானை

தன் துதிக்கையினால் அச்சிஷ்யனை எடுத்து ஓர் பக்கமாக எறிந்து விட்டது. சிஷ்யன் உடம்பெல்லாம் காயமடைந்து, இரத்தப்பிரவாகத்துடன் கீழே விழுந்தவண்ணம் மூர்ச்சை யடைந்தான்.

குரு இச்சங்கதியைக் கேட்டு மற்ற சிஷ்யர்களோடு அவ்விடம் வந்து சேர்ந்தார். வீழ்ந்துகிடக்கும் சிஷ்யனைத் தமது இருப்பிடம் எடுப்பித்துச் சென்று மூர்ச்சை தெளியும்படியாக மருந்து முதலானவை கொடுத்து; சிஷ்யன் மூர்ச்சை தெளிந்து எழுந்தவுடன் அவர் 'யானைப்பாகன் மதயானைக்கு வழி விடு என்று சொன்னவுடன் நீ ஏன் வழிவிடவில்லை' என்று கேட்க, அதற்கு அவன், "பகவான் ஸர்வ வியாபியென்றும், மனிதன், இன்னும் மற்ற உயிர் வாழ்வன வான எல்லாப் பிராணிகளிலும் பகவான் இருக்கிறார் என்றும், தாங்கள் சொன்னதினால், நான் யானையையும் பகவானாகப் பாவித்து பயமற்று வழிவிடவில்லை." என்றான். அதற்கு குரு அப்பா, நீ யானையைபகவானாக பாவித்தது நியாயமே. ஆகிலும் யானைப்பாகனாகிய பகவான் உன்னை 'வழிவிட்டு விலகு' என்று எச்சரிக்கவில்லையா? பகவான் எல்லாவற்றிலும் வியாபித்திருக்கிறாரென்பது வாஸ்தவமே. ஆனால் பகவான் யானையில் வசிக்கிறதாயிருந்தால், அதுபோலவே யானைப்பாகனிலும் பகவான் இருக்கவில்லையா? யானைப் பாகனாகிய பகவானுடைய எச்சரிக்கையை நீயேன் அலக்ஷியம் செய்தாய் என்றார்."

நமது வேதங்களில் ஜலம் பகவத் ஸ்வரூபமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சில ஜலம், பகவத் அபிஷேகத்திற்கு அருஹமாயிருக்கிறது. சிலது, கைகால் சுத்திசெய்வதற்கும் ஆடைகள் பாத்திரங்கள் முதலியவை சுத்தம்செய்வதற்கும் உபயோகப்படுகின்றது. ஆனால் இந்த ஜலம் பானம் பண்ணவாவது சுவாமிக்கு அபிஷேகம் செய்யவாவது உதவாது. அவ்விதமே மனிதர்களில் சிலர் ஸஜ்ஜனர்களாகவும், சிலர் துஷ்டர்களாகவும், அதாவது சிலர் சதா பகவானை நாடுகிறவர்களாகவும், சிலர் கனவிலும் அவரை நினையாதவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்க

ரெல்லோரிலும் பகவான் இருக்கிறாரென்பதுண்மை. ஆனாலும், மின் சொன்னவர்களோடு நாம் நெருங்கி சாவகாசம் செய்யக்கூடாது. சிலருடன் தலையசைப்பது மட்டிலும்தான் வைத்துக் கொள்ளவேண்டும். மற்றும் சிலருடன் அதுவும்கூட வைத்துக் கொள்ளக்கூடாது. அப்பேர்ப்பட்டவர்களிடமிருந்து முற்றும் விலகியிருப்பதுவே தகுதி'

நரேந்திரன் :—குருநாதா, துஷ்டர் நம்மை தொந்திரவு செய்ய வந்தாலோ, அல்லது நமக்கு தீங்கு செய்தாலோ நாம் சும்மாதானிருக்கவேண்டுமோ?

குரு :— நகரவாசியாகிய ஒரு கிருஹஸ்தன், குடும்பத்திலிருக்கும் வரைக்கும் தன்னைக்காப்பாற்றிக் கொள்ளுவதற்காக வேண்டி துஷ்டர்களை நிக்ரஹம் செய்பவனைப்போல் பாவனை செய்ய வேண்டும். ஆயினும் தீங்குக்குக் கைம்மாறாகத் தீங்கு செய்யாமல் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

ஓர் காலத்தில், மாடு மேய்க்கும் சிறுவர்கள் சிலர் தங்கள் ஆடுமாடுகளை ஓர் மைதானத்தில் மேய்த்து வந்தார்கள். அவ்விடத்தில், பயங்கரமான ஓர் கொடியசர்ப்பம் இருந்துகொண்டிருந்தது. ஓர் நாள், ஒரு மஹான் அவ்வழியாக வந்தார் அச்சிறு கோபாலர்கள், அம்மஹானிடம் ஓடி. 'ஏ சாதுவே தாங்கள் அவ்வழியாய் போகவேண்டாம் அவ்விடம் ஓர் கொடிய சர்ப்பம் இருக்கிறது' என்றார்கள். அப்புண்ணியாத்மா அவர்களை நோக்கி சொன்னதாவது, 'குழந்தைகாள், உங்கள் சர்ப்பத்தினிடம் எனக்குப் பயமில்லை. எவ்வித தீங்கிலிருந்தும் என்னைக்காப்பாற்றிக் கொள்ள எனக்கு மந்திரங்கள் தெரியும்' என்று சொல்லிக் கொண்டு அம்மஹான் அவ்வழியாகச் சென்றார். அச்சிறுவர்கள், சர்ப்பத்தின் பயத்தினால் அவரைப் பின்தொடர்ந்து போகவில்லை அப்புண்ணியவானைக் கண்டவுடனே அந்த சர்ப்பம் படத்தை எடுத்துக்கொண்டு சீறி அவரை நோக்கி ஓடிவந்தது. அவர் ஏதோ ஓர் மந்திரம் ஜபிக்க, அக்கொடிய சர்ப்பம் ஓர் புழுவைப் போல அடங்கி அவர் காலடியில் வீழ்ந்தது.

அப்போது அவர் அச்சர்ப்பத்தை நோக்கி ஏ! சர்ப்பமே; நீ யேன் இவ்விதமாக மற்றவர்களுக்கு தீங்கு செய்கிருய்? நான் உனக்கு ஓர் பகவன் நாமத்தை உபதேசம் செய்கிறேன். நீ அதை இடைவிடாமல் ஜபித்து வந்தாயானல் உனக்கு பகவத் பக்தி ஏற்படும். பகவான் உனக்குப் பிரத்தியக்ஷமாவார். தீங்கு செய்யும் குணம் உன்னைவிட்டு விலகும்.' என்று சொல்லி அப் புண்ணியாத்மா பகவான் திரு நாமத்தை அதற்கு உபதேசித்தார். அப்பொழுது சர்ப்பம், அவர் காலில் விழுந்து நமஸ்கரித்து, 'ப்ரபோ, மோக்ஷ ஸாம்பிராஜ்யம் அடைய நான் என்ன செய்யவேண்டும்?' என்று வினவியது. அதற்கு அம்மஹான், 'உனக்கு நான் உபதேசித்ததை இடைவிடாமல் ஜபி, பகவத் சிருஷ்டி ஒன்றிற்கும் தீங்கு செய்யாதே. நான் திரும்பியும் வந்து உன்னைப் பார்க்கிறேன்.' என்று சொல்லி தன் வழியே சென்ருர்.

சிறிது காலம் சென்றது. அச்சிறு கோபாலர்கள் சர்ப்பம் கடிக்காததை யறிந்தார்கள். அவ்விதம் அது கடிக்கிறதில்லை என்று அறிந்து அதை கல்லை விட்டெறிந்தார்கள். அந்த சர்ப்பமோ, தீங்கற்ற புழுவைப் போல் அடங்கி ஒடுங்கியிருந்தது. அப்பொழுது அச்சிறுவர்களிலொருவன் அந்த சர்ப்பத்தின் வாலைப் பிடித்திழுத்து கிறுகிறென்று சுழற்றி பூமியின்மேல் அனேகந்தரம் அடித்தான். சர்ப்பம் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு குற்றுயிராய் மயங்கி கீழேகிடந்தது. அன்றிரவு நெடுநேரம் கழித்து தன்னறிவு வரவும், மெல்ல மெல்ல நகர்ந்து தன் புதரை அடைந்தது. அதன் சரீர முழுவதும் காயமடைந்திருந்தது.

வெகுநாள் வரைக்கும் தன் ஆஹாரம் தேடக்கூட சக்தியற்று, மிகவும் மெலிந்து போயிற்று. அச்சிறுவர்களின் பயத்தினல், அது இரவில் தான் ஆஹாரம் தேட வெளியில் வரும். மஹானுல் உபதேசம் பெற்றநாள் முதல், பகவத் ஸ்ருஷ்டி எதற்கும் தீங்கு செய்வதை ஒழித்து, அந்த சர்ப்பம் புற்பூண்டுகளையே ஆஹாரமாகக் கொண்டு தன் வாழ் நாளைக் கழித்துவந்தது.

சிறிது காலம் சென்றதும் அம்மஹாத்மா திரும்பவும் அங்கு வந்தார். சர்ப்பத்தை வெகு நேரம் தேடியும் காணவில்லை. அச்சிறு கோபாலர்கள், சர்ப்பம் மரித்துவிட்டதென்று சொன்னார்கள். அம்மஹாத்மாவோ, தன் மந்திரத்தின் சக்தியினால் பகவானை அடைகிறவரைக்கும் அச்சர்ப்பம் மரணமடையாதென்றுள்ள நம்பிக்கையினால், அச்சிறுவர்களின் வார்த்தையை நம்பவில்லை. பலதரமும் அந்த சர்ப்பத்தின் பெயரைச் சொல்லி அழைத்த பிறகு, அந்த சர்ப்பம் தன் புற்றினின்றும் வெளியே வந்து குருவை நமஸ்கரித்தது.

அவர்கள் சம்பாஷணை:—

மஹான்:— என்ன, சௌக்கியமா?

சர்ப்பம்:—ப்ரபோ, பகவத் அநுக்ரஹத்தினால் சௌக்கியமாகவிருக்கிறேன்.

மஹான்:— என், மிகவும், இளைத்து வெறும் எலும்பும் தோலுமாயிருக்கிறாயே! யாது காரணம்?

சர்ப்பம்:—ப்ரபோ, தங்கள் ஆக்ஞைப்படி எந்தப் பிராணியையும் இம்சை செய்யாமலிருக்க முயலுகிறேன். இலை முதலானவைகளை உணவாகக் கொள்ளுகிறேன். அக்காரணத்தினால் நான் முன்னிருந்ததை விட இப்பொழுது இளைத்திருக்கலாம்.

மஹான்:—ஆஹாரத்தினால் மட்டும் உனக்கு இம்மாதிரியான நிலைமை வந்திருக்கமாட்டாது என்று நினைக்கிறேன். வேறு ஏதாகிலும் காரண மிருந்திருக்கவேண்டும். யோசித்துப் பார்!

சர்ப்பம்:—ஆஹா! இப்பொழுதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது. ஒரு நாள் கோபாலச் சிறுவர்கள், என் வாலைப்பிடித்துச் சுழற்றி பூமியின்மீது அனேகந்தரம் அடித்தார்கள். எனக்கு ஏற்பட்ட மாறுதல்கள் அச்சிறுவர்களுக்குத் தெரி

யாது. நான் அவர்களைக் கடிக்கமாட்டேனென்றுவது, அல்லது ஓர் தீங்கும் செய்யமாட்டேனென்றுவது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

மஹான்:— சீ, சீ, அவ்விதம் அவர்கள் உன்னை தொந்திரவு செய்யாமல் உன்னை நீ காப்பாற்றிக் கொள்ளத் தெரியாதது மிகவும் புத்தி யீனம். பகவத் ஸ்ருஷ்டிக்குட்பட்ட ஒரு பிராணியையும் கடிக்கவேண்டாம் என்று மட்டிலும் சொன்னேன். உன்னைக் கொல்ல வருபவர்களை கடிக்காமல் சீறி அவர்களை மிரட்டி நீ தப்பிக்கொள்ளும் வழியைத் தேடிக் கொள்ளக்கூடாதா என்று சொன்னார்.

பரமஹம்ஸர் மேலும் சொல்லுகிறார். படமெடுத்துச் சீறு, ஆனால் கடிக்காதே. உன் சத்துருக்களாகிய கெட்ட மனிதர்களைச் சீறி பயப்படுத்துவதினால் தீங்கில்லை. நீ தீங்கைத் தடுக்கும் வகையை யறிந்து பதிலுக்குப் பதில் செய்யத் தயாராகவிருக்கிறதாக காண்பித்து, சத்துருக்களை விலக்கு உன் விஷத்தை ஒருவன் மீது செலுத்தாமல் மாத்திரம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். தீங்குக்குப் பதில் தீங்கு செய்து அத்தீங்கைத் தடுக்காதே. உன்னைக்காப்பாற்றிக்கொள்ள உனக்கு சக்தியிருக்கிறதென்பதை மட்டிலும் நீ குறிகளால் காண்பி.

ஓர் சிஷ்யன்:—ஸ்வாமி, பகவத் ஸ்ருஷ்டியில் துஷ்டர்கள் ஏன் இருக்கவேண்டும்? இவ்வுலகில் தீங்கு என்பது ஏன் இருக்கிறது?

குரு:—வேறு பாடே, பகவத் ஸ்ருஷ்டியின் முறை. நன்மை தீமை இவ்விரண்டும் இருக்கவேண்டியதுதான். மேலும், மிருகங்கள், விருக்ஷங்கள் உலோகங்கள் முதலாகிய அநேக வஸ்துக்களிருக்கின்றன. அவற்றுள் மிருகங்களில் சில சாந்தமாயும், தீங்கற்றவையாயும், மற்றும் சில புலியைப் போல் குரூரமாயும், இதர மிருகங்களைப் பக்ஷித்து ஜீவிப்பவையாயும் இருக்கின்றன. சில விருக்ஷங்கள், அமிருதம் போன்ற பழங்களைத் தருகின்றன.

மற்றும் சிலவோ, மரணத்தை உண்டாக்கும்படியான விஷத்தோடு கூடிய பழங்களை கொடுக்கின்றன. அதேமாதிரி, ஸஜ்ஜனர்களும், துர்ஜ்ஜனர்களும், புண்ணியாத்மாக்களும், பாபாத்மாக்களும் இருந்துவருகின்றனர். சிலர் ஞாயமாயும், பகவத் பக்தியோடு கூடியுமிருக்கிறார்கள். மற்றும் சிலரோ, உலகப் பற்றுதலோடு கூடியிருக்கிறார்கள்.

மனிதர்களை நாலு வகுப்பாகப் பிரிக்கலாம். 1. பத்தர்கள் (உலகப்பற்றுதலுள்ளவர்கள்) 2. முமுக்ஷுக்கள் (உலகப்பற்றிற்று நீங்க முயலுபவர்கள்) 3. முக்தர்கள்; 4. நித்தியர்கள். (நித்தியானந்தத்தை யனுபவிக்கும் முக்திபெற்றவர்கள்.) நித்தியர்கள்:—நாரதர், அவர் போன்ற மஹா ரிஷிகள். இவர்கள், உலகில் மற்றவர்களுக்காக உழைத்து, தத்துவத்தை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதற்காக இருந்து வருகிறார்கள்.

பத்தர்கள்:—இவர்கள், உலக விஷயமான தனம், கீர்த்தி, அதிகாரம், இந்திரிய சுகம் முதலானவைகளில் பற்றுதலுடையவர்கள். அவர்கள் தெய்வத்தை மறந்து, கொஞ்சமேனும் தங்கள் மனதை பகவானிடம் செலுத்ாதவர்கள். முமுக்ஷுக்கள் இவர்கள் சம்சாரவியன்ற மட்டும், 'காமினீ காஞ்சனம்' பெண், பொன்' இவவிரண்டையையும் விலக்க முயற்சி செய்கிறவர்கள். இவர்களில், சாதகர் தேடப்பட்ட முக்தியை அடைபவர்கள் மிகச்சொற்பமே.

3. முக்தர்கள்; இவர்கள் பெண், பொன் இவ்விரண்டையும் முற்றும் விலக்கினவர்கள். இவர்களுக்கு உதாரணமாக புண்ணிய புருஷர்களைச் சொல்லலாம். உலகப் பற்றுதல் அவர்கள் மனதில் சிறிதேனும் இல்லை. இவர்கள், எப்பொழுதும் பகவானுடைய திருவடியையே தியானித்துக்கொண்டிருப்பார்கள்.

ஓர் குளத்தில், மீன் பிடிக்கும் வலையை வீசினால், சில மீன்கள், செம்படவன் வலையில் அகப்படாமல் புத்திசாலித்தனமாகவும் அதி ஜாக்ரதையாய் தப்பித்துக்கொள்ளுகின்றன. ஆனால் இவைகள் சொற்பமே. இவைகளை நித்தியர்களுக்கு ஒப்பிடலாம்

பெரும்பான்மையான மீன்கள் வலையில் அகப்பட்டுக்கொள்ளுகின்றன. இவைகளிற் சில தப்பி யோட முயற்சிசெய்கின்றன. இவைகளை முமுக்ஷுக்களுக்கு ஒப்பிடலாம். அவ்விதம் முயற்சி செய்பவைகளில், ஒன்றிரண்டுதான் வலையினின்றும் தப்பி ஜலத்திற் குதிக்கமுடியும். அவ்விதம் அவை ஜலத்திற் குதிக்கும் பொழுது செம்படவன், 'இதோ பார்! பார்! ஓர் பெரிய மீன் தப்பியோடிவிட்டது' என்று சொல்லுகிறான். (இவைகள் முக்தர்களுக்குச் சமானம்) பெரும்பான்மையாக வலையிலகப்பட்டவை தப்பியோட முடியாது. அவைகள் வலையிலகப்பட்டதும் தவிர, தப்பியோடக் கொஞ்சமேனும் பிரியமில்லாமல், கீழிருக்கும் சேற்றில் தலையை இட்டுக்கொண்டு இனிநமக்கு ஒரு கெடுகியும் ஒரு பயமும் வராது; நாம் பத்திரமாய் இருக்கிறோம், என்று நினைத்துக்கொண்டு சும்மாவிருக்கின்றன. அந்தோ! அடுத்த நிமிஷம் செம்படவன் வலையை இழுத்து கரையின் மீது தங்களை எல்லாம் போடப் போகிறானென்று இச்சிறு பிராணிகள் அறியா! இவைகளுக்கு உபமானமாக உலக வாழ்க்கையில் மூழ்கியிருக்கும் (பத்தர்கள்) ஜனங்களைச் சொல்லலாம். இப்பாமரர்கள் சேற்றினாலான வீட்டையே பத்திரமாக நினைக்கிறார்கள். அந்தோ! உலக வலையில் சிக்கப்பட்டு, சீக்கிரத்தில் ஜீவனையிழந்து, கரையின்மீது போடப்படுவதையறியவில்லை!

உலகில் பந்தமென்பது, பெண், பொன் இவ்விரண்டினாலும் உண்டாகுபவைகளாம். உலக வாழ்க்கையில் மூழ்கினவர்களுக்கு கை, கால் இரண்டும் கட்டப்பட்டிருக்கின்றன. அவர்கள், கடாகத்தின் சேற்றுக் கொப்பான பெண், பொன், இவ்விரண்டினால், சமாதானமும், சாந்தியும் அடைவோமென்றிருக்கின்றனர்; இவை ஆத்மாவை நசிக்கச் செய்யுமென்று இவர்கள் அறியார்கள். இவ்வுலகினர்களில் ஒருவனுக்கு அந்திய காலமேற்படும்பொழுது, அவன் மனைவி அவனைப்பார்த்து. 'ஐயோ நீ இவ்வுலகைவிட்டுப் போகிறாயே! எனக்கு என்ன ஆஸ்தி வைத்துவிட்டுப் போகிறாய்?' என்கிறாள். அவள் பகவானைப்பற்றி ஓர் வார்த்தையேனும் பேசாள். மரணாவஸ்தைப் படுகிறவனோ உலக பார்தவ்யத்தால் தன்னறையில் விளக்கு எரிவதுகூட சகிக்

காமல், 'யாரங்கே, வீணாய் எண்ணெயும் திரியும் அனியாயமாய்ச் செலவழிக்கிறீர்களே விளக்கைக் குறைத்துவிடுங்கள். என்கிறான்.

உலகினர்கள் கடவுளை ஒரு பொழுதும் ஸ்மரியார்கள். தங்களுக்கு வேலைகளில்லாமலிருக்கும்பொழுது, ஒன்றுக்கும் உபயோகமற்ற வேலையைச் செய்தோ வீண் வம்பு பேசியோ தங்கள் காலத்தைப் போக்குவார்கள். ஏனடா இப்படி செய்கிறாயென்று கேட்டால் 'சும்மாவிருக்க என்னால் முடியவில்லை. ஆகையினால், பயிருக்கு வேலியாகிலும் போடுகிறேன்.' என்று சொல்வார்கள். அல்லது, சீட்டாட்டம், சொக்கட்டான் இவைகளில் தன் காலத்தைப் போக்குவார்கள். அப்போது குருவிருக்கும் அவ்வறை நிசப்தமாயிருக்கிறது.

ஓர் சிஷ்யன்:—ஸ்வாமி, உலக வாழ்க்கையிலிருக்கும் மனிதனுக்கு விமோசனமெப்படி? அவன் கடைத்தேற வழியொன்றுமில்லையா?

ஸ்ரீராமகிருஷ்ணர்.—ஆ! ஹா! வழியிருக்கிறது. அவன் ஸத்ஸங்கத்தை நாடட்டும் ஸம்ஸாரத்திலிருந்து விலகி அடிக்கடி ஏகாந்தத்தை யடைந்து, பகவானைத் தியானம் செய்யட்டும். அவன் விவேக விசாரணை செய்யட்டும். தனக்கு, பக்தியும் சிரத்தையும் ஏற்பட, உருக்கமுடன் ஜகன்மாதாவை ஸ்தோத்திரம் செய்து பிரார்த்திக்கட்டும். சிரத்தை உதித்தால் வேலை பூர்த்தியாய்விட்டது. சிரத்தையை விட மேலானது ஒன்றுமில்லையென்பது நிச்சயம் (கேதாரைப்பார்த்து) சிரத்தைக்கு இருக்கும்படியான சக்தியைப்பற்றி நீ கேட்டிருக்கலாம். ஸ்ரீ ராமச்சந்திரன். பகவத் அவதாரமாயிருந்தும். இலங்கைக்குப் போக அணை கட்ட நேரிட்டது. ஆனால் அவர் பக்தன் ஹனுமான், அவருடைய நாமத்தில் அளவற்ற சிரத்தையிருந்ததினால், அத்திவ்விய நாமத்தை உச்சரித்த மாத்திரத்திலேயே சமுத்திரத்தைக் கடந்து இலங்கையை யடைந்தார். ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி, சிரத்தையின் மகிமையைக் காண்பிக்கும் பொருட்டு சமுத்திரத்

தைக் கடக்க பாலம் கட்டினார். அவருடைய பக்தன் சிரத்தா விசேஷத்தினால், கேவலம் அவருடைய நாமோச் சாரணத்தினாலேயே பாலமின்றி சமுத்திரத்தைக் கடந்தார்.

மற்றோர் பக்தன், சமுத்திரத்தைக் கடக்கவேண்டுமென்று தன்னிடம் வந்த ஒருவனுக்கு 'ராமா' என்னும் திவ்ய நாமத்தை ஓர் ஓலைத்துண்டில் எழுதிக் கொடுத்து, 'நண்பனே, பயப்படாமல் சிரத்தையோடிரு. சமுத்திரத்தைக் கடப்பாய். ஆனால் சிரத்தையை நீ யிழந்தால் சமுத்திரத்தில் மூழ்கிவிடுவாய்' என்றார். அம்மனிதன் அத்திவ்ய நாமமெழுதியிருக்கும், ஓலையைத் தன் வஸ்திரத்தில் பத்திரமாய் முடிந்துகொண்டு, சமுத்திரத்தின் மீது நடந்து கடக்கலானான். அப்படிப் போகையில் எழுதிக்கொடுத்தது என்னவென்று அறியும் விருப்பத்தோடு அவ்வோலையை அவிழ்த்துப் பார்க்க, பெரும் எழுத்துக்களில், "ராமா" என்று எழுதியிருப்பதைப் பார்த்து, 'இவ்வளவுதானா, இராமன் பெயரா' என்று நினைத்த மாத்திரத்திலேயே சிரத்தையை இழந்தவனாய் சமுத்திரத்தில் மூழ்கிவிட்டான்

ஒருவனுக்கு பகவானிடம் சிரத்தை யொன்றுமட்டிலுமிருக்குமானால் அவன் மோக்ஷமடைவான். அவன், ஸ்திரீ ஹத்தி, ப்ரம்மஹத்தி முதலான மஹா பாபங்கள் செய்திருந்தபோதிலும் சிரத்தையுடன், 'ஈசா, நான் இனி இவ்விதம் செய்கிறதில்லை' என்று மனப்பூர்வமாய் சொன்ன க்ஷணமே மோக்ஷத்தையடைய பக்குவமுள்ளவனாகிறான்.

குரு அடியில் வரும் கருத்தடங்கிய பாடலைப் பாடினார்:—

"என் தாயே! என் மரண காலத்தில் உன் திவ்விய நாமம் என்னுடைய நாவிலிருக்குமேயானால், நான் நிச்சயமாக மோக்ஷமடையாமலிருப்பேனா உன் திவ்விய நாமத்தை நான் ஸ்மரித்துக் கொண்டிருந்தால் மதுபானம், கருவழித்தல், ஸ்திரீ ஹத்தி. ப்ரம்மஹத்தி ஆகிய மஹா பாபங்கள் நான் செய்திருந்த போதிலும், அவைகளென்னை ஓர் நிமிஷமேனும் தொந்திரவு செய்யமாட்டா. உன் நாம மகிமையினால், உலக சிருஷ்டிகர்த்தாவினுடைய பிரம்ம பதத்தையும் நான் அடைவேன்."

கூறு, தன்னெதிரிலிருக்கும் நரேந்திரனைப்பார்த்து அடியில் வருமாறு சொல்லுகிறார்:— சாந்தத்தோடும், பவ்வியத்தோடும் இருக்கும் இச்சிறுவனைப் பாருங்கள்; மிகவும் துஷ்டத்தனமுள்ள எந்தப் பையனும் தன் பிதா முன்னிலையில் சாந்தத் தோடிருப்பான். ஆனால் 'சந்நிதியில்' விளையாடும்பொழுது வேறு பையனாகத் தோற்றப்படுவான். இத்தகைய வாலிபனை நித்தியர்களுக்கு ஒப்பிடலாம். இவர்கள் ஒருபொழுதும் ஸம்ஸார வலையில் சிக்கிக் கொள்ளார்கள். அவர்கள் கொஞ்சம் வயதானவுடனே தங்கள் உள்ளம் தெளிந்து, பகவானை நோக்கிச் செல்கிறார்கள். உலக ஸம்ரக்ஷணார்த்தம் உபதேசம் செய்ய இறங்கி திரும்பி வருகிறார்கள். உலக விஷயங்களான, 'காமினீ' காஞ்சனங்கள் அவர்கள் மனதைக் கவரா.

வேதத்தில், 'ஹோமா' என்னும் ஓர் பக்ஷியைப் பற்றி சொல்லப்படுகிறது. அது பூமியின் சந்தடியை விட்டு, ஆகாயத்தையே தன்னிருப்பிடமாகக் கொண்டிருக்கிறது. அவ்விடத்திலேயே அது முட்டை இடும். முட்டையானது கீழ் நோக்கிவந்து கொண்டிருக்கும்பொழுது அநேக நாள் செல்ல, அம்முட்டை பொரித்து குஞ்சாகி, கண் திறந்து இறகு முளைக்கிறது; தன் நிலைமையை அறிந்த அச்சிறு பக்ஷி, தான் வரும் வேகத்தில் பூமியை யடைந்தால், மரணம் தனக்கேற்படுவது நிச்சயமென்றெண்ணி, வானத்தில் வசிக்கும் தன் தாயைத்தேடி மேல்நோக்கி பறந்து செல்கிறது

அந்த தாய் பக்ஷியே, இந்திரிய கோசரங்களுக் கெட்டாத பிரம்ம ஸ்வரூபத்தோடு லயமாயிருக்கும் ஜகன்மாதா. அவ்வம்மைக்கு, பிரிய குழந்தைகளான இச்சிறு புண்ணியாத்மாக்கள், தங்களுக்கு இறகு முளைத்து, கண்கள் திறந்து, தாங்களாகப் பறக்கிற சக்தி வருகிற வரைக்கும் உலகம் இன்னதென்றறியாதிருக்கிறார்கள். கண் திறந்த மாத்திரத்திலேயே; உலகத்தையும், உலக சம்பந்தப்பட்ட மற்ற இந்திரிய ஸுகங்களையும் தொட்ட மாத்திரத்திலே தங்களுக்கு மரணம் ஏற்படுமென்பதை அவர்

---

* சந்நிதி என்பது தக்ஷிணேச்வரம் கோவில் முகப்பு.

கள் தெளிவாய் அறிகிறார்கள். கண்கள் திறந்த மாத்திரத்தில் பராசக்தியாயும், ஸச்சிதானந்த ஸ்வரூபியாயுமிருக்கும் ஜகன்மாதாவை நோக்கிச் சொல்லுகிறார்கள்.

இச்சமயத்தில், நரேந்திரன் அவ்வறையைவிட்டு வெளியே போனார். கேதார், ப்ராணகிருஷ்ணன், எம். இன்னும் மற்றவர்கள் குருவோடு அவ்வறையிலேயே இருந்தார்கள். குரு, இன்னும் நரேந்திரனைப்பற்றியே பேசிக்கொண்டும், அவ்விதம் பேசும் பொழுது சிரித்துக்கொண்டுமிருந்தார்.

குரு (சிஷ்யர்களைப் பார்த்து):— நரேந்திரன், மிருதங்கம் முதலான வாத்தியங்கள் வாசிப்பதிலும், சங்கீதத்திலும், படிப்பிலும் நிகரற்றிருக்கிறான். அன்றைக்கோர் நாள் அவன் கேதாரோடு சம்பாஷித்தான். கேதார் வாயைவிட்டு வார்த்தைகள் வந்ததோ இல்லையோ, உடனே அவைகளைக் கண்டித்தான்.

(எம்மைப் பார்த்து) அவ்விதமான தர்க்க சாஸ்திரங்கள் ஏதாகிலும் இங்கிலீஷில் இருக்கின்றனவா?

எம்:—ஆம், ஸ்வாமி இருக்கிறது. அதை 'லாஜிக்' என்று சொல்லுவார்கள்.

குரு:—அதிலிருந்து கொஞ்சம் எனக்கு எடுத்துச் சொல்லு?

எம் அதிக ஸங்கோசத்தோடு, மனதை தைரியப்படுத்திக் கொண்டு சொல்லுகிறார்:—

தர்க்க சாஸ்திரத்தில், ஓர் பாகம், பொது வஸ்துவிலிருந்து குறித்த வஸ்துவைப்பற்றிச் சொல்லுகிறது. அதாவது:—

மனிதர்கள் அநித்தியம்,
பண்டிதர்கள் மனிதர்கள், ஆகையினால்
பண்டிதர்களும் அநித்தியம்.

அதே சாஸ்திரத்தில் மற்றோர் பாகம், குறித்த வஸ்துவின் குணத்திலிருந்து பொது வஸ்துவின் குணத்தை காட்டுகிறது:—

இந்த காக்கை கறுப்பு,
அந்த காக்கை கறுப்பு,
அந்த மற்றோர் காக்கையும் கறுப்பு,
ஆகையினால் எல்லாக் காக்கைகளும் கறுப்பு.

இவ்விதம் கணக்கிட்டுப் பார்ப்பதில் குற்றமுண்டாகலாம்.

ஏனென்றால், சில பார்த்திராத தேசத்தில் வெள்ளைக் காக்கையுமிருக்கலாம்.

பரமஹம்ஸர் இவைகளையெல்லாம் கவனித்ததாகக் காணப்படவில்லை.

சம்பாஷணை முடிந்தது. ஸங்கம் கலைந்தது. சிஷ்யர்கள் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தார்கள். எம், பஞ்சவடியில் உலாவிக்கொண்டிருந்தார். எம் திரும்பவும் குருவின் வடக்குத் தாழ்வாரத்திற்கு வந்தபொழுது 'எம்' ஆச்சரியமான காக்ஷியைக் கண்டார். குரு அசைவற்று நின்றிருந்தார். நரேந்திரன் பகவத் கீர்த்தனம் பாடிக்கொண்டிருந்தார். நரேந்திரனும், இன்னும் மூன்று நான்கு சிஷ்யர்களும் குருநாதனைச் சுற்றி நின்றார்கள்.

எம், சங்கீதத்தைகேட்டு பரவசமாயினர். தன்னுயுளில், அவ்விதம் இனிமையான சாரீரம் 'எம்' கேட்டதேயில்லை. குருவைக்கண்டதும் 'எம்' பேசாமல் பிரமித்து ஸ்தம்பித்திருந்தார். குரு கண் கொட்டாமல் அசைவற்று நிற்பதைப்பார்த்தால், சுவாஸம் கூட இருக்கிறதோ, இல்லையோ என்று சந்தேகிக்கவேண்டியதாயிற்று.

'இவ்வித பிரம்மானந்த நிலைதான் ஸமாதி என்று சொல்லப்படுகிறது' என்று மெதுவாகச் சொன்னான் ஓர் சிஷ்யன்.

'எம்' இவ்வாறு பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை. 'எம்' தனக்குள் சிந்திக்கலானார். 'பகவத் சிந்தையினால் உலகத்தை மறப்பதும் சாத்தியமானதா? இன்னிலையை அடைய, பகவான் மீது எவ்வளவு உறுதியான நம்பிக்கையும் விஸ்வாசமும் இருக்க வேண்டும்!'

நரேந்திரன் பாடிய பாடலின் கருத்து.

1. 'ஓ, மனமே, பகவானைத்தியானி, அவன் ஆத்மஸ்வரூபி, களங்கரஹிதன், நிகரற்ற பிரபாவமுடையவன், அழகிய வடிவுடையவன்; பக்தர்கள் இருதயத்தில் எத்தனையோ அன்புடன் ஆதரிக்கப்படுகிறான்.

2. பார், அவனிடம் அன்பதிகரிக்க அதிகரிக்க அவனழகும் அதிகரிக்கிறது; கோடி சந்திரர்களையும் மங்குவிக்கிறது; அவன் ஜோதி அழகிலிருந்து தான் மின்னல் மின்னுவதும், அத்திருக்காக்ஷி புளகாங்கிதத்தை உண்டுபண்ணுகிறது.'

கீர்த்தனையின் இவ்வடி பாடவும், குரு மனம் உருகி, உண்மையாக புளகாங்கிதத்தை யடைந்தார். ஆனந்த பாஷ்பம் பெருகியது. திவ்விய மங்கள ரூபத்தின் காக்ஷியாலுண்டாகும் ஆனந்தத்தை, முகத்திலுதித்திருக்கும் புன்சிரிப்பு காண்பித்தது. ஆம், கோடி சந்திரர்களையும் மங்கச்செய்யும் நிகரற்ற அழகின் காக்ஷியை அவர் அனுபவிக்கிறாரென்பதில் சந்தேகமில்லை.

இதுதான் பகவத் திவ்விய காக்ஷியோ? அப்படியிருக்குமாகில் இவ்வித காக்ஷியை அடையும்படி, அனித்திய வஸ்துவாகிய மனிதன்; எவ்வளவு தீவிர சிரத்தையும், பக்தியும், தபஸும் நேமமும் உடைத்தாயிருக்கவேண்டும்!

இன்னும் பாடுகிறார்:—

3 'உன் இருதய கமலத்தில், அவனுடைய திவ்விய திருவடிகளை வைத்து பூஜை செய். உன் மனம், இப்பொ

மூடது சாந்தியடைந்திருப்பதினாலும்; உன் கண்கள், பகவத் பிரேமையில் மூழ்கியிருப்பதினாலும், ஒப்பற்ற அழகுடைய அத்திவ்விய ரூபத்தை நீ பார்.'

மனதைக் கவரும்படியான புன் சிரிப்பானது திரும்பவும் பாமஹம்ஸர் முகத்தில் உதிக்கிறது. அவர் சரீரம் அசைவற்றிருக்கிறது. அவருடைய கண்கள், பாதி மூடப்பட்டதால் வெறும் ஆகாயத்தைப் பார்ப்பதுபோலத் தோன்றுகின்றன. இந்திரியகோசரத்திற்கெட்டாத, திவ்விய ரூபத்தினாலுண்டாகும் அற்புத தரிசனத்தின் ஆனந்தத்தினால் நிறைந்தவர்போலத் தோற்றுகிறார்.

நரேந்திரன் பாடலின் கடைசி அடியை பாடி முடித்தார்:—

'ஞானந்தத்திற்கு இருப்பிடமாகிய அன்புக்கடலில் நீஹ! மனமே மூழ்கியிரு. அவருடைய ஆனந்தத்தைப் பருகிக் களித்திரு.'

'எம்' இன்னிகாற்ற சமாதியையும், பிரம்மானந்தக் காக்ஷியையும் மனதில் ஸ்மரித்துக்கொண்டே தன் வீடு போய்ச் சேர்ந்தார். அவர் அவ்வாறு போகும் வழியில், 'அரைது பக்தியின் இனிமையான ஆனந்தக் கடலில் நீஹ மனமே! இடைவிடால் மூழ்கியிரு' என்ற இனிமையான பாடலானது அடிக்கடி அவர்மனதில் பொங்கிக்கொண்டிருந்தது.

அத்தியாயம். 4

மறுதினம் விடுமுறை நாளாகையினால், 'எம்' மாலை மூன்று மணிக்கு குருவினிடம் வந்தார்.

குரு தன்னறையில் வீற்றிருந்தார். தரையின்மீது பாய் விரிக்கப்பட்டிருந்தது. பத்தொன்பது, இருபது வயதிற்குட்பட்ட சிறுவர்களான; நரேந்திரன் (விவேகானந்தர்) பவனாத், இன்னும் மற்ற ஒன்றிரண்டு சிஷ்யர்களும் அவர் முன் உட்கார்ந்திருந்தார்கள். முன்போலவே மந்தஹாஸத்துடன் குரு, கட்டிலின் மீதுட்கார்ந்துகொண்டு, அச்சிறுவர்களோடு சிரித்துக்கொண்டும், சம்பாஷித்துக்கொண்டுமிருந்தார்.

'எம்' உள்ளே பிரவேசித்தவுடன், குரு அவரைப்பார்த்து குலுங்கக் குலுங்க சிரித்துக்கொண்டு, 'இதோ பார்; அவன் திரும்பவும் வந்துவிட்டான்' என்று உரத்தக் குரலில் சொன்னார். சிறுவர்களெல்லோரும் குருவோடு சேர்ந்துச் சிரித்தார்கள். 'எம்' குருவின் காலில் வீழ்ந்து நமஸ்கரித்தார். இதற்கு முன்னேயோவென்றால், 'எம்' ஆங்கிலேயம் படித்தவர்களின் வழக்கப்படி கை கூப்பி வணங்கி வந்தார். இன்றைக்குத்தான் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யக் கற்றுக்கொண்டார். 'எம்' உட்கார்ந்தவுடன், குரு, நரேந்திரன், சிஷ்யர்களோடும் தான் சிரித்ததற்கு காரணம் சொல்லுகிறார்.

ஓர் காலத்தில், சாயங்காலம் நாலு மணிக்கு, ஓர் மயிலுக்குக் கொஞ்சம் அபின் கொடுக்கப்பட்டது. மறுதினமும் அதே நேரத்திற்கு யாது வந்ததென்று நினைக்கிறீர்கள்? அதே மயில் திரும்பவும் அபினுக்காக அவ்விடம் வந்து நின்றது. (யாவரும் சிரிக்கிறார்கள்)

'எம்' தனக்குள் நினைத்துக்கொள்ளுகிறார். ஆம், குரு சொல்லுவது வாஸ்தவமே. நான் திரும்பி வீடு போகும்பொழுது, என் காயத்தோடுமட்டிலும் போகிறேனே தவிர, நான் இதற்கு முன் எப்பொழுதும் பார்த்திராத இம்மஹானுபாவனிடத்தில், என் ஹ்ருதயம் நின்று விடுகிறது. இரவும் பகலும், நான் திரும்பவும் எப்பொழுது இவரைப் பார்ப்பேன் என்கிற எண்ணமே குடிகொண்டிருக்கிறது. யாரோ இவ்விடம் என் கையைப் பிடித்திழுத்து வருவதுபோல் தோன்றுகிறது. எனக்கு இவ்விடம் விட்டு வேறிடம் போகவாவது, அல்லது, இவ்விடம் வரவேண்டுமென்ற எண்ணத்தை விடவாவது என்னால் சாத்தியமாகவில்லை.'

குரு, சிஷ்யர்களோடு மேற்கூறியவாறு பேசிக்கொண்டு காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும்பொழுது, 'எம்' முற்கூறியவாறு நினைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். குரு, அவ்விடமிருக்கும் சிறுவர்களை, வயதில் தனக்குச் சமானமாகவெண்ணி

விளையாடுவதுபோல் விளையாடிக்கொண்டிருந்தார். இவ்விதமான சிரிப்பும் விளையாட்டும், ஒன்றின்மேல் ஒன்று வருவததைப்பார்த்தால்; ஓர் சந்தை கூடி அதில் பிரம்மானந்தமென்பதை விலக்கு விற்கும் இடம்போல் தோன்றிற்று.

குருவின் நிகரற்ற ரூபத்தைப் பார்த்து, 'எம்' ஆச்சரியமடைந்தார். அவர் தனக்குள் நினைத்துக்கொள்ளுகிறார். 'இவர் தானோ நேற்றையதினம் ஸமாதி யென்னும் நிலைமையிலிருந்துகொண்டு, நான் இதற்கு முன்னால் எப்பொழுதும் பார்த்திராத பகவத் பிரேமையை உதாகரித்துக் காட்டினவர்? நான் முதல் முதலில் இவரைப் பார்த்தபொழுது. நான் கிருஹஸ்தாசிரமம் எடுத்துக்கொண்டதற்காக, என்னைக் கண்டித்தவர் இவர்தானோ? திரும்பவும், என்னிடம், 'நீ மஹாஞானம் அடைந்துவிட்டதாக நினைத்துக்கொள்ளுகிறாயல்லவா?' என்று சொன்னவரும் இவர்தானோ? இவர்தானோ, பகவான் ரூபமுடையவரென்றும், அதுபோலவே பகவான் ரூபமற்றவரென்றும் எடுத்துரைத்தவர்? இன்னும், பகவான் ஒருவரே நிஜமான வஸ்துவென்றும், பிரபஞ்சத்தில் மற்ற வஸ்துகளெல்லாம் இருப்பதுபோல் தோன்றி, அடுத்த நிமிஷத்தில், நம் பார்வையிலிருந்து மறையும் அனித்தியமென்றும், பொய்யென்றும் போதித்தவர் இவர்தானோ? மேலும், அன்றையதினம், 'எவ்விதம் வேலைக்காரி தன் எஜமானன் வீட்டில் வேலை செய்துக்கொண்டிருக்கும்பொழுது, தன் கிராமத்தில் சொந்த வீட்டிலிருக்கும் தன் அருமைக் குழந்தைகள் பேரிலும், உறவினர்கள் பேரிலும் மனதை வைத்திருக்கிறாளோ, அவ்வாறே நீயும் இவ்வுலகில், உன் இருப்பிடமாயிருக்கும், நித்திய ஸ்வரூபியான பராசக்தியாகிய உன் வீட்டில், உன் மனதைச் செலுத்திக்கொண்டு, உன் கர்மத்தில் பற்றுதலின்றி வேலையைச் செய்' என்று அறிவித்தவரும் இவர்தானோ!'

இவ்விதமாக 'எம்' பேசாமல் அசைவற்று, குருவின் திவ்விய ஸ்வரூபானந்தத்தில் மூழ்கியிருப்பதை, குருநாதன், தன்விளையாட்டு மத்தியில் அடிக்கடி பார்த்து வந்தார்.

குரு, 'ராம்லால்' என்பவரைப் பார்த்துச் சொல்லுகிறார். 'இதோ இச்சிறுவன் ('எம்') இவ்விடமிருக்கும் சிறுவகளெல்லோரிலும் வயதில் கொஞ்சம் முதிர்ந்தவன். ஆகையால் தான் சிறிது அடக்கத்துடனிருக்கிறான். அவர்களெல்லாம் சிரித்து விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது இவன் மட்டிலும் வாயைத் திறக்கவில்லை.' அப்பொழுது அவரு ('எம்')க்கு வயது இருபத்தேழு.

ஸ்ரீமத் ராமாயணத்தில், பக்தர்களில் ஒருவரான ஹனுமானைப்பற்றி குரு பேசுகிறார். பகவானுக்காக எப்படி ஹனுமான், பொருள், கீர்த்தி, சுகம், இவைகளெல்லாவற்றையும் விலக்கத் தயாராகவிருந்தார்.

குரு அடியில்வரும் கருத்துக்களடங்கிய பாடலைப் பாடினார்.

"மதுரமான பழங்கள் எனக்கு எதற்கு? என் ஹ்ருதயத்திலிருக்கும், கற்பக விருக்ஷத்தினின்றுண்டாகும், ஜன்ம ஸாபல்யமாக்கும் மோக்ஷமென்னும் பலனாகிய பழம் என்னிடமிருக்கும்பொழுது மதுரமான இதர பழம் எதற்கு?

பிரம்மமென்று சொல்லப்பட்ட கற்பகத்தருவினடியிலுட்கார்ந்துகொண்டு, எனக்கு வேண்டுமான பழத்தை அவ்விருக்ஷத்தினின்றும் அடைகிறேன். பலாபலன்களைப்பற்றி நான் பேசுவதாயிருந்தாலும், இவ்வுலகம் கொடுக்கக்கூடிய பலன்களை நான் ஒருபொழுதும் அங்கீகரியேன்."

இவ்வாறு ஹனுமான், இவ்வுலகவின்பங்களை விட்டதைப் பற்றி பாடிக்கொண்டே ஸ்ரீ பரமஹம்ஸர் தன் வெளியுலகத்து நினைவை யிழந்தார். பிரம்மஞ்ஞானமென்னும் சமாதியில் மூழ்கினார். சரீரம் சலனமற்றிருந்தது. கண்கள் இமை கொட்டாமலிருந்தன. நாம் படத்தில் அவரைக் காண்பதுபோல அவர் அசைவற்றிருந்தார்.

சற்று நேரத்திற்கு முன் குதூகலத்துடன், குதித்து விளையாடிக்கொண்டிருந்த சிஷ்யர்கள், குருவின் முகத்தைப் பார்த்து திகைத்து மௌனமாயிருந்தார்கள். அவ்வற்புத நிலைமை, அவர்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. 'எம்' குரு இரண்டாவது தடவை சமாதி நிலைமையடைந்திருப்பதை பார்த்தார்.

ஸ்ரீ பரமஹம்ஸருக்கு பிரக்ஞைவர நெடுநேரம் சென்றது. அவருடைய அவயவங்கள் தளர்ந்தன. முகம், புன்சிரிப்பினால் பிரகாசித்தது. இந்திரியங்கள், தம்தம் வேலைகளைச் செய்ய ஆரம்பித்தன. அவர் கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் பெருகியது. அவர் ஸ்ரீ ராமருடைய திவ்விய நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தார். 'எம்' தனக்குள் நினைத்துக்கொள்ளுகிறார். 'சில நிமிஷங்களுக்கு முன், ஐந்து வயது பாலகன்போல சிஷ்யர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த மஹான் இவர்தானோ!'

குரு தன் முன்னிலைமையை அடைந்து, 'எம்,' நரேந்திரன், இவ்விருவர்களையும் நோக்கி, 'நீங்கள் இருவரும் ஆங்கிலேயபாஷையில் தர்க்கம் செய்வதைக் கேட்க நான் விரும்புகிறேன்' என்றார். இதைக் கேட்டதும், இருவரும் சிரித்தார்கள். அப்படியே அவர்கள் பேசினார்களென்றாலும் இங்கிலீஷில் பேசவில்லை. குருவின் முன்னிலையில் 'எம்,'க்கு வாயைத்திறந்து பேசுவது அசாத்தியமாயிருந்தது. அவ்வாறு பேசுவதற்கு அவர் மனம் இடம் கொடுக்கவில்லை. குரு ஆங்கிலேய பாஷையில் பேசும்படி அனேகந்தரம் வற்புறுத்தியும், அவர்கள் அப்படிப் பேசவில்லை.

சாயங்காலம் மணி ஐந்தாயிற்று. நரேந்திரன், எம். இவ்விருவரைத் தவிர மற்றெல்லோரும், வீட்டிற்குப்போகும்பொருட்டு குருவினிடம் விடை பெற்றுச் சென்றார்கள். நரேந்திரன், குருவுடன் அன்றிரவு வசிக்கப்போகிறான்.

குரு, கை கால்களைக் கழுவ தன் பித்தளைச் சொம்பை எடுத்துக்கொண்டு, கோவில் நந்தவனத்திற்கு வடபக்கத்திலிருக்கும், 'வாத்து தளத்திற்குச்' சென்றார்.

'எம்,' தோட்டத்தின் பாங்கையில், தன் அதிர்ஷ்ட வசத்தால் கிடைத்த இம்மஹாநுபாவனுடைய தரிசனத்தை நினைத்துக்கொண்டே உலாவிக்கொண்டிருந்தார். அவ்வாறு நடந்துக் கொண்டே கோவிலைச் சுற்றி வாத்துக் குளத்தையடைந்ததும்: அவ்விடத்தில், ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரனோடு பேசிக்கொண்டிருப்பதை 'எம்' பார்த்து வியந்தார். இருவரும் ஜலத்திற்கு மேல் படியில் நின்றுகொண்டிருந்தார்கள். நரேந்திரன் கை கால் கழுவிவிட்டு கையில் சொம்புடன் பேசிக்கொண்டிருந்தார்.

குரு சிரித்துக்கொண்டு 'நீ புதிதாய் வந்தவன்; நீ அடிக்கடி வருவதை நிறுத்தாதே. மனிதன் முதலில் சிநேகமாகும்போது, தன் பிரியையினிடத்தில் அடிக்கடி வந்துக் கொண்டிருப்பான். ஏன், அப்படியல்லவா?' என்றார். (எம், நரேந்திரன் இருவரும் சிரித்தார்கள்)

குரு சிரித்துக்கொண்டு மேலும் சொல்லுகிறார். 'சரி, நீ இவ்விடம் அடிக்கடி வரவேண்டும். என்ன சொல்லுகிறாய் என்றார். நரேந்திரன் சிரித்துக்கொண்டு, 'ஆகட்டும், ஸ்வாமி. நான் அடிக்கடி வர பிரயத்தனப்படுகிறேன்.' என்று சொன்னார்.

குரு தென் திசையாகத் தன்னறையை நோக்கித் திரும்பிச் செல்லுகிறார். நரேந்திரன், எம், இருவரும் அவர் இருபக்கத்திலுமாக நடந்து வந்தார்கள். கோவிலுக்கருகில் வந்ததும் குரு, 'எம்'ஐப் பார்த்துச் சொல்லுகிறார். 'குடியானவன், ஏர் உழுவதற்காக காளைமாடு வாங்கும் விதம் எப்படியென்று உனக்குத் தெரியுமா? அவ்விஷயத்தில் அவர்கள் மிக நிபுணர்கள். உபயோகமற்றவைகளை விலக்கி, நல்லவைகளாய் தெரிந்தெடுக்க அவர்கள் நன்கறிவார்கள். வீரியமுள்ளவைகள் எவையென்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். வாலைத் தொட்டமாத்திரத்திலேயே, வீரியமுள்ளதெவை யென்றும், வீரியமில்லாததெவையென்றும் அவர்களுக்கு விளங்கும். வீரியமில்லாதவை துள்ளாது மந்தமாயிருக்கும். ஆனால் வீரியமுள்ளவைகளோ, வாலைத் தொட்டமாத்திரத்தில், கிட்ட ஆளை அண்டவிடாமல் தாவிக்

குறிக்கும். குடியானவன் பின் சொன்னவைகளைத் தான் தேர்ந்தெடுப்பான். நரேந்திரன் பின் சொன்ன காளைமாட்டு வகுப்பைச் சேர்ந்தவன்; அவனிடத்தில் நிஜமான வீரியமிருக்கிறது.'

குரு சிரித்துக்கொண்டு மேலும் சொல்லுகிறார்.

ஆனால், அனேகர், பாவிவிட்ட பொரிபோல், பலனற்று; வேலைக்கு உபயோகமில்லாமல், மனோதிடத்தை யிழந்து, மெலிந்து, தளர்ந்து இருக்கிறார்கள்.

சாயங்காலம். குரு தன்னறையில் தியானம் செய்துக்கொண்டிருக்கிறார். குரு, 'எம்'ஐப் பார்த்து, 'நந்தவனத்தில் உலாவிக்கொண்டிருக்கும் நரேந்திரனேடு நீ கலந்து பேசி, அவன் எப்பேர்ப்பட்டவனென்று அறிந்து எனக்கு வந்துசொல்' என்றார்.

சாயங்காலமாகையினால், ஆலயத்தில் அர்ச்சகர்கள், விக்ரஹங்களுக்கு அர்ச்சனை, நைவேத்தியம், தீபாராதனை முதலானவைகள் செய்து கொண்டிருந்தார்கள்.

'எம்' மற்றோர்முறை சாந்தினிக்கு (கோவிலில் ஓர் இடம்) மேற்குப் புறமாயிருக்கும் ஸ்நான கட்டத்தில் நரேந்திரனை சந்தித்தார். உடனே, இருவரும் ஒருவரையொருவர் சந்தித்ததற்கு சந்தோஷமடைந்தார்கள். நரேந்திரன் 'எம்'ஐப் பார்த்து, 'நான் சாதாரண பிரம்ம ஸமாஜத்தைச் சேர்ந்தவன்; கலாசாலை மாணாக்கன்.' என்று, இவை முதலான தன் வரலாறுகளைச் சொன்னார்.

வெகு நேரமாய்விட்டதாகையால், 'எம்' விடைபெற்றுக் கொள்ளவேண்டியதாயிற்று. ஆயினும், ஏதோ தன்னையறியாமல் ஓர் சக்தியானது தன்னை போகவிடாது தடுக்கிறதுபோல தோன்றிற்று. நரேந்திரனைப் பிரிந்து, ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தேடிச் சென்றார். அவர் கீர்த்தனைகளின் அற்புத சக்தி தன் இருதயத்தைக் கவர்ந்து, மேன்மேலும் அவர் திவ்விய கானத்தைக் கேட்க விருப்பத்தை உண்டு பண்ணிற்று. குருவின் அறையில் அவரைக்காணுது, கர்ப்பக்கிருஹத்தின் முன்னிருக்

கும் நடன சபைக்குச் சென்றார். குருநாதன் அவ்விடத்தில் மங்கலான வெளிச்சத்தில், தனிமையாய் உலாவிக்கொண்டிருந்தார். கர்ப்பக்கிருஹத்தில், ஜகன்மாதாவின் இருபுறமும் மஹா காந்தியோடு விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. ஆனால், நடன சபையில் எரிந்துகொண்டிருந்த விளக்கின் மங்கலான வெளிச்சமும், அவ்விடத்திய இருட்டும் கலந்து தியானத்திற்கு மிக ஏற்றதாயிருந்தது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஜகன் மாதாவின் திருநாமங்களைப் படனம் பண்ணிக்கொண்டிருப்பதைக் கேட்டு 'எம்' ஆனந்த பரவசமாய்த் தன்னை மறந்தார். மெல்ல குருவினிடம் நெருங்கி, மிக வினயத்துடனும், பயத்துடனும், 'ஸ்வாமி, இன்னும் இரவில் ஏதாகிலும் பகவத் கீர்த்தனைகளுண்டா?' என்றார்.

குரு சற்று யோசித்து, 'இனி இன்றைக்கு இல்லை. ஆனால், இன்னும் சில நாளில், கல்கத்தாவில் பலராம் வீட்டிற்கு நான் வருவேன். நீ அவ்விடம் வந்தால், நான் பாடுவதைக் கேட்கலாம்.' என்றார்.

எம்:—ஸ்வாமி தங்கள் சித்தப்படியே செய்யத் தயாராயிருக்கிறேன்.

குரு:—உனக்கு அந்த வீடு தெரியாதா? பலராம்போஸ்?

எம்:—ஸ்வாமி, எனக்குத் தெரியாது.

குரு:—போஸ் பாராவில், பலராம்போஸ் வீடு.

எம்:—நல்லது, ஸ்வாமி, நான் விசாரிக்கிறேன்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். 'எம்' ஓடு நடன மண்டபத்தில் மேலும் கீழும் உலாவிக்கொண்டிருந்தார்.

குரு:—நல்லது, நான் உன்னை ஓர் கேள்வி கேட்கிறேன் என்னைப் பற்றி உன் அபிப்பிராயமென்ன?

எம் ஆழ்ந்த யோசனையோடு மௌனமாயிருந்தார்.

குரு:—என்ன உன் அபிப்பிராயம்? அதாவது, என்னிடம் எத்தனை அளவிற்கு ஞானம் இருக்கிறது?

எம்:—எத்தனை அளவு ஞானமென்றால் எனக்கு அர்த்தம் விளங்கவில்லை. எனக்குத் தெரிந்தவரைக்கும், இவ்வற்புத ஞானம், பகவத் பிரேமை, சிரத்தை, வைராக்கியம், ஆழ்ந்த சமாதி இவைகளெல்லாம் பொருந்திய தங்களைப் போலொத்த மஹாபுருஷனை நான் எப்பொழுதும், எவ்விடத்திலும் கண்டதில்லை.

குரு சிரித்தார்

'எம்' குருவின் பாதத்தில் வீழ்ந்து, சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து விடை பெற்றுச் சென்றார். வடக்கு வாசல் வரைக்கும் போனாரோ இல்லையோ, தான் ஏதோ ஒன்றைவிட்டு மறந்துபோனவரைப்போல் திரும்பி வந்தார்.

தனிமையாக அவ்விடத்தில், உலாவிக்கொண்டிருந்த குருவினிடம் எம் திரும்பவும் வந்தார்.

குரு, அவ்விடத்தில், மங்கலான வெளிச்சத்தில், பாதியிருளும், பாதி வெளிச்சமும் கலந்திருக்குமிடத்தில், தன்னந்தனியே, மற்றொருவருமில்லாமல், மேலுங் கீழுமாக உலாவிக்கொண்டிருந்தார். இருண்ட கானகத்தில் சிங்கம், தனிமையாய் கம்பீரமாக நடப்பதுபோல், அவருடைய ஏகாந்தமே துணையாகவும் அத்துணையோடு ஆத்மா லயமடைந்து ஆனந்தபரவசராயிருக்கிறார். மனிதர்களுக்கெல்லாம் ராஜாவான இவர் இவ்வுலகமாகிய வனாந்தரத்தில், ஏகாந்தமாயிருப்பதில் சந்தோஷமடைகிறார் போலும்!

'எம்,' குருவைப் பார்த்ததும் அச்சத்துடன் பேசாமலிருந்தார். அவர் தனக்குள் நினைத்துக்கொள்ளுகிறார். 'நிச்சயமாக மனிதனுடைய மனோபீஷ்டத்தின் பூர்த்தியே இவர். பூமியை இகழ்ந்து தள்ளி, அகண்டபரிபூரணத்துடன் கலக்கும் புருஷன் இவரே!'

குரு ('எம்'மைப் பார்த்து):—ஓ, நீயேன் திரும்பவும் வந்தாய்?

எம்:—ஸ்வாமி, தாங்கள் என்னை வரச்சொன்ன வீடு, பணக்காரனுடைய வீடாயிருக்குமோ என்று சந்தேகிக்கிறேன். அவ்விடத்திற்கு, நான் வந்தால் காவலாளர்களும் இன்னும் மற்ற ஜனங்களும் என்னை தடை செய்யக்கூடும். நான் அவ்விடம் வராமலிருந்து விடலாமா என்று நினைக்கிறேன். நான் தங்களை இவ்விடத்திலேயே, பார்ப்பதற்கு, எப்பொழுதும் பிரியப்படுகிறேன்.

குரு:—என் அப்பா, நீ என் பெயரைச் சொன்னால்போதும். என்னைப் பார்க்கவேண்டுமென்று சொல், கண்டிப்பாக யாராலும் உன்னை என்னிடம் அழைத்துவந்து விடுவார்கள்.

எம்:—ஸ்வாமி, தங்கள் சித்தப்படியே.

இவ்வாறு சொல்லி, எம் திரும்பவும் குருவை வணங்கி நமஸ்கரித்து விடை பெற்றுச் சென்றார்.

2-வது பிரிவு.

அத்தியாயம். 1

ஈசுவர சந்திர வித்தியாசாகர பண்டிதரைக் காணப்போதல்.

குரு, பண்டிதர் ஈசுவர சந்திர வித்தியாஸாகரரைப் பார்க்க வேண்டுமென்னும் விருப்பமுடையவராயிருந்தார். ஓர் நாள் சாயங்காலம், தன் சிஷ்யர்களோடு வண்டியிலேறி, தக்ஷிணேஸ்வரத்திலிருந்து ஆறு மைல் தூரத்திலிருக்கும் பதுர்பகானில், ஈசுவர சந்திர வித்தியாஸாகரரைப் பார்க்க அவருடைய வீட்டிற்கு வந்தார்.

அன்று, 1882-வது வருஷம், ஆகஸ்டு மாதம், (சிராவணம்) கிருஷ்ணபக்ஷம், ஐந்தாந்தேதி, சனிக்கிழமை மாலை ஐந்துமணி.

பண்டிதர் வீட்டிற்கெதிரில், வண்டி வந்து நின்றது.

குரு, 'எம்' கையைப் பிடித்துக்கொண்டு வண்டியினின்றிறங்கினார்.

பண்டிதருடைய புஸ்தகசாலைக்குப் போகும், மெத்தைப் படிபோய்ச் சேருவதற்கு முந்தியே, குரு 'எம்'ஐப் பார்த்துக் கவலையோடு, 'நான் என் சட்டையின் பொத்தானை மாட்டிக் கொள்ளுவது அவசியமா?' என்று கேட்டார்.

அதற்கு 'எம்' 'பிரபோ, அந்தக் கவலை தங்களுக்கு வேண்டாம். இவ்வித மரியாதைகளெல்லாம் தங்களை பாதிக்காது.' என்று பதிலளித்தார்.

குரு, குழந்தையைப்போல், சமாதானமடைந்தவராகக் காணப்பட்டார். அவர் அதைப்பற்றி பிறகு நினைக்கவில்லை. ஐந்து வயது குழந்தை கற்றுக்கொள்ளுவதுபோல் தோன்றினார்.

மாடியின் தெற்குப் பக்கமாயிருந்த ஓர் அறைக்கு குருவும், சிஷ்யர்களும் அழைத்துக்கொண்டு போகப்பட்டார்கள். இவ்

வரையில், பண்டிதர், தன்னெதிரில் ஓர் மேஜையின்மீது பலபுஸ்தகங்களும் காகிதங்களும் பரப்பியிருக்க ஐரோப்பியர் வழக்கம் போல் ஓர் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

'எம்' அவரெதிரில்போய் குருவின் வரவை அறிவிக்க, பண்டிதர் அவரை மரியாதை செய்ய எழுந்து நின்றார். குரு, மேற்குப் பக்கமாக நோக்கி, தன் ஓர் கையை மேஜையின்மீது வைத்துக் கொண்டு, பண்டிதரைப் பார்த்துக்கொண்டு மௌனமாகவிருந்தார். அவர் குழந்தைபோன்ற இனிய முகம், புன்சிரிப்புடன் பிரகாசித்துக்கொண்டிருந்தது

அவ்விடம், பண்டிதருடைய நண்பர்களும், சிஷ்யர்களும் கூடியிருந்தார்கள். மேற்கூறிய விதமாக பண்டிதரைப்பார்த்து நின்றுகொண்டிருந்த குரு. சமாதியிலாழ்ந்தார். சமாதி கலைந்ததும், குரு. ஆசனத்திலுட்கார்ந்து, சிறிதுநேரம் கழித்து வழக்கம்போல் 'குடிக்கத் தண்ணீர் வேண்டும்' என்று கேட்டார். அப்பொழுது வித்தியாஸாகரர் 'எம்'ஐப் பார்த்து, "இப்பொழுதுதான் பர்ட்வானிலிருந்து வந்திருக்கும் மிட்டாய் குரு சாப்பிடுவாரா ?" என்று கேட்டு, சாப்பிடுவாரென்பதை யறிந்த பண்டிதர் வீட்டிற்குள்போய். ஓர் தட்டில் மிட்டாயும், குடிக்க ஜலமும் எடுத்துக்கொண்டு வந்து குருவின் முன்பு வைத்தார். சிஷ்யர்களும் அதில் கொஞ்சம் எடுத்துக்கொண்டார்கள்.

பண்டிதர் வீட்டிலிருந்த, சிஷ்யர்களிலொருவனை மிட்டாய் சாப்பிடும்படி குரு அழைக்க, பண்டிதர் 'ஸ்வாமி. அவன் நம்ம வீட்டுப் பையன், அவனை கவனியாதீர்கள்' என்றார். அதற்கு குரு 'பையன் நல்லவன். அவன், பல்குநதியைப்போல் மேல்பாகம் பார்வைக்குக் காய்ந்திருப்பதுபோல் தோன்றினாலும் அடியில் கண்ணுக்குத் தெரியாமல் ஊற்று ஓடிக்கொண்டிருப்பது போல அவன் ரொம்பவும் ஸாரமுடையவன்' என்றார்.

குரு (வித்தியாஸாகரரைப் பார்த்து):—அதிக நாளாக எதிர்பார்த்திருந்த ஸாகரத்திற்கு வரும்படியான பாக்கியம் என

க்கு இன்னமாக்குந் தான் கிடைத்தது. இதுவரையில் நான் வாய்க்கால், சதுப்புநிலம், ஜாஹ்நவீ நதி இவைகள் மட்டிலுமே பார்த்திருக்கிறேன். (யாவரும் சிரிப்பு) (குரு பண்டிதருடைய, வித்தியாஸாகரர் கல்விக்கடல் என்ற பெயரைக் குறிப்பிடுகிறார்)

வித்தியாஸாகரர்:—நல்லது, ஸ்வாமி, அப்படியாயின் தாங்கள் போகும்பொழுது, இந்த சமுத்திரத்திலிருந்து கொஞ்சம் உப்பு ஜலமெடுத்துச் செல்லலாம். (சிரிப்பு.)

குரு:—இல்லை, ஐயா, நீர் நிச்சயமாக உப்பு சமுத்திரமன்று, அவித்தைக் கடலல்ல. (வித்தைக்) கடலாகிய பாற்கடலன்றோ.

வித்தியாஸாகரர்:— ஸ்வாமி, தாங்கள் சொல்வது மறுக்கத்தகாது

குரு:—உங்கள் ஸ்வபாவம், பிரம்மஞ்ஞானத்திற்குக் காரணமாகிய ஸத்வகுணம். அந்த ஸத்வகுணம் ஸத்கர்மம் செய்வதில் பிரவேசித்திருக்கிறது. தானம், தயை, பிறருக்கு நன்மை செய்தல்; இவைகளை பக்தியோடு பற்றுதலின்றிச் செய்தால் பகவானிடத்திற் சேர்ப்பிக்கும்

தவிர, உங்களை வித்தர் என்று சொல்லலாம். உங்களுக்கு அன்னியரிடத்திலிருக்கும் பிரேமையானது, உங்கள் ஹ்ருதயத்தை மிருதுவாகச் செய்திருக்கிறதன்றோ? உருளைக்கிழங்கு முதலிய ஸஸ்யாதிகள் வித்தமாகிற வரைக்கும், (பாகமாகிறவரைக்கும்) மிருதுவாகிறதில்லை. (வித்த, என்ற வார்த்தைக்கு ஞானியென்றும், பக்குவம் என்றும் இருப்பதை குரு சிலேஷைப்படுத்தி பேசுகிறார்)

வித்தியாஸாகரர்:—ஆனால், கலைக்கடலை, (ஓர்வித கடலை) நன்றாய் அரைத்து, வித்த(பாக)மான பிறகும் மிருதுவாயிராமல் கடினமாய் கல்லைப்போலிருக்கிறதன்றோ? (யாவரும் சிரிப்பு)

குரு (சிரித்துக்கொண்டு):—இல்லை, நீர் அப்பேர்ப்பட்ட வன்று வல்ல; உலர்ந்து கல்போல் ஒன்றுக்கும் உபயோகமில்லாம லிருக்கும் கேவலம் பண்டிதரன்று நாங்கள்.

பஞ்சாங்கத்தில், ஓர் குறித்த நாளில் இருபது ஆழாக்கு மழை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நீ, அந்த பஞ் சாங்கத்தை நன்றாய் கசக்கிப் பிழிந்தால் ஓர் துளி ஜலமாகிலும் வரமாட்டாது. அதுபோல் நம் பண்டிதர்கள், பிரம்மமென்றும், பரமாத்மாவென்றும், ஞானமென்றும், தத்துவமென்றும், இவை களைப்பற்றி நன்றாய் பெரிய பெரிய வார்த்தைகளை உபயோகித் துப் பேசுவார்களே தவிர, மேற்கூறியவைகளை சுயானுபவத் திற்கு கொண்டுவருபவர்கள் மிகச் சொற்பமே.

பகவானை அறியக் காரணமாயிருக்கும் அறிவுக்கு பராவி த்தை என்று சொல்லப்படும். தர்க்கம், வியாகரணம், மீமாம்ஸை முதலான சாஸ்திரங்கள் ஓர் சுமைபோலிருந்து மனதைப் பிரமிக் கச் செய்கின்றன. அவைகள் பராவித்தையை அடையச் செய் தால் மட்டிலுமே உபயோகமுள்ளவைகளாகும்.

ஓர் விஷயத்தில் ஸ்ரீமத் பகவத்கீதையைக் கேவலம் படிப் பதே உபயோகமில்லையென்று சொல்லக்கூடும். கீதையை பத் துமுறை 'கீதா,' 'கீதா' என்று சொன்னால், அது, 'த்யாகீ' 'த்யாகீ'. என்று மாறுகிறது. எவனொருவன், உலகத்தையும், திரவியம், கீர்த்தி, இந்திரியசுகம், பலனை உத்தேசித்து வேலை செய்தல் ஆகிய இவைகளையும், த்யஜிக்கிறானோ (விலக்குகிறானோ) அவனே தியாகி என்று சொல்லப்படுவான்.

கீதையின் ஸாராம்சம் முழுதும், ஒரே வார்த்தையாகிய 'த்யஜீ' என்பதே. நிஜமான ஸன்னியாஸி, உள்ளிலும் வெளியி லும் உலகத்தை வெறுப்பான். அவன், லௌகிக கர்மத்தையும், அதன் பலனையும் விட்டுவிடுவான்.

சரியான கிருஹஸ்தனோ, அந்தரங்கமாக மனதில் உலகை வெறுத்து, சர்வ கர்மபலனையும் பக்தியினால் ஈசுவரார்ப்பணம் செய்கிறான்.

கீதையின் முக்கிய கருத்தென்னவென்றால், 'ஓ, மனிதனே, பகவானிடம் அன்பு பாராட்டு; அவன் பொருட்டு எல்லாவற்றையும் விட்டுவிடு' என்பதாம்.

ஓர் மஹானிடம் கையெழுத்தினலெழுதப்பட்ட புத்தகமொன்றிருந்தது. ஒருவன் அவரைப் பார்த்து அதென்ன புஸ்தகமென்று கேட்டான். அதற்கு, அந்த மஹான் அவனுக்கெதிரில் அப்புத்தகத்தைத் திறந்து காண்பிக்க, அம்மனிதன், அப்புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் பகவானுடைய பெயரொன்றையே 'ஓம் ராமா' என்று எழுதியிருக்கப்பட்டிருப்பதைப் பார்த்து மிக ஆச்சரியமடைந்தான்.

சைதன்யதேவர் தக்ஷிணமார்க்கமாக யாத்திரை செய்துகொண்டிருக்கும்பொழுது, ஓர் பண்டிதர் பகவத் கீதை படித்துக்கொண்டிருக்கும்பொழுதெல்லாம், அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஓர் பக்தன் கண்களில் ஆனந்த பாஷ்பம் தாரை தாரையாகப் பெருக விட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்தார்.

இந்த பக்தனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. தவிர, கீதையின் ஓர் சுலோகத்தின் அர்த்தமாகிலும் சொல்லத் தெரியாது. அவ்விதம் கண்ணீர் விடுவதற்குக் காரணம் கேட்டபொழுது அந்த பக்தன்:— 'கீதையில் ஒரு வாக்கியம்கூட எனக்குத் தெரியாதென்பது வாஸ்தவமே. ஆயினும் கீதை படிக்கும்பொழுதெல்லாம், குருக்ஷேத்திரத்தில், அர்ச்சுனன் முன் உட்கார்ந்து கீதா ரகசியத்தை எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் திவ்விய மங்கள ரூபத்தை நான் என் மனக்கண்ணினால் பார்க்கிறேன். இதுதான் எனக்குக் கண்ணீர் பெருகக் காரணம் என்றான்.

இந்த மனிதனுக்கு எழுதப் படிக்கத் தெரியாமலிருந்தபோதிலும் அவன் பகவானை பக்தியினால் சுபானுபவத்திற்குக்கொண்டு வருவதினால் மேலான பராவித்தையையுடையவனாவான்

அத்தியாயம். 2

ஞானயோகம்; அத்வைதம்.

குரு:—நல்லது. நான் வித்யா விஷயத்தைப்பற்றி பேசிக்கொண்டிருந்தேன். ஆனால், பிரம்மமோ வித்தை, அவித்தை இரண்டையும் கடந்து மேலான வஸ்துவாய் இருக்கிறது. வித்தை என்பது, கடவுளை அடைய சாதகமாயிருக்கும் அறிவு. அவித்தைஎன்பது, கடவுளை அடையவொட்டாமல் மயக்கும் இவ்வுலகம்.

வித்தையானது, பரப்பிரம்மமாகிய மேலான பதத்தை அடைய உதவியாயிருக்கும் படிகளில், மேல் கடைசிப்படி.

இந்த மாயா ரூபமாயிருக்கும் உலகம், வித்தை, அவித்தை இவ்விரண்டினாலும் உண்டாக்கப்பட்டது. ஆகையினால், பிரம்மம் மாயாரூபமாகிய உலகத்தை கடந்து அப்பாலே நிற்கிறது.

பிரம்மம்; நன்மை, தீமை இவைகளில் பற்றற்றிருக்கிறது. அது தீபத்தின் வெளிச்சம்போன்றது. அதன் உதவியால் பாகவதம் முதலிய புண்ணிய கிரந்தங்களையும் படிக்கலாம். அதே வெளிச்சத்தின் உதவியால் பொய்ப்பத்திரமும் எழுதலாம்.

இன்னும் பிரம்மத்தை ஒரு ஸர்ப்பத்திற்கும் ஒப்பிடலாம். ஸர்ப்பத்தின் பற்களில் விஷமிருந்தபோதிலும், அவ்விஷம் அதற்கு கெடுதியையோ, மரணத்தையோ விளைவிக்கிறதில்லை. ஆனால், ஸர்ப்பத்தினால் கடிக்கப்பட்ட மற்றவர்களுக்கு மாத்திரம் அது விஷமாயிருக்கிறது.

இவ்வுலகத்திலிருக்கும் நமக்கு மட்டில், துக்கமோ, பாபமோ, தீமையோ, இவைகளிருக்கிறதே தவிர, பிரம்மத்தின் விஷயத்தில் இவைகள் ஒன்றுமே இல்லை. அப்பரம்பொருள் இவைகளைக் கடந்து மேலானது.

எப்படி பாம்பின் விஷப்பல், அதற்கு விஷத்தை உண்டாக்கவில்லையோ, அதுபோலவே சிருஷ்டிகோடிகளிலுள்ள தீமை நிர்க்குணமான பரப்பிரம்மத்தைப் பாதிக்கிறதில்லை பரப்பிரம்மம் நன்மை தீமை இவ்விரண்டையும் கடந்து மேலானது.

ஆம், அப்பரம்பொருள் எதினாலும் பாதிக்கப்படுவதில்லை. மனிதர்களுக்கு எவை நன்மை தீமையோ, அவை பரப்பிரம்மத்தை பாதிக்காது. நன்மை தீமையைக் குறித்த மனிதப் பிரமாணங்களால், அது அளவிடத்தகுந்ததன்று. அதன் ஜோதியானது நன்மை, தீமை இவ்விரண்டையும் சமமாகப் பிரகாசிக்கச் செய்கிறது.

ஒன்றுதவிர, வேதங்கள், புராணங்கள், தந்திரங்களுட்பட யாவும் உச்சிஷ்டம். ஏனெனில், அவை மனிதர் வாயினால் உச்சரிக்கப்பட்டவை. ஒருவன் வேதங்கள் முதலானவைகளை படனம்செய்யும்பொழுது, தன் வாக்கிந்திரியத்தை உபயோகப்படுத்தியே சொல்லவேண்டும். அவ்விதம் சொல்லும்பொழுது, அவைகள் வாயினால் எச்சிலாய்விடுகின்றன. ஆனால் பிரம்மம் ஒன்றே உச்சிஷ்டமில்லாதது. பரப்பிரம்மத்தின் ஸ்வரூபத்தை எடுத்துச்சொல்ல சிருஷ்டிகோடிகளில் ஒன்றுக்கேனும் இதுவரையில் சக்தியில்லை. அப்பரம்பொருள், நாவினால் சொல்லமுடியாதது; மனதினால் நினைக்க முடியாதது; புத்தியினால் அறிய முடியாதது.

வித்தியாஸாகரர்:—இன்று புதிதாக நான் ஒன்று அறிந்துகொண்டேன்; பரப்பிரம்மம் ஒன்றே எந்த சிருஷ்டியின் வாயினாலும் உச்சிஷ்டமாகாதது, என்று.

குரு:—ஆம், அப்படித்தான். அப்பரம்பொருள், கால, தேச, நிமித்தாதிகளினால் கட்டுப்படாதது அப்படியிருக்க எவரால் அதைப்பற்றி வாக்கினால் சொல்லமுடியும்?

இன்னும், பரப்பிரம்மம் ஆழம் அளவிடமுடியாத சமுத்திரம் போன்றது. அப்படி, இப்படி, என்று அதைப்பற்றி ஒன்

றும் சொல்லமுடியாது. வேதம், அதை வர்ணிக்க தன்னால் இயன்றமட்டும் முயற்சி செய்தும், 'நித்தியானந்தம்' என்று மாத்திரமே அழைக்க முடிந்தது.

சமுத்திரத்தை வர்ணிக்கும்படி உன்னைக் கேட்டால், நீ வாயைத் திறந்து திக்கிப்பிதற்றி, 'ஆஹா, எவ்வளவு விசாலமானது! எவ்வளவு பிரம்மாண்டமான ஓயாத அலைகளையுடையது! ஓயாத இடிமுழக்கம்போன்ற சப்தத்தையுடையது!' என்று மாத்திரமே சொல்ல முடியும்.

சுகதேவரும், அவர்போன்ற மஹரிஷிகளும், அந்த அமிருதஸாகரத்தைக் கண்ணால் பார்த்து, அதின் ஜலத்தை தொட்டு ருசி பார்ப்பதுதான் அவர்கள் செய்ய முடிந்ததெல்லாம். ஆனால் அவர்கள் ஒருதரமாகிலும் அந்த ஸாகரத்திற்குள் பிரவேசித்திருந்தார்களேயானால் அதில் ஆழ்ந்து மூழ்கி, இவ்வுலகிற்குத் திரும்பி வந்திருக்கமாட்டார்கள்!

ஒரு காலத்தில் சில எறும்புகள் ஓர் சர்க்கரை மலையை அடைந்தன. அம்மலை எவ்வளவு பெரியதென்று அவைகளுக்குத் தெரியாது. அவைகள் சிறிதளவு தின்றதும் திருதிப்படைந்துவிட்டன. ஒவ்வொன்றும், சர்க்கரைக் கட்டியில் சிறிதளவு எடுத்துக்கொண்டு போயின. அப்படிப் போகும்பொழுது, மற்றோர்தரம் தாங்கள் வந்தால் முழு மலையையும் தங்கள் இருப்பிடம் கொண்டுபோய்ச் சேர்த்துவிடலாமென்றெண்ணின.

அந்தோ! அப்படித்தான் மனிதன் ஸ்திதியும்! பிரம்மத்தை அடையும் பாக்கியம் சிலருக்குமட்டும் கிடைத்திருக்கிறது ஆனால், அனேகர் பிரம்மத்தைப் பூர்ணமாய் அடைந்தோமென்றும், பூர்ணமாய் அறிந்தோமென்றும், எண்ணம் கொண்டுவிடுகிறார்கள்.

எறும்பு, சர்க்கரை மலையில் சிறிதளவு சாப்பிட்டு திருப்தியடைந்ததினால், அம்மலையை எடுத்துக்கொண்டுபோனதாக அதற்குத் தோன்றிற்று. இப்படித்தான் மதிமயங்கின விஞ்ஞானி.

அவன் தன் சிற்றறிவினால் திருப்தியடைந்து, பிரம்மத்தை அறிந்ததாகவும், பிரம்மம் இது என்றும், இதில்லையென்றும், தனக்குத் தெரிந்துவிட்டதாகவும், அபிப்பிராயப்படுகிறான்.

ஜனங்கள், நிர்க்குணமான பரப்பிரம்மத்தைப்பற்றி ஸுலபமாகப்பேசுகிறார்கள்! அதைப்பற்றி அவர்களுக்கு ஏதேனும் தெரிந்ததுபோலும்!

சுகதேவரையும், இன்னும் இதர மஹாரிஷிகளையும், அதிகமாகச் சொல்லுவதாயிருந்தால், பெரிய எறும்புகளுக்கு ஒப்பிடலாம். அவர்கள் சர்க்கரையில் முற்கூறிய எட்டு பத்து துணுக்குகள் பிரமாணம் தின்றார்களென்றால் அதுவே அவர்களுக்குப் போதும்.

சில எறும்புகள் சேர்ந்து ஆகாரத்திற்காக சர்க்கரை மலையைத் தங்கள் இருப்பிடத்துக்கு தூக்கிக்கொண்டு போய்விட்டன என்பது, எவ்வளவு அசம்பாவிதமாயிருக்குமோ, அப்படியே ஒருவன் பரப்பிரம்மத்தை அறிந்தேனென்று சொல்வதும். ஜீவாத்மா, பரமாத்மாவுடன் ஒன்றுகலப்பதே வேதாந்திகளின் நோக்கம்.

ஓர் காலத்தில், உப்பினால் செய்த பொம்மையொன்று, சமுத்திரத்தின் ஆழத்தை அளப்பதற்காக, கையில் நூலும், ஈயக்குண்டும் எடுத்துக்கொண்டு போயிற்று. சமுத்திரக் கரையோரத்தில் வந்து, விசாலமாயும் கம்பீரமாயுமிருக்கும் சமுத்திரத்தைத் தன்னெதிரில் பார்த்தது. இதுவரையிலும் அது தன் தனி சுபாவத்தை இழக்காமல், உப்புப் பிரதிமையாகவேயிருந்தது; ஆனால், முன்சென்று ஓரடி ஜலத்தில் வைத்ததோ இல்லையோ, உடனே அது சமுத்திரத்தில் கரைந்து தன் ரூபத்தையிழந்தது. பிரதிமையின் உப்பெல்லாம் சமுத்திர ஜலத்தில் கரைந்தது. சமுத்திர ஜலத்திலிருந்து வந்த உப்பினால் செய்த பிரதிமை திரும்பவும் சமுத்திரத்திலிருக்கும் உப்போடு கலந்துவிட்டது; ஜீவாத்மா பரமாத்மாவோடு திரும்பவும் ஒன்று சேர்ந்தது; கண்டம், அகண்டத்தோடு கலந்தது.

இந்த உப்புப் பொம்மைதான் கண்டமான (பிரிவுபட்ட) ஜீவாத்மா; மகத்தான உப்பு சமுத்திரம் அகண்டாகாரமான பரமாத்மா.

உப்புப் பிரதிமை திரும்பிவந்து பெருங்கடலின் ஆழத்தைச் சொல்லமுடியாது. அளவிடமுடியாத நிர்விகல்ப சமாதியில், பரப்பிரம்மத்தை அடையும் பாக்கியத்தை எவனொருவனடைகிருனே, அவனும் அகண்டாகாரத்தோடு லயித்துப் போகிறபடியால், திரும்பிவந்து பரப்பிரம்மத்தின் ஸ்வரூபத்தைச் சொல்ல முடியாது. என் தாயின் அருளால் அந்த உப்புப் பிரதிமை திரும்பவும் தன் ஸ்வரூபத்தை அடையுமானுல், அது தன் நூதன ஸ்திதிக்கு ஏற்றபடிதான் பேசவேண்டும். இவ்வுலக வாஸிகளைப் போலவே அதுவும் நடந்துகொள்ளும்.

ஆகையினுலேதான் இந்த மஹாரகசியம் எவராலும் விவரிக்க முடியாமலிருக்கிறது. அனுதியாயும், அளவிடமுடியாத அகண்டபரிபூரணமாயுமிருக்கும் வஸ்துவை பிரமாணங்களால் வரையறுக்கத் தகுந்ததன்று.

ஒருவனுக்கு இரண்டு குமாரர்களிருந்தார்கள். அவர்களுக்கு வயது வந்தவுடன், பிரம்மசரிய ஆசிரமத்தில் வைக்கவிரும்பி, அவர்களை ஓர் ஆசாரியரிடம் ஒப்புவித்தான். அவர்கள் அவரிடம் வேதத்தையும் இதர கிரந்தங்களையும் அப்பியசித்து வந்தார்கள். சிலநாள் சென்றதும், தந்தை தன் குமாரர்களின் கல்விப்பயிற்சியைப் பார்த்துவரும் பொருட்டுச் சென்றுன். அவ்விடம் வந்து, குமாரர்களையழைத்து, "பரம்பொருளையடையும்படியான தத்வரகசியங்களை எடுத்தறிவிக்கும் வேதாந்த சாஸ்திரங்களைப் படித்தீர்களா?" என்று வினவினுன். அதற்கு அவர்கள் 'ஆம் படித்தோ'மென்று விடையளித்தார்கள்.

தகப்பனுர்:—என் குழந்தைகாள், நீங்கள் வேதாந்த சாஸ்திரங்களைப் படித்தீர்கள். சரி, பிரம்மம் எப்பேர்ப்பட்ட வஸ்துவென்று எனக்கு எடுத்துச்சொல்லவேண்டும்.

ஜேஷ்ட குமாரன் (வேதங்கள், புராணங்கள் முதலானவைகளை ஆதாரமாக எடுத்துக்காண்பித்து):—ஆறை: என்பிதாவே பிரம்மம் அளாங்மனோகோசரம். (வாக்கினால் சொல்லவோ, மனதினாலயிலோ முடியாதது.) ஆறை அவர் அப்பேர்ப் பட்டவர், இப்பேர்ப்பட்டவர் அதைப்பற்றி நான் எல்லாம் அறிவேன்.

தகப்பனார்:—ரொம்பவும் சரி, நீ பிரம்மத்தை அறிந்திருக்கிறாய்; நீ உன் வேலைக்குப்போகலாம் என்று அனுப்பிவிட்டு இரண் டாவது குமாரனைப் பார்த்து அப்பா, நீ என்ன சொல்லு கிறாய்; பிரம்மம் எப்பேர்ப்பட்ட வஸ்து சொல் என்றார்.

இதைக்கேட்டதும், இளையகுமாரன் தன் தலையைக் குனிந்துக்கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தான். எவ்வித வார்த்தையாகிலும் அவன் வாயிலிருந்து வரவுமில்லை; அவன் வாயைத்திறந்து பேச பிரயத்தனப்படவுமில்லை இந்நிலைமையில் அவன் வெகு நேரம்வரையில் இருந்தான்.

அப்பொழுது. தகப்பனார், 'என் குழந்தாய், நீதான் சரி; அகண்டபரிபூரணமாயிருக்கும் பிரம்மத்தைப்பற்றி யாதொன் றும் சொல்லமுடியாது. நீ அதைப்பற்றி வர்ணிக்க ஆரம்பிப் பாயேயானால் அநந்தமான வஸ்துவை, அந்தமுள்ள உபமானங் களினாலும், பரிபூர்ண வஸ்துவை, கிஞ்சித்து சுபாவமுள்ளவை களாலும், அளவற்றதை, காலதேச வர்த்தமானாதிகளாலும் வரையறுத்துச் சொல்லவேண்டியதாகும். ஆகையினால், நூறு சுலோகங்களைச் சொல்லி நூறு பிரமாணங்களை எடுத்துக் காண் பித்து ஒப்புவிப்பதைவிட, உன் மௌனமே உன் அறிவின் சாது ர்யத்தை நன்றாய் விளக்குகிறது.' என்று சொன்னார்.

ஆம், எவன் உண்மையாக ஞானமடைந்திருக்கிறானோ, அவன், யாதொன்றைப்பற்றிப் பேசுவதையும். விண்வாதம் செய் வதையும் ஒழிக்கிறான். வர்ணிக்கவோ, தெரிந்துகொள்ளவோ முடியாமல் அடையும்படியான பொருள் பிரம்மம் ஒன்றே. உன்

மைஞானத்தின், அல்லது அனுபவத்தின் அடையாளம் சந்தேகநிவர்த்தி அதாவது வாக்குவாத நிவர்த்தியுமாகிறது.

அடுப்பின்மேல் பாத்திரத்தில் வைத்திருக்கும் வெண்ணெயானது எதுவரையில் சத்தம் செய்கிறது? ஜலலேசம் போகிறதற்கு வேண்டிய சூடு பிடிக்கிறவரையில்தான். அதுவரையில், வெண்ணெயானது கொதித்துக்கொண்டு களகளவென்று சப்திக்கிறது. பக்குவமாய்க் காய்ந்து சப்தம் அடங்கின நெய்தான் ஞானமடைந்து பிரம்மத்தையடைந்தவன்.

இந்த ஜலம்தான் அஹங்காரம். அதை நீக்கும்பொழுது அதிகமாகச் சப்தம் செய்கிறது. அஹங்காரம் நீங்கினதும், ஜீவன் பக்குவமாய்விடுகிறது. சத்தமோ இரைச்சலோ கிடையாது.

அதே சமயத்தில் அழுக்கு முழுதும் கீழே தங்கிவிடுகிறது. இவ்விடத்தில் அழுக்கு என்பது, பெண், பொன் இவைகளின் மீதிருக்கும் ஆசையும், அதினால்வரும் துன்பங்களுமாம்.

இன்னும், முக்தன் நிறைகுடம்போலாம். ஜலத்துக்குள் ஒரு குடத்தை அமுத்தினால் குடத்தினுள் ஜலம் போகும்பொழுது, பக், பக் என்ற சத்தம் உண்டாகிறது. குடம் நிரம்பினதும், அச்சத்தம் நின்றுவிடுகிறது. என் மாதாவினருளால், உண்மை ஞானமடையச் செய்யும் விவேக விசாரம், அல்லது, தத்துவவாதம் இச்சத்தம். எப்படி, சத்தமானது குடம் நிரம்பாததைக் காட்டுகிறதோ, அவ்வாறே மேற்கூறிய விசாரம் முதலானவை பிரம்மஞ்ஞானம் அடையாததைக் காண்பிக்கிறது.

வண்டானது, புஷ்பத்திலுட்கார்ந்து இனிய தேனைச் சாப்பிட ஆரப்பிக்கிறவரையிலுமே, ரீங்காரம் செய்கிறது. தேனைச் சாப்பிட ஆரம்பித்தமாத்திரத்திலேயே எல்லாச்சத்தமும் நின்றுவிடுகிறது.

முக்தனுயிருக்கும் குருவுக்கும், சிஷ்யனுக்கும் ஏற்படும்படியான சம்பந்தம் எவ்விதம்? என்ற கேள்வியுண்டாகிறது. சிஷ்யனுடைய அஞ்ஞானத்தை விலக்கக்கருதி குரு பேசவேண்டும். இதுதான் நித்தியா நித்திய விசாரம். இது ஒரு தீங்கையும் செய்யாது.

வெண்ணெ நன்றாய்க் காய்ந்து நெய்யாக மாறியதும் யாதொரு சத்தமும் செய்கிறதில்லை என்பதில் சந்தேகமில்லை, ஆனால், ஓர் பூரியைச்செய்து அதில் போட்டமாத்திரத்திலேயே, பூரியிலிருக்கும் ஜலமானது, காய்ந்த நெய்யில் கலந்ததினால் மறுபடியும் சத்தத்தை உண்டுபண்ணுகிறது பூரி நன்றாய்பொரிந்து, பக்குவமாகிறவரைக்கும் சத்தமிருந்துகொண்டுதானிருக்கும்

சிஷ்யனை பூரிக்கு ஒப்பிடலாம். முக்தனுயிருக்கும் குருவாகிய காய்ந்த நெய்யோடு சிஷ்யனாகிய பூரி கலக்கும்பொழுது அச்சிஷ்யனுக்கு ஞானத்தை ஊட்டும்பொருட்டுதிரும்பவும் விசாரணை (நித்தியா நித்திய விசாரணை) ஏற்படுகிறது. எப்படி பூரி பொரிந்து பக்குவமானதும் சத்தம் நின்றுவிடுகிறதோ அவ்வாறே சிஷ்யனுக்கு ஞானோதயமானதும் குருவின் உபதேசமாகிய சத்தம் நின்றுவிடுகிறது.

ஆத்மா ஆத்மாவை அறிகிறது. ஜீவாத்மாவானது அஹங்காரத்தினால் தன்னை தனிமையாக பாவிக்கிறவரையில் பரமாத்மாவை அறியமுடியாது. அகண்டமாகும் பொழுதுதான், அகண்டானுபவம் ஸித்திக்கும்

மாயையினுடைய இராஜ்யத்தில் தான் வேற்றுமை ஏற்படுகிறது. அதாவது மாயைதான் வேற்றுமைக்குக் காரணம். மாயை நம்மைவிட்டு விலகும்பொழுது வேற்றுமையும் மறைந்துவிடுகிறது.

பிரபஞ்சத்திலிருக்கும்படியான சர்வ விஷயங்களும் ஸிருஷ்டி ஸ்திதி, ஸம்ஹாரம் ஆகிய இம்மூன்றிற்கும் உட்பட்டிருக்கும் எல்லா வஸ்துக்களும், எல்லா வியவஹாரங்களும், காயம்

மனஸ், பிராணன், ஜாக்ரஸ்வப்ன சுஷுப்தி தியானம் இவைகளுக்கெல்லாம் அடங்கியிருக்கும் சர்வ ஜீவகோடிகளும் மாயையின் வசத்தில்தானிருக்கின்றன. ஸ்ரீமத் சங்கராசாரியரும் இதர வேதாந்திகளும் இம்மாயையினல் சூழப்பட்ட ஜகத்தை மித்தை என்று சொல்கிருர்கள்.

வேதாந்தியின் கொள்கைப்படி பரப்பிரம்மம் ஒன்றே நிஜம், ஜகத்மித்தை. பரமாத்மாவுக்கு உலகம் மனிதன் இதர ஜீவ கோடிகள் எல்லாம் பொய்யாயிருக்கிறது. ஏனெனில் நிஜமான தாயிருக்கும்படியானது பரப்பிரம்மம் ஒன்றே. மாயையானது பொய்யென்றறியும்பொழுது ஜீவன் என்பது அழிக்கப்படுகிறது. ஜீவனுடைய லேசமும் காணப்படுகிறதில்லை. அதுதான் சரியான ஸமாதி.

நம்மை நாம் நிஜமென்று அறிந்துக்கொண்டிருக்கும்பொழுது உலகம் பொய்யென்று சொல்வது அஸம்பாவிதம். பரமாத்மாவை அறியாதவன் உலகம் பொய்யென்று அறியமாட்டான்

ஸமாதி தெளிந்து ஜாக்ராவஸ்தையாயிருக்கும் கீழ் நிலைமைக்கு ஓர் ஞானி திரும்பி வரும்பொழுது என் தாயின் அருளால் அவனுடைய பரிசுத்தமான மெலிந்த ஜீவனை அடைகிருன்.

இவ்விதமாய் தன் ஜீவனை அடைந்ததும், தேசகால நிமித்தத்திற்குட்பட்ட இவ்வுலகை அடைகிருன். தன் ஜீவன் நிஜமாயிருக்கிறவரைக்கும் உலகம் நிஜமாய்த்தோன்றி, பாமாத்மா பொய்யாகத்தோன்றும்.

ஜீவாகாரத்தை திரும்பி அடையும்பொழுது, உலக ரூபமாயிருக்கும் மாயை நிஜமாயிருக்கும். ஆயினும், ஞானியினுடைய ஜீவன் பிரம்மதரிசனத்தினல் பரிசுத்தமடைந்திருப்பதினல், இந்திரியங்களுக்குத் தோற்றும் உலகம் பரமாத்மாவின் விகாரமென்றறிவான்.

இன்னும் இவ்வுலகமாகிற மாயையை வித்தையாகவோ, அல்லது, அவித்தையாகவோ பார்க்கிறான்.

வித்தையாவது, பரமாத்மாவை அடையச்செய்வதே. இத ற்குச் சம்பந்தப்பட்டவை, விவேகம், வைராக்கியம், பக்தி. அவித்தை என்பது அஞ்ஞானம். இது பரமாத்மாவை அடையாமலிருப்பதற்குக் காரணமாயிருக்கும். இதைச் சேர்ந்தவை, பெண், பொன், கீர்த்தி, காமியகர்மம் இவைகளாம்.

ஸமாதியில் பிரம்மத்தை நிர்க்குணமாயும், ஸகுணமாயும் அறிந்தவன் விஞ்ஞானி. (விஞ்ஞானி என்ற பதத்திற்கு, கடவுளை நன்றாயறிந்தவன் என்றர்த்தம்.)

பரப்பிரம்மமே சக்தியாக ரூபமெடுத்து ஆத்மாவென்றும், ஈசுவரனென்றும், உலகமென்றும், ஜீவனென்றும், ஜகத் என்றும், வேற்றுமை உண்டாக்கினது என்று விஞ்ஞானிகள் அறிந்திருக்கி றார்கள். அவர்கள் உள்ளிலும் வெளியிலும் ஈசுவரனை தரிசித்து, நேரே அவனிடத்திலிருந்தே மேற்கூறிய இரகசியத்தை அறிந் திருக்கிறார்கள். ஸகுணப்பிரம்மமான ஈசுவரன் அவர்களைப் பார்த்து, "ஸமாதியிலடையக்கூடிய நிர்க்குணப் பிரம்மம் நான் தான். நானே இவ்வேறுபாடுகளை உண்டுபண்ணியிருக்கிறேன். இருபத்தினாலு தத்துவங்களாகிய ஜீவனுக்கும், ஜகத்திற்கும் நானே காரணம்" என்று சொல்லுகிறார்.

ஸகுணப்பிரம்மம், சிருஷ்டி. ஸ்திதி, ஸம்ஹாரம் இவைக ளுக்குக் காரணபூதனாய், பக்தகோடிகளுக்கு, அப்பிரம்மத்தை எந்தெந்த ரூபத்தில் பஜிக்கவேண்டுமென்று நினைக்கிறார்களோ, அந்தந்த ரூபத்தில் பிரத்தியக்ஷமாய் தரிசனமளித்தும், விஞ்ஞா னிகளுக்கு திரிகுணரூபராயும் தரிசனமளிக்கிறார்.

ஸத்வகுணத்தால் ஸம்ரக்ஷித்தும், ரஜோகுணத்தால் சிருஷ் டித்தும். தமோகுணத்தால் ஸம்ஹாரம் செய்தும் வருகிறார். இம்மூன்று குணங்களும் அவனிடத்திலிருக்கின்றன. ஆனால் அவன் இவைகளில் இல்லை அவன் இவைகளில் பற்றற்றிருக்கிறான்.

விஞ்ஞானியானவன், ஆத்ம சுத்தியடைந்து, அப்பரப்பிரம்மத்தில், ஸகுணம், நிர்க்குணம் இவ்விரண்டையும் பார்க்கிறான். அவன், உள்ளிலும் வெளியிலும், ஈசனுடைய குரலைக் கேட்கிறான். அது மட்டிலுமல்ல, அவன் நேரில் ஈசுவரனோடு சம்பாஷிக்கிறான் அவன் ஈசுவரனை, பிதாவாகவும், மாதாவாகவும், புத்திரனாகவும், பாரியையாகவும், பிருத்தியனாகவும் பிராதாவாகவும் சேவை செய்கிறான் இவ்வித ஸித்தியடைந்த விஞ்ஞானிகளின் பிரமாணப்படி, இவவுலகம் பொய்யன்று; ஜீவாத்மாவுக்கும் இன்னும் சகல ஜீவராசிகளுக்கும் காரணமான ஈசுவர ஸ்வரூபமே. நேரிலிருந்து அறிந்து சொல்வதினால் இப்பிரமாணம் பொய்யாகாது.

பகவான், ரிஷிகளுக்கெல்லாம் ஸகுணத்தோடும், நிர்குணத்தோடும் தரிசனமளித்திருக்கிறார். லோகோபகாரார்த்தமாகவும் பக்தகோடிகளுக்கு ஆனந்தத்தை உண்டாக்கவும், இடைக்கிடை தன்னை வெளியிடுகிறார்.

பரம்பொருள், நிஷ்கிரியனாய், சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரா ஹிதனாக பாவிக்கப்படும்பொழுது, அதை நிர்க்குணப்பிரம்மம் அல்லது, புருஷன் என்று சொல்லுவேன். கிரியையோடு கூடினதாய், ஸிருஷ்டி ஸ்திதி ஸம்ஹார அதிகாரத்தோடு பாவிக்கும்பொழுது, சக்தி, மாயை, அல்லது, பிரகிருதி என்றும், ஸகுணப்பிரம்மம் என்றும் அழைக்கிறேன்.

உபமானங்கள் தாங்களறிவிக்கும் பொருளோடு முற்றிலும் பொருந்தா. ஏகதேசம், அறிவதற்குக் கடினமான ஏதாவது ஒரு விஷயத்தை மாத்திரம், விளக்கிக்காட்டும். அதன் குணம் முழுமையும் எடுத்தறிவிக்காது.

ஒருவனை புலிக்குச் சமானமென்று உபமானம் சொன்னால், அவனை எல்லா விஷயத்திலும், அதாவது, தலை, பற்கள், நகங்கள், வால், இவை எல்லாவற்றிலும் ஒப்பிட்டுப்பார்ப்பது உசிதமாயிராது. இதற்கு அர்த்தம், புலியைப்போல் பயங்கரமான தோற்றமுடையவன் என்பதாம்.

அதுபோல் ஸகுண நிர்க்குணப் பிரம்ம சம்பந்தத்தை யாதொரு உபமானமும் சரியாக விளக்கிக்காட்டாது. அது அநுபவித்தே அறியவேண்டும்.

ஆனால், உபமானமானது, இந்திரிய கோசரத்திற்கு உட்படாமலிருக்கும் வேதாந்தங்களின் உண்மையை ஏகதேசம் அறிய உபயோகமாயிருக்கிறது. ஆனால் உண்மையில், நிஷ்கிரியனாயும், நிர்க்குணனாயும் இருக்கும் பிரம்மத்திற்கும், சக்தியாயும், ஸகுணமாயும் இருக்கும் பிரம்மத்திற்கும், பேதமில்லை.

எவ்வாறு, அக்கினியும், அதன் தகிக்கும் குணமும் ஒன்றாயிருக்கின்றனவோ, அவ்வாறே நிர்க்குண ஸகுணப் பிரம்மம் ஒரே வஸ்துதான்.

எவ்வாறு, பாலிலிருந்து வெண்மையையும், இரத்தினத்திலிருந்து அதன் ஒளியையும், ஸர்ப்பத்திலிருந்து அதன் வளைந்தோடும் குணத்தையும் பிரித்துப் பார்க்க முடியாதோ, அவ்வாறே, ஒரே பிரம்மத்தின் ஸகுண நிர்க்குணபாவத்தைப் பிரித்துப் பார்க்க முடியாது.

அத்தியாயம். 3

எல்லாம் வல்ல ஜகதீசுவரி.

பகவான்:—நான் முன் சொன்னமாதிரி ஸகுணப்பிரம்மம், சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார, கர்த்தாவாயிருக்கிறது ஓர் பக்கம், பகவானை நோக்கிச்செல்லும் வித்தியாசக்தியாயும்; மற்றோர் பக்கம், உலகவாழ்க்கைக்கு இழுத்துச்செல்லும் அவித்தியா சக்தியாயும் அவள் ரூபமெடுத்துக்கொள்கிறாள். இச்சக்தி, மனிதர்களிலும், இதர ஜீவராசிகளிலும், அந்தந்த சிருஷ்டிக்குத் தக்கபடி, உற்பவித்துவருகின்றது. இச்சக்தியின் ஸ்வபாவம், வேற்றுமையே தவிர ஒற்றுமையல்ல.

வித்தியாஸாகரர்:—ஸ்வாமீ, அவ்விதமாயின், நாம் பிறக்கும்பொழுது ஸமசக்தியில்லாதவர்களாயிருக்கிறோம்? கடவுள் சிலருக்குத்தான் சக்தியளிக்கும்படியான பக்ஷபாதமுள்ளவரா?

குரு:—இருப்பதை நாம் ஒத்துக்கொள்ளவேண்டியதுதான். ஈசன்செயலை தெளிவாயறிய மனிதனால் முடியாது. உலகம் எவ்வாறு தோற்றுகிறதோ அவ்வாறு நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். ஈசுவரன் ஸர்வ வியாபி என்று சொல்லும்பொழுது, ஸமஸ்த ஜீவராசிகளிலும், சேதனாசேதனங்களிலும், உதாரணமாக அணுவிலும் எறும்பிலும், வியாபித்திருக்கிறார். ஆயினும், இவைகளில் சக்தி வித்தியாசங்கள் அதிகமாயிருக்கின்றன.

அவ்விதமில்லாவிட்டால், ஒருவன் தனிமையாயிருந்து பத்து மனிதர்களை எப்படி அடிக்க முடியும்? ஒருவன், தன்னைவிட கொஞ்சம் பலவானாயிருக்கும் மனிதனைப் பார்த்து ஓடுவதை ஸகஜமாய் நாம் பார்க்கவில்லையா?

சரீரத்திலெப்படியோ, அப்படியே தர்மத்திலும், ஞானத்திலும். அவ்விதமேதான் உலகநீதியிலும்; ஞானத்திலும் இவ்வாறு அனேக படிகளிருக்கின்றன.

உதாரணமாக, மற்றவர்களைவிட அதிகமாக உம்மிடத்தில் ஜனங்கள் ஏன் மரியாதை காட்டுகிறார்கள்? நீர் என்ன ஓர் ஆவிர்ப்பவமா? உமக்கு இரண்டு கொம்பு முளைத்திருக்கின்றனவா என்ன எல்லோரும் உம்மை வந்து பார்ப்பதற்கு?

(யாவரும் சிரிப்பு.)

வேற்றுமைதான் ஈசுவரன் ஆக்ஞை; என் ஜகன்மாதா தான் பலரூபமாக அவதரிக்கிறாள். ஜகதீசுவரியான அவள், தன்னையே வெவ்வேறாகப்பிரித்து, ஜீவர்களாயும், ஜகத்தாயும், சரீரபுத்தி தர்ம ஞானபேதங்களடங்கிய இந்தப் பற்பல சக்திகளுடனும், குணங்களுடனும், தோற்றுவிக்கிறாள்.

என் ஜகன்மாதா, வேதாந்தத்தில் பிரம்மமென்று சொல்லப் படும் பரமாத்ம ஸ்வரூபத்தைத் தவிர வேறில்லை.

குரு, அடியில்வரும் கருத்துக்களடங்கிய பாடலைப் பாடினர்.

எல்லாம் வல்ல அறிவரிய என் ஜகன்மாதா.

1. "காலரூபமாயிருக்கும் பரப்பிரம்மத்திற்குப் பிரியையாகிய என் ஜகன்மாதாவான காளியை எவராகிலுமறிவார்களா? ஆறு சாஸ்திரங்களும் அவள் திவ்விய ஸ்வரூபத்தைப் பார்த்திரா.
யோகியானவன், மூலாதாரத்திலும், ஸகஸ்ராரத்திலும், அவள் திவ்விய ரூபத்தைத் தியானிக்கிறான்.
இந்தத் தாமரைக்காட்டில் இரண்டு ஹம்ஸங்கள் ஆணும் பெண்ணுமாகச்சேர்ந்து ஸஞ்சரிக்கின்றன. அவைதான், காலரூபியான பிரம்மமும், அவள் பிரியையும்

2. எப்படி, ஸ்ரீ ராமச்சந்திரனுக்கு ஸீதை பிரியபத்தினியோ, அப் படியே, சிவனுக்கு என் அம்மை அத்தியந்தப்பிரியை. என்னு டைய ஜகன்மாதாவின் மகிமை, மஹாகாலரூபியாகிய சிவனுக் குத் தெரியுமே தவிர, பாமரஜனங்கள் அவளுடைய மகிமையை அறியார்கள்.

3. இந்த ஜகத் என் ஜகன்மாதாவினிடத்திலிருந்துதான் ஜனித்தது. ஆஹா, அவளுடைய மகிமையைப் பார்! அவளுடைய இச்சாமா யையினால், தன்னிஷ்டப் பிரகாரம் ஒவ்வொரு கடங்களிலும் பூர்ண மகிமையுடன் தோற்றுகிறாள்.

4. பராசக்தியை அறியமுடியுமென்று ஒருவன் நினைப்பது மகத் தான கடலை நீந்திக்கடக்க முடியுமென்று நினைப்பதுபோல்! இதைக் கேட்டால் யார்தான் நகையார்கள்? இதை என் மனதி னால் அறிகிறேன். ஆனால் என் ஹிருதயத்திற்கு எட்டவில்லை! சந்திரனை எட்டமுயலும் குள்ளனானேன், என்று ஸ்தோத்தி ரக்கவி 'ப்ரஸாத்' சொல்லுகிறார்."

இக்கீர்த்தனை முடிவில், குரு நாவினால் வர்ணிக்க முடியாத ஸமாதியை அடைந்தார். அவ்வினிய கீதம் நின்றது. வெளிக் கண்கள் சலனமற்று நின்றன. உட்கண்கள் திவ்விய மங்கள ரூப

த்தின் அழகை அனுபவித்துக்கொண்டிருந்தன. அவருடைய முகம் திவ்விய காந்தியோடும், புன்சிரிப்போடும் பிரகாசித்துக் கொண்டிருந்தது. இவ்வண்ணம் ஆனந்தக்காக்ஷியில் அவர் சிறிதுநேரம் இருந்தார்.

கொஞ்சம் ஸ்மரணை வந்தவுடன் குரு சொல்லுகிறார். ஆம், என் அம்மை பிரம்மத்தைத் தவிர வேறில்லை. ஆறு சாஸ்திரங்களும் அவளைப்பற்றி வர்ணிக்க பிரயத்தினப்பட்டு வழி தெரியாமல் நின்றுவிட்டன.

என் தாயின் கிருபையினால் இப்பரிசுத்தமான அகங்காரம் நசிக்குமேயாகில் ஸமாதியடைந்து, நிர்க்குணப் பிரம்மானுபவம் கிடைக்கிறது. அப்படி அடையும்பொழுது, நிர்க்குணப் பிரம்மம் நிர்க்குணப் பிரம்மத்தை அடைகிறதே தவிர ஜீவாத்மா அடைகிறதில்லை. அகங்காரமானது பரிசுத்தமான நிலைமை அடையும்பொழுது, ஈசுவரியின் அருளினால், ஸகுணப்பிரம்மமே அவளுடைய அவதாரங்களான ஸ்ரீ கிருஷ்ணன், சைதன்னிய தேவர், முதலான ரூபங்களாகவும், ஸ்திரீ, புருஷ பாலரூபங்களாகவும், இருபத்தினான்கு தத்துவங்களாகவும் அறியக்கூடியவை.

ஸகுணப்பிரம்மமான என் அம்மையின் கிருபையிருக்கும் பக்ஷத்தில், நிர்விகற்ப ஸமாதியில் இப்பரிசுத்தமான அகங்காரத்தை அழிக்கக்கூடும். அதினால் மேற்கூறிய ஸமாதியில் நிர்க்குணப் பிரம்மத்தை அனுபவிக்கலாம்.

சிலவேளையில் அவள் தன் பக்தர்களிடத்தில் அப்பரிசுத்தமான அகங்காரத்தை இருக்கச்செய்து, அவர்களுக்கு ஸகுணப் பிரம்ம தரிசனத்தைக் காண்பித்து, அவளோடு பேசும்படி கிருபையளிக்கிறாள்.

பக்தர்கள் எந்த திவ்விய ஸ்வரூபத்தைப் பஜிக்கிறார்களோ, உபனிஷத்துகள் எந்த ஸகுணப் பிரம்மத்தைப்பற்றிக் கோஷிக்கின்றனவோ, அந்தத் திவ்விய புருஷன்மட்டுமே பரப்பிரம்ம

த்தை அறிய அருள்புரியக்கூடும். தத்துவசாஸ்திரிகள் எந்த விசாரணையின்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ அந்த விசாரணை, பராசக்தியும் ஜகன்மாதாவுமான என் அம்மையினிடத்திலிருந்துதான் வரவேண்டும்.

பகவத் ஸங்கீர்த்தனம், தியானம், பக்தி, ஆத்மபரித்தியாகம் இவைகளெல்லாம் ஆதிசக்தியாகிய என் அன்னையினிடத்திலிருந்தே அடையவேண்டும்.

மேலும், ஸமாதிஞானி, சிலவேளையில்தான் ஸமாதியில் வைக்கப்பட்டிருக்கிறான். மற்றும் சிலவேளையில் அடையமுடிகிறதில்லை. அந்த திவ்விய நிலைமையில் அவனை வைக்கிறதுயார்? அந்த திவ்விய நிலைமையிலிருந்து உலக விபவகாரமாகிற கீழ் நிலைமைக்கு கொண்டுவருவதும் யார்? என், அம்மையாகிய ஜகதீசுவரியே.

அப்பேர்ப்பட்டவள் பொய்யாயிருக்க முடியாது. அவள்தான் பரமாத்மாவின் ஸகுணபாகம். என் அம்மை அவள் குழந்தைகளுக்கு, "உபனிஷத்தில் சொல்லப்படும் ஆத்மாவும், வேதாந்தத்தில் சொல்லப்படும் பிரம்மமும் ஜகன்மாதவும் ஸத்தும், எல்லாம் நான்தான்" என்று சொல்லுகிறாள்.

ஈசுவரி இவ்விதமாகத் தன்னை குணத்தோடுகூடித் தோற்றுவிக்கிறாள் அவ்விதம் தோற்றுவதே அவள் இருக்கும் உண்மையை நன்கு விளக்குகிறது.

நிர்க்குணமாயும், பரமாத்ம ஸ்வரூபியாயும், மஹாகாலனாயும் இருக்கிற அந்தப் பிரம்மம், தன்னுடைய ஸகுணபாகமான ஈசுவரனால் காண்பிக்கப்படுகிறது. ஸமாதியிலிருக்கும் புருஷன், அப்பரப்பிரம்மத்தைப்பற்றி ஒன்றும் சொல்லமுடியாது. கடலை அடைந்த உப்புப்பிரதிமைபோல் தன் ஸ்வரூபத்தை யிழந்துவிடுகிறான். ஸமாதியிலிருந்து திரும்பிவந்தாவது அப்பரமாத்மாவைப் பற்றி ஒன்றும் சொல்லமுடியாது. கண்டஞானத்தை அடைந்

தவுடனே அகண்டத்தைக் குறித்து மௌனியாய்விடுகிறான். உலக வியவகாரத்தை எப்பொழுது அடைகிறானோ, அப்பொழுதே அகண்டமாயிருக்கிற பரமாத்மாவைக் குறித்து ஒன்றும் சொல்ல முடியாமல் வாய் மூடிக்கொள்ளுகிறான்.

என் அம்மை 'நானே (உபனிஷத்தில் சொல்லப்பட்ட) நிர்குணப் பிரம்மம்' என்று சொல்லுகிறாள்.

இப்படி, பிரத்தியக்ஷப் பிரமாணமே பரப்பிரம்மத்துக்கும் ருஜுவாயிருக்கிறது.

ஒருவன் எவ்வளவு தன்னாலியன்றமட்டும் நிர்க்குணப் பிரம்மத்தை வர்ணிக்கப் பிரயத்தினப்பட்டாலும், அவ்வர்ணனையில் தன்னுடைய கண்டமான ஜீவனைத்தான் செலுத்தவேண்டும். அதாவது, அப்பரப்பிரம்மம் இந்த ஜீவனால் மூடப்பட்டிருக்கிறது. நம்முடைய அல்பபுத்தியையும், விசாரத்தையும் கொண்டு பிரம்மத்தையடையமுடியாது. ஆகையினால் யுக்திபிரயோஜனமில்லை. உள்நோக்கிப்பார்த்துணரவேண்டும்

பெரும்பாலும், பரிசுத்தமடைந்த ஜீவர்களுக்கு, ஸகுணப் பிரம்மம் திவ்வியமங்களஸ்வரூபமாக தன்னைத்தோற்றுவிக்கிறது. அதாவது, இந்த திவ்விய ஸ்வரூபங்களை ஈசுவரனிடத்திலிருந்து அடையப்பட்ட திவ்விய சரீரத்தைச் சேர்ந்த திவ்விய உள் கண்களோடு கூடின ஜீவாத்மா பார்த்திருக்கிறான். இது எல்லோருக்கும் கிடைக்காது; ஆனால், என் தாயின் அருளினால், முக்தன் மட்டினுமே இத்திவ்விய ரூபங்களைப் பார்க்கமுடியும்.

ஓர் காலத்தில், ஸ்ரீ ராமச்சந்திரன் மகாபக்தனை ஹநுமானைப் பார்த்து, 'ஏ பிள்ளாய், நீ என்னை எந்த ரூபத்தில் தியானம் செய்கிறாய்' என்று கேட்டார். அப்பொழுது ஹநுமான், ஏ இராமா! எனக்கு தேகாத்ம புத்தி ஏற்படும்பொழுது உன்னைபிரபுவாகவும் நான் பிருத்தியனாகவும் பஜிக்கிறேன். மற்ற வேளைகளில் உன்னை பூர்ணபுருஷனாகவும், நான் அதிலொரு அம்ச

மாகவும், தியானிக்கிறேன். ஆனால் தத்துவஞானம் எனக்கு உதிக்கும்பொழுது, நானே நீயென்றும், நீயே நானென்றும் அறிந்து அநுபவிக்கிறேன்' என்றார்.

பக்தனாகிய ஹநுமான் சொன்னதின் கருத்தென்னவென்றால், ஸமாதியின் பிறகு தன்னுடைய ஜீவனானது, ஸ்ரீராமனாகிய அகண்ட ஸச்சிதானந்த பரிபூர்ணமாகிய நிர்க்குணப் பிரம்மத்தில் மூழ்கிற்று என்பதாம். இதுதான் பிரம்மஞ்ஞானம்

மேல், கீழ் ஆகிய எல்லாத்திசைகளிலும், அகண்டஜலம் பரவியிருப்பதாக வைத்துக்கொள்வோம். அதில், சில பாகங்கள் மாத்திரம் குளிர்ச்சியினால் உறைந்து பனிக்கட்டியாகிறது. அந்தப் பனிக்கட்டியை உஷ்ணமாக்கினோமானால் அது உருகி, திரும்பவும் ஜலமாகிறது.

பிரம்மமே அகண்டமான ஜலம். அகண்டமான ஜலத்தில், பனிக்கட்டியாக உறைந்துபோகும் பாகங்களே பக்தர்கள் தரிசிக்கும் அவதாரங்களாம். பக்தனுடைய ஆத்ம பரித்தியாகம், சிரத்தை, பிரேமை, பக்தி இவைகளே ஜலத்தை உறையச்செய்யும் குளிர்ச்சி. நான் என்ற அகங்காரத்தை பூர்ணமாய் நசிக்கச்செய்யும் நிர்விகல்ப ஸமாதியை அடைவதற்கு ஏதுவாயிருக்கும் நித்தியாநித்திய விவேகவிசாரணையே பனிக்கட்டியை உருகச்செய்யும் உஷ்ணம்.

பக்தனுக்கு ஈசுவரன் பல திவ்விய ரூபங்களிலும் தரிசனமளிக்கிறார். எவனொருவன் என் தாயின் அருளினால் நிர்விகல்ப ஸமாதியை அடைகிறானோ, அவனுக்கு. அதே ஈசுவரன் அகண்ட பரமாத்ம ஸ்வரூபமாகத் தோற்றுவிக்கிறான்.

ஞானமார்க்கத்திற்கும், பக்திமார்க்கத்திற்கும் ஒற்றுமை ஸமாதானம் இவ்வண்ணமாகத்தானிருக்கிறது.

பிரம்மஞானத்தை அடைய பிராப்தியுள்ளவனுக்கு இரு பக்தினாலும் தத்துவங்களும் ஜகதீசுவரியினிடத்திலிருந்து வந்ததாகத் தோற்றப்படுகிறது.

என்னுடைய ஜகன்மாதாவே ஒன்றாகவும் பலவாகவும், இவ்விரண்டையும் கடந்த பரமாத்ம சொரூபமாகவும், இருக்கிறாள் என்பதை நீங்கள் அறியவும். அவள் மனிதனுடைய ஜீவாத்மாவாக மாத்திரமல்ல, வேறுபலவித எல்லா தத்துவங்களாகவும் பிரித்துத் தோற்றுகிறாள்.

ஸமாதியில் அடையப்படுவதினாலேயும், ஸமாதியினால் மாத்திரம் அறியப்படும் பரமாத்மா தன்னுடைய நிர்க்குண பாகமாக என் மாதாவினால் தெரிவிக்கப்பட்டிருப்பதினாலேயும், நிர்க்குணமான பரமாத்மாவே பிரம்மம் என்ற அத்துவைதிகளின் கொள்கை முற்றிலும் அங்கீகரிக்கவேண்டியதுதான். ஆனால் தன்னபிப்பிராயமேதான் ஸரி என்றும், நியாயமென்றும், ஈசுவர நம்பிக்கை பிசகு என்றும் ஈசுவரன் (ஸகுணப் பிரம்மம்) பொய்யென்றும் ஈசுவரனுக்கு முத்திகொடுக்கும் சக்தியில்லையென்றும் ஒருவனும் சொல்லக்கூடாது.

தன் புத்தியை மாத்திரம் பிரமாணமாய் வைத்திருக்கும் அத்துவைத வாதியானவன், 'பரமாத்மா ஜீவாத்மாக்களாகப் பிரித்து தோற்றப்படும் பிரமை எவ்வண்ணம் ஏற்பட்டதோ தெரியாது' என்கிறான். ஸ்வானுபவமானது இதற்கு முடிவான பதிலை அளிக்கிறது. என் தாயானவள் (பிரம்மத்தின் ஸகுணபாவம்) "வேதாந்தத்தில் சொல்லியிருக்கும் பிரம்மமாகிய நான் தான். ஆத்மா ஜீவன் என்கிற வித்தியாசங்களை உண்டாக்கினேன்" என்கிறாள். நீ எதுவரைக்கும் 'எனக்குத் தெரியு'மென்றும் 'தெரியாது' என்றும் சொல்லுகிறாயோ அதுவரைக்கும் ஜீவாத்மாவாக நீ பாவிக்கவேண்டும். அவ்வாறு ஜீவனாயிருப்பதினால் இவ்வித்தியாசங்களை ஸத்தியமென்றெடுத்துக்கொள்ளவேண்டுமே தவிர மித்தை (பொய்) என்று எடுத்துக்கொள்ள முடியாது.

திரும்பவும் என் தாய், 'இவ்வகங்காரத்தையெல்லாம் (கண்டஞானத்தை) எப்பொழுது நான் நசிக்கச்செய்கிறேனோ அப்பொழுதுதான் ஒருவன் பரமாத்மாவை (நிர்க்குணம்சர்) ஸமா

தியிலடைகிறான்' என்கிறாள். அவ்விதம் ஸமாதியிலடைந்தபிறகு சத்தியமானாலும் சரி, மித்தையானாலும் சரி, தெரிந்ததானாலும் சரி, தெரியாததானாலும் சரி எல்லாம் மௌனம்தான். இதுதான் பிரம்மஞானம்.

அத்தியாயம் 4

அனுபவஞானம்—புதுதத்துவம்.

முன் கூறிய ஞானம் உண்டாகிறவரையில் 'நான்' என்பது இருந்துகொண்டிருக்கிறது. ஜகதீசுவரி (ஸகுணப்பிரம்மம்) யும் தன் குழந்தைகளுக்கு பலரூபங்களாகவும், ஸ்ரீ கிருஷ்ணன், சைதன்யதேவர் முதலான திவ்விய அவதாரங்களாகவும் தன்னைக் காண்பித்து, மஹாபூதங்களாகவும், ஜீவனாகவும், ஜகத்தாகவும் தோற்றிக்கொண்டிருக்கிறாள். ஆம், அவளுடைய சக்தியினால்தான், சிருஷ்டியிலுண்டான ஒரு வஸ்துவாகிலும் தன்னுடைய 'நான்என்ற அகங்காரத்தை விலக்க முடியாமல் உலகத்திற்குச் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது.

இரண்டாவது, என் லோகமாதாதான் பக்தனுக்கு பக்தியை ஊட்டி (அன்பு, பக்தி, ப்ரேமை, ஆத்மபரித்யாகம்). அவனுடைய உலக அஹங்காரத்தை வித்தையோடு கூடின அஹங்காரமாக மாற்றி, அதை மிக மெலிந்ததாகச் செய்கிறாள். கடைசியாக அவளுடைய ஸர்வசக்தியைப் பார்! அவளுடைய கிருபையால், ஒருவனை அஹங்காரம் முழுவதையும் விலக்கச்செய்து பிரம்மஞானத்தை அடையும்படி செய்யக்கூடும். அதெவ்வாறெனில், அவளுடைய கருணையால் ஜீவாத்மாவானது பரமாத்மாவாகிய பெருங்கடலில் மூழ்கிக்காணாமல் போகிறது.

அஹங்காரத்தை நீ உதறித்தள்ள முடியாது. ஸமாதியினுடைய ஆத்மாராமத்தை (பிரம்மஞானம்) அடைந்தவர்கள்கூட அவளுடைய ஆக்ஞையினால், மறுபடியும் ஈசுவரனோடு கலப்பதற்குப் போதுமான அளவு சுத்தமடையப்பட்ட அஹங்காரத்தோடு இவ் உலகத்திற்குத் திரும்பி வருகிறார்கள். ஸப்தஸ்வரங்களில் கடைசி ஸ்வரமாகிய 'நீ' என்ற மேல்ஸ்தாயியில் எப்பொழுதும் பாடுவது மிகக்கடினமல்லவா?

நான் என்ற அஹங்காரம் உனக்கு இருக்கும் வரைக்கும் ஈசுவரன் தனக்கிஷ்டமிருந்தால் ரூபத்தோடு கூடியவராய் தரிசனம் கொடுப்பார். நீ உன்னை ஓர் ஜீவனுகப் பாவித்துக்கொள்ளுகிறவரையில், ஈசுவரனை ஓர் ஸ்வரூபியாகவே மனதில் கருத முடியும். இது உன்னுடைய சுபாவம்.

அத்வைதியின் முக்கிய நோக்கம், ஜீவாத்மாவை பரமாத்மாவில் கலக்கச் செய்வதாம்.

எல்லோரும் இவ்வண்ணம் செய்ய என் ஜகன்மாதா அபிப்பிராயப்படவில்லை. பெரும்பான்மையான ஜனங்கள் இந்த ஜன்மத்திலாவது, இனிவரும் மறுஜன்மங்களிலாவது, அகங்காரத்தை விலக்கமுடியாது.

ஆகையினுல் அவர்கள், (சாதாரண ஜனங்கள்) ஸமாதி தங்களுக்கு கிட்டாதிருக்கும் வரையினும், ஈசுவரனை ரூபத்தோடுதான் த்யானம் செய்யவும், அறியவும் முடியும். எனெனில் முனிவர்களும், சாஸ்திரங்களும், அறிந்தோரநுபவமும், பிரமாணத்துக்குட்படாத பரமாத்மா, உள்வெளி யிரண்டிலும் பிரமாணத்திற்குட்பட்டதாக, தோற்றுவிக்க முடியுமென்றும், நிர்க்குணப்பிரம்மமானது ஸகுணப் பிரம்மமாகத் தோற்றுமென்றும் நமக்கு ஒரேவிதமாக வற்புறுத்துகின்றன. இவ்வவதாரங்கள், தேகம், மனஸ், ஜகத் இவைகளைவிட அனேகமடங்கு நிஜமானவை. ஆகையினுல்தான். ரூபத்தோடுகூடிய ஈசுவரன் அவசியம் என்று தெரிந்தவன் (ஞானி) சொல்லுகிறுன்.

என் ஜகன்மாதா; தன் சிருஷ்டி விளையாடலில் என்னுடைய ஜீவாத்மாவாக மாத்திரம் அல்லாமல், இந்த ஜகத்தாகவும் தோற்றுவிக்கிறுள்.

ஸமாதியையடைந்து, பின் இந்திரியகோசாரத்திற்குட்பட்ட நிலைக்கு மறுபடியும் இறங்கிவரும் ஞானிக்கு, திவ்யசக்ஷுவை வகிப்பதற்கு வேண்டியமட்டும் (ஒருசிறுகோடுபோல்) மெலிந்த அஹங்காரம் தங்கிநிற்கிறது. இத்திவ்விய சக்ஷுவினுல் அவனுக்கு தன்னையும், ஜகத்தையும் என் ஜகன்மாதாவின் பலவித ரூபங்களாகப்பார்க்க முடிகிறது.

ஸிருஷ்டிக்கிரமத்தில் ஜகத்தையும் ஜீவனையும் உள்ளடக்கிய இருபத்தினான்கு தத்துவங்களாகத் தோற்றுவிக்கும் என் ஜகன்மாதாவின் இத்திவ்விய தரிசனம், எல்லோருக்கும் பார்த்தனுபவிக்கக்கிடையாது எவன் நிர்விகல்பஸமாதியில் நிர்க்குணப் பிரம்மத்தையும், ஸவிகல்ப ஸமாதியில் ஸகுணப்பிம்மத்தையும் பார்க்க சாத்தியமுள்ளவனாயிருக்கிறானோ அவனொருவன்தான் அந்த அற்புதக் காக்ஷியைக் காணப்பெற்றவனாவான்.

இவ்விதம் நிர்விகல்ப ஸமாதியை அடைந்தவனும்கூட ஓர் அதிருஷ்ட சக்தியினால் கீழ்ப்படியாகிய இந்திரிய கோசரத்திற்கடங்கிய உலகத்திற்கு இழுக்கப்படுகிறான்.

இவ்வதிருஷ்ட சக்தி யாது? அதுவும், அஹங்காரத்தை நிறுத்தவும், ஸமாதியில் அழிக்கவும், வல்லமையுள்ள ஸர்வசக்தியான என் ஜகன்மாதாவே,

வேதாந்தியோ இதை 'கர்மம்' என்கிறான். அதாவது, இந்தஜன்மத்திலோ, அல்லது, முன் ஜன்மங்களிலோ செய்த கர்மத்தினால் ஸமாதியிலிருந்து கீழ் நிலைமைக்கு வரும்படி ஆகிறது என்று.

ஒருவனுக்கு 'நான்' என்னும் அஹங்காரம் இருக்கிறவரைக்கும் கர்த்தா, கர்மம் இவை இருக்கின்றன அப்படியே காரணமும், பலனும்இருக்கின்றன. தவிர, ஜீவகோடிகளும், இருபத்திநாலு தத்துவங்களையுடைய ஜகத்தும், மூன்று காலங்களும், முன்ஜன்மங்களும், வரும் ஜன்மங்களும், இன்னும் ஜகத்திலிருக்கும்படியான பலவித வேறுபாடான விஷயங்களும் அவனுக்கு நிஜமாக இருக்கின்றன.

ஆனால் இவ்வேறுபாடுகள் நிஜமாக இருக்குமானால் இவற்றிற்குக் காரணமான என்ஜகன்மாதாவாகிய ஸகுணப்பிரம்மமும் நிஜமாக விருக்கிறது

ஸமாதி அறிவினால் மேற்கூறியவைகள் உறுதியாக்கப்படு கின்றன. 'இவைகளுக்கெல்லாம் காரணம் நான்தான். ஸத்கர் மம், துஷ்கர்மம் எல்லாம் எனக்கு அடங்கியிருக்கின்றன. கர் மம் என்ற நியாயம் இருப்பது உண்மையே. ஆனால் நானன்றோ நியாயாதிபதி. நியாயத்தைச் செய்யவும், அவைகளை அழிக்கவும் சக்தி என்னிடமிருக்கிறது. ஸத்கர்மம், துஷ்கர்மம் எல்லாம் என் ஆக்கினைக்குட்பட்டிருக்கின்றன.' ஆகையினால், பக்தியி னாலோ, ஞானத்தினாலோ, ஸத்கர்மத்தினாலோ, எவ்விதமாகிலும் என்னை நீங்கள் அடையுங்கள். நான் உங்களை இந்த ஜகத்தா கிற கர்மஸாகரத்தைக்கடக்கச் செய்கிறேன். வேண்டுமானால் பிரம்மஞ்ஞானத்தையும் அளிக்கிறேன். ஸமாதி நிலைமையை அடைந்தும், 'நான்' என்ற அஹங்காரமும், 'தேகம்' என்கிற அறிவும் கர்மமும் இருக்குமாகில்; அந்த அஹங்காரமும் அப்பே ர்ப்பட்ட தேகமும் கர்மமும் என் ஆக்கினையினால், என் நிமித் தமாக இருக்கின்றன என்று அறியவும்;' என்று என்னுடைய ஜகன்மாதா சொல்லுகிறாள்.

மேற்கூறியவைகளை, என்னுடைய ஜகன்மாதா, அவளு டைய குழந்தைகளாகவும், பிருத்தியர்களாகவும் இருக்கப்பட்ட வர்களுக்கு, ஸமாதி அறிவில் தெரியப்படுத்தியிருக்கிறாள்.

பிரம்மஞ்ஞானமே முடிவுஎன்றிருக்கப்பட்டவனும், முழு மனதுடனும், ஊக்கமுடனும் அவளைத் தியானம் செய்து, அவள்கருணையையே ஆதாரமாக நம்பினால் அதை நிஜமாக அடையலாம்.

பக்தன், ஞானமடையவேண்டுமென்னும் விருப்பமுடைய வனாகவிருந்தால், என்தாயையோ, அல்லது, அவளுடைய திவ்ய அவதார ரூபங்களிலொன்றையோ பக்திநிறைந்த மனதோடு நாடியடைந்து அவளுடைய ஆக்கினையால் ஸமாதியில் அவனு டைய மனதையும் இழக்கிறான்,

என் தாயாகிய ஸகுணப்பிரம்மம்தான் காரியம், கர்த்தா, என்ற வித்தியாசத்தை ஏற்படுத்தினவள். அவள் ஒருவளேதான் மனதை ஸமாதியில் அழித்து பிரம்மஞானத்தைக் கொடுக்க முடியும். அவள்தான் இவைகளுக்கெல்லாம் ஹேதுவாயிருக்கிறுளென்று ஸமாதியறிவிலிருந்து நாம் தெரிந்துக்கொள்ளுகிறேம்.

யுக்தியோடு, ஸமாதி அறிவுமிலாத கேவலம் வேதாந்தி, ஜீவனுக்கு ஸகுணப்பிரம்மம் முக்தியைத் தராதென்று, அதாவது, பிரம்மஞ்ஞானத்தைக் கொடுக்கமுடியாதென்று சொல்லுகிறன். நான், நீ, என்கிற வேற்றறிவோடுகூடிய கீழ் நிலைமையிலிருக்கும் ஜகத்திலிருந்துகொண்டே "நான் என்னுடைய உதவியினுலேயே பிரம்மஞ்ஞானமடைய முடியும்" என்கிறன். ஆனல், அதே நிலைமையில் நம்முடைய ஸ்வபாவ அவசியத்தால், என்னுடைய ஜகன்மாதாவாகிய ஸகுணப்பிரம்மத்தை ஒப்புக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது.

கேவலம் அற்ப அறிவுள்ள ஒருமனிதனுக்கு, பிரம்மஞ்ஞானமும், முக்தியும் அடையும்படியான வல்லமை யிருக்குமேயானல் ஜகதீசுவரியான என் ஜகன்மாதாவுக்கு, அந்தபிரம்மஞ்ஞானமும்,முக்தியும் கொடுக்க சக்தியில்லாமல் போய்விட்டதோ?

இந்த வேதாந்திகள், ஒரேபிரம்மம்தான் ஸகுணமாயும் நிர்க்குணமாயும் இருக்கிறதென்பதை மறந்துவிடுகிருர்கள். நாம் மனிதர்களாயிருக்கும்வரைக்கும், அப்பரமாத்மா பிரம்மஞ்ஞானத்தையும் மற்றவைகளையும் கொடுக்கக்கூடிய சர்வசக்தியுடைய ஈசுவரனுக வருகிருர் என்று அவர்கள் அறிகிறதில்லை.

கேவலம் யுக்தியை மாத்திரம் கொண்ட ஒருமனிதன் சரியானவழியை அடையமாட்டான்.

வேதாந்தி எந்தப் பகுத்தறிவாகிற புத்தியில் நம்பிக்கை வைத்திருக்கிருனே, அந்தப்புத்தியும் ஸகுணப்பிரமத்தினிடமிருந்துதான் வருகிறது. ஆகையினுல், ஸகுணப்பிரம்மம்தான் பிரம்மஞ்ஞானத்தைக் கொடுக்கமுடியுமென்று சொல்லுகிற அத்வைதியின்பக்ஷம் இதனுல் இன்னும் பலப்படுகிறது.

ஸத்து, அஸத்து என்று ஒன்றும் சொல்லமுடியாமல் வெள்ளியாய் யானென்பது முற்றிலும் அழிந்து ஸமாதியில் பிரம்மத்தை அடையும்பொழுதுதான் நிர்க்குணப் பிரம்மஞ்ஞானமேற்படுகிறது.

நீ அத்வைதமென்று எப்பொழுது சொல்லுகிறாயோ, அப்பொழுது துவைதம் ஒன்றுண்டென்று ஏற்படுகிறது. ஒன்று என்று சொன்னால், இரண்டுளென்பதும் உண்டென்பது நிச்சயம்.

நிர்க்குணப்பிரம்மம் என்று சொன்னால், ஸகுணப்பிரம்மமும் உண்டென்பது நிச்சயம். ஏனெனில் ஸமாதியில் நிர்க்குணப் பிரம்மம் அடையப்படுகிறவரையில் அது ஸகுணப்பிரமத்தின் ஒரு பாகமாகவே இருக்கும் இல்லாவிடில் சில அக்ஷரங்கள் சேர்ந்த ஒருவார்த்தையாகத்தானிருக்கும்.

நித்தியவஸ்து என்று சொன்னால், லீலாரூபமாகிய இவ்வுலகம் ஒன்றுண்டென்று ஏற்படுகிறது. அவ்வியக்தத்தை வைத்துத்தான் வ்யக்தமேற்படுகிறது. ஒளியென்று சொன்னால் இருளும் அதனுடன் கூடவிருக்கிறது. ஸுகம் என்றால் துக்கமும் அதனுடன் சேர்ந்து இருக்கின்றது. அநித்தியமும் லீலாரூபமும் ஆனஉலகம் எவனுடையதோ அவனுக்கே நித்தியத்துவமும் இருக்கிறது. பேதமில்லாத நித்தியத்துவம் எவனுடையதோ அவனுடையதுதான் இம்மாறுபாடுகளும்.

நீ அநித்தியமாயிருக்கும் உலகத்தின், வழியாகத்தான் நித்தியமாயிருக்கும் பரம்பொருளை அடையமுடியும். அப்படியடைந்து திரும்ப உலகத்திற்கு வந்தால், முன்போல் அநித்தியமாகத் தோன்றாமல் நித்தியவஸ்து ரூபமாகத்தோற்றும்.

நீ பரமாத்மாவைக் குறித்துப் பேசும்பொழுது உள்ளது போல் பேசமுடியாது. உன்னுடைய புத்திபாகிய அத்தியாஸத்தினால் அதைமுடிவே பேசவேண்டும். ஆதலால் ஈசுவரானு

பயம் தவிர நமக்கு வேறு வழியில்லை. என்ஜகன்மாதா "ஸகுணப் பிரம்மம் நான்தான்" என்றும், "ஸமாதியிலடையும் நிர்க்குணப்பிரம்மமும் நான்தான்" என்றும் சொல்லுகிறாள்.

தயிரின் உண்மையை மனதில் உத்தேசம் செய்துகொள்ளாமல் வெண்ணையைக்குறித்து நினைக்கவோ பேசவோமுடியாது. தயிரிலிருந்து வெண்ணைவருவதினால், வெண்ணையோடு தயிர்சம்பந்தப்பட்டது. வெண்ணைக்கும் தயிருக்கும் பரஸ்பரம் இருக்கும் ஸம்பந்தத்தால், தயிரை அறிய முடியுமானால் வெண்ணையையும் அறியமுடியும்.

குணத்தோடு கூடிய நிலைமையில், அதாவது, இந்திரிய கோசாரத்திற்கு அடங்கின ஸ்திதியில் வெண்ணை தயிர் இவ்விரண்டையும் ஒப்புக்கொள்ளவேண்டும்.

நான் ஜீவன்என்கிற ஞானம் உனக்கு என்ஜகன்மாதாவினால், கொடுக்கப்பட்டிருக்கிற வரைக்கும் நீ நித்தியமென்று சொல்லும்பொழுது மாறுதலடையும் லீலாவுலகும், நிர்க்குணப்பிரம்மமென்னும்பொழுது ஸகுணப்பிரம்மமும், வஸ்துவென்னும்பொழுது அதின்குணங்களும், ஒன்று என்னும்பொழுது அநேகமும் சூசிப்பிக்கப்படும்.

ஜகதீசுவரியானவள் உன் அஹங்காரத்தை ஸமாதியில் நசிக்கச்செய்யும்பொழுது, நீபிரம்மத்தை அடைந்தவனுய் மௌனியாய் நிற்க. எல்லாம் தத்ஸத் என்ற ஞானம் வருகிறது. எப்படி உப்புப்பிரதிமை கடலின்ஆழத்தை அளக்கக் கால்வைத்ததும், தன்ரூபத்தை யிழந்து சமுத்திரத்தோடு கலந்ததோ அவ்வாறேதான்.

மேற்கூறிய விஷயத்தை உபமானவழியாக நாம் அறியமுடியுமானால், ஸமாதியில் அறிந்த பிரம்மத்தை-தாந்தபானுக்கும் நிர்க்குண ஸகுணப்பிரம்மத்தை வெண்ணைக்கும், இருபத்திநாலு தத்துவங்களடங்கிய ஜகத்தை தயிருக்கும் ஒப்பிடலாம்.

என்னுடைய ஜகன்மாதா (ஸகுணபாகம்)வானவள், 'வேதாந்தத்தில் சொல்லப்பட்ட (ஸகுண நிர்க்குண) பிரம்மம் நான்தான். பிரம்மஞ்ஞானத்தைக் கொடுக்கும் சக்தி என்னிடத்திலிருக்கிறது. நான் அஹங்காரத்தை நசிக்கச்செய்து, ஸமாதியில் பிரம்மானுபவத்தை உண்டுபண்ணுகிறேன்' என்று சொல்லுகிறாள்.

இவ்விதமாக, என்னுடைய ஜகன்மாதாவின் அருளினால் ஞானமார்க்கத்தில் நீ பிரம்மத்தை அடையலாம். ஆயினும் நம்மை பலமாகப் பிடித்துக்கொண்டிருக்கும் நான் தேகம்என்னும் ஞானத்தை விலக்குவது மிகக் கஷ்டமாயிருப்பதினால், இக்கலியுகத்தில் ஞானமார்க்கத்தில் பிரம்மத்தை அடைவது மிகத் துர்லபம். சிலருக்குத்தான் முடியும்.

மேலும், நீ பக்திமார்க்கத்தினால், அதாவது, ஆத்ம பரித்தியாகத்தினாலும், பகவத்ப்ரேமையினாலும், ஞானத்தை அடைந்து பிரம்மத்தை அடையலாம். ஆனால் அந்நிலையை அடைவதற்குமுன், ஸகுணப்பிரம்மமாகிய என் ஜகன்மாதாவை அடைய வேண்டும்.

இது உறுதியாகச் சொல்லலாம். உங்கள் பக்தி மனப்பூர்த்தியாயிருந்தால், என்னுடைய ஜகன்மாதா அவசியம் உங்கள் வேண்டுகோளைக் கேட்பாள். ஆனால் பொறுமையா யிருக்கவேண்டும். இவ்விதமாக அவள் தன்குழந்தைகளுக்குத் தெரியப் படுத்தியிருக்கிறாள்.

அவளுடைய நிர்க்குணம்சத்தை அடையவேண்டுமானால் அடிக்கடி அவளைப் பிரார்த்தியுங்கள். அவள் பராசக்தியானதால், உங்கள் பிரார்த்தனைக்கு இணங்கினால் ஸமாதியில் அவளுடைய நிர்க்குணம்சத்தையும் நீங்கள் அடையும்படி செய்வாள். பிரம்மஞ்ஞானமென்பதும் இதுவேதான்.

ஆனால், ஸாதாரணமாக பக்தன் என் ஜகன்மாதாவின் அல்லது, அவளுடைய திவ்விய அவதாரமான ஸ்ரீ கிருஷ்ணன், சைதன்ய தேவர்முதலான அனந்தகல்யாண ரூபங்களின் தரிச

னத்தில் திருப்தியடைவான். பக்தன் நிர்க்குணப்பிரமத்தை அடைய அனேகமாக ஆசைப்படுகிறதில்லை. ஸமாதியில் தன்முழு அஹங்காரமும் நசிக்கப்பட்டுவிடுகின்ற கவலையோடிருக்கிறான். நான்தனியனாக இருந்துகொண்டு, அவள் திவ்யரூபத்தின் தரிசனத்திலுண்டாகும் பிரம்மானந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறான். தான் சர்க்கரையாயிருப்பதைவிட சர்க்கரையின் மதுரத்தை அனுபவிக்க இச்சைப்படுகிறான். அவ்வித இச்சையோடிருப்பவர்களுக்கு, என்மாதா தன்பக்தர்களான குழந்தைகளிடத்தில் பிரீதியோடு கூடினவளாய்த் தன் திவ்விய ரூபதரிசனத்தை அளிக்கிறாள்.

பிரம்மத்தை அடைந்தவன், வேதாந்தவிஷயங்களில் அநுபவந்தான் முக்கியம் என்று சாதிப்பான். ஆரம்பம்முதற்கொண்டே "அந்தப்பராசக்தியை நான் எல்லாவஸ்துக்களிலும் பார்க்கிறேன். புருஷன், ஸ்திரீ, மிருகம், பக்ஷி, மரம், புஷ்பம் எல்லாவற்றிலும் கடவுளைப் பார்க்கிறேன்! நான் ஆனந்தத்தில் மூழ்கினவனாக விருக்கிறேன்! நான் சுகம், துக்கம் எல்லாவற்றையும் கடந்தவனாயிருக்கிறேன், ஸோஹம், ஸோஹம்" என்று சொன்னால்போதாது.

முதலில் அத்தியாவசியமானது ஸாதனை. இதன்றி ஒருவன் பக்தி அடையமுடியாது. ஸாதனை யில்லாதவனுக்கும், பிரம்ம ஞானத்திற்கும் வெகுதூரம்.

அத்திவ்விய பொக்கிஷங்கள் கள்ளறையில் பத்திரமாகப் பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. நீ அப்பொக்கிஷங்களைத் திறக்கவில்லை. நீ "பூட்டைத்திறந்துவிட்டேன்; அறையை அடைந்தாய்விட்டது; நவரத்தினங்களான திவ்விய பொக்கிஷத்தைக் கைப்பற்றிக்கொண்டேன்" என்று கேவலம் வாயினால் மாத்திரம் சொன்னால் போதாது.

அந்த திவ்விய ரூபத்தைத் தரிசித்த புண்ணியாத்மா, இவ்வுலகின் நாமரூபங்களைத் தள்ளி நிஜ ஸ்வரூபத்தை யறிந்து, உலகத்தைப் புதிதாகப் பார்க்கும் குழந்தைபோல் ஸரளமாக விருக்

கிறான். திவ்விய தரிசனத்தை அடைந்தவுடனே அடிக்கடி, பிரேமையினால் மயங்கி புண்ணியக்கடலோடு கலக்கிறான். சுசி அசுசி என்னும்படியான வித்தியாசங்கள் அவனுக்குக்கிடையா. அடிக்கடி மெய்ம்மறந்து, ஸமாதியிலாழ்ந்து, கேவலம் ஜடம் போல் சலனமற்றவனாகத் தோற்றுவான்.

அத்தியாயம் 5

பக்தியோகம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர்:—ஸமாதி ஸித்தியாகிற வரைக்கும், அதாவது, பகவத் தரிசனமடைகிறவரைக்கும், ஒருவன் சுசியோடு இருக்கவேண்டும்; அதாவது பெண்ணாசை பொன்னாசை இவைகளை முற்றிலும் விட்டுவிடவேண்டும்.

பிரம்மஞ்ஞானமடையத் தடையாகவிருக்கும் 'நான்' என்ற அஹங்காரத்தை விலக்குவது மிகக்கடினம்! பிரம்மஞ்ஞானமடைந்தும், முற்கூறியவாறு, முக்தியடைந்த ஜீவன், என்தாயின் அதிருஷ்ட சக்தியினால் இந்திரியகோசரத்திற்குட்பட்ட கீழ் நிலைமைக்கு இழுக்கப்பட்டு, மிகவும் மெலிந்துபோன 'நான்' என்ற அஹங்காரத்தோடு இருக்கும்படியாக நேரிடுகிறது.

நீ ஓர் புலி வந்ததாகக் கனவு காண்கிறாய். உன் கை கால்கள் நடுங்குகின்றன. உன் மார்பு படபடவென்றடிக்கிறது. நீ கண் விழித்தெழுந்ததும், கனவென்று அறிகிறாய். ஆயினும் நெஞ்சு துடித்துக்கொண்டேயிருக்கிறது.

ஆதலால், 'நான்' என்ற அஹங்காரம் நம்மைவிட்டு விலகாமற்போனால் செய்வது யாது? ஏன், "ஈசுவரனுக்கு நான் பிருத்தியன்" என்ற உபாதி ஒன்று மாத்திரம் இருந்துகொண்டிருக்கட்டும்.

ஆனால், 'நான்' 'என்னுடையது' என்றலௌகிக ஜனங்களுடைய அஹங்காரமாகிய அக்ஞானம் பகவானை அடையவொட்டாமல் தடுக்கிறது. எல்லாம் பகவானுடைய ஆக்கினையினால் நடக்கிறது. மனிதன், 'நான்தான் சிருஷ்டி கர்த்தா; நான் யஜமானன்; இவைகளெல்லாம் என்னுடையவை' என்று சொல்லுவது நகைப்புக்கிடமாகிறது.

இரண்டு சந்தர்ப்பங்களில் பகவான் புன்னகை கொள்கிறார்:—

ஒருவன் வியாதியினால் அவஸ்தைப்பட்டு, மரணகாலம் நெருங்க அத்தருணத்தில் வைத்தியன் அவனருகில்சென்று அவன் தாயைப் பார்த்து, 'அம்மா, உனக்கு ஓர் கவலையும் வேண்டாம். உன் மகனை நானே பிழைக்கச் செய்கிறேன்" என்று சொல்லுகிறான்.

அவள் மகனுடைய மரணம் ஈசுவரனுடைய இச்சைப்பிரகாரம் நடக்கிறதென்பதை இவ்வைத்தியன் அறியான்போலும்!

அப்பொழுது பகவான் 'மரணத்திற்குக் காரணம் நானயிருக்க, இம்மூடவைத்தியன் 'தான் இரக்ஷிக்கப்போகிறேன்' என்கிறான்' என்று நகைக்கிறார்.

மறுபடியும், இரண்டு ஸஹோதரர்கள் நிலத்தை பங்கிட்டுக் கொள்ளுகிறதற்காக கையில் அளவுகோலை எடுத்துக்கொண்டு, தங்கள் நிலத்தை அளந்து கோடுகிழித்து 'இதுவரைக்கும் என்னுடையது, அந்தப் பக்கம் உன்னுடையது என்று சொல்லிக் கொள்ளும்பொழுது, பகவான் நகைத்து, 'இம்மூடர்கள், 'எல்லா பூமியும் என்னுடையது' என்றறியாமல், தங்களுடையது என்று சொல்லுகிறார்கள்!" என்கிறார்.

ஒரு தனிகன் தன் தோட்டத்தைத் தன் காரியஸ்தனிடம் ஒப்புவித்திருக்கிறான். காரியஸ்தன், தன் தோட்டத்தைப் பார்க்க வருபவர்களிடம் நிரம்ப மரியாதையாகவும், ஜாக்கிரதையாகவும் இருக்கிறான். அவர்களை தோட்டத்திற்குள்ளும், அதைச்

சேர்ந்த வீட்டிற்குள்ளும் அழைத்துக்கொண்டுபோய், 'இதோ எங்கள் கிச்கிலி, கொய்யா முதலான மரங்கள்; இது எங்களுடைய கூடம்; அதோ எங்களுடைய அழகிய சித்திரப்படங்கள் மாட்டப்பட்டிருக்கின்றன' என்கிறான்.

காரியஸ்தன். எஜமானனுக்கு அதிருப்தியுண்டாகும்படியாக ஏதாகிலும் செய்தால் அவன் கதி என்னவென்று தெரியுமா? அவன் உடனே அத்தோட்டத்தினின்றும் துரத்தப்பட்டவனாய், தன் மரப்பெட்டியைக்கூட எடுக்க ஸாவகாசமில்லாமல், உடனே அவ்விடத்தைவிட்டு விலகவேண்டியவனாயிருக்கிறான்.

இதே மனிதன்தான் சற்று முன்பு 'எங்களுடைய இது, எங்களுடைய அது' என்று சொல்லிக்கொண்டிருந்தவன். இந்தக் காரியஸ்தனுடைய 'என்னுடையது,' அல்லது, 'எங்களுடையது' என்னும் எண்ணம் அஞ்ஞானத்தினாலுண்டானது.

புத்தி சக்திக்குறைவானது. பக்திக்கு அளவில்லாத சக்தியுண்டு. புத்தி சிறிது தூரம்தான் போகமுடியும். அதற்கெட்டாமல் அனேக விஷயங்களிருக்கின்றன ஆனால் பக்தியினால் அனேக ஆச்சரியமான ஸாஹஸங்களைச் செய்யலாம் நிஜமாக மனிதன் பக்தியைக் கைக்கொண்டு கொஞ்சமேனும் சிரமமில்லாமல் ஸமுத்திரத்தையும் கடக்க முடியும்.

பகவானுடைய அவதாரமாகிய ஸ்ரீ ராமச்சந்திரன் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் மத்தியிலிருக்கும் கடலைக்கடக்க ஒரு பாலம் கட்ட மிக்க சிரமப்பட்டார். உலகத்திற்கெல்லாம் பக்தியின் மஹிமையையும், சக்தியையும் எடுத்துக்காண்பிக்கும்பொருட்டு, தன்னிடத்தில் அளவில்லாத பக்தியுடனிருந்த ஹனுமானுக்கு, பக்தியினால் மாத்திரம் (பாலமின்றி) கடலைத்தாண்டச் செய்தார்.

ஒரு காலத்தில் இலங்காதிபதியான விபீஷணனுக்குச்சினேகிதனாயிருந்த ஒரு பக்தன் கடலைக் கடக்கவேண்டியதாய் நேரிட்டது. அப்பக்தன் விபீஷணனைநாடிவேண்ட, அவனறியாமல்

விபீஷணன் ஒரு இலையில் ராமா என்னும் திவ்விய நாமத்தை எழுதித் தன் நண்பனிடம் கொடுத்து, 'அப்பா, நீ இதை உன்னுடைய வஸ்திரத்தின் தலைப்பில் முடிந்து பத்திரப்படுத்திக்கொள். இதன் உதவியினால் நீ சமுத்திரத்தைக் கடப்பாய். ஆனால் நீ இதை வெளியிலெடுத்துப் பார்க்க முயன்றால், அதே நிமிஷத்தில் சமுத்திரத்தில் மூழ்கிவிடுவாய்' என்றார்.

அந்த பக்தன் தன் நண்பர் வார்த்தையில் நம்பிக்கையுடைவனாய் கொஞ்சதூரம் சமுத்திரத்தில் க்ஷேமமாய் நடந்து சென்றான். அவன் துரதிர்ஷ்டத்தினாலேவப்பட்டவனாய் என்ன அற்புத வஸ்து தன் வஸ்திரத்தில் கட்டப்பட்டு, தன்னைக் கடலில் நடக்கச்செய்கிறதென்பதை அறியும் ஆவலுடையவனாய் அதை அவிழ்த்துப் பார்க்க, தட்சணமே சமுத்திரத்தில் மூழ்கினான்.

வாஸ்தவத்தில் பக்திக்கு அபார சக்தியுண்டு. அதன் சக்தியின் முன்பு இயற்கைச் சக்திகள் வழிவிட்டு ஓடும். பக்தியிருக்குமேயாகில் ஒரு கஷ்டமுமின்றி கடலையும் கடக்கலாம்; மலையையும் தாண்டலாம். மேலும், பக்தியிருக்குமேயாகில், உலக இச்சை, பாபதோஷம், உலகப்பற்று, அஞ்ஞானம், எல்லாம் துலைந்துவிடும்.

பகவான் அடியில்வரும் கருத்துக்களடங்கிய பாடலைப் பாடுகிறார்:

கடவுள் திருநாமம்.

1. "என் தாயே! துர்க்கை, துர்க்கையென்று உன் திவ்விய நாமத்தை உச்சரித்துக்கொண்டேநான் பிராணனைவிடமுடியுமானால் ஏ சங்கரி! உன் எளிய குழந்தையை, முடிவில் இந்த ஸம்ஸார ஸாகரத்தின் மறுகரையில் சேர்க்காமலிருக்க முடியுமா பார்க்கலாம்.

2. நான் கோஹத்தி, அல்லது பிரம்மஹத்தி செய்தாலென்! கருவழித்திருந்தாலென்! குடிகாரனாயிருந்தாலென்! ஸ்திரீஹத்தி செய்தாலென்! இக்கொடிய மஹாபாபங்களைக் கொஞ்சமேனும்

நான் லக்ஷியம் செய்யவில்லை. இவ்விதமிருந்தபோதிலும் உன் நாமஉச்சாரண மகிமையினால் உன்னதமான பிரம்மத்தை அடையும் படியான சக்தி என்னிடமிருக்கின்றது."

ஆம், ஸாதன விர்த்திக்கு நம்பிக்கைதான் முக்கியமானது. மற்றவைகளெல்லாம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் நம்பிக்கை ஒன்றுமட்டிலும் இருக்கவேண்டும். கடவுளிடம் பக்தி சிரத்தையுடன் இருந்தால், நீ எல்லா மஹாபாபத்தினின்றும் விமோசனமடைவாய்.

மூலகாரணமான பக்தி.

1. என் ஜகன்மாதாவை நினைக்க நினைக்க ஈசுவர விஷயமாகவே எண்ணங்கள் என் மனதில் உதிக்கின்றன. ஈசுவரனிடம் எவ்வளவு பிரேமையிருக்கின்றதோ, அவ்வளவு அருள் கிடைக்கும். ஆனால் எல்லாவற்றிற்கும் மூலகாரணம் பூர்ணமான பக்தியே.

2. என் ஜகன்மாதாவாகிய பராசக்தியின் திவ்வியத்திருவடி அமிருதஸரஸாயிருக்கின்றது. உன் மனம், அவ்வமிருத ஸாகரத்தையடைந்து, தினம் முழுகிக்கொண்டிருந்தால் உனக்குப் பூஜை, ஹோமம், ஜபம், யாகம் முதலிய வேறு யாதொன்றுமே அவசியமில்லை.

3. என் தாயான ஜகதீசுவரியைப் பூஜைசெய்யும் பக்தன், இந்த ஜன்மத்திலேயே மோக்ஷத்தையடைந்து, நித்தியானந்த சுவரூபனாகிறான்."

ஆம், முக்கியமானவை பக்தியும் சிரத்தையுமே. இக்கலியுகத்தில், பகவானுடைய அனுக்கிரஹமில்லாமல், அற்ப புத்தியினால் செய்யும் நித்தியா நித்திய வஸ்து விசாரத்தினாலேயே எனது ஜகன்மாதாவை அடைவது அசாத்தியம். நமது ஸ்தோத்திரக்கவியாகிய ராமப்பிரஸாத் 'ஓ என் மனமே' என்று ஆரம்பிக்கும் பாட்டில் இதை எடுத்துச் சொல்லியிருக்கிறார் என்று குருபாட ஆரம்பித்தார்.

ஸகுண நிர்க்குணப்பிரம்மத்தின் ஒற்றுமை
ஞானயோகத்தின் துர்லபம்.

---

1. ஓ, என் மனதே! எவ்விதமாக நீ பகவானையடையப்போகிறாய்? நீ பித்தனைப்போல் இருட்டறையில் தடுமாறுகிறாய்!.

2 நீ இவ்வீட்டிலிருக்கும் இச்சையென்னும் காவலனை அடக்க உன்னாலியன்றமட்டும் முயற்சி செய். இவ்வீட்டில் அநேக அறைகளிருக்கின்றன. அவ்வறைகளில், திருடனால் உட்செல்லமுடியாத ஓர் கள்ளறையில், திவ்விய பொக்கிஷம் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றது.

இச்சையாகிய காவலனை உன் கைக்குள்ளாக்கிக்கொண்டால், நீ திருடன்போல் மெல்ல மெல்ல அவ்வறையை அடைந்து, அப்பொக்கிஷத்தை உனது சொந்தமாக்கிக்கொள்ளலாம். ஆனால், நீ இச்சையை அடக்காமல் பொழுது விடிந்துவிட்டால், கள்ளறையிலிருக்கும் பொக்கிஷம் உன் கைக்கு எட்டாது.

3. பரமாத்மாவோடு கலக்கவும், பிரேமையை அடையவும் யோகியானவன் அநேக வருஷங்கள் தியானம் செய்கிறான். யோகியின் ஹிருதயத்தில் அப்பிரேமை உதித்தவுடனேயே, இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல் பிரேமையினால் பரம்பொருள் இழுக்கப்படுகிறது.

4. வேதங்களிலும், தந்திரங்களிலும், ஆறுசாஸ்திரங்களிலும் காணமுடியாதவளாய், பக்தியென்னும் இனிய பாகில் பிரியமுள்ள தேவி நித்தியானந்த பரிவைதயாய் இந்நகரில் கொலுவிருக்கிறாள்.

5. நான் அடைய முயற்சி செய்யும் என் ஜகன்மாதாவின் நிஜநாமதேயத்தைச் சொல்லட்டுமா? அது, கருணையில்லா ஜனங்கள் முன்பு, சந்தைக்கூட்டத்தின் மத்தியில் என் நைவேத்தியப்பாத்திரத்தை உடைத்தாற்போலாகாதா? ஏ மனதே! நான்கொடுத்த சூசனையிலிருந்து அந்த மஹாஸ்வரூபியாரென்று ஊகித்துப் பார்!"

அதிக கவனத்துடன் கேட்டுக்கொண்டுவந்த இப்பாடல் முடிந்ததும், எங்கும் நிச்சப்தமாயிருந்தது. எல்லோர்மனமும் உருகியது. மேற்கூறிய பாடலில் வர்ணனை செய்த திவ்விய மாதாவின் பாதகமலங்களைத் தியானம் செய்தவராய் பகவான் அசைவற்றிருந்தார்.

அத்தியாயம். 6

ஒரு சிநேகிதர் வித்தியாஸாகரரிடம் 'சாத்தர்' என்பதின் அர்த்தமென்னவென்று கேட்டார்.

வித்தியாஸாகரர் (சிரித்துக்கொண்டு) :— சாத்தர் – அதாவது, சத்தார அல்லது உத்தான்; ஒரு வீட்டின் முற்றம்; அல்லது சந்தை கூடுமிடம்.

பகவான் (வித்தியாஸாகரரிடம்):—ஆம், அப்படித்தான். நீர் பண்டிதரன்றோ! உம்க்குத் தெரிந்திருக்கவேண்டுமே. (சிரித்துக்கொண்டு) ஸரி, ஈசுவரனைப்பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன ?

வித்தியாஸாகரர் (அங்கிருப்பவர்களைச் சுற்றிலும் பார்த்து) :— ஸ்வாமி, என்னை மன்னிக்கவேண்டும். நான் வேறோர் சமயம் தனியாய் தங்களிடம் பேசுகிறேன்.

பகவான் (சிரித்துக்கொண்டு):-ஸரி, உங்களுக்கு எல்லாம் தெரியும்; ஆனல் இப்பொழுது பேச இஷ்டமில்லைபோலவிருக்கிறது. ஸமுத்திர ராஜனகிய வருணனிடம் கணக்கற்ற இரத்தினங்கள் இருக்கின்றன. ஆனல் அவருக்கு தன்னிடமிருப்பன ஒவ்வொன்றையும் கணக்கு வைத்துக்கொள்வது அசாத்தியமல்லவா ?

(யாவரும் சிரிப்பு.)

சாதாரணமாய் ஏராளமான பணத்தையுடைய ஒரு பாபு (தனவான்) தன் வேலைக்காரர்கள் பெயர்கூடத் தெரியாமலிருக்

கிறன். ஏனென்றால், அந்த பாபு அற்ப மனிதர்களோடு தான் போவது அந்தஸ்துக் குறைவென்று நினைக்கிறான்!

(யாவரும் சிரிப்பு.)

பகவான்(வித்தியாஸாகரரிடம்):—நீர் ஒருதரம் தக்ஷிணேஸ்வரம் தோட்டத்திற்கு வரக்கூடாதா? அவ்விடம் மிக்க வசீகரமாயும், அதிரமணீயமாயும் இருக்கின்றது.

வித்தியாஸாகரர்.—அவசியம் வருகிறேன். தாங்கள் இவ்வளவு தூரம் பிரியத்துடன் இவ்விடம் வந்திருக்கும்பொழுது, நான் தங்களைத்திரும்பிவந்து பார்க்க அவ்விடம் வரவேண்டியது என்னுடைய கடமையல்லவா?

பகவான் (சிரித்துக்கொண்டு):— என்னைப் பார்ப்பதற்க்காகவா! வெட்கமாயிருக்கிறதே!

வித்தியாஸாகரர்:—ஸ்வாமி, தங்களிடத்திலிருந்தோ இச்சொற்கள்? தாங்கள் இப்படிச் சொல்லுவதின் கருத்தென்ன?

பகவான்:-சுவாமி, நான் சொல்லுவதென்னவெனில், நாங்கள் சிறிய மீன்படகுகள்; மெல்லியதாயும் எங்கும் செல்லக்கூடியதாயும் இருக்கிறோம். நீரோ பெரிய வியாபாரக்கப்பல். நதியில் வெகுதூரம் போனால் மணலில் உறைந்தாலும் உறையும். (யாவரும் சிரிக்கிறார்கள்.) ஆனால் தற்காலம், கால வித்தியாஸங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஏன் அப்படித்தானே?

(யாவரும் சிரிப்பு.)

வித்தியாஸாகரர் (சிரித்துக்கொண்டு) ஓ ஹோ, இப்பொழுது மழைகாலமாரம்பித்தாய்விட்டதோ?

இரவு மணி எட்டு ஆய்விட்டது, பகவானை தக்ஷிணேஸ்வரத்தில் ஆலயத்துக்கு அழைத்துச்செல்ல வண்டி தயாராய் வந்திருக்கிறது. பகவான், சற்று மெய்மறந்திருந்தார். அவர் அப்பொழுது

தன் ஜகன்மாதாவை தியானம்செய்துகொண்டிருந்தார்போலவிருந்தது. தனக்கு விருந்தளித்தவருக்கு அநுக்ரஹம் செய்யும்படியும் பிரார்த்தித்துக்கொண்டிருந்தாரோ?

பகவான் புறப்பட எழுந்திருந்தார்; வித்தியாஸாகரர் கையில் மெழுகுவர்த்தி விளக்கெடுத்துக்கொண்டு மாடியிலிருந்து வழிகாட்டி, பகவானையும் அவர் சிஷ்யர்கள் முதலானவர்களையும் வந்திருக்கும் வண்டிக்கருகில் அழைத்து வந்தார். அவர்கள் அப்படி வரும்பொழுது, தாங்கள் எதிர்பாராத, சிரித்த முகமும், அகன்ற கண்களும், வெள்ளை வஸ்திரமும், பஞ்சாபித் தலைக்குட்டையும், கட்டின கைகளும் உடையவனாய், நாற்பது வயதிற்குட்பட்ட ஓர் மனிதன் வாசலுக்கெதிரே நிற்கக்கண்டார்கள். அம்மனிதன் பகவானைப் பார்த்தத் தக்ஷணமே தன் பெரிய தலைக்குட்டை நிலத்தில் படும்படியாக ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்தான்.

பகவான்:—யார் பலராமனா? ஏது இங்கே வந்தாய் இப்பொழுது? என்று சொல்ல.

பலராமன் (சிரித்துக்கொண்டு) :— ஸ்வாமி, கொஞ்சநேரமாகத் தங்கள் தரிசனத்திற்கு காத்துக்கொண்டிருக்கிறேன். என்கிறான்.

பகவான்:—நல்லது, நீயேன் உள்ளே வரவில்லை

பலராமன் (சிரித்துக்கொண்டு):—நேரம்சென்று வந்தேனாதலால், உள்ளே வருவதைவிட இங்கே இருப்பது நல்லதென்று நினைத்தேன்.

பகவான் தன் சிஷ்யர்களோடு வண்டியிலேறினார்.

வித்தியாஸாகரர் (எம்மைப் பார்த்து) :—நான் வண்டி வாடகை கொடுக்கட்டுமா?

எம் :—வேண்டாமய்யா, அவசியமில்லை. முன்னமேயே ஒரு சினேகிதனால், வண்டி வாடகை கொடுக்கப்பட்டது.

பண்டிதர் கைகூப்பித் தலைகுனிந்து பகவானுக்கு நமஸ்கரித்தார். வண்டியின் அருகிலிருந்தவர்களெல்லோரும் அவ்வாறே செய்தார்கள். வண்டிக்காரன் குதிரைகளையோட்ட, வண்டி வடக்கு திசை நோக்கி வேகமாகச் சென்றது.

வித்தியாஸாகரர் கையில் மெழுகுவர்த்தி விளக்குப் பிடித்தவராய், தன்னருகிலிருப்பவர்களோடு வண்டி சென்ற திசையை நோக்கியவராய், 'இவ்வளவு பக்தியும், இனிமையும், ஆனந்தமும், ஞானமும் நிறைந்து, சிறு குழந்தைபோலிருக்கும் ஞானப்பித்தம் பிடித்த இம்மஹாபுருஷன் யாராயிருக்கக்கூடும்' என்று ஆச்சரியத்துடன் நின்றார்.

உலக விவகாரத்திலிருக்கும் ஜனங்களை உயிர்ப்பிக்க அனுப்பின மின்னலோ இவர்! அல்லது, மனிதர் ஹ்ருதயத்தின் தாபத்தைத் தணிக்க வந்த ஈசுவரகருணை மழையின் ரூபமோ! அலுத்துப்போன மனிதர்களுக்கு, 'உன் ஜன்மத்தை மாற்றி என்னை நாடு' என்று கடவுள் உகந்தளித்த மொழியோ! தற்கால நாகரிகமென்ற வியாதியைத் தீர்க்கவந்த வேற்றுலகத்து வைத்தியனோ! அல்லது, இப்பிரபஞ்சத்தின் மறைபொருளை மனிதர்களுக்கு எடுத்துக்காட்டவந்த புருஷ சிரேஷ்டரோ இவர்!

பிரிவு-3

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தக்ஷிணேசுவரம் ஆலயத்தில் நரேந்திரன் (விவேகானந்தர்) ரக்கல், எம், இன்னும் மற்றவர்களோடும்

1882

அத்தியாயம். 1

பகவான் தன்னைப்பற்றிச் சொல்லிய வரலாறு.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இன்று ஆனந்தபரவசமாயிருக்கிறார். ஏனென்றால் நரேந்திரன் (விவேகானந்தர்) அவரைப்பார்க்க ஆலயத்திற்கு வந்திருக்கிறார். நரேந்திரன் இவ்விடமே ஸ்நானம் செய்துவிட்டு பிரஸாதத்தைக்கொண்டு காலைப் போஜனம் செய்தார்.

அன்று, 1882-வது வருஷம், அக்டோபர் (அசுவினி)மாதம் 16-தேதி திங்கட்கிழமை, சுக்கிலபக்ஷ சதுர்த்தி அடுத்த வியாழக்கிழமை துர்க்கை பூஜை உத்ஸவம் நடக்கும்.

சிறிது காலமாக 'ரக்கல்' பகவானோடு இருந்து வருகிறார். ராம்லால், ஹஸ்ரா, எம், நரேந்திரனோடு வந்த இரண்டு பிரம்ம ஸமாஜச் சிறுவர்கள் எல்லோரும் இவ்விடம் இருக்கிறார்கள்.

11, 12-மணிக்கு காலைப்போஜனமானதும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் எல்லாச் சிஷ்யர்களையும், குறிப்பாக நரேந்திரனையும் இளைப்பாறும்படியாகச் சொன்னார். அறையில் கீழே சிரமபரிஹாரம் செய்வதற்காக படுக்கை விரிக்கப்பட்டிருக்கிறது. தரையில் பாயின்மேல் மெல்லிய மெத்தைபோட்டு, அதன்மேல் ஒரு வெள்ளைத்துப்பட்டியும் விரிக்கப்பட்டு, சில தலையணைகளும் போடப்பட்டிருந்தன. பகவான், நரேந்திரனுக்கு அருகில் படுக்கைமேல் உட்கார்ந்துகொண்டு, நரேந்திரனோடும், இதர சிஷ்யர்களோடும் குழந்தைபோல் பேசிக்கொண்டிருக்கிறார். அவருடைய கண்கள் நரேந்திரனைப் பார்த்தவைகளாய் முகம் புன்சிரிப்பினால் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

வாழ்க்கையில் நாடவேண்டிய விஷயங்களை சிஷ்யர்களுக்கு, முக்கியமாக நரேந்திரனுக்குக் காண்பித்து எவ்விதம் உயிர்வாழ வேண்டுமென்பதை உபதேசிக்கப் போகிறார்.

பகவான் (நரேந்திரனையும் மற்றவர்களையும் பார்த்து):—எனக்கு இவ்விதம் (பகவத் காக்ஷியினால் உண்டான) மாறுதல் வந்தபொழுது பகவானுடைய சரித்திரத்தைக் கேட்க மிக்க ஆவலாயிருந்தேன். நான், பாகவதம், மஹாபாரதம் முதலானவைகளைப் பாராயணம் செய்யும் இடங்களையும், ஸ்ரீ கிருஷ்ணன், ஸ்ரீராமன் முதலான திவ்விய அவதாரங்களின் சரித்திரங்களையும், உபதேசங்களையும் கேட்க மிக்க ஆவல்கொண்டு அவ்விடங்களைத் தேடிக்கொண்டிருந்தேன். கிருஷ்ணகிஷோர் அத்யாத்ம ராமாயணம் படிப்பதைக் கேட்க நான் போவது வழக்கம்.

கிருஷ்ணகிஷோர் என்ன அற்புத பக்தியுடையவர்! ஒரு தரம் பிருந்தாவனத்திற்கு அவர் யாத்திரை சென்றிருந்தார். ஒரு நாள் கால்நடையாய் போய்க்கொண்டிருக்கும்பொழுது தாகத்தினால் வருந்தி, ஒரு கிணற்றருகில் ஒரு மனிதன் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்து, தனக்குக் கொஞ்சம் ஜலம் எடுத்துக் கொடுக்கும்படியாகக் கேட்டார்.

அவன்தான் மிகவும் கீழ்ஜாதியைச் சேர்ந்தவனென்றும், பிராம்மணனுக்கு ஜலம் எடுத்துக்கொடுக்க யோக்கியதையற்றவனென்றும் சொன்னான். கிருஷ்ணகிஷோர் 'நீ சிவநாமத்தை உச்சரித்துக்கொண்டு உன்னைப் பரிசுத்தம் செய்துகொள்' என்றார். அவன் அவ்விதமே செய்து ஜலம் எடுத்துக்கொடுக்க அந்தப் பிராம்மணன் அந்த ஜலத்தைக் குடித்தார். ஆஹா! அவருடைய பக்தியின் மகிமை எவ்வளவு!

ஒரு சமயம் ஒரு புண்ணியவான் 'அரியாத' கட்டத்தில் வசிக்க வந்தார். நாங்கள் அவரைப் பார்க்கப்போகவெண்ணினோம். ஒருநாள் கோவிலில் ஹலதாரியினிடம், 'கிருஷ்ணகிஷோரும் நானும் அம்மஹானைப் பார்க்கப் போகிறோம்; நீயும்

வருகிறீரா ?" என்று கேட்டேன். அதற்கு ஹலதாரி, 'கேவலம் களிமண் கூண்டுபோலுள்ள ஒருவனது ஸ்தூல சரீரத்தைப் போய்ப்பார்ப்பதினாலென்ன பயன் ?' என்று விடையளித்தார்.

ஹலதாரி ஒரு பண்டிதன். அவன் எப்பொழுதும் பகவான் ஒன்றே ஸத் என்றும், மற்றவைகளெல்லாம் அஸத் என்றும் சொல்லும் கீதையையும் மற்ற வேதாந்த கிரந்தங்களையும் எப்பொழுதும் படித்துக்கொண்டிருப்பான். இவைகளையெல்லாம் நான் கிருஷ்ணகிஷோரிடம் சொன்னேன். இதைக் கேட்டதும், மிக வருத்தத்துடன் கிருஷ்ணகிஷோர் 'என்ன! ஹலதாரி இப்படிச் சொன்னான்? பகவானுக்காக உலகத்தை எல்லாம் வெறுத்து, பகவானையே ஸதா தியானம் செய்யும் புண்ணிய புருஷனுடைய சரீரத்தைக் களிமண் கூண்டாக பாவிக்கிறானா? கேவலம் உலகினர் ஸ்தூல சரீரம்போலல்லாமல், பக்தனுடைய சரீரம் சின்மயமானது என்று அவன் அறியானா?' என்றார். மறுநாள் கிருஷ்ணகிஷோர் காலையில் பூஜைக்காக புஷ்பமெடுக்க கோவிலுக்கு வந்தபொழுது, ஹலதாரியிடம் பேசக்கூடப் பிரியமில்லாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டார்.

ஓர் சமயம் கிருஷ்ணகிஷோர் என்னைப் பார்த்து 'நீர் என் உமது பூணூலை எடுத்துவிட்டீர்?' என்று கேட்டார். எனக்கு இவ்வித மாறுதல் வந்தபொழுது, அசுவினி வருஷத்தில் புயல்க் காற்று வந்தபொழுது எப்படி எல்லாவற்றையும் அடித்துக்கொண்டுபோயிற்றோ, அவ்வாறே எல்லாம் அடித்துக்கொண்டுபோகப்பட்டன. பழய அடையாளங்களெல்லாம் அடியோடு தொலைந்தன. எனக்கு வெளிப்பிரக்ஞை இல்லாததினால் என்னுடைய பூணூலையும், நான் தரித்திருந்த வஸ்திரத்தையும் கவனிப்பவர் யார்? பகவத் தியானத்திலேயே மூழ்கினவனாய், தினத்தின் பெரும்பான்மையும் நிர்வாணமாகவேயிருந்தேன்

ஆகையினால் கிருஷ்ணகிஷோர், நான் பூணூல் இழந்துவிட்டதைப்பற்றி என்னைக் குற்றம் சொன்னபொழுது, நான் 'உனக்கு கடவுளிடம் பித்துப்பிடிக்கததானல் அப்பொழுது உனக்கு இதெல்லாம் தெளிவாக விளங்கும்' என்று சொன்னேன்.

எல்லாம் நான் சொன்னதுபோலவே வந்தது. அவருக்கும் கட்டுவிடம் பித்துப்பிடித்தது. அவர் தனிமையாக ஒரு அறையில் உட்கார்ந்துக்கொண்டு, அசைவற்று, 'ஓம்! ஓம்!' என்று மேன்மேலும் உச்சரித்துக்கொண்டேயிருப்பார்.

அவருடைய பந்து ஜனங்கள், அவருக்கு நிஜமாகப் பைத்தியம் பிடித்ததென்றே நினைத்தார்கள். அவர்கள், ஒரு வைத்தியனை வரவழைக்க நாதகூர் டாக்டர் ரும் என்பவர் வந்தார். கிருஷ்ணகிஷோர் டாக்டரைப் பார்த்து, 'ஐயா, தாங்கள் என் வியாதிக்கு மருந்து கொடுத்து சொஸ்தப்படுத்துங்கள்; ஆனால் இப்பொழுது கொஞ்ச நாளாக பகவத் கருணையினால் நான் அறிந்துவந்த ஓங்காரத்திற்கு மருந்து வேண்டியதில்லை.' என்றார்.

மற்றொரு சமயம் நான் அவரைப் பார்த்தபொழுது, அவர் ஆழ்ந்த யோசனையிலிருப்பதைப் பார்த்தேன். காரணமென்னவென்று நான் கேட்டேன். அதற்கு அவர், வரி வஸூலிப்பவன் இவ்விடம் வந்திருந்தான். நான் வரி கொடுக்கத் தவறினால், அவன் என்னுடைய பித்தளைப்பாத்திரங்கள், குடங்கள் முதலானவைகளை ஜப்தி செய்வேனென்று பயமுறுத்தினான். இது தான் என்னை இவ்வளவு யோசனையிலாழ்த்தியது' என்று விடையளித்தார். அதற்கு நான் சிரித்துக்கொண்டு, 'அதைப்பற்றியொன்றும் நீ கவலைப்படாதே. அவன் வேலையை அவன் செய்யட்டும். உன் சாமான்களையும், ஆடு மாடுகளையும் அவன் விற்கட்டும். வேண்டுமானால் உன் சரீரத்தைக் கட்டி நியாயாதிபதியினிடம் கொண்டுபோகட்டும்; அதைப்பற்றி உனக்கென்ன? உண்மையாக நீ இந்த சரீரமல்ல; ஆகையினால் உண்மையான உன்னை அவனால் கட்ட முடியாது. ஐயா, நீ அடிக்கடி சொல்லுவதுபோல, உண்மையாக ஆகாசமல்லவா?' என்று சொன்னேன்.

(நரேந்திரனும் மற்றவர்களும் சிரிக்கிறார்கள்.)

ஆம், அவர் தன் நிஜரூபம், நம்மைச் சுற்றிலுமிருக்கும் ரூபமில்லா ஆகாசம்போன்ற பரமாத்மா என்று அடிக்கடி சொல்லுவது வழக்கம். ஓ! அவர், ஸ்ரீ ராமனை ஸர்வ வியாபியாகிய

பரமாத்மாவின் அவதாரமாக அடிக்கடி கூறியிருக்கும் அத்தியாத்ம ராமாயணத்தை அதிக ஆவலுடன் படிப்பவர். நான் எனக்குள்ளேயே விளையாட்டாக அடிக்கடி 'நீ சுத்த ஆகாசம்; உன் நிஜஸ்வரூபம் சரீரமன்று; பரமாத்மா' என்று சொல்லிக் கொள்வதுண்டு. அன்றைக்கு நான் அவரிடம், உம்மை பணவரி கொடுப்பதானது பந்தப்படுத்தாது. உம்முடைய கொள்கைப் படி உண்மையாக நீரல்லாத இந்த ஸ்தூல சரீரத்தை அவர் எடுத்துக்கொண்டு போகட்டுமே' என்று உறுதி சொன்னேன்.

நான் முதலில், பகவத் பித்துப்பிடித்திருந்த நிலைமையில், மனிதர்களைப்பற்றியும், மற்ற பொருள்களைப்பற்றியும், என் மனதிற்குத்தோன்றியபடி பேசிக்கொண்டிருப்பேன். மனிதர்களுடைய அந்தஸ்தை நான் கவனிக்கவில்லை. தனிகர்களையோ, அந்தஸ்துடையவர்களையோ பற்றி நான் சிறிதும் பயப்படுவதில்லை.

ஒருநாள் ஜதீந்திரன், அருகாமையிலிருக்கும் ஜாதுமாலிக்கினது தோட்டத்திற்கு வந்திருந்தான். நான் ஜதீந்திரனைப் பார்த்து, 'மனிதனுடைய முழுக்கடமையும் யாது?' என்றும் மேலும், பகவானிடம் நம் மனதைச்செலுத்தவேண்டியது நமது முதற்கடமையல்லவா' என்றும் கேட்டேன். அதற்கு ஜதீந்திரன், 'நாங்கள் லௌகிகர்கள். லௌகிகர்களுக்கு எப்பொழுதாகிலும் முக்தி கைக்கூடுமா? இதற்குச் சாக்ஷி ராஜாயுதிஷ்டிரர். அவர் மஹாசுத்தனாயிருந்தும், ஒரே சமயம் அசத்தியம் சொன்னமையால், நரகத்தைப் பார்க்கும்படி நேர்ந்தது.' என்று பதில் சொன்னான். இது எனக்கு மிகக்கோபத்தை உண்டுபண்ணிற்று. அப்பொழுது நான் சுருக்கென்று பாயும்படியாக, 'நீ என்ன நாதன மனிதனாயிருக்கிறாய்! அந்த நரகத்தைப் பார்க்கும்படியாக தருமருக்கே நேர்ந்ததைப்பற்றி மாத்திரம் உனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. ஆனால், அவருக்கு, சத்தியத்தில் இருக்கும் பிரிதியையும், அவருடைய பகவத் பிரேமையையும், அவருடைய பிழைபொறுக்கும் தன்மையையும், அவருடைய தத்வஞான

க்கையும்; அவர் இவ்வுலகப் பொருள்களில் பற்றுதலற்றிருப்பதையும், பற்றி எனக்கு ஞாபகமில்லைப்போலிருக்கிறது!' என்று இவ்விதமாக நான் மேன்மேலும் சொல்லிக்கொண்டு போவதைப் பார்த்து, ஒவிருதர் என் வாயைப் பொத்திஞர். உடனே ஜதீந்திரன், தான் ஏதோ அவசரமான வேலைக்குப் போகவேண்டுமென்று சொல்லி போய்விட்டான்.

மற்றோர் சமயம், நான் காட்டேறு (நேபாள விஸ்வநாதன்) ராஜா வைளீந்திரருடைய வீட்டுக்குச்சென்றிருந்தேன். முதல் நான் அவரைப் பார்த்தபொழுது, நான் அவரிடம் 'ஐயா, நான் உம்மை 'ராஜா' என்றாவது, அதுபோன்ற சொற்களினாலாவது கூப்பிட முடியாது; ஏனென்றால் அது உண்மையல்லாததைச் சொல்வதாகும்' என்று சொன்னேன். (இராஜ்யத்தை அனுபவனுக்கே ராஜா என்பது வழக்கமாகையினால்) சிறிதுநேரம் அவர் என்னிடம் சம்பாஷித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது சில ஐரோப்பியரும், வேறு சிலரும அவரைப் பார்ப்பதற்காக வந்தமையால், எங்கள் சம்பாஷணை அடிக்கடி தடைபண்ணப்பட்டது. அநேக விதத்தில் கவலைகளற்ற மற்ற லௌகீகர்களைப் போலவே இவரும் என்பதை நான் அறிந்துகொண்டேன். நாங்கள் வந்திருக்கிறோமென்று, அவர் தமையனை ஜதீந்திரனுக்குச் சொல்லியனுப்பிஞர். அவனுக்கு ஏதோ தொண்டையில் அசௌக்கியமாயிருப்பதாகவும் ஆகையினால் வரமுடியாதென்றும் அவனிடமிருந்து சமாசாரம் வந்தது.

ஒருநாள் புண்ணிய கங்கையின் கரையில் வராஹநகர் கட்டத்தில் ஒரு விருத்த பிராமணன் பகவந்நாமத்தை உச்சரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். ஆனால், அவர் வேறொன்றையோ நினைத்துக்கொண்டிருப்பதைக் கண்ட நான், அவர் கருத்தைக் கடவுளிடம் திருப்பும்படி முதுகில் இரண்டறை கொடுத்தேன்.

(யாவரும் சிரிப்பு)

மற்றோர் நாள், ராணி ரஸ்மணி (தக்ஷிணேசுவரம் கோவிலைக் கட்டிவைத்தவள்) இக்கோவிலுக்கு வந்தாள். நான் அர்ச்சகனயிருந்து பூசை செய்துகொண்டிருக்கும் பொழுது, அம்பாள் கோவிலுக்குவந்து என்னை நாமஸங்கீர்த்தனை செய்யும்படியாகக் கேட்டாள். நான் நாமஸங்கீர்த்தனை பாடிக்கொண்டிருந்தேன். ஆனல், அவள் அதைக்கவனியாமல், வேறெதையோ சிந்தித்துக்கொண்டும், அர்ச்சனைக்காக புஷ்பங்களை எடுத்து வைத்துக்கொண்டுமிருப்பதை நான் அறிந்து, அவளை இரண்டு அடி அடித்தேன். இவ்வமையானது, அவளைக் கைகட்டி வணக்கத்துடன் அமைதியாகவிருக்கும்படி செய்தது.

(இதைக் கேட்டவுடன் யாவரும் சிரித்தனர்.)

விசனகரமான இச்சங்கதிகளையெல்லாம் நான் என் சகோதரனை ஹலதாரியிடம் சொல்லி, 'ஏன் என்னுடைய வழிகள் இவ்விதம் நூதனமாகவும், பிறருக்கு வருத்தத்தைத் தரக்கூடியதாகவுமிருக்கின்றன! இதை மாற்ற வழியில்லையா?' என்று கேட்டேன். நான் என் ஜகன்மாதாவை உருக்கத்துடன் பிரார்த்தித்தேன். கடைசியாக அவள் கருணையினல் நான் இவ்வழக்கத்தை நீக்க சக்தியுடையவனனேன்.

நான் மேற்கூறிய நிலைமையிலிருக்கும்பொழுது, பகவத் விஷயங்களைத்தவிர மற்றவைகளெல்லாம் என் காதிற்கு நாராசம் போலிருந்தது. உலக விஷயங்களைப்பற்றி ஜனங்கள் பேசுவதை எப்பொழுதாகிலும் நான் கேட்க நேர்ந்தால், நான் தனிமையாக உட்கார்ந்துகொண்டு அழுவது வழக்கம். ஒரு சமயம், மதுர பாபு, புண்ணிய யாத்திரை ஸ்தலங்களுக்கு அவரோடு என்னையும் அழைத்துச் சென்றார். காசியில், ராஜா பாபுவின் வீட்டில் சிலநாள் தங்கியிருந்தோம். ஒருதினம் நான் அவ்வீட்டுக் கூடத்திலிருந்தேன்; அப்பொழுது மதுரபாபு, ராஜாபாபுவோடும் அவருடைய ஜனங்களோடும் பேசிக்கொண்டிருந்தார். அவர்கள் வெறும் உலக விஷயங்களைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள்: இதில் இவ்வளவு லாபம் வந்தது; இதில் இவ்வளவு

நஷ்டம் வந்தது' என்று இவ்விதமானவைகளைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது நான் என் ஜகன்மாதாவைக் குறித்து, 'என் தாயே! நீ என்னை எங்கு அழைத்து வந்தாய்? இப்புண்ணிய ஸ்தலத்தைவிட தக்ஷிணேசுவர ஆலயத்திலேயே நான் சுகமாயிருந்தேனே! இவர்கள் புண்ணியஸ்தலங்களுக்கு யாத்திரை வந்தும், என் தாயே, கேவலம் பெண், பொன்னைப் பற்றியே பேசுகிறார்களே! இவ்விதமான வார்த்தை நான் தக்ஷிணேஸ்வரம் கோவிலில் இருக்கும்பொழுது கேட்காததால் அவ்விடமே மேன்மை' என்று இவ்வாறு கதறினேன்.

குரு. நரேந்திரனைச்சற்று சிரமபரிஹாரம் செய்யும்படி சொல்லி, தாமும் அங்கிருந்த கட்டிலின்மீது களைப்பாறப்படுத்துக்கொண்டார்.

அத்தியாயம். 2

நரேந்திரனோடும் மற்றச் சிஷ்யர்களோடும் பகவந்நாமஸங்கீர்த்தனம்

சாயங்காலம். நரேந்திரன் பகவத் ஸங்கீர்த்தனை பாடிக் கொண்டிருக்கிறார். சிஷ்யர்களில் அநேகர் வந்திருக்கின்றனர். ரக்கல், எம், லாட்டு, நரேந்திரனது ஒரு பிரம்மஸமாஜ நண்பன், ஹஸ்ரா யாவரும் இருக்கின்றனர். மிருதங்கம் வாசித்துக் கொண்டு நரேந்திரன் பாடுகிறார் :—

ஏ மனமே நிர்மலமான ஆத்மஸ்வரூபியான பகவானைத்தியானி.

1. திவ்ய மங்களரூபியாயும், சகல சிருஷ்டிகளிலும் கருணையுள்ளவனாயும், ஐஸ்வர்ய ரூபியாயும் இருக்கும் ஈசுவரன் ஹ்ருதய கமலமாகிய ஆலயத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கிறான். அவ்வற்புத அழகை நாம் மேன்மேலும் பார்த்து, அவ்வழகெனும் கடலில் நாம் மூழ்குவோம்.

2. ஹேநாதா! என் இருதயத்தில் அநந்த திவ்விய ஞானமாக எழுந்தருளு. அப்பொழுது, சாந்தமடைந்த மனதுடன் நான் பேச்சற்று, உன் திருவடியில் விழுகிறேன்.

3. சந்திரனைக்கண்டு மயங்கிய சகோரபக்ஷியானது, சந்தோஷத்தினால் விளையாடுவதுபோல், நாங்களும் உன் ரூபத்தைப்பார்த்து அதன் அழகைப்பருகி மயங்கிச் சந்தோஷமடையும்படி என் ஹிருதயாகாசத்தில் நித்தியானந்த ரூபமாய் உதித்தருளு.

* * * * *

ஆனந்தத்தினால் நிறைந்த பகவானுடைய திவ்விய நாமத்தை உச்சரிக்கவே, ஆனந்தவெள்ளம் பொங்கிப்பெருகும். அந்த அமிருதத்தை இடைவிடாமல் பானம் செய்து, மற்றவர்களுக்கும் உன் இஷ்டப்பிரகாரம் கொடு. உன்னைக்கட்டியிருக்கும் பாபமாகிய விலங்குகள், அவன் நாமமாகிய வஜ்ராயுதத்தினால் சிதறப்பட்டுப்போம்.

வாருங்கள், நாம் பகவத் ஆனந்தத்தைப் பருகி மயங்கி நம் மனோபீஷ்டங்களையெல்லாம் நிறைவேற்றிக்கொள்வோம்.

* * * * *

நரேந்திரனும் வந்திருக்கும் மற்ற சிஷ்யர்களும், பகவானைச் சுற்றிலும், மிருதங்கத்துக்கிசைய நர்த்தனம் செய்துகொண்டு, பின்வரும் அடியை யாவரும் சேர்ந்து பாடுகிறார்கள் :—

"ஹே மனமே! பகவத்பிரேமையென்னும் அமிருதத்தில் எப்பொழுதும் மூழ்கியிருப்பாய்."

மறுபடியும் :—

"என் ஹிருதயமாகிய ஆலயத்தில் திவ்விய மங்கள ரூபியாயும், சகல சிருஷ்டிகளின் க்ஷேமத்தையும் கருதுபவனாயும், ஏகசத்திய ரூபியாயுமிருக்கும் ஈசுவரன் திவ்விய ரூபத்துடன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறான்."

கடைசியாக நரேந்திரன் மிருதங்கம் கழுத்தில் தொங்க பாடுகிறான் :—

"ஆனந்தம் நிறைந்த உன் வாயினால், அமிருதம்போன்ற பகவந்நாமத்தை உச்சரி."

கீர்த்தனை முடிந்ததும், பகவான், நரேந்திரனைக் கட்டித் தழுவிக்கொண்டு, 'குழந்தாய், உனக்கு க்ஷேமம் உண்டாகட்டும்! பகவத் ஆனந்தம் ஏற்படட்டும்! உன்னால் எனக்கு இன்றைக்கு ஏற்பட்ட அளவில்லா ஆனந்தத்தை நான் என்னென்று சொல்வேன் !'' என்றார்.

குருவின் ஹிருதயகமலத்திலிருந்து, திவ்வியப் பிரேமை இன்றைக்கு பொங்கிப் பெருகுகின்றது.

இரவு மணி 8-ஆய்விட்டது. குரு, ஆனந்த வாரியில் மூழ்கினவராய், வடக்குத் தாழ்வாரத்தில் தனிமையாக உலாவிக் கொண்டிருக்கிறார்! தாழ்வாரத்தின் ஒரு கோடியிலிருந்து மற்றோர் கோடிக்கு அதிக விரைவாக நடந்துகொண்டு, ஜகன்மாதாவோடு பேசுகிறார். பித்துபிடித்தவர்போல் உரத்த குரலில், 'நீ எனக்கு என்ன கெடுதி செய்யக்கூடும்' என்று சொன்னார்.

எவனுக்கு ஜகன்மாதாவின் அருள் இருக்கின்றதோ, அவனுக்கு ஒரு தீங்கும் வராதென்று பகவான் சொல்லுகிறாரோ ?

இன்றிரவு சிஷ்யர்களெல்லோரும் தங்குகிறார்கள். நரேந்திரனும் தங்குகிறார். ஆகையால் பகவானது ஆனந்தத்திற்கு அளவில்லை.

போஜனம் தயாராயிற்று. நஹபத்கானவில் அம்மாள், ரொட்டி, பருப்பு முதலானவை சாப்பாட்டிற்குத் தயார்செய்து வைத்திருக்கிறாள். பெரும்பாலும், சிலவை ஸுரேந்திரன் வகிக்கிறான். இடையிடையே, சிஷ்யர்கள் இவ்விடம் தங்குவார்கள்.

குருவின் அறைக்கு அருகிலிருக்கும் தென்கிழக்குத் தாழ்வாரத்தில் இலை போடப்பட்டிருக்கிறது. பரிமாறிக்கொண்டிருக்கும்பொழுது, நரேந்திரனும், மற்றச் சிஷ்யர்களும், குருவின் அறைக்கு முன் நின்றுகொண்டு பேசுகிறார்கள்.

நரேந்திரன் ('எம்'ஐப் பார்த்து) :—ஐயா, இக்காலத்துப் பையன்களையும், சிறுவர்களையும்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

எம் :—அவ்வளவு மோசமாயில்லை ; ஆனால், அவர்களுக்கு மத விஷயத்தில் பயிற்சி அவசியமென்று எனக்குத் தோன்று கிறது

நரேந்திரன்:—என்க்குத் தெரிந்தவரைக்கும் நம் சிறுவர்கள் வர வர மோசமாகிவருகிறார்கள். சிறுவர்கள் கூட்டங்களை மொத்தமாகக் கவனித்தால் உடையில் டம்பமும், சுருட்டுப் பிடித்தலும் வேலையைவிட்டு ஒளிதலும், கெட்ட சகவாசமும் தினந்தோறும் கண்ணிற்படுகின்றன.

எம் :—எங்கள் காலத்தில் நாங்கள் படிக்கும்பொழுது, நான் இம்மாதிரி பார்த்ததேயில்லை.

நரேந்திரன் :—ஒருவேளை, அப்பேர்ப்பட்டவர்களோடு நீங்கள் சேராமலிருந்திருக்கலாம். எனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கும் சிறுவர்களிடத்தில், கெட்ட நடவடிக்கையுள்ள ஜனங்கள் பேசிக்கொண்டிருப்பதை நானே பார்த்திருக்கிறேன். எனக்கு என்ன ஆச்சரியமென்றால், இச்சிறுவர்கள், அத்துர்ஜனங்களை எவ்விதம் அறிய நேரிட்டதென்பதே.

எம்:— என்ன, அப்படியா ?

நரேந்திரன் :— என்னுடைய நண்பர்களிலேயே சிலர், தங்கள் நல்ல நடவடிக்கையை இழந்தது எனக்குத் தெரியும். பாடசாலை அதிகாரிகளும், சிறுவர்களின் பெற்றோரும் இதைக் கவனிக்கவேண்டும்.

இவ்விதமாக இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, பகவான் அவ்வறையினின்றும் வெளியே வந்து அவர்களை நோக்கிச்சிரித்துக்கொண்டு 'நீங்கள் எதைக்குறித்துப் பேசுகிறீர்கள்' என்று வினவினார். நரேந்திரன் புன்னகையுடன் 'நாங்கள் பாட

சாலே விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். இக்காலத்துச் சிறுவர்களின் நடவடிக்கை திருப்திகரமாயில்லே,! என்றார். பகவான் கவலேயோடுகூடியவராய் எம்மைப்பார்த்து, 'இவ்விதமான விஷயங்களைக் குறித்துப் பேசுவது எப்பொழுதும் நல்லதன்று. பகவானைப்பற்றியே எப்பொழுதும் பேசவேண்டும். இவர்களைவிட நீ வயதில் பெரியவன். உனக்கு அறிவு ஜாஸ்தி இருக்கவேண்டும். பகவத் விஷயத்தைத் தவிர வேறெதையும் பற்றி பேசாமலிருக்கச்செய்வது உன்கடமை' என்றார்.

இதைக்கேட்டதும் எம் சிறிது வெட்கமடைந்தார். நரேந்திரனும், இதர சிஷ்யர்களும், சிறிதுநேரம் மௌனமாயிருந்தார்கள்.

அப்பொழுது நரேந்திரனுக்கு 19, அல்லது 20 வயது இருக்கும். 'எம்'முக்கு, 27, அல்லது 28 இருக்கும்.

போஜனம்பண்ண எல்லோரும் உட்கார்ந்திருக்கிறார்கள். நரேந்திரனும், இதர சிஷ்யர்களும் போஜனம் செய்வதைப்பார்த்து, பகவான் சந்தோஷத்துடன் சிரித்துக்கொண்டிருக்கிறார்.

பகவான், இன்றைக்கு அதிக சந்தோஷத்துடன் இருக்கிறார். போஜனம் முடிந்ததும், சிஷ்யர்கள் ஒன்றுசேர்ந்து அறைக்குள் வந்து, தரையில் விரித்திருக்கும் பாயின்மீது உட்கார்ந்து இளைப்பாறுகிறார்கள். அவர்கள் சந்தோஷத்துடன் பகவானேடு சம்பாஷிக்கிறார்கள். அவர்களெல்லோரும் சேர்ந்திருப்பதைப் பார்த்தால், பிரம்மானந்தம் விலேக்கு வாங்கக்கூடிய ஓர் சந்தை போல் தோன்றிற்று.

பகவான் நரேந்திரனைப்பார்த்து, 'பிரம்மஞ்ஞானமாகிற ஆகாசத்தில், பகவத் பக்தியாகிய பூர்ண சந்திரன் உதயமாகிறான்' என்றாரம்பிக்கும் பாடலேப்பாடு என்றார்.

நரேந்திரன், மிருதங்கம் வாசித்துக்கொண்டு, பாடிய பாடலின் கருத்து :—

1. சிதாகாசத்தில் ப்ரேமையென்னும் பூர்ண சந்திரன் உதயமாகிறான். அன்பின் கடல் கரைகடந்து பொங்குகின்றது! பிரபுவின் ஆனந்தத்தை என்னென்று சொல்வேன்! ஆ, என்ன ஆனந்தமயம்! ஜய தயாமய! ஜய தயாமய! ஜய தயாமய!

உன்னைச் சுற்றிலும் பக்தர்களாகிய உபகிருகங்கள் பிரகாசிக்கின்றன. நீ அவர்களுக்கு விளையாட்டுத் தோழனுயும், ஆனந்தமயனுயும் இருக்கிருய். ஜயதயாமய!

2. மோக்ஷத்தின் கதவு திறந்தது, நவவிதானமான இளவேனிற் காற்று வீசுகின்றது! அது ஆனந்தமயமான அலைகளாகப் பிரிந்து, பக்தியென்னும் வாசனையை அடித்துக்கொண்டு சென்று, யோகிகளை ஸாயுஜ்ய ஆனந்தத்தால் மயங்கச் செய்கின்றது, ஜய தயாமய! ஜய தயாமய! ஜய தயாமய!

3. இப்பிரபஞ்சமாகிய கடலில், நவவிதானமாகிய தாமரைப்பூ மலர்ந்திருக்கின்றது. அதில் ஆனந்தமாகிய லோகமாதா வீற்றிருக்கிருள். பார்! பக்தவண்டுகள் அதின் அமிருதத்தைப் பருகுகின்றன! அவர்கள் பகவத் பிரஞ்ஞை நிறைந்து விளங்குகிருர்கள்! ஆ! ஈசுவரியின் அருள் நிறைந்த முகத்தைப் பார்! அது உள்ளங்களிப்பிக்கின்றது. உலகத்தை யோசிக்கச் செய்கின்றது! ஸாதுக்கள் கூட்டங் கூட்டமாக, ஆனந்தத்தில் ஆழ்ந்து பாடி ஆடிக் குதித்து, அவள் சரணங்களில் விழுகிருர்கள்.

ஆ! என்ன உவமையில்லா அழகு! இத்திருக்காக்ஷியினுல் மனதுக்கு என்ன ஸமாதானம்! என்ன ஸுகம் அடைகின்றது!

பிரேமதாஸ், (எல்லார் காலிலும் விழுந்து,) சொல்லுகிருர்:—'ஸகோதரர்காள்! பாடுங்கள் ஜய தயாமய! ஜய தயாமய! ஜய தயாமய!'

இவ்விதமாக, ஜயதே ஜய ஜய என்று பகவான் பாடிக்கொண்டு நடனம் செய்கிருர். சிஷ்யர்களும் பாடிக்கொண்டு அவரைச்சுற்றிவருகிருர்கள்.

பாடல் முடிந்தது. பகவான் தன்னறைக்குப்போகும் வடகிழக்குத் தாழ்வாரத்தில் உலாவிக்கொண்டிருக்கிருர். ஹஸ்ரா

இவ்விடத்தில் உட்கார்ந்துகொண்டு, கையில் ஜபமாலையுடன் பகவந்நாமத்தை ஜபித்துக்கொண்டிருக்கிறார். பகவான், அவர் பக்கத்திலுட்கார்ந்துகொண்டு, ஹஸ்ரா, எம், இவ்விருவர்களோடும் சம்பாஷணை செய்கிறார். பகவான் அவர்களில் ஒருவரைப்பார்த்து 'நீ கனவில் ஏதாகிலும் பகவத் காக்ஷியைக் காண்பதுண்டா?' என்று கேட்டார்.

சிஷ்யன்:—ஆம், ஸ்வாமி, அன்றையதினம்கூட நான் ஓர் அற்புதமான கனவு கண்டேன். ஜகத் முழுதும் ஜலமயமாகவிருந்தது. பார்த்தவிடமெல்லாம் ஜலத்தைத் தவிர வேறொன்றையும் நான் காணவில்லை! அந்த ஜலமானது ஆதி அந்தமில்லாமலிருந்தது! திடீரென்று வெள்ளப்பெருக்குண்டாயிற்று. கொஞ்சதூரத்தில் கண்ணுக்குத் தெரிந்த சில படகுகள் ஜலத்தில் மூழ்கின. அதில், சில படகுகள்தான் தப்பின. அவைகளில் ஒன்று என் தாயாருடையது. நான் சில பிரயாணிகளோடு ஒரு கப்பலில் இருந்தேன். ஒரு பிராமணன், பூமியின்மீது நடந்து போவதைக்கண்டு, நாங்கள் மிக்க ஆச்சரியமடைந்தோம். நான் அவரைக்கூவி, 'தாங்கள் எப்படி சமுத்திரத்தின்மீது நடக்கிறீர்கள்' என்று கேட்டேன். அவர் புன்னகையுடன் என்னைப் பார்த்து 'இவ்விடம் பயப்படுவதற்கொன்றுமில்லை; நான் ஜலத்திற்குள்ளிருக்கும் ஓர் பாலத்தின்மீது நடக்கிறேன்' என்றார். 'பிரபோ, தாங்கள் எங்கு போகிறீர்கள்' என்று நான் கேட்டேன். அதற்கு அவர், 'அப்பா, என் தாய் நகரமாகிய பவானிப்பூருக்குச் செல்கிறேன்' என்று பதில் சொன்னார். நான் அப்புண்ணிய புருஷனைச்சேர ஆவலுடனிருந்ததினால், உரத்த குரலில், 'பிரபோ, சற்று நில்லுங்கள்; நானும் அதேயிடமே போகவேண்டியிருப்பதால் தங்களோடு வருகிறேன்' என்றேன். இதைக் கேட்டு அவர் சிரித்து, 'நான் அவ்விடத்திற்கு அவசரமாய்ப் போகிறேன். நீ இறங்கிவர கொஞ்சம் காலதாமதம் ஆகும். ஆனால் நான் போகும் வழியைக் கவனமாய்ப்பார்த்துக் கொண்டு, என்னைப் பின்தொடர்ந்துவா' என்றார்.

பகவான்:—சொல்லும் கனவைக்கேட்கும்பொழுது, என் உடம்பு சிலிர்த்து, மயிர்க்கூச்சலுண்டாகின்றது. உனக்கு உபதேசம் செய்யவேண்டியசமயம் வந்துவிட்டது.

அத்தியாயம். 3

இரவு மணி 11. நரேந்திரனும், மற்றச் சிஷ்யர்களும் நித்திரைசெய்யச் சென்றார்கள். அவர்கள், பகவானது அறையில் தரையில் விரிக்கப்பட்டிருந்த படுக்கையின்மீது படுத்துக்கொண்டார்கள்.

விடியற்காலமாயிற்று: சிஷ்யர்களிற் சிலர் எழுந்திருந்து, தங்கள் படுக்கையின்மீது, உட்கார்ந்துகொண்டு புகவத்தியானம் செய்கிறார்கள். இச்சமயமெல்லாம் பகவான் என்ன செய்கிறார் ?

அவர் அமிருதம்போன்ற இனிய குரலில் பகவந்நாமங்களை உச்சரித்துக்கொண்டேயிருக்கிறார். அவர் அவ்வறையைச் சுற்றிலும், ஐந்து வயதுக் குழந்தையைப்போல் நிர்வாணமாக சுற்றி வந்துகொண்டிருந்தார். அவர், அவ்வறையின் சுவரில் தொங்க விடப்பட்டிருக்கும் அநேக படங்களின் எதிற்சென்று தன் உச்சந்தலை சுவரில்பட வணங்கி நமஸ்கரிக்கிறார். அவர் கதவைத் திறந்து, கங்காநதியை மிக்க பக்தியோடு வணங்குகிறார். அவர் பகவந்நாமத்தை உச்சரித்துக்கொண்டே, 'ஆ. என் ஜகன்மாதாவே ! நீயே சகலத்திலும் தோன்றி இருக்கிறாய் வேதங்கள் புராணங்கள், தந்திரங்கள், பகவத்கீதை, காயத்ரீ முதலியவைகளாகத் தோன்றப்படும் உன் வார்த்தையும் நீயும் ஒன்றே: தாயே, உன் பக்தர்களும் உன் தோற்றங்களே. எல்லாவற்றிலும்! அவதரித்திருக்கிறாய்! என்தாயே நீயே காலதேசாவஸ்தைகளைக் கடந்த பிரமம். நீதான் மஹாசக்தி. பிரகிருதியென்பதும், புருஷனென்பதும் நீயே. ஸகுண நிர்க்குணப்பிரம்மமும் நீயே; விராட்புருஷனும் நீயே ! இருபத்திநாலு தத்துவங்களும் நீயே!

விடியற்காலமாயிற்று. அர்ச்சகர்கள் விக்கிரகங்களுக்கு நீராராதனை முதலியவைகள் செய்கிறார்கள். இனிமையான சங்கம், மணி, ஜாலறு முதலானவைகள் ஆலயத்தில் முழங்குகின்றன. அர்ச்சகர்களும், வேலைக்காரர்களும், காலைப் பூஜைக்காக புஷ்பம் எடுத்துக்கொண்டிருப்பதைச் சிஷ்யர்கள் பார்த்தார்கள். வாத்தியக்காரர்கள், காலைவேளைக்குத் தகுந்த ராகம் வாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நரேந்திரனும், மற்றச் சிஷ்யர்களும், கை கால்களை சுத்தி செய்துக்கொண்டு, புன்சிரிப்புடன் பகவானெதிரில் வந்து நின்றார்கள். பகவான், வடகிழக்குத் தாழ்வாரத்தில் தன்னறைக்கு அருகில் நின்றுகொண்டிருந்தார். அவர் முகம் புன்சிரிப்பினால் பிரகாசித்துக்கொண்டிருந்தது.

நரேந்திரன் :— பஞ்சவடியில், குருநானக்கின் சிஷ்யர்களான அநேக சன்னியாசிகளை நாங்கள் பார்த்தோம்.

பகவான்:—ஆம், எனக்குத்தெரியும்; அவர்கள் இவ்விடம்நேற்று தான் வந்தார்கள். (நரேந்திரனிடம்) நீங்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து உட்கார்ந்திருப்பதை நான் பார்க்கவேண்டும்.

சிஷ்யர்களெல்லோரும் ஒரு பாயின்மீது உட்கார்ந்தார்கள். பகவான் சந்தோஷத்துடன் அவர்களோடு சம்பாஷிக்கிறார். அப்பொழுது நரேந்திரன், 'ஈசுவரனை அடைவதற்கு வழி என்ன?' என்று கேட்டார்.

பகவான்:-ஈசுவரனை அடைவதற்குப்பிரேமை, அல்லது, பக்தி அத்தியாவசியம். பகவானிடம் ஒருவன் அன்பு பாராட்டினால், வைராக்கியம், நித்தியா நித்திய வஸ்து விவேகம், இவைகள் அவனுக்குத் தானாகவே வரும்.

நரேந்திரன்:—ஸ்வாமி, சில கிரந்தங்களில், ஸ்திரீகளை பக்கத்தில் வைத்துக்கொண்டு யோகாப்பியாஸம் செய்யலாமென்று சொல்லியிருக்கிறதே. அது, அப்படித்தானா?

பகவான்:—ஸ்திரீகளின் மக்தியில் அப்பியாசம் செய்வதா! அது, நல்லதன்று தந்திரங்களில், அப்படி ஒருவழி சொல்லியிருப்பது வாஸ்தவம்தான். ஆயினும். அந்த வழியில் முக்தியடைவது மிகக்கடினம் அனேகமாக அவ்வழியிற் செல்பவன் தவறுவது திண்ணம். அப்பியாஸத்திற்காக, ஸ்திரீகளோடு பழகுவதில், (1) ஸ்திரீகளைத் தோழியாகவும், தன்னைத் தோழனாகவும், (2) ஸ்திரீகளை யஜமானியாகவும், தன்னை வேலைக்காரியாகவும், (3) ஸ்திரீகளை மாதாவாகவும், தன்னைக் குழந்தையாகவும் பாவிக்கலாம். நானோ, எல்லா ஸ்திரீகளையும் என் தாயாராகப் பாவிக்கிறேன். யஜமானி, வேலைக்காரியாக பாவிப்பதில் பிசகில்லை. தோழனாகப் பாவிப்பதில் பெரும்பான்மையாக, தவறுதல் உண்டாகும். தன்னைக் குழந்தையாகப் பாவிப்பதுதான் மிகவும் பரிசுத்தமானதும், உத்தமமானதும்.

குரு நானக்கின் சிஷ்யர்களான ஸன்யாஸிகள், பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ணரைப் பார்க்க வந்தார்கள். அவர்கள், 'நமோ நாராயணா!' என்று பகவானை வணங்கினார்கள். பகவான் பதில் வந்தனமளித்து, அவர்களை உட்காரச் சொன்னார்.

ஸ்ரீ பரமஹம்ஸர், சிஷ்யர்களையும், வந்திருக்கும் ஸாதுக்களையும் பார்த்து, சொல்லுகிறார்:— பகவானுக்கு அசாத்தியமென்பது ஒன்றுமில்லை. அவருடைய ஸ்வபாவத்தைப்பற்றி யாராகிலும் சொல்லமுடியாது. அவரைப்பற்றி எதுசொன்னாலும் தகும்.

ஒரு காலத்தில் இரண்டு யோகிகள் பகவானை தரிசிக்கத் தபஸ் செய்து கொண்டிருந்தார்கள். ஒருதினம் தேவரிஷியான நாரதர், அவர்கள் ஆச்ரமவழியாகப் போனார். அவர்களிலொருவர் நாரதரைப் பார்த்து, தாங்கள் வைகுண்டத்திலிருந்து வருகிறீர்களா? அப்படியாயின், பகவான் என்ன செய்து கொண்டிருக்கிறார்? தயவுசெய்து சொல்லவேண்டியது" என்றார். இதைக் கேட்டதும் நாரதர் ,ஆம், வைகுண்டத்திலிருந்து தான் வருகி

றேன். பகவான் ஒட்டகங்களையும், யானைகளையும், ஊசியின் காதில் நுழையச் செய்துகொண்டிருக்கிறார். அம்மிருகங்களும் அவ்வழியாக உள்ளிலும் வெளியிலும் போய் வந்துகொண்டிருப்பதை நான் கண்டேன்' என்று சொன்னார். இதைக்கேட்டதும் ஒருவர் 'இதில் ஆச்சரியமொன்றுமில்லையே. பகவானுக்கு அசாத்யமானது எது?' என்று சொன்னார். அப்பொழுது மற்றவர் 'இது அசாத்தியம்! தாங்கள் சொல்லுவதைக் கேட்டால், தாங்கள் வைகுண்டம் போகவில்லை என்று நன்றாய்த் தெரிகிறது' என்று சொன்னார்.

முதலில் சொன்னவன் குழந்தையைப்போல் நம்பிக்கை உடையவனாகையால் உண்மையான பக்தன். ஏனென்றால் இவ்வற்புதமாயிருக்கும் உலகத்தை ஸிருஷ்டித்த பகவானுக்கு அசாத்யமானது எது!

காலை ஒன்பது மணி. பகவான் தன் அறையில் வீற்றிருக்கிறார். கோங்கர் என்னும் ஹரிஸிந்த்ர மனமோகன் என்னும் ஓர் சிஷ்யன் தன் குடும்பத்தோடு வந்திருக்கிறான். அவன் பகவானை நமஸ்கரித்து 'நான் கல்கத்தாவிற்கு என் குடும்பத்தை அழைத்துப்போகிறேன்' என்று சொன்னான். பகவான் அவன் க்ஷேமஸமாசாரத்தை விசாரித்ததும் 'இன்றைக்கு மாதப்பிறப்பு கரிநாளாயிற்றே. நீ உன் குடும்பத்தை கல்கத்தாவிற்கு அழைத்துச் செல்கிறாயே. நான் உனக்கு என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை' என்று சொல்லி புன்னகையுடன் வேறு விஷயங்களைக் குறித்துப் பேசலானார்.

நரேந்திரனும், அவனுடைய கல்கத்தா நண்பர்களும் கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டு, ஆடை தரித்துக்கொள்ள பகவானது அறைக்கு வந்தார்கள். பகவான் நரேந்திரனை நோக்கி மிக அன்புடன், 'நீ ஆலமரத்தடியில் சென்று, சிறிதுநேரம் பகவத்தியானம் செய்; கீழேபோட்டு உட்காருவதற்கு ஏதாகிலும் கொடுக்கட்டுமா?' என்றனர்.

நரேந்திரனும், அவனுடைய பிரம்மஸமாஜ நண்பர்களும், ஆலமரத்தைச் சுற்றிலும் கட்டியிருக்கும் செங்கல் மேடையின் மீது உட்கார்ந்துகொண்டு பகவத் தியானம் செய்கிறார்கள்.

காலை மணி பத்து ஆய்விட்டது. பகவான் சற்றுநேரம் கழித்து ஆலமரத்தடிக்கு வருகிறார். 'எம்' அவ்விடம் இருந்தார். பகவான் நரேந்திரனோடும், அவர் சினேகிதர்களுடனும் பேசுகிறார்.

பகவான் (நரேந்திரனையும் மற்றவர்களையும் பார்த்து) :—தியானம் செய்யும்பொழுது பகவானில் மூழ்கவேண்டும். அப்படி மூழ்காமலேயே மிதந்துகொண்டிருந்தால், அடியிலிருக்கும் விலையற்ற இரத்தினங்களை அடையமுடியாது.

இவ்விதம் சொல்லி பகவான் பின்வரும் கருத்துள்ள பாடலைப் பாடினார்.

1. ஓ மனமே, நீ ஜகன்மாதாவின் திவ்விய நாமத்தை உச்சரித்துக் கொண்டு, விலைகடந்த இரத்தினக் களஞ்சியமான ஹிருதய சாகரத்தின் ஆழத்தில் மூழ்கியிரு.

2 சிலதரம்மட்டும் ஜலத்தில் முழுகுவதினால் அவ்விரத்தினங்கள் உனக்குக் கிடையாமலிருக்கலாம். ஆனால், அதிலிருந்து ஹிருதய ஸாகரத்தில், இரத்தினங்கள் இல்லை என்று ஆகாது.

3. இக்கடலில் காமாதி ஆறு விகாரங்களான முதலைகளிருக்கின்றன. அவைகள் ஆகாரத்திற்காக அலைகின்றன. ஆனால், விவேகமென்னும் மஞ்சளைப் பூசிக்கொள். மஞ்சளின் வாஸனை இம்முதலைகளால் பிடிக்கப்படாமல் பாதுகாக்கும்.

4. இக்கடலின் அடியிலிருக்கும் இரத்தினங்கள் அநேகம். அடிவரையில் மூழ்கிப்பார்த்தாயானால் அவைகள் உனக்குக் கிடைக்கும் என்று ராமப்பிரஸாத் சொல்லுகிறார்.

நரேந்திரனும், அவனுடைய நண்பர்களும் மரத்தடி (பஞ்சவடி)யைவிட்டு, பகவானிடம்வந்து அவரைச்சூழ்ந்துநிற்கிறார்கள்.

பகவான் தன் சிஷ்யர்களோடு தன் அறையை நோக்கி, தென் திசையாகச் செல்கிறார். பகவான் அவ்விதம் நடந்து போகும்பொழுது பேசுகிறார். மஞ்சளை உன் சரீரத்தில் பூசிக் கொள். அப்பொழுது முதலைகள் விலகிப்போம். காமக்குரோத, லோப, மோஹ, மத, மாச்சரியங்கள், ஆறு முதலைகள். நித்தியா நித்திய வஸ்து விவேகமானது மஞ்சள். அது பகவான் ஒன்றே ஸத் என்றும், மற்றவைகளெல்லாம் அஸத் என்றும் அறியச் செய்கிறது.

பகவானே ஸத். மற்றவைகளெல்லாம் அஸத் என்னும் ஞானமில்லாமல், கேவலம் புத்தகப்படிப்பு, உபந்நியாசம் செய்தல், இவை என்ன பிரயோஜனம்?

முதன் முதலில் ஹிருதயமாகிய ஆலயத்தில் பகவானை ஸ்தாபி; முதலில் பகவானை அறி. நீ பகவானை அறிந்த பிறகு, பேச்சு, பிரசங்கம் முதலானவைகள் செய்யலாம்; அதற்கு முன்னால் கூடாது. ஜனங்கள் இவ்வுலக விஷயங்களில் பற்றுதல் வைத்துக்கொண்டே பரப்பிரம்மத்தைப்பற்றி சுலபமாகப் பேசுகிறார்கள். இவைகளின் முடிவு என்ன? பூஜைக்கு யாதொரு விக்கிரகமுமில்லாத ஆலயத்தில், சங்கு ஊதுவதுபோலவே ஆகும். நான் ஒரு கதை சொல்லுகிறேன்.

ஒருகாலத்தில் ஒரு கிராமத்தில், பத்மன், என்னும் பெயருடைய ஒருவாலிபனிருந்தான். அக்கிராமத்தில் பழய பாழுங் கோவிலொன்றிருந்தது. அக்கோவிலில் வெகு காலத்திற்கு முன், விக்கிரஹங்களுக்கு பூஜை முதலானவைகள் நடந்துவந்தன. ஆனால் இப்பொழுதோ விக்கிரஹமொன்றுமில்லாமல், அது, வௌவாலுக்கு இடமாகவிருந்தது. ஒருநாளிரவு, அப்பாழுங் கோவிலிலிருந்து மணி, சங்கம் முதலானவைகளின் முழக்கம் வருவதைக் கேட்டு, அக்கிராமவாசிகளனைவரும் ஆச்சரியமடைந்தனர். ஸ்திரிகள், புருஷர்கள், குழந்தைகள் எல்லோரும் அவ்விடத்திற்கு வந்து கூடினார்கள். அவர்கள், ஒருக்கால் எவனாகிலும் பக்தன் ஒருவன், பகவத் விக்கிரஹத்தை அவ்விடம்

ஸ்தாபித்து, ஸாயங்கால நீராஜனை செய்கிறானோ என்று நினைத்தார்கள். அவர்கள் அத்திவ்விய கோஷங்களைச் செவியுற்று, கோவிலுக்கு வெளியே கைகூப்பி நின்றார்கள்.

அவர்களிலொருவன் மிக்க ஆவலினால் தூண்டப்பட்டு, தைரியத்துடன் உள்ளே எட்டிப்பார்க்க, பத்மன் ஆலயத்திற்குள் மணியை அடித்துக்கொண்டும், சங்கநாதம் செய்துகொண்டும் இருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்தான். கோவிலுக்குள் தரை முன்போலவே அசுசியாயிருப்பதையும், கோவிலுக்குள் விக்கிரஹமில்லாததையும் கண்டான்! அவன் அப்பொழுது, 'ஏ பத்மா! என்ன உன் கோவிலில், ஸ்ரீ கிருஷ்ணன், அல்லது வேறெந்த விக்கிரஹத்தையும் காணவில்லையே! அப்படியிருக்க, ஏன் சங்கநாதம் முழங்கச் செய்தாய்? வருஷக்கணக்காகச் சேர்ந்திருக்கும் தரையின் அழுக்கையாவது புண்ணிய கங்காஜலம் விட்டு சுத்தம் செய்ய முயலவில்லையே! இன்னும், கட்டிடம் பதினொரு வௌவால்களினால் (ஞானேந்திரியம் ஐந்து; கர்மேந்திரியம் ஐந்து; மனஸ்) இரவும் பகலும் அசுத்தம் செய்யப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது!" என்று கூவினான்.

உனது ஹிருதயமாகிய ஆலயத்தில் ஈசுவரனை ஸ்தாபி. அதற்காக சர்வ பாபங்களையும், எல்லா அழுக்குகளையும், விஷயப்பற்றுகளையும் முழுவதும் நீக்கி சுத்தம் செய். பகவானை அடைய ஒருவன் விஷய இச்சையுள்ள இந்திரிய சுபாவத்திலிருந்து விமோசனமடையவேண்டும். அதன் பிறகு, வேண்டுமானால், சங்கநாதம் செய்யத் தருணமேற்படும். நீ ஆசாரச் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசுகிறாயா? நீ பகவானை அறிந்தபிறகு அவ்வாறு செய்யலாம். பூர்வகாலத்தில், ரிஷிகள் பகவானை அடைய உலகைத் துறந்தனர். இவ்வைராக்கியம் ஒன்றே முதலில் அத்தியாவசியம். அதை நீ உடைத்தாயிருந்தால், மற்றெல்லாவற்றையும் தேவையானால் அடையலாம்.

சமுத்திரத்தினடியிலிருக்கும் இரத்தினங்களையடைய நீ விரும்பினால், உன் மற்ற வேலைகளையெல்லாம் ஒழித்து, கடலின் அடியில் மூழ்கவேண்டும். முதலில் ஈசுவர விக்கிரஹத்தை

ஸ்தாபனம் செய்; பிறகு, பேச்சாகிய சங்கநாதம் செய்யலாம். முதலில் பகவானை அறி; பின்பு, உபந்நியாசங்களையும், ஆசாரச் சீர்திருத்தங்களையும் பற்றிப்பேசலாம்.

மற்றவர்களுக்கு உபதேசம் செய்வது மிகக் கடினமான வேலை. எவனொருவன் பகவானை அடைகிறானோ, அவன் அவருடைய ஆக்ஞையை வகிக்கிறான். எவன் ஈசுவராக்ஞையை வகிக்கிறானோ அவனொருவனே மற்றவர்களுக்குப் போதனை செய்ய அருகனாகிறான்.

அத்தியாயம். 4

கிரஹஸ்தன் விஷயம்.

இதற்குள் பகவான் மேற்மேலாகவிருக்கும் வடக்குத் தாழ்வாரத்திற்கு வந்துவிட்டார். அத்தாழ்வாரத்தில் தன்னுடைய அறைக்கு அருகில் நரேந்திரன், மணி, முதலிய சிஷ்யர்களுடன் நின்றுகொண்டிருக்கிறார். விவேகம், வைராக்கியம் இவ்விரண்டுமின்றி ஈசுவரனைப் பார்க்க முடியாது என்று, பகவான் திருப்பித் திருப்பிச் சொல்லுகிறார் சுமார் 27-அல்லது 28-வயதுள்ள 'மணி' என்பவன் ஆங்கிலேயப்பாஷைப்படித்தவன். அவனுக்கு விவாஹமாய்விட்டது. அவன், 'இவர் விவேகம் வைராக்கியம் என்று சொல்லுவது. சந்நியாசியைப் போல் உலகைத் துறத்தலோ? அதாவது பெண்ணாசை பொன்னாசைகளை வெளிப்படையாக நீக்குதலோ?' என்று தனக்குள்ளே யோசிக்கிறான்

மணி (பகவானை நோக்கி):—ஸ்வாமீ, மனைவி தன் கணவனைப் பார்த்து, 'நீ என்னை அலக்ஷியம் செய்கிறாய்; நான் தற்கொலை செய்துகொள்ளுகிறேன்' என்று சொன்னால் யாது செய்வது?

பகவான் (கேட்பவர்களுக்கு பயபக்தியை விளைவிக்கும் குரலில்):- எந்தமனைவி, தன் கணவன் பகவானையடையவொட்டாது தடுக்கிறாளோ, அவள் விதிப்படியாகட்டுமென்று அவளைக் கைவிட வேண்டியது. அவள் தற்கொலை செய்துகொண்டாலும் குற்றமில்லை. அவள் இஷ்டப்பிரகாரம் செய்யட்டும். அப்பேர்ப்பட்ட மனைவி பகவானையடையவொட்டாது ஆத்மநாசத்தையுண்டாக்கும் அவித்யாரூபமே

இதைக்கேட்டதும் மணி, ஆழ்ந்த யோசனையில் மூழ்கி, சுவரின்மீது சாய்ந்துகொண்டான். நரேந்திரனும் இதர சிஷ்யர்களும் சிறிதுநேரம் மௌனமாயிருந்தனர்.

பகவான் சிறிதுநேரம் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்து, மேற்கூறிய நிலைமையிலேயே நின்றுகொண்டிருந்த மணியை திடீரென்று திரும்பிப் பார்த்து, அடியில் வருமாறு சொல்லுகிறார் :—'ஆனால், ஈசுவரனிடத்தில் உண்மையான பக்தியுடையவனுடைய விஷயம் வேறு. எல்லோரும், அதாவது, அரசர்கள், துஷ்டர்கள், மனைவி முதலிய எல்லோரும் அவனுக்குக் கீழ்படிந்து நடக்கிறார்கள். மனைவியும் அவன் வழிக்குத் திரும்பி, அவன் செல்லும் ஈசுவர பக்தி மார்க்கத்தையே பின்தொடரலாம். புருஷனுக்கு பகவானிடம் நிஜமான பக்தியிருந்தால், மனைவி நல்வழியில் திருத்தப்பட்டு, நித்திய வாழ்வையடைய அவன் செய்யும் பிரயத்தினத்திற்கு உதவியாயிருப்பாள்.'

மணி, தன் இருதயத்தில் பொங்கிக்கொண்டிருக்கும் விசாரமாகிய அக்கினியனைய திரும்பவும் மனோராக்கியடைந்தான்.

மணி (பகவானை நோக்கி) :—இந்த ஸம்ஸாரம் என்ன பயங்கரமானது!

பகவான் (நரேந்திரன், மணி முதலியவர்களை நோக்கி) :— உண்மையாக, ஸம்ஸாரியினுடைய வாழ்க்கை பயங்கரமானதே! சைதந்யதேவர் ஒருசமயம் நித்தியானந்தரை நோக்கிச் சொன்னதாவது :—

'ஏகோதரனே! நான் சொல்வதைக் கேள்; ஸம்ஸாரத்தில் மூழ்கினவனுக்கு மோக்ஷம் மிகவும் துர்லபம்' என்று.

(தனிமையாக மணியினிடம்):—ஈசுவரனை மறந்து உலகவாழ்க்கையிலிருக்கும் மனிதனுக்கு மோக்ஷம் மிக துர்லபம். ஆனால், பகவானிடத்தில் உண்மையான பக்தியிருக்கும் மனிதனுக்கு அவ்விதமல்ல. ஈசுவர ஞானமுடையவன் ஸம்ஸாரத்திலிருந்தபோதிலும் பயமின்றியிருக்கலாம். அப்பேர்ப்பட்டவன் சமயம் ஏற்படும்பொழுதெல்லாம் தனிமையான இடத்திற்போய் ஈசுவரனை தியானம் செய்து, உண்மையான ஈசுவர பக்தியையும், சிரத்தையையும் அடையட்டும். அப்பேர்ப்பட்டவர்கள் ஸம்ஸாரத்திலிருந்தபோதிலும் பயமின்றியிருக்கலாம். சைதந்ய தேவரிடத்தில் அநேக கிரஹஸ்த சிஷ்யர்கள் இருந்தார்கள். அவர்கள், ஸம்ஸாரத்திலிருந்தபோதிலும் உலகில் பற்றற்றிருந்தனர்.

அப்பொழுது உச்சிவேளை. அபிஷேகம், தீபாராதனை, அர்ச்சனை முதலியவைகளோடு காலை பூஜை முடிந்தது. ஆலயத்தில் முழங்கும் மேளவாத்தியத்தினால், ஸ்வாமி மத்தியானம் திருப்பள்ளியிலமர்ந்ததாக அறிந்தார்கள். பகவான் போஜனத்திற்கு உட்கார்ந்தார். நரேந்திரனும், இதர சிஷ்யர்களும் பகவானைப்போலவே கோவிலில் கடவுளுக்கு நிவேதனம் செய்யப்பட்ட பிரசாதத்தையே ஆகாரம் செய்துகொண்டார்கள்.

பிரிவு-4.

அக்டோபர் 1882.

பிரம்மஸாமாஜத் தலைவரான கேசவ சந்திரஸேன்கூட பகவான் புகைக்கப்பலில் சென்றது.

அத்தியாயம் 1.

ஸமாதி.

1882-வது வருஷம் அக்டோபர் மாதம் 27-ம் தேதி வெள்ளிக்கிழமை பௌர்ணமி. இன்றைய தினம் லக்ஷ்மி பூஜை. ஸ்ரீராமகிருஷ்ணர், கோவிலில் தோட்டத்திலிருக்கும் தன்னறையில் உட்கார்ந்துகொண்டு, விஜய, கோஸ்வாமி, ஹாலாலால் இவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிறார். ஒருவன் உள்ளேவந்து, 'ஸ்வாமி. கேசவஸேனர் வந்திருக்கிறார்; அவர் கட்டத்திற்கெதிரில் நிற்கும் கப்பலில் இருக்கிறார்' என்றுசொன்னான்.

சற்றுநேரத்திற்கெல்லாம் கேசவஸேனருடைய சிஷ்யர்கள் அறைக்குள் வந்து பகவானை வணங்கி நின்றார்கள். அவர்கள், 'ஸ்வாமி, தங்களுக்காக கப்பல் வந்திருக்கிறது. கேசவபாபு அதிலிருக்கிறார்; தாங்கள் தயவுசெய்து அவ்விடம் வரவேண்டுமென்று தங்களை வேண்டிக்கொள்ளும்படியாக எங்களை அனுப்பியிருக்கிறார். இந்த யாத்திரை தங்களுக்கு மிக சந்தோஷத்தைக் கொடுக்கும்' என்றார்கள்.

சாயங்காலம் மணி 4 ஆயிற்று. கப்பலை அடைவதற்காக, பகவான் விஜய என்பவருடன் ஒரு படகிலேறுகிறார். படகில் காலை வைத்தாரோ இல்லையோ தன் நினைவையிழந்து, அந்தர்முகப்பட்டு ஸமாதியிலாழ்ந்தார்.

'எம்' கப்பலில் இருந்தார். படகு கப்பலினருகில் நெருங்க பகவான், இந்திரியங்களெல்லாம் அடங்க, அசைவற்று அந்தர்முகத்தால் பிரம்மானந்தத்தை யனுபவிக்கும் திவ்விய காக்ஷியை

'எம்' பார்க்கிறார். 'எம்' கப்பலுக்கு மூன்று மணிக்கு வந்தார். பகவான் கேசவஸேனைச் சந்திந்து அதினால் அவர்களுக்குண்டா கும் ஆனந்தத்தைப் பார்க்கவும், அவர்கள் ஸம்பாஷணையைக் கேட்கவும், 'எம்' மிக ஆவலாயிருந்தார். கேசவன் தன் பரிசுத்த நடவடிக்கையினாலும், அற்புத வாக்சாதுர்யத்தினாலும், 'எம்'போன்ற அநேக சிறுவர்களின் மனதைக் கவர்ந்திருந்தார்.

அநேகர் கேசவஸேனரை, தங்கள் பந்துவாகவெண்ணி மிருந்த பிரேமை பாராட்டினார்கள். கேசவ், ஆங்கிலேய வித்தையடைந்தவராய் ஆங்கிலேயக் காவிய நூல்களிலும், தத்துவ சாஸ்திரங்களிலும் அதிகப் பயிற்சியடைந்தவர். தவிர, அனேக தடவைகளில் விக்ரஹாராதனையை இகழ்ச்சியாகவும், கண்டித்தும் பேசியிருக்கிறார். அப்பேர்ப்பட்டவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை வியந்து, அவரிடத்தில் பக்தியும் சிரத்தையும் பாராட்டுவதும் தவிர, ஆலயத்திற்கு இவரைப்பார்க்க அடிக்கடி வருவதும் மிக வியக்கத்தக்கதே! இவ்விருவர்களுக்கும் பொதுவான விஷயம் எது என்று அறிவது, 'எம்' முதலியவர்களுக்கு ஸ்வாரஸ்யமான வேலையாயிருந்தது.

கேசவரைப்போலவே பகவான் கடவுள் அரூபி என்று சொல்லுகிறார். ஆயினும், கடவுள் ரூபத்தோடும் இருக்கிறாரென்றும் சொல்லுகிறார். அவர் கடவுளை பிரம்மமாக தியானம்செய்கிறார். ஆனால், ஹிந்து ஐதிகத்திலிருக்கும் அநேக தேவவிக்ரஹங்களுக்கும், தேவீ விக்ரஹங்களுக்கும் பிரதிதினம் தூபதீப நைவேத்தியமுதலிய ஆராதனைகள் செய்துவருகிறார். இன்னும், பிரம்மாநந்தத்தில் மூழ்கி, அவ்விக்ரஹங்கள் முன்னிலையில் பாடவும், ஆடவும் செய்கிறார். மற்றத் துறவிகளைப்போலல்லாமல் பகவான், கட்டிலின்மேல் மெத்தை விரித்துப் படுக்கிறார்; சிவப்புக்கரைபோட்ட வஸ்திரம் தரித்துக்கொள்ளுகிறார். இன்னும், அவர் சொக்காய், மேஜோடு, ஜோடு இவைகளையும் போட்டுக்கொள்ளுகிறார். இவ்வளவு இருந்தும், அவர் உலகப்பற்றற்றவராகவிருக்கிறார். கிரஹஸ்தனிடம் இல்லாததாய் துறவியினிடம்

மாத்திரம் இருக்கும் அடையாளங்களெல்லாம் அவரிடம் காணப்படுகின்றன. ஆகையினால் ஜனங்கள் அவரை பரமஹம்ஸர் என்றழைக்கிறார்கள். இதற்குமாறாக கேசவ், ஈசுவரனை அரூபியென்றே அபிப்பிராயப்படுகிறார். அவர், தன் மனைவி மக்களோடு கிருஹஸ்தாச்ரமத்திலிருக்கிறார்; இங்கிலீஷில் உபந்நியாஸம் செய்கிறார்; மதவிஷயங்களைக் குறித்த பத்திரிகையொன்று வெளியிட்டு வருகிறார்; தவிர, தனக்கு வேண்டிய உலக வியவகாரங்களை வேண்டியதுபோல் நடத்திவருகிறார்.

படகு கப்பலோரத்தில் வந்துவிட்டது. எல்லோரும் பகவானைப் பார்க்க ஆவலுடன் வழியில் கூட்டம் கூடியிருக்கிறார்கள். பகவான் க்ஷேமமாய் கப்பலேறவேண்டுமேயென்று கேசவ் மிகக் கவலையுடனிருக்கிறார்.

கப்பலின் மேல்தட்டுக்கு அவரை அழைத்துக்கொண்டு போகவேண்டி, மிகப்பிரயாசத்துடன் ஸமாதியினின்றெழுப்பினார்கள். அப்பொழுதும், பிரம்மானந்த நிலைமை அவரை இன்னும் விடவில்லை. சிஷ்யனால் தாங்கப்பட்டவராய் தன்னையறியாமல் நடந்து வந்தார். கப்பலின் மேல்தட்டு அறைக்கு வந்ததும் கேசவரும், இன்னும் மற்றவர்களும் அவரை நமஸ்கரிக்கவே, இருந்த கொஞ்சம் பிரக்ஞையும்போக ஆரம்பித்தது.

கப்பலுக்குள் ஒரு பெஞ்சும், ஒரு மேஜையும், சில நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. ஓர் நாற்காலியில் பகவான் வீற்றிருக்க, மற்றொன்றில் கேசவ் தானிருந்துகொண்டு விஜயருக்கும் ஒன்றைக் கொடுத்தார். பெரும்பான்மையும் பிரம்மஸமாஜத்தவர்களான அங்கிருந்த மற்ற பக்தர்கள் கீழே உட்கார்ந்தார்கள். அறை மிகச்சிறியதாயிருந்ததினால் அநேகர் வாசற்கருகிலும், ஜன்னலருகிலும் நின்றுகொண்டு, ஆவலுடன் உள்ளே எட்டிப்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

பகவான் இப்பொழுது திரும்பவும் ஸமாதியில் மூழ்கிவிட்டனர்! எல்லோரும் அவர் முகத்தைக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். அநேகர் அறைக்குள் வந்திருப்பதையும், பகவானுக்கு நல்லகாற்று வேண்டியிருப்பதையும் கேசவ் அறிந்தார்.

விஜயர் என்பவர், முன் கேசவரினருடைய சிஷ்யராகவிருந்து, கொஞ்ச காலத்திற்கு முன் பிரிவுபட்ட வேறு கொள்கையையுடைய ஸாதாரண பிரம்மஸமாஜத்தைச் சேர்ந்தவர். கேசவசந்திரஸேனர், தன் மதத்தின் கொள்கைக்கு விரோதமாக, சிறு வயதுடைய தன் பெண்ணை விவாஹம்செய்து கொடுத்ததைப் பற்றி, சில சமயங்களில் விஜயர், கேசவரை தூஷித்துப் பேசியிருக்கிறார். ஆதலால், சிறிதேனும் எதிர்பார்க்கப்படாமல் கப்பலுக்கு வந்திருக்கும் விஜயரைச்சந்திக்க, கேசவ் தயாராயில்லை.

கேசவ் தன் ஆசனத்தை விட்டெழுந்து ஜன்னற்கதவுகளைத் திறந்தார். யாவரும் பகவானை கண்கொட்டாமற் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர் ஸமாதி சிறிது கலைந்ததும், அத்திவ்விய தரிசனம் அவரைவிடவில்லை. மழமழத்த குரலில், 'ஆ தாயே நீ என்னை ஏன் இங்கு அழைத்து வந்தாய்? அவர்கள் நாலுபக்கமும் கட்டுண்டவர்களாயிருக்கிறார்கள்! அக்காராக்கிருஹத்திலிருந்து அவர்களை விடுதலைசெய்ய என்னால் சாத்தியமாகுமா?' என்று தன் ஜகன்மாதாவினிடம் பேசிக்கொண்டிருக்கிறார்.

உலகத்திலிருப்பவர்கள் ஸம்ஸாரமாகிய காராக்கிருஹத்தில் அடைபட்டவர்களென்றும், அவர்களால் பிரம்மஞ்ஞானமாகிய நல்ல காற்றை அடையமுடியாதென்றும், அத்திவ்விய ஒளியை கொஞ்சமேனும் பார்க்கமுடியாதென்றும், உலக வியவகாரத்தால் கை கால்கள் கட்டுண்டவர்களென்றும் பகவான் கருத்தோ? ஸம்ஸாரமாகிய காராக்கிருஹத்திலிருப்பவர்கள், அக்காராக்கிருஹத்திலிருக்கும் விஷயானந்தங்களையும், லௌகிக வியவகாரங்களையும் மாத்திரமே பார்ப்பார்கள். ஆகையினால் தான் பகவான் தன் ஜகன்மாதாவினிடம் 'என்னை ஏன் இங்கு அழைத்து வந்தாய்?' என்று சொன்னாரோ?

காசிப்பூரிலிருந்து நீலமாதவபாபு இவ்விடம் வந்திருக்கிறார். பகவான் ஸமாதி கலைந்ததைக்கண்டு நீலமாதவரும், மற்றொரு பிரம்மஸமாஜ பக்தனும், காசிப்பூரிலிருக்கும் மஹாத்மாவாகிய பவஹாரிபாபாவைப்பற்றிப் பேசவாரம்பித்தார்கள்.

ஒரு பிராம்மோ (பகவானைநோக்கி) :—ஸ்வாமி, தங்களைப்போலவே புண்ணிய புருஷராயிருக்கும் காஸிப்பூர், பவஹாரிபாபாவைப்பார்க்கும் அதிர்ஷ்டம் இவர்களுக்குக் கிடைத்தது.

பகவானுக்கு இன்னும் பேசும் திராணி திரும்பவில்லை. அவர் ஹிருதயம் ஆனந்த வெள்ளத்திலால் பொங்கிப் பெருகியவராய் பேசமுடியாமல், புன்சிரிப்புடன், பாபாவைக் குறித்துப் பேசும் விஷயங்களைக் கேட்டுவந்தார்.

பிராம்மோ (பகவானைப் பார்த்து) :— ஸ்வாமி! பவஹாரி பாபா தன்னறையில், தங்களுடைய படத்தை வைத்திருக்கிறார்.

பகவான் புன்சிரிப்புடன் தன் சரீரத்தைச் சுட்டிக் காட்டுகிறார். பின் மெதுவான குரலில் 'இது ஒரு தலையணையுறை! தலையணையுறையே தவிர வேறில்லை' என்றார்.

'தலையணையும், தலையணையுறையும்.' ஆத்மாவும், சரீரமும். ஆத்மா ஒன்றுதான் சாசுவதம்; சரீரம் அசாசுவதம். படம் அசாசுவதமான சரீரத்தினுடையது என்று அபிப்பிராயப்படுகிறாரோ? இக்காரணத்தாலோ பகவான், 'கேவலம் உடலின் படத்தை பெரிதாக மதியாமல், நாம் உடலின் உள்ளிருக்கும் ஆத்ம ஸ்வரூபத்தை பூஜிக்கவேண்டும்' என்கிறாரோ?

பகவான் மேலும் சொல்லுகிறார் :— 'ஆனால் ஒன்று மனதில் வைக்கவேண்டும் பக்தனுடைய ஹிருதயம் பகவானுடைய ஆலயம் ஈசுவரன் எல்லாவற்றிலும் வியாபித்திருக்கிறாரென்பதுண்மையே. ஆயினும் பக்தனுடைய ஹிருதயத்தில் அவன் விசேஷமாயிருக்கிறான். உதாரணமாக, அநேக வீடுகளை உடைத்தான ஒரு ஜமீன்தாரை, அவனுடைய எந்த கிருஹத்திலும் பார்க்கமுடியும். ஆயினும், அந்த ஜமீன்தாரை விசேஷமான ஒரு கிரஹத்தில் தான் காணமுடியுமென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். அது

போல் பக்தனுடைய ஹிருதயம் பகவானுக்குக் கொலு மண்டபம். ஒருவன் பகவானைப் பார்க்கவேண்டுமானால் அந்த ஸ்தானத்தில்தான் பார்க்கமுடியும்.

(யாவரும் சிரிப்பு)

எந்த வஸ்து வேதாந்திகளால் பிரம்மமென்று அழைக்கப் படுகிறதோ, அவ்வஸ்துவையே, யோகிகள் ஆத்மாவென்றும், பக்தர்கள் பகவானென்றும் அழைக்கிறார்கள்.

மேல்ஜாதியாகிய பிராமணன் ஒருவன், ஆலயத்தில் ஈசுவரனை பூஜைசெய்யும்பொழுது அர்ச்சகன் என்றும், சமையலறையில் சமையல் செய்யும்பொழுது சமையற்காரன் என்றும் அழைக்கப்பட்டபோதிலும், அவன் எப்பொழுதும் பிராம்மணனாகவே யிருக்கிறான்.

வேதாந்தியானவன், பிரம்மத்தை அடையவேண்டுமானால், 'நேதி, நேதி' அதாவது, 'பிரம்மம் இதல்ல, இதல்ல' என்று சொல்லிக்கொள்கிறான். பிரம்மம், அளவிடக்கூடியது ஒன்று மில்லை; ஜீவாத்மாவன்று; வெளியில் தோற்றப்படும் பிரபஞ்சமன்று; என்று பார்த்து, ஒவ்வொன்றாகத்தள்ளி, கடைசியில் பிரம்மத்தை அடைகிறான். இவ்வித விசாரத்தால், மனம் இச்சைகளால் விகாரமடையாமல், தன் ரூபத்தையே எப்பொழுது இழுக்கிறதோ, அப்பொழுதுதான், பிரம்மஞ்ஞானத்தை அடைந்து, ஸமாதியில் நிற்க முடியும். அப்பேர்ப்பட்டவன் தான் உண்மையாக பிரம்மஞ்ஞானத்தையடைந்து, ஜகத்தை, மித்தை, பொய் என்று அறிகிறான். வஸ்துக்களைக் குறிக்க நாமரூபங்கள் கனவுபோலவென்றும், பரப்பிரம்மம் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாததென்றும், பரமாத்மாவை புருஷனாகக்கூடச் சொல்லமுடியாதென்றும் அறிகிறான்.

இது அத்வைதிகளின் கொள்கை. பக்தர்களோவெனில் வேறுவிதமாக நினைக்கிறார்கள் அத்வைதிகளைப்போலல்லாமல் ஜாக்கிரதாவஸ்தையை நிஜமாகவும், பிரபஞ்சத்தை கனவெ

ன்றென்ருமல் உண்மையாகவும் என்னுகிருர்கள். நாமரூபங்களில் நம்பிக்கை அவர்களுக்குண்டு. அவர்கள், உலகத்திலிருக்கும் வஸ்துக்களெல்லாம் கடவுளின் சிருஷ்டியென்றும், கடவுள் அனந்தகல்யாண குணங்களும், திவ்விய மங்கள ஸ்வரூபமும் உடையவரென்றும் சொல்லுகிருர்கள். நக்ஷத்திரங்கள் நிறைந்த வானம், சூரிய சந்திராதிகள், மலை, கடல், மனிதர்கள், மிருகங்கள், பக்ஷிகள் ஆகிய இவைகளெல்லாம் அவனுடைய திவ்விய அற்புத சிருஷ்டி. அவன் தனவான்; இவைகளெல்லாம் அவனுடைய தனம். அவன் உள்ளிலும், வெளியிலும் எங்குமிருக்கிருன். அன்றியும், பக்தர்களில் மேலான பதவியை அடைந்தவன், இதே ஈசுவரன்தான், ஸாங்கிய வாதிகளால் கூறப்பட்ட, ஜீவாத்மாவாகவும், இருபத்தினன்கு தத்துவங்களடங்கிய ஜகத்தாகவும் உற்பவித்திருக்கிருன்' என்று சொல்லுகிருன். பக்தன், சர்க்கரையின் இனிப்பை அனுபவிக்க விரும்புகிருனேயொழிய, தானே சர்க்கரையாகவிருக்கவேண்டுமென்று விரும்புகிறதில்லை.

(யாவரும் சிரிப்பு.)

பக்தன் எவ்வாறு நினைக்கிருனென்றும், உணருகிருனென்றும் தெரியுமா? 'ஏ ஈசா! நீ பிரபு, நான் உனது பிருத்தியன்;' 'நீ என் தாயார், நான் உனது குழந்தை;' அல்லது, 'நீ குழந்தை, நான் உனது தாயார், அல்லது. தகப்பன்;' அல்லது, நீ அகண்டம், நான் அதன் ஒருபாகம்;' என்று சொல்லுகிருன். 'நான் பிரம்மம்' என்று பக்தன் சொல்லவேமாட்டான்.

யோகியானவன், ஆத்மாவை அனுபவபூர்வமாக அறிய விரும்புகிருன். ஸமதமாதிகளால், ஜீவாத்மாவை பரமாத்மாவோடு கலக்கும்படி செய்வது அவன் கருத்து. அவன், முதலில், அங்குமிங்கும் இந்திரிய விஷயங்களில் அலைந்து சிதறியிருக்கும் மனதை ஒருங்குபடுத்தி, பின்னர், பரமாத்ம ஸ்வரூபத்தில் நிறுத்தப் பிரயத்தினப்படுகிருன். ஆகையினல்தான் அவனுக்கு, தனிமையாயிருக்கும் இடத்தில், மனம் சஞ்சலமடையாமலிருக்கும் ஆசனத்திலிருந்து தியானம் செய்வது அவசியம்.

ஆனால், எல்லாம் ஒரே வஸ்துதான்; நாமபேதம் தவிர வேறில்லை. ஒரே வஸ்துவைத்தான்; அத்துவைதி 'பிரம்மம்' என்றும், யோகி 'ஆத்மா' என்றும், பக்தன் 'பகவான்' என்றும் சொல்லுகிறான்.

அத்தியாயம். 2

ஸகுணப்பிரம்மம் ஆதிசக்தியாகிய காளியும்அவள் மகிமையும்.

கப்பல் தக்ஷிணேசுவரத்தைவிட்டு கல்கத்தா நகரைநோக்கிச் செல்கிறது. அநேகர் கண்கொட்டாமல் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் திருவாய்மலர்ந்தருளும் வாக்கியங்களாகிய அமிருதத்தைப் பானம் செய்கிறார்கள். கப்பல் போவதுகூட அவர்களுக்குத் தெரியவில்லை. கோவில் தோட்டத்தைவிட்டு கப்பல் வெகுதூரம் வந்துவிட்டதனால், அவ்வழகிய ஆலயம் கண்ணிற்கு மறைந்துவிட்டது. ஆகாசத்தைப் பிரதிபிம்பிக்கும் புண்ணிய தீர்த்தத்தின்மேல் இவர்களிருந்தபோதிலும், அதைக் கப்பல் பிளந்து செல்லும்பொழுதுண்டாகும் நுரைசூடின அலைகளின் சப்தம் பக்தர்களின் காதிற்படவில்லை. பகவானது திவ்விய தரிசனத்தின் அற்புதமானது அவர்களை மயக்கும்படி செய்தது. பக்தியென்னும் மையினால் அலங்கரிக்கப்பட்ட ஏற்கனவே அழகிய கண்களையும், பிரம்மானந்தத்தினால் ஜ்வலிக்கும் மந்தஹாஸ வதனத்தையும்கொண்ட, ஓர் அற்புத அவதார புருஷன் அவர்கள் முன்னிருக்கிறார். உலகத்தையும் அதன் ஸுகங்களையும் விட்டவர்; பகவத்தியானத்தினால் மயங்கினவர்; பகவானைத் தவிர வேறெதையும் தேடாதவர்; இத்தன்மைய அம்மஹா புருஷனை மனம் கவரப்பட்டுப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்:—ஸ்ரீமத் சங்கராசார்யரால் விவரிக்கப்பட்ட அத்வைத வேதாந்த தத்துவப்பிரகாரம், பிரம்மம் ஒன்றுதான் ஸத்தியம்; ஜகத்மித்தை. ஸிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்குக் காரணபூதமாயிருக்கும் ஸகுணப் பிரம்மமாகிய ஜகன்மாதா (சக்தி) நாம் பிரம்மம் ஸத்தியம் என்று சொல்லுகிற அர்த்தத்தில் ஸத்தியமாகமாட்டாள்.

ஆனால் ஸாதாரண மனிதன், 'நேதி' 'நேதி' என்று எவ்வளவு தூரம் விசாரணை செய்து பார்த்தபோதிலும், ஸகுணப் பிரம்மத்தின் ஆதீனத்தைவிட்டு மேற்செல்லமுடியாது. இந்திரியங்களை ஒட்டின மனதையிழந்து, அவனுடைய ஜீவன் ஆனந்தமயமான ஸமாதியில் பிரம்மத்துடன் ஒன்றாகக்கலக்கும்பொழுது தான் அப்படிச்செல்லமுடியும். 'நான் பிரம்மத்தியானம் செய்கிறேன்' என்று ஒருவன் சொல்லும்பொழுதுகூட, அந்த குணத்தோடு கூடிய பிரம்மத்தின் எல்லைக்குள்தான் இருந்து வருகிறான். ஸகுணப் பிரம்மத்தியானத்தை ஒருவன் உதறி விலக்குவது அசாத்தியம்.

ஆதலால் நிர்க்குணப்பிரம்மம், ஸகுணப்பிரம்மம் எல்லாம் ஒன்றே. ஒன்றில் நம்பிக்கையிருந்தால் மற்றொன்றிலும் நம்பிக்கையிருந்தே தீரவேண்டும். அக்கினியை அதன் தஹிக்கும் குணத்திலிருந்து பிரித்து அறியமுடியாது. அவ்வண்ணமே தஹிக்கும் குணத்தை அக்கினியிலிருந்து பிரித்து அறிய முடியாது. அவ்வாறே சூரியனை அதன் கிரணங்களைத்தவிர்த்து அறியமுடியாது.

பால் எவ்விதமிருக்கிறது? அது, ஒரு வெள்ளையான வஸ்து வென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். வெள்ளை நிறத்தை மாத்திரம் பாலிலிருந்து பிரித்தறிய முடியாது. அவ்வாறே பாலை அதன் வெண்மை நிறத்திலிருந்து பிரித்தறிய முடியாது.

அதுபோல் நிர்க்குணப்பிரம்மத்தை குணங்களினின்று பிரித்தறியமுடியாது. அகண்டமாய், நிர்க்குணமாய், நாமரூபங்களால் பந்தப்படாதிருக்கிற வஸ்துவும் நாமரூபங்களுடன் கூடியதும் பரஸ்பர சம்பந்தப்பட்டது. ஒன்றைவிட்டு ஒன்றை நினைக்க முடியாது.

நம் அறிவுக்கெட்டியபடி நாம் ஆதி சக்தியென்று கருதும் ஸகுணப்பிரம்மம், ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களுக்கு ஹேது

வாயிருக்கிறது. தந்திரங்கள் அவ்வஸ்துவை காளியென்றும் சக்தியென்றும் அழைக்கின்றன.

ஆகையினால் நிர்க்குணஸகுணப்பிரம்மமெல்லாம் ஒரேவஸ்து தான். ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களாகிய விகாரங்களில்லாததாக நினைக்கும்பொழுது நிர்க்குணப்பிரம்மமென்று, அதை அழைக்கிறேன். ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார முதலிய காரியங்களுடனிருக்கும் பொழுது அதையே ஸகுணப்பிரம்மமென்று நினைக்கிறேன்.

எப்படி ஒரே வஸ்துவானது, 'ஜலம்' என்றும், 'வாட்டர்' என்றும், 'பானி' என்றும், 'வாரி' என்றும், 'அக்வா' என்றும், சொல்லப்படுகின்றதோ, அவ்வாறே ஒரே வஸ்து, பற்பல நிலைமைகளில் பற்பல நாமங்களால் அழைக்கப்படுகிறது. ஒரு தடாகத்திற்கு நான்கு படித்துறைகளிருப்பதாக வைத்துக்கொள்வோம். ஹிந்துக்கள் ஒரு துறையிலிறங்கி குடித்து அதை, 'ஜலம்' என்று அழைக்கிறார்கள். மஹம்மதியர்கள் மற்றோர் துறையிலிருந்து குடித்து அவ்வஸ்துவை 'பானி' என்றழைக்கிறார்கள். ஆங்கிலேயர்கள் வேறோர் படித்துறையிலிருந்து குடித்து அதை 'வாட்டர்' என்று சொல்கிறார்கள்.

ஈசுவரன் ஒன்றே; நாமரூபங்கள் பல, சிலர் அவரை அல்லாவென்றும், சிலர் பகவானென்றும், சிலர் பிரம்மமென்றும், மற்றும் சிலர் காளியெனன்றும், வேறு சிலர் இராமன், ஹரீ, இயேசு, புத்தர் என்றும் அழைக்கிறார்கள்.

கேசவ் (சிரித்துககொண்டு) :—பிரபோ ! ஜகன்மாதாவாகிய காளி, அவளது லீலாரூபமாகிய இப்பிரபஞ்சத்தில், எந்தெந்த ரூபங்களாகத் தோற்றுவிக்கிறாள் என்பதை மற்றுமொருமுறை திருவாய் மலர்ந்தருளவேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் (புன்சிரிப்புடன்) :—விளையாட்டுக்குரிய ரூபமாயிருக்கும் இவ்வுலகத்தோடு லோகமாதா,

பலவித ரூபங்களோடும் பலவித நாமங்களோடும் விளையாடுகிறாள், ஒருஸமயம் அகண்ட நிர்க்குணப் பிரம்மான மஹா காளியாகவும் மற்றொருஸமயம், நித்திய காளியாகவும் தோற்றுவிக்கிறாள். ஒரு நிலைமையில் சுடுகாட்டிற்கு அதிபதியான பயங்கர ரூபத்தோடுகூடிய மயான காளியாகவும், மற்றோர் நிலைமையில் நம்மெல்லாமிரக்ஷித்து அனுக்கிரஹம் செய்யும் ரக்ஷா காளியாகவும் தோன்றுகிறாள். மற்றும் ஓர் நிலைமையிலோ, அகிலாண்டநாதனாகிய சிவனுக்குப் பிரியையாகி, பக்தர்களின் கண்களுக்கு ஸந்தோஷத்தையும் குளிர்ச்சியையும் கொடுக்கின்ற நீலமேக சியாமளையாகத் தோன்றுகிறாள். புண்ணிய கிரந்தங்களாகிய தந்திரங்கள், அவ்வகண்ட பிரம்மமாகிய தாகினியைப்பற்றிப்பேசுகின்றன. சூரிய, சந்திர, நக்ஷத்திரங்களொன்றுமில்லாமல், எங்கும் ஆழ்ந்த இருள் மூடியிருக்கும்பொழுது, எனது ஜகன்மாதா மட்டிலுமே அரூபியாயிருந்தாள். ஹிந்துக்கள் கிரஹத்தில் பூஜிக்கப்பட்டுவரும் என் அன்னையின் நீலமேக சியாமள ரூபமானது மனிதனால் சுலபமாக அறியக்கூடியது. அந்த ரூபத்தில் அவள், மனிதர்களுடைய மனோபீஷ்டங்களை ஏராளமாகக் கொடுத்து, அவளுடைய குழந்தைகளை "பயப்படவேண்டாம்" என்று சொல்லி அனுக்கிரஹம்செய்து அவர்களது மனதை இழுக்கிறாள். ஹிந்துக்கள் தங்கள்வீட்டில் பூஜித்துவரும் தேவி அவள் தான். இன்னும், அவள், மஹாமாரி, பஞ்சம், பூகம்பம், வரக்ஷி, அதிகமழை, இவைகள் ஏற்படும் காலங்களில், அவைகளினின்றும் இரக்ஷிக்கும் ஜகத் ரக்ஷகியாகத் தோற்றப்படுகிறாள். மற்றும், மயானக்கரையில் அவள் காலரூபமாயிருக்கிறாள். பிணம், நரி, யோகினி அவளுடைய பயங்கரமான கூட்டாளிகள். அவள். அவ்வளவு கொடுமையான பிரதேசங்களின்மத்தியில், மேற்கூறிய பயங்கரமானவைகளால் சூழப்பட்டு வசிக்கின்றாள். பெருகும் இரத்தவெள்ளமும், அவள் கழுத்தைச்சுற்றிய மண்டையோட்டின் மாலையும், இறந்தவர்களின் கைகளினாற்செய்த இடைக்கச்சையும், அவளை ஸம்ஹார காளியென்று அறிவிக்கும் குறிகள்.

அவள் சிருஷ்டிக்கும் தன்மையைப்பார்! பிரளயகாலத்தில் என் அன்னை ஜகன்மாதா சிருஷ்டிகளின் விதைகளை ஜாக்கிரதையாக எடுத்துச்சேர்த்து வைக்கிறாள். ஒரு வீட்டு எஜமானி வீட்டு உபயோகத்திற்கான விதை முதலான சாமான்கள் போடப் பட்ட பானையொன்று தன்வசம் தனியாக வைத்துக்கொள்கிறாள். (இதைக்கேட்டதும், கேசவசேனரும் மற்றவர்களும் சிரிக்கிறார்கள்.)

பகவான் (புன்சிரிப்புடன்) :—ஆம், அப்பா அதுவாஸ்தவம் ஒவ்வொரு வீட்டு எஜமானியும், அப்பேர்ப்பட்ட பானையொன்று தன்வசம் வைத்திருக்கிறாள். அதில், கடல்நுரையும், வெள்ளரி, சுரை முதலியவைகளின் விதைகளின் சிறுபொட்டிணங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. அவள் வேண்டுமென்ற பொழுது அவைகளை வெளியே எடுக்கிறாள். அவ்வாறே என் அம்மை சிருஷ்டியின் விதைகளை பிரளயகாலத்தில் எடுத்துவைக்கிறாள். (யாவரும்சிரிப்பு.)

ஆதிதிவ்ய சக்தியாகிய என் அம்மை இம்மாறுபடும் உலகத்தின் உள்ளிலும் வெளியிலும் இருக்கிறாள். அவள், உலகத்தை உண்டுபண்ணி அதில் வசிக்கிறாள்! அவள் சிலந்தி; இவ்வுலகம் அவளால் நெய்யப்பட்ட வலை! சிலந்தி தன் சரீரத்திலிருந்து வலையைச் செய்துகொண்டு அதில் வசிக்கிறது. என் அம்மை தானே பாத்திரமும், அடங்கியிருக்கும் வஸ்துவுமாயிருந்து, பிரபஞ்சங்களுக்கெல்லாம் ஆதிகாரணமும் நித்தியகாரணமுமாகவிருக்கிறாள்.

காளி நீலமேகவர்ணமா? இல்லவேயில்லை! அவள் மனிதர்கள் பார்வைக்குமட்டிலும் அவ்விதம் தோற்றுகிறாள். ஆகாசம் தூரப்பார்வைக்கு நீலவர்ணமாகத் தோற்றுகிறதில்லையா? சமீபத்திலிருக்கும் ஆகாசம் யாதொரு நிறமுமில்லை. அவ்வண்ணமே தான் ஸமுத்திரஜலமும். அது சிறிது தூரத்திலிருந்து பார்த்தால் ஜ்வலித இருண்ட நீலநிறமாகத் தோற்றும். அதனருகில்

வந்து கொஞ்சம் ஜலம் உன் கையிலெடுத்துப்பார்த்தால் அது வர்ணமற்றதென்று நீயறிவாய். அவ்வாறே காளியின் (ஜகன்மாதா) அருகிற்சென்று அவளையறிந்தால், குணங்களால் விசேஷணிக்க முடியாத நிர்க்குணப்பிரம்மமாகத் தோற்றப்படுவாள்.

பகவான், பகவத் பிரேமையாகிய மதுவினால் மயங்கினவராய் பின்வரும் கருத்துள்ள பாடலைப்பாடினார்.

பாடல்.—

" என் ஜகன்மாதா கறுப்புவர்ணமா! ஆ! என்மனமே நீ என்ன சொல்கிறாய்? எல்லையற்ற அகண்டத்தை அவள் ஆடையாக அணிந்திருக்கிறாள்! அவள் கருப்பாயிருந்தபோதிலும், ஹிருதய கமலத்தைப் பிரகாசிப்பிக்கிறாள்!

ஸ்ரீ ராமகிருஷ்ணர் (கேசவ் முதலியவர்களை நோக்கி):—பந்தம், மோக்ஷம் இரண்டும் அவளுடைய செய்கை. ஒரு மனிதன், பெண் பொன்னிவைகளினாற் கட்டுப்படுவது, பிரபஞ்சமுறையில் ஒருபாகமாக என் தாயாரால் சிருஷ்டிக்கப்பட்ட மாயாசக்தியினால் தான். மனிதன் பந்தங்களிலிருந்து மோக்ஷமடைவதும், அவளுடைய அருளினாலும், கருணையினாலுமே. அவள், தன் குழந்தைகளை, ஸம்ஸாரமாகிய ஸாகரத்தினின்றும் கடத்தி, அவர்கள் கைகால்களைக் கட்டியிருக்கும் விலங்குகளை நீக்குகிறாள்.

பகவான் கந்தர்வகானத்தையும் பழித்து எழும் இனிய குரலில், கீழ்வரும் கருத்துக்களடங்கிய பாடலைப் பாடுகிறார்:—

பாடல்.

ஜகன்மாதாவும், முக்தஜீவனும்.

1. நீலமேக வர்ணத்தையுடைய என்னம்மா! நீ, ஸம்ஸாரமாகிய சந்தைக்களத்தில், மனிதனாகிய காற்றாடியைப் பறக்கவிட்டு விளையாடுகிறாய்!

அந்தக்காற்றாடி மாயையென்னும் கயிற்றில்கட்டப்பட்டு நம்பிக்கையென்னும் காற்றினால் எழும்பிப்பறக்கிறது.

2. இக்காற்றாடியின் சட்டமோ மனிதர்களுடைய சரீரத்தின் எலும்புகளும், நரம்புகளும், உள் அவயவங்களும். உன் முக்குணங் (ஸத்வ, ரஜஸ், தமஸ்) களினாலே இக்காற்றாடிசெய்து அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது.

3. மேலும், இக்கயிறு, உலகஇச்சையென்னும் கண்ணாடித்தூளினால் கூராக்கப்பட்டிருக்கிறது. இலக்ஷம் காற்றாடிகளில்! ஒன்றோ இரண்டோதான் கயிறறுபட்டு முக்திபடைகின்றன. ஆ; அப்பொழுது நீ எவ்விதம் கைகொட்டிச் சிரிக்கிறாய்!

4. 'இவ்விதம் விடுபட்ட காற்றாடி, அநுகூலமான காற்றினால் அடித்துக்கொண்டு போகப்பட்டு, ஸம்ஸார ஸாகரத்திற்கு அப்பாலிருக்கும் அகண்டத்தில் விழுகிறது.' என்று பிரஸாத் சொல்லுகிறார்.

என்னுடைய ஜகன்மாதா எப்பொழுதும் திருவிளையாடல்களிலேயே பிரியமுள்ளவளாகவிருக்கிறாள். உண்மையாகஇவ்வுலகம் அவளுடைய விளையாட்டுக்கருவி. அவள் தன்னிஷ்டப்படியே செய்பவள். தன் லக்ஷம் குழந்தைகளில் ஒன்று, அல்லது, இரண்டு பேரைமட்டிலுமே சிறையிலிருந்து விடுவிப்பதும் அவளுடைய இஷ்டமாம்.

ஓர்பிராம்மோ (பிரம்ம ஸமாஜத்தின்) :— ஸ்வாமீ, அவளுக்குப்பிரியமிருந்தால் ஒவ்வொருவரையும் விடுவிப்பது சாத்தியம். அப்படியிருக்க, அவள் ஏன் எங்கள் கைகால்களை உலகப்பற்றுகிய சங்கிலிகளால் கட்டியிருக்கிறாள்?

ஸ்ரீராமகிருஷ்ணர் :— அவளுடைய இஷ்டம் அப்படியிருக்கிறது போலவிருக்கிறது. தான் சிருஷ்டித்த இவர்களோடு இவ்விதம் விளையாடிக்கொண்டிருக்க அவளுக்கு இஷ்டம். கண்ணும்

பூச்சி விளையாட்டில், தாய்ச்சியைத்தொடும் வரையில்தான் குழந்தைகள் ஓடிக்கொண்டிருக்கும். தாய்ச்சியைத் தொட்டகுழந்தைகள் திரும்பவும் ஓடவேண்டியதில்லை. மேலும் அவ்விளையாட்டில் திரும்பவும் சேரமுடியாது. அவளைத் தொடாத மற்றவர்கள், அவள் சந்தோஷமடைய ஓடிக்கொண்டிருக்கவேண்டும். எல்லோரும் ஒரே சமயத்தில் தன்னைத்தொட்டு, அதினால் அவ்விளையாட்டை முடிக்க லோகமாதாவுக்கு, ஒருவிதத்திலும் பிரியமிராது. ஆகையினால் ஸம்ஸாரத்திற்குக் கட்டப்பட்டிருக்கும் காற்றாடிகளாகிய ஜீவர்களில், லக்ஷத்திலொருவன் கயிற்றை அறுத்துக்கொண்டு முக்தியடைவதைப்பார்த்து, அவள் கைகொட்டி சந்தோஷமடைகிறாள். (பக்தர்களெல்லாரும் சந்தோஷிக்கிறார்கள்).

என் ஜகன்மாதாவே ஒவ்வொரு ஜீவனையும் பார்த்து, அந்தரங்கமாக, கண்ணைச்சிமிட்டிக்கொண்டு, 'நான் மறு உத்தரவு கொடுக்கும் வரையில் உலகத்திற்குப்போய் ஜீவி' என்று சொல்லியிருக்கிறாள். நிஜமாக, மனிதஜீவர்களின்மீது குற்றம் சுமத்துவதற்கில்லை. அவள் தன் அருளினாலேயே, உலகவிஷயங்களிலிருந்து மனதைத்திருப்பி, அவளுடைய திருவடித்தாமரைகளில் பக்தியும், முக்தியும் கொடுக்கக்கூடும்.

பகவான் ஸம்ஸாரியாகப் பாவித்துக்கொண்டு, லோகமாதாவின் முன்னிலையில் தன் மனதிலுள்ள துக்கங்களை எடுத்துக்காட்டுவதுபோல், அடியில்வரும் கருத்துக்களடங்கிய பாட்டைப் பாடுகிறார்.—

ஜகதீசுவரியும் அவள் குழந்தைகளும்.

1. என் அம்மா நீ இங்கிருந்தும், நான் விழித்துக்கொண்டிருக்கும்பொழுதே திருடர்கள் (காமாதிகள்) என் சகலத்தையும் அடித்துக்கொண்டு போகிறார்களே! என்னும் கவலையே என் மனதில் பெரும்பாரமாகக் குடிகொண்டிருக்கிறது.

2. நான் சில சமயம் உன் திருநாமத்தைச், சொல்லவேண்டுமென ஸங்கல்பித்துக்கொள்கிறேன். ஆனால் சரியான சமயத்தில் மறந்துபோகிறேன். ஆ! இதெல்லாம் உன் மாயை என்று இப்பொழுது அறிகிறேன்.

3. சாப்பிடவோ, வைத்துக்கொள்ளவோ ஒன்றும் நீ கொடுக்கவில்லை; ஆதலால் உனக்கும் கிடைக்கவில்லை. இது என் தப்பிதமா ? நீ கொடுத்திருந்தாயானால், உனக்கு நிச்சயமாகக்கிடைத்திருக்கும். நீ யளித்தவைகளைக்கொண்டே நானும் உனக்குக் கொடுத்திருப்பேன்.

4. கீர்த்தியோ, அபகீர்த்தியோ, இனிப்போ, கசப்போ, சகலமும், உன்னுடையதே! அன்பான எண்ணங்களுக்கெல்லாம் ஆசியே! அவ்வித எண்ணங்கள் என் மனதிலுண்டாகும்பொழுது அவைகளை சுயேச்சையாக விடாமல் ஏன் தடுக்கிறாய் ?

5. 'நீ எனக்கு மனதைக்கொடுத்தாய்; ஆனால், அத்துடன் கண்ணைச்சிமிட்டிக்கொண்டு, ஒரு இரகசியத்தையும் சொல்லிவைத்தாய், அதினால் உனது சிருஷ்டியாகிய உலகத்தில் சுகத்தைத்தேடி, கசப்பை இனியதாகவும், பொய்யை மெய்யாகவும் நினைத்துக்கொண்டு அலைகிறேன்' என்று பிரஸாத் சொன்னார்.

* * * * *

மனிதனை ஸம்ஸாரஸாகரத்தில் தத்தளிக்கச் செய்யும் இம்மாயையை, என் ஜகன் மாதாவே உண்டுபண்ணியிருக்கிறாள். " என் தாயே! எனக்கு ஆத்மாவைக்கொடுத்தும், அதை ஸம்ஸாரத்தில் கட்டுண்டு வாழும்படி இரகசியமாகக் கட்டளையிட்டிருக்கிறாய் " என்று பிரஸாத் சொல்லுகிறார்.
